வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்

சீ. இராமச்சந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்

சீ. இராமச்சந்திரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாவது முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை - 600 113

[illegible] டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு

(அறக்கட்டளை நிறுவியவர் - டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்)

வரிசை எண் - 6 நாள் : 13.8.2004

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Valaṅkai Mālaiyum Sāṉṟōr Samūkac Ceppēṭukaḷum
Author	:	S. Ramachandran Epigraphist State Department of Archaeology Tharamani, Chennai - 600 113
General Editor	:	Dr. S. Krishnamoorthy Director International Institute of Tamil Studies Tharamani, Chennai - 600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113 Ph : 22542992
Publication No	:	513
Language	:	Tamil
Date of Publication	:	2004
Edition	:	First
Paper used	:	TNPL 18.6 Kg Maplitho
Size of the Book	:	Demy 1/8
Printing Types	:	10 Points
No. of Pages	:	X+216+படங்கள் 14
No. of Copies	:	1200
Price	:	Rs.70/- (Rupees Seventy only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Luz, Mylapore, Chennai - 600 004
Subject	:	Social - history

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை — 600 113

அணிந்துரை

தமிழரின் ஓலைச்சுவடிகள், செப்புப்பட்டயங்கள், கல்வெட்டுகள் 'போன்றவை அவர்தம் சமூக வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு மிகவும் துணை செய்கின்றன. அவ்வகையில் வலங்கை மாலை எனும் ஓலைச் சுவடி ஆவணத்தில் உள்ள சான்றோர் சமூக வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றை, அச் சமூகச் செப்பேடுகளுள் திருவிடை மருதூர்ச் செப்பேடு மற்றும் அவல்பூந்துறைச் செப்பேடு ஆகியவற்றுள் காணப்படும் ஒத்த குறிப்புகளோடு இணைத்து ஆராய்ந்து வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் எனும் தலைப்பில் திரு சீ. இராமச்சந்திரன் நூலாக்கம் செய்துள்ளார். தமிழரின் சமூக-வரலாற்று ஆய்வுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் அடங்கிய ஓலைச்சுவடிகளும், கல்வெட்டுகளும், செப்புப் பட்டயங்களும், வெளிநாட்டார் குறிப்புகளும், தொல்பழஞ் சமயச் சான்றுகளும் சிற்பங்களும் இன்றியமையாதன என்பதை இந்நூல் எடுத்து இயம்புகின்றது.

வலங்கை மாலை எனும் சமூக வரலாற்று ஆவணம் பாடப்பெற்ற காலத்தைக் கணிக்க இயலவில்லை. ஆயினும் தமிழில் வரலாற்றுக் கதைப்பாடல்கள் வாய்மொழியாகப் பாடப்பெற்ற காலக்கட்டத்தைக் கி.பி.15-16ஆம் நூற்றாண்டுகள் எனக் கணிக்க இயலும். வலங்கை மாலையும் இக் காலக்கட்டத்தைச் சார்ந்த வரலாற்று ஆவணமாகலாம். எனினும், இந்நூலில் கூறப்பட்டுள்ள சில வரலாற்றுக் கதைகள் கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தசாதகக் கதைக்குறிப்புகளாகச் சிற்பங்களில் கிடைக்கின்றன. வேறு சில வரலாற்று நிகழ்வுகள். கடைச் சங்ககால வெளிநாட்டவர் குறிப்புகளிலும், கி.பி.7ஆம் நூற்றாண்டினரான யுவான்சுவாங் குறிப்புகளிலும் இடம்பெற்றுள்ளன. இன்னும் சில குறிப்புகள் இலங்கை வரலாற்றை எடுத்துரைக்கும் மகாவம்சம், சூளவம்சம்

போன்ற நூல்களிலும் காணப்படுகின்றன. தமிழகச் சைவப் பெருநூலான பெரியபுராணத்திலும் இக்குறிப்புகளைக் காணலாம். முற்காலக் குறிப்புகள் பிற்காலச் செப்புப் பட்டயங்களிலும் பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுகளிலும் பதிவு செய்யப் பெறுதல் பெருவழக்கு எனும் நிலையில் இவ்வாறான குறிப்புகளும் இவ்வலங்கைமாலையிலும் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

இவ்வனைத்து வரலாற்றுச் செய்திகளையும் திரட்டி அவற்றைத் தொடர்புபடுத்திக் காட்டும் ஆய்வுப்போக்கில் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு நூல் அமைந்துள்ளது. இதனை மேற்கொண்ட திரு சீ. இராமச்சந்திரன் பாராட்டுக்கு உரியவர். வள்ளல் பெருந்தகை டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் இந்நிறுவனத்தில் நிறுவிய அறக்கட்டளையின் மையப் பொருளுக்கேற்ப வெளிவரும் இந்நூல் தமிழரின் சமூக வரலாற்று ஆய்வுக்குச் சிறந்த ஆவணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி பண்பாடு - மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும் சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
13—8—04

இயக்குநர்

முன்னுரை

தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு என்பது மானிடவியல், சமூகவியலாளர்களின் ஏகபோகம் என்ற நிலை மாறிவருகிறது. அண்மைக் காலங்களில் தொல்லியல் – கல்வெட்டியல் ஆய்வாளர்கள், தாங்கள் கள ஆய்வில் கண்டறிந்த தரவுகளைச் சமூக வரலாற்றாய்வுக்குப் பயன்படுத்திப் புதிய விளக்கங்களை அளிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தகைய ஆய்வுக்கு, நாட்டுப் பாடல்கள் போன்ற வட்டாரத் தரவுகளைத் தீவிரமான, நடுநிலையான ஆய்வுக்கு உட்படுத்திப் பயன்படுத்தும் போக்கும் தொடங்கியுள்ளது. இவ்வாறு, வட்டாரத்தரவுகளைச் சமூக வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுத்துவது என்பது புகழ் பாடுதலில் சென்று முடிந்துவிடுகிற ஆபத்து உள்ளது என்பது உண்மையே. ஆனால் ஐரோப்பியக் காலனியாதிக்கத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்ட மானிடவியல் – சமூகவியல் துறைகளுக்கான ஆய்வு அளவுகோல்கள் அல்லது அலகுகள் நம் சமூகத்தைப் பற்றி நாமே மிகவும் தாழ்வாக மதிப்பிடச் செய்து, நம்மைத் தாழ்வு மனப்பான்மைக்கு இட்டுச் சென்று விடுகிற ஆபத்தை உள்ளடக்கித்தானே இருக்கின்றன? எனவே ஆய்வுக்குரிய அலகுகளைப் பயன்படுத்துகிற விதத்தில்தான், ஆய்வு எற்புடையதாக அமைகிறதே தவிர அலகுகளிலும் தரவுகளிலும் பிரச்சினை இல்லை.

தமிழகச் சான்றார் சமூகம் குறித்த வரலாற்று ஆய்வு, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிற்று. தேசிய விடுதலை இயக்கத்தின் எழுச்சியால் உந்துதல் பெற்ற இந்திய வரலாற்று ஆய்வு போன்றே தமது அடிமைநிலை என்பது பாரம்பரியமாக வந்த இழிவன்று என்று தமக்குத் தாமே நிருபித்துக் கொள்ளுகிற உத்வேகத்துடன் தமது இன அடையாளங்களை மீட்டெடுக்கிற ஒரு முயற்சியாக இது தொடங்கிற்று. ஆனால், புகழ்பாடுகிற நோக்கில் வெளிக் கொணரப்பட்ட பல தரவுகளை, அவை வெளிக்கொணரப்

பட்ட நோக்கத்தின் மேல் உள்ள வெறுப்பினால் அல்லது உதாசீனத்தால், தரமான வரலாற்றாய்வை மேற்கொண்ட ஆய்வறிஞர்கள் கூடப் புறக்கணித்துவிட்டனர். இன்றைய நிலையில், எத்தகைய மனச்சாய்வும் இன்றி, அத்தரவுகளை ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய சூழல் தோன்றியுள்ளதாக உணர்கிறேன். "வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்'' என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்நூல், வட்டார இலக்கியத் தரவுகளையும் கல்வெட்டு – செப்பேட்டு ஆதாரங்களையும் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ள நூலாகும். இதுவரை பதிப்பிக்கப்படாத இரண்டு செப்பேடுகள் இந்நூலில் பதிப்பிக்கப்படுகின்றன. நூலின் ஆய்வுப் பொருளோடு தொடர்புடைய மூன்று கட்டுரைகள் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சார்பில் சொற்பொழிவாற்றுவதற்கு என்னைத் தெரிவுசெய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைக் குழுவினர்க்கும் இச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு அனுமதி வழங்கிய தொல்லியல் துறைச் சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்களுக்கும், இச் சொற்பொழிவு நூல் வடிவில் வெளிவர உதவிய இவ் அறக்கட்டளைப் பொறுப்பாளரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநருமாகிய முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியரைப் பற்றி

சென்னை மயிலாப்பூரில் கால்நடை மருத்துவர் இரா. ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும் சீதாலட்சுமி (பாபுக்குட்டி) அம்மையாருக்கும் 1953 ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டமும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் கல்வெட்டியல் - தொல்லியல் முதுகலைப் பட்டயச் சான்றிதழும் பெற்றவர். 1978 முதல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் தரங்கம்பாடி, தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், குற்றாலம், கொற்கை ஆகிய அகழ்வைப்பகங்களின் காப்பாட்சியராகப் பணிபுரிந்து, தற்போது சென்னையில் கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றி வருகிறார். லக்னோ தேசியப் பண்பாட்டுச் செல்வங்கள் பாதுகாப்பு ஆய்வுக் கூடத்தில் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு அருங்காட்சியக அரும் பொருள்கள் பாதுகாப்பில் பயிற்சியும் பெற்றுள்ளார்.

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் காப்பாட்சியராகப் பணிபுரிந்தபோது நூற்றுக்கும் மேற்பட்ட டேனிஷ் - தமிழ் ஆவணங்கள், நூறு வகையான டேனிஷ் - தமிழ்க் காசுகள், கடலில் மூழ்கிய டேனிஷ் கப்பலின் நங்கூரம் முதலிய அரும் பொருள்களை அகழ்வைப்பகத்திற்காகச் சேகரித்தவர். ஐரோப்பியர் கால ஆவணங்களை ஆய்வுக்குக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவர். தஞ்சை மராட்டியர் அரண்மனை அகழ்வைப்பக அமைப்புப் பணியிலும் அரும்பொருள் சேகரிப்புப் பணியிலும் முனைப்புடன் ஈடுபட்டவர். தஞ்சை மராட்டியர் கலைப் பாணியிலமைந்த ஓவியங்கள், கும்பகோணத்திலிருந்த சங்கராச்சாரியார் சாட்சிக்

கையொப்பமிட்ட டபீர் பண்டிதர் குடும்ப ஓலைச் சுவடிகள் முதலிய அரும்பொருள்களை அரசுக்காகச் சேகரித்தவர். தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் அகழ்வைப்பகக் காப்பாட்சியராகப் பணியாற்றியபோது ஐம்பதுக்கும் மேற்பட்ட பெருங்கற்படைக்காலப் பண்பாட்டு இடங்களைக் கண்டறிந்தவர்.

இந்தியக் கல்வெட்டியல் கழகம், இடப் பெயராய்வுககழகம், தென்னிந்திய நாணயவியல் கழகம் ஆகியவற்றின் வாழ்நாள் உறுப்பினர். வரலாற்று ஆய்வாளர் நெல்லை நெடுமாறனுடன் இணைந்தும் தனியாகவும் ஆய்வு மேற்கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் கண்டுபிடித்து வாசித்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தொல்லியல் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் முதலிய ஆய்வு நிறுவனங்களின் ஆய்விதழ்களில் இவருடைய பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தற்போது முனைவர் சு. இராசகோபால் வழிகாட்டுதலில் “வரலாறு, கலை, இலக்கியத்தில் காலந்தோறும் விடங்கர் மரபு” என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

இவர்தம் நூல்கள் :

1. திருமழபாடி (1978)
2. மாசிமகமும் மங்கல நீர்விழாவும் (1992)

பொருளடக்கம்

1. வரலாற்றுப் பார்வையில் வலங்கை மாலை

2. அவல்பூந்துறைச் சான்றோர் மடச் செப்பேடு

3. திருவிடை மருதூர்ச் சான்றோர் மடச்செப்பேடு

பின்னிணைப்பு

1. சான்றோர் சமூக வரலாறு

2. ஆயுத பூசை

3. வெட்டிப்பேறும் அச்சுப்பேறும்

வரலாற்றுப் பார்வையில் வலங்கைமாலை

வலங்கை மாலை – முன்பதிப்புகள்

"வலங்கை மாலை" என்னும் இந்நூல் வில்லுப்பாட்டு நூலாகும். சான்றார் (நாடார்) சமூகத்தவரின் ஒரு பிரிவான வலங்கை உய்யக்கொண்டார்கள் பிரிவின் தோற்றம் குறித்த புராணம் மற்றும் இப்பிரிவினர் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1018–1100) கலந்து கொண்ட போர்கள் போன்ற வரலாற்று நிகழ்வுகளையும் அதன் பின்னர் இவர்களுடைய வீழ்ச்சி, மறு எழுச்சி போன்றவற்றையும் இவ்வில்லுப்பாட்டு விவரித்துச் செல்லுகிறது. தென்பாண்டி நாட்டில் சான்றார் சமூகத்தவர் அதிக அளவில் நெருங்கி வாழும் சில பகுதிகளில் இதனை வில்லுப்பாட்டாகப் பாடும் வழக்கம் கி.பி.20–ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை நிலவி வந்துள்ளது. சான்றார் சமூகத்தவருக்கு உரிய குலதெய்வ, குடும்ப, ஊர்க் கோயில்களில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் கொடை விழாவில் இப்பாடலைப் பரம்பரைப் புலவர்கள் வில்லிசைத்துப் பாடுவர். இத்தகைய புலவர் பரம்பரையினரின் தலைமுறையே மறைந்து விடுவதற்கான கூறுகள் தற்போது தென்படுகின்றன. நாட்டுப்புறக்கலைகளின் பரவலான தேய்வுக்குக் காரணமான விஞ்ஞானத் தொழில் நுட்பப் பொழுதுபோக்கு சாதனங்களின் பெருக்கமே இதற்கு முக்கியக் காரணமாகும். எந்திரமயமான உலக நடைமுறைப் போக்கில் தொழில் மற்றும் இதரப் பணிகள் காரணமாகப் பிரிந்து வெவ்வேறு ஊர்களில் வசிப்போர் ஆண்டுக்கொருமுறை கூடிக் கொடைவிழாவில் பங்கு கொள்வதும் கூட அடையாளச் சடங்காக மாறிவிட்ட நிலையில் தங்கள் வேர்களை உணர்வு நிலையில் அடையாளம் கண்டு ஒன்றிப்போகும் மனநிலை குறைந்து போனதும் தேய்வுக்கான மற்றொரு காரணமாகும்.

வலங்கை மாலை வில்லுப்பாட்டினை நூலாகப் பதிப்பிக்கும் முயற்சி சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கியதாகத் தெரிகிறது. வரலாற்று ஆய்வாளர் திரு. நெல்லை நெடுமாறன் அவர்களிடம் உள்ள அச்சுப் பிரதி கொல்லம் ஆண்டு 1079 (கி.பி. 1904)இல் பூவனூர் சாமிநாடார் என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. இதே வில்லுப்பாட்டு பாடவேறுபாடுகளுடன் "பத்திரகாளியம்மன் கதை" என்ற பெயரில் முனைவர் தி.நடராசன், இரா.சோதிமணி ஆகியோரால் 1980 ஆம் ஆண்டு இறுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.[(1)] அடையாறு பிரம்மஞான சபை நூலகத்தில் உள்ள வலங்கை மாலைச் சுவடியை முனைவர் ஆ. தசரதன் படித்துப் பிரதி எடுத்துள்ளார். இவரால் படியெடுக்கப்பட்ட பிரதியே நம் ஆய்வில் முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.[(2)] தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் தற்போது மாநாடு என வழங்கப்படும் மானவீர வளநாடு எனும் ஊருக்கு அருகே உள்ள மேலைக்குடுவைக் கிணறு என்ற ஊரைச் சேர்ந்த ராஜராஜசுந்தரம் என்பவரால் பாடப்பட்ட நூல் என்ற விவரம் இப்பிரதியில் உள்ளது. இந்த வில்லுப்பாட்டு இயற்றப்பட்டது கி.பி. 1600–1605–க்கு இடைப்பட்ட காலமாக இருக்கலாம். இதே காலகட்டத்தில்தான் "வலங்கை நூல் எனும் வெங்கலராசன் கதை" என்ற வில்லுப்பாட்டு நூலும் இயற்றப்பட்டது.[(3)]

பொதுவாகக் கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டுகள், தமிழ் இலக்கிய வடிவங்களில் புதிய வகைகள் மற்றும் போக்குகள் தோன்றுவதற்கு உந்துதல் அளித்த காலமாகும். பள்ளு நூல்களில் முதலாவதாகக் கருதப்படும் திருவாரூர்ப் பள்ளு கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் தோன்றியதாகும். இதைப் போன்ற பல்வேறுவகைச் சிற்றிலக்கியங்கள் இக்காலக்கட்டத்தில் எழுந்தன. இச்சிற்றிலக்கியங்களெல்லாம் மண்ணின் மரபுகளை மண்ணின் மணத்துடன் எடுத்துச் சொல்லுபவைதாம் என்றபோதிலும் இவை அன்றைய ஆளும் வர்க்கத்தினராகிய நாயக்கர் மற்றும் அவர்களின் பிரதானிகளாகவும், செயலர்களாகவும் இருந்த நிலவுடைமை வர்க்கத்தினரின் நுகர்வுக்காகவே படைக்கப்பட்டவையாகும். ஆனால்

"வலங்கை மாலை" போன்ற வில்லுப்பாட்டு நூல்கள், வீழ்ச்சியில் காலடி எடுத்து வைக்கத் தொடங்கிவிட்ட ஒரு சமூகம் தன் பழம்பெருமைகளை நினைவுபடுத்திப் பார்க்கின்ற நோக்கில் புனையப்பட்டவையாகும். பொதுவாக இவை அச் சமூக மக்களின் நுகர்வுக்காகவே படைக்கப்பட்டவை. அந்த வகையில் பல சாதியினரிடையே நிலவுகிற திருமணப்பாடல்கள், புராணங்கள் போன்றவை இத்தகைய ஒரு வரலாற்றுப் போக்கில் உருவானவையாகும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் எழுதியதாகக் கருதப்படும் "ஏரெழுபது", "சிலையெழுபது", ஒட்டக்கூத்தர் எழுதியதாகக் கருதப்படும் "ஈட்டியெழுபது" போன்ற நூல்கள் வேளாளர், பள்ளி குலத்தார் மற்றும் செங்குந்தர் குலத்தவரின் பெருமையைப் பேசுகின்றன. இந்நூல்களும் கூடப் பழைய புலவர்கள்மேல் ஏற்றிக் கூறப்பட்ட பிற்கால நூல்களாகவே இருக்கவேண்டும். இப்படிப்பட்ட இலக்கியங்களைவிட வலங்கைமாலை ஓர் ஆவணமாகவே கொள்ளத்தக்க அளவிற்கு வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. இந்த வகையில் இவ்வில்லுப்பாட்டு நூலுடன் ஒப்பிடத்தக்க ஓர் இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நூல் ஓர் நிகழ்த்து கலை (performing art) இலக்கியமாகும். ஒரு கோணத்தில் பார்க்கப் போனால் பூங்கோயில் நம்பி என்பவரால் இயற்றப்பட்ட "வீரணுக்க விஜயம்" என்ற சோழர் கால இலக்கியத்தையும்[4] "கலிங்கத்துப்பரணி"யையும் இதனுடன் ஒப்பிடலாம். "வீரணுக்க விஜயம்" தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வீரநாராயணம் (வீராணம்) ஏரிக்கு நடுவில் கோட்டை கட்டி ஆண்ட வல்லான் எனப்பட்ட கன்னட அரசனைச் சோழ அரசனின் சார்பாகக் கைக்கோளப்படை போரிட்டு வென்ற நிகழ்வினைப் பாடும் நூலாகும். "கலிங்கத்துப் பரணி" முதல் குலோத்துங்க சோழனின் (கி.பி. 1070–1118) படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமானின் கலிங்க வெற்றியைப் பாடும் நூலாகும். வீரணுக்க விஜயத்தில் குறிப்பிடப்படும் வல்லான், ராஷ்டிரகூட அரசனான கச்சியும், தஞ்சையும் கொண்ட கன்னர தேவனாகவே (கி.பி. 955–968) இருக்க வாய்ப்புள்ளது. கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியைச் சேர்ந்த வரலாற்று

நிகழ்வைக் குறிப்பிடும் இலக்கியமாக இதனைக் கொள்ளலாம். கலிங்கத்துப் பரணி முழுமையாக நமக்குக் கிடைத்துள்ளது. வீரணுக்க விஜயம் மூலநூல் கிடைக்கவில்லை. ஆயினும் அதனைத் தழுவிக் கி.பி. 16—17—ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "வீரநாராயண விஜயம்" கிடைத்துள்ளது.[5] வில்லுப்பாட்டு நூலான வலங்கைமாலையில், கி.பி. 11—ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் குறிப்பிடப்படுகின்றன எனத் தெரிகிறது. தொடர்ந்து கி.பி. 13—ஆம் நூற்றாண்டு வரையிலான நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

"மாலை" என்பது ஒரு சிற்றிலக்கிய வகையாகும். பெரும்பாலும் கட்டளைக் கலித்துறை அல்லது ஆசிரிய விருத்தத்தில் அமைவது; புறத்திணை சார்ந்த வெற்றியைப் பாடுவது. வச்சணந்தி மாலை, பல்சந்த மாலை போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை. "வீரவெண்பா மாலை" என்ற பட்டப் பெயர் திருநெல்வேலிப் பெருமாளான தன்மப் பெருமாள் குலசேகர தேவன் என்ற தென்காசிப் பாண்டிய அரசனுக்குக் கி.பி. 16—ஆம் நூற்றாண்டில் சூட்டப்பட்டதாகத் தெரிகிறது.[6] இம்மன்னன் மீது "வீரவெண்பா மாலை" என்ற நூல் பாடப் பெற்றிருக்கலாம். வலங்கை மாலையும் அவ்வகையில் சான்றார் சமூகத்தவரின் வீரச்செயல்களைத் தொகுத்துப்பாடும் நூலாகும்.

வலங்கைமாலை வில்லுப்பாட்டு தோன்றிய வரலாற்று பின்னணி

சோழ அரசின் ஆதரவு பெற்ற ஜெயங்கொண்டார் எனும் புலவர் முதல் குலோத்துங்கனின் படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்தின் மீது படையெடுத்துப் பெற்ற வெற்றியைப் பாடிய நூல் "கலிங்கத்துப் பரணி"; இது சமகாலத்தில் பாடப்பட்ட ஓர் இலக்கியமாகும். சோழர் ஆட்சிப்பகுதியில் வலிமைவாய்ந்த ஒரு தலைவனாகவும், சோழப் படைகளுக்கே தளபதியாகவும் இருந்த ஒரு நாயகனைப்பற்றி ஒரு புலவர் புகழ்ந்து அப்புகழையும் சோழ அரசன்மேல் சார்த்திப் பாடிப் பரிசில் அல்லது மானியம் பெறுவது தமிழக வரலாற்றில் இயல்பான ஒன்றாகும். ஆனால் வலங்கைமாலை, ஒரு படைப்பிரிவைப்

பற்றிய பல்வேறு காலக்கட்டங்களில் நிகழ்ந்த பெருமைக்குரிய நிகழ்ச்சிகளை நினைவுக் குறிப்பாகத் தொகுத்து அந்தப் படைப்பிரிவினரின் பலதலைமுறைகள் கடந்த வாரிசு களிடையே நிகழ்த்து கலையாகப் பாடி ஊதியம் பெறுகின்ற ஒரு பிற்கால நடைமுறைச் செயல்பாட்டில் உருவான இலக்கியமாகும். அதாவது அப்படைப்பிரிவினரின் வீர சாகசங்களும், பெருமைகளும் பழங்கதையாகப் போய்விட்ட ஒரு சூழ்நிலையில் அம்மக்களின் வம்சத்தவர்க்கு இனம்புரியா மனநிறைவைத் தரும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. பரப்பிற்று. குறிப்பாகக் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சான்றார் சமூகத்தின் ஒரு பிரிவாகிய வலங்கை உய்யக்கொண்டார் பிரிவு, மதுரை நாயக்கர் ஆட்சியின் நிர்வாக நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த ஆய்வுக் கருத்து தமிழக வரலாற்று அறிஞர்களால் பதிவு செய்யப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆனால் சான்றோர் சமூகம் சார்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக இதனை எழுதி வருகின்றனர். குறிப்பாக "நாடார் மன்னரும், நாயக்க மன்னரும்" எனும் தலைப்பில் 1937–லேயே ஒரு நூல் வெளிவந்துள்ளது.(7) இந்தப் பின்னணி குறித்த சில வரலாற்றுச் சான்றுகளை நாம் இங்குப் பார்ப்போம்.

மானவீரவளநாடு என்பது கி.பி.9–ஆம் நூற்றாண்டள விலேயே சிறப்புற்றிருந்த ஒரு வருவாய் நிர்வாக நாட்டுப் பிரிவாகும். இது தூத்துக்குடி மாவட்டத்தின் தென்பகுதியும் நெல்லை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியும் அடங்கிய ஒரு நாட்டுப்பிரிவு. இப்பகுதியினை வட பற்று, தென் பற்று என இரண்டாகப் பிரித்து, நாடாள்வார் என்ற சாதிப்பட்டம் புனைந்த சான்றார் சமூக உயர் பிரிவினர் கி.பி.17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிர்வகித்து வந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.(8)

மானவீர வளநாடு அல்லது மானாட்டின் தலைநகரான மானாடு என்ற ஊரினை அடுத்து உள்ள மணல் தேரிப் பகுதியில் சுந்தரநாச்சியார் கோயிலின் முன் உள்ள கல்தொட்டி ஒன்றில் கி.பி. 1600–ஆம் ஆண்டுக் கல்வெட்டு

ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அரசனின் பெயர் குறிப்பிடப்படாத அக்கல்வெட்டு கீழைக்குடுவைக் கிணற்றைச் சேர்ந்த அரங்கன் செம்பிராப் பணிக்கன் என்ற போர்க்கலை ஆசான் அக்கல்தொட்டியைச் செய்தளித்ததாகக் குறிப்பிடுகிறது. இதுவே வலங்கை மாலை வில்லுப்பாட்டு எழுத்து வடிவம் பெற்ற காலக்கட்டமாக இருக்கவேண்டும். இவ்வூரை யடுத்த மேலைக்குடுவைக்கிணற்றைச் சேர்ந்த ராஜராஜ சுந்தரம் என்பவர் இவ்வில்லுப்பாட்டை இயற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வில்லுப்பாட்டின் 181—200—ஆம் வரிகளில் இவ்விவரம் உள்ளது. சுந்தர நாச்சியார் என்ற மானாட்டுத் தெய்வத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டே இவருக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. சுந்தர நாச்சியார் (பேச்சு வழக்கில் சுந்தராட்சி) என்பது இக்கோயிலில் குடிகொண்டுள்ள பத்ரகாளியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இக்கோயில் மணல் தேரிப் பகுதியில் அமைந்திருப்பதால் பெரும்பகுதி மணலில் புதைந்த நிலையில் உள்ளது. கோயில், இப்பகுதியில் கட்டுமானத்துக்குப் பயன்படுத்தப்படும் பன்னம் பாறைக் கற்கள் எனப்படும் வெள்ளை நிற மணற்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. கி.பி.14—15—ஆம் நூற்றாண்டுகளில் இக்கோயில் கட்டப் பட்டிருக்கக் கூடும். கோயிலின் கட்டுமானத்திலும் தூண் சிற்பங்களிலும் இக்காலக்கட்டத்தைச் சேர்ந்த தென்காசிப் பாண்டியர்களின் கலைப் பாணியை விட வேணாட்டு (திருவிதாங்கூர்)க் கலை மரபின் சாயலே தென்படுகிறது.

எப்படியிருப்பினும் இக்கோயில், வலங்கை மாலை வில்லுப்பாட்டுக்கு உரியோரின் வம்சத்தவரால் தமது முழுக் கட்டுப்பாட்டிலிருந்த ஸ்தபதிகளைக் கொண்டு பழமையான கோயிற் கலைப் பாணியில் கட்டப்பட்ட கோயிலே என்பது உறுதி. இதனையொத்த வேறொருகோயில் இப்பகுதியிலேயே நங்கைமொழி என்ற ஊரையடுத்துள்ள காளத்தீஸ்வரர் கோயில் ஆகும். அக்கோயிலும் பழமையான கோயிற் கட்டடக் கலை மரபிலேயே கட்டப்பட்டுள்ளது. கி.பி. 13—ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதி சான்றார் குலத்தின் நிர்வாகத்தில் இருந்துள்ளமை தெரியவருகிறது. இப்பகுதியில் வாழும் சான்றார் குலத்தவருள் ஒரு பிரிவினர்க்குச் சுந்தர

நாச்சியாரே குலதெய்வமாக உள்ளது. இராஜபாளையம் பகுதியிலுள்ள, வணிகத்தில் ஈடுபடும் சான்றார் குலப் பிரிவினர் சிலர் இத்தெய்வத்தைக் குல தெய்வமாகக் கொண்டுள்ளனர். சுந்தர நாச்சியார் என்ற பெயர், கி.பி. 6—7—ஆம் நூற்றாண்டுகளில் ரேணாடு (கடப்பை, கர்னூல் மாவட்டங்கள்) பகுதியையாண்ட சுந்தரநந்த சோழனுடன் தொடர்புடையதாகலாம். கி.பி. 350 முதல் 560 வரை ஆந்திர மாநிலம் குண்டூர்ப் பகுதியிலுள்ள தன்ய கடகம் எனப்பட்ட தரணிக் கோட்டை — அமராவதியைத் தலைநகராகக் கொண்டு ஆனந்த கோத்ர அரசர்கள் ஆண்டனர். இவர்களே கரிகால் சோழனுடன் மணவுறவு கொண்டதால் உருவான தெலுங்குச் சோழ அரச வம்ச முன்னோராகலாம். வலங்கை மாலையில் காளிதேவி ஆனந்தவல்லி என்றும் இவளது ஆடல் ஆனந்த வேதம் என்றும் (வரி 419—க்குப் பின்னர் ஆனந்தக் களிப்பு) குறிப்பிடப்படுவதும் இத்தொடர்பிலாகலாம். வலங்கை மாலை நூல் குறிப்பிடும் செய்திகள் என்ற தலைப்பில் இத்தொடர்பு விரிவாக ஆராயப்படும்.

கி.பி. 16—ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது கி.பி. 17—ஆம் நூற்றாண்டின் தொடக்கம், மூவேந்தர் மரபினருள் எஞ்சியிருந்த பாண்டிய மன்னர்கள் முழுமையாக வீழ்ச்சி அடைந்த காலக்கட்டமாகும். இக்காலக்கட்டத்தைச் சேர்ந்த "சீவலமாறன் கதை" எனும் இலக்கியம் சிதம்பரநாத முதலியார் என்பவரால் பாடப்பட்டதாகும். நெல்லை, தென்காசி ஆகிய பகுதிகளில் ஆட்சி புரிந்த சீவலமாற பாண்டியனின் நெருங்கிய உறவினனும் மானூர்ப் பகுதியின் தலைவனுமான செண்பகராமன் என்ற உபகாரியைப்பற்றிச் சீவலமாறன் கதை குறிப்பிடுகிறது.[(9)] இத்தலைவன் சீவலமாறனின் மனைவி பொன்னுருவியின் சகோதரன் எனவும் வலங்கையர் குலத்தவன் எனவும், இவனது மகன் சிவனணைந்தான் என்பவனுக்குச் சீவலமாறன் தனது மகளை மணமுடித்துக் கொடுத்து நெல்லைப் பாண்டியனாக முடிசூட்டி வைக்க முனைந்தான் எனவும், துவரவண்ணார் குலத்தைச்சேர்ந்த சின்னணைஞ்சி என்பவளைக் காதலித்த சிவனணைந்தான், சீவலமாறனின் தீர்மானத்திற்குச் சம்மதிக்க மறுக்க, அதனால் பெரும் பூசல் மூண்டது எனவும்

சீவலமாறனின் அணியில் கொண்டையங்கோட்டை மறவர்களும் சிவனணைந்தான் அணியில் வன்னிய மறவர்களும் மோதிக்கொண்டனர் எனவும், இறுதியில் சிவனணைந்தான் கொல்லப்பட்டான் எனவும் "சிவனணைந்தான் வில்லுப்பாட்டு"[10] குறிப்பிடுகிறது. மானாடு அல்லது மானவீர வளநாட்டுப் பகுதி உட்பட தென்பாண்டி நாட்டின் பல பகுதிகளில் சிவனணைந்தான் ஒரு தெய்வமாகப் பெரும்பான்மை சான்றார் சமூகத்தவராலும் மறவர் சமூகத்தின் சிறு பிரிவினராலும் வழிபடப்பட்டு வருகிறான். செண்பகராமனின் ஊரான மானூரில்தான் சீவலமாறன் பிறந்ததாகவும் பிறந்தபோது சீவலமாறனின் தந்தை இறந்துவிட்டதால் உய்யக்கொண்டான் என்ற மந்திரியின் அரவணைப்பிலும் கண்காணிப்பிலும் வளர்ந்து கல்வி மற்றும் கலைகளைப் பயின்றதாகவும் "சீவலமாறன் கதை" (பா.237,290) குறிப்பிடுகிறது.

மானூர் (நெல்லைப் பகுதியின் மிகப் பழமையான, ஊர்ச்சபை நிர்வாகம் பற்றிய வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ள ஊர்) வலங்கை உய்யக்கொண்டார்களுடன் தொடர்புடைய ஊர் என்பது இக்குறிப்புகளால் தெளிவுபடும். வலங்கை உய்யக்கொண்டார் பிரிவின் நிர்வாகத்தில் மானூர் செயல்படத் தொடங்கிய காலம் எதுவென ஆராய்ந்தால் கி.பி. 11–12–ஆம் நூற்றாண்டில் இந்நிகழ்வு தொடங்கி இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்கள் தமது அதிகாரத்தைச் சோழரிடமிருந்து மீட்டெடுத்துவிட்ட காலக்கட்டத்தில் மானூரில் கல்வெட்டு ஒன்றில் பாண்டிய அரசுக்குக் கட்டுப்பட்ட "இவ்வூர் நாடாளும் கங்கை கொண்ட சோழப் பெருமாக்கள்" என்ற ஓர் உயர் அதிகாரி அல்லது அரச குலத்தவர் குறிப்பிடப்படுகிறார்.[11] கங்கைகொண்ட சோழன் என்பது முதல் இராஜேந்திர சோழனின் (கி.பி. 1012–1044) தமையன் ஒருவனின் பெயராகும். மேற்கண்ட "இவ்வூர் நாடாளும் கங்கை கொண்ட சோழப்பெருமாக்கள்" அவனுடைய வம்சத்தைச் சேர்ந்த ஒருவராக இருக்கலாம்.[12] இவருடைய வம்சத்தவரே செண்பகராமன் போன்ற வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.[13]

சீவலமாறனின் காலத்திற்குப் பிறகு நெல்லை, தென்காசி, மானூர், மணியாச்சி ஆகிய பகுதிகளில் கொண்டையங்கோட்டை மறவர் மற்றும் வன்னிய மறவர்களின் ஆதிக்கம் வேரூன்றிற்று. வீரகேரளன்புதூர் (அ) ஊற்றுமலை, வடகரை, ஆவுடையானூர், தாருகாபுரம் முதலிய கொண்டையங்கோட்டை மறவர் பாளையங்களும், தென்மலை, சிவகிரி, ஏழாயிரம் பண்ணை முதலிய வன்னிய மறவர் பாளையங்களும் முளைத்தெழுந்து நாயக்க மன்னர்களின் ஆதரவுடன் குறிப்பாகத் திருமலை நாயக்கரின் பிரதானியான வடமலையப்ப பிள்ளையின் ஆதரவுடன் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. இப்பாளையக்காரர்களுள் சிலர், பாண்டிய ராஜா –குறிப்பாகச் சீவலமாற ராஜா– தமக்கு அதிகாரம் வழங்கியதாகத் தமது ஆவணங்களில் குறிப்பிட்டுக் கொள்வது[14] நாம் மேலே கண்ட வரலாற்று நிகழ்வின் விளைவே என்பதில் ஐயமில்லை. "சிவனணைந்தான் கதை" வில்லுப்பாட்டு சீவலமாறனின் குடும்பப் பூசலில் இருவேறு அணிகளாகப் பிரிந்து நின்று அரச குலத்தவர்கள் தமக்குள் மோதிக் கொண்டபோது சீவலமாறனுக்குப் படைத்துணை புரிந்த (கொண்டையங்கோட்டை) மறவர் சமூகத்தவர்க்கு வடகரை என்ற ஊரைச் சீவலமாறன் வழங்கியதாகக் குறிப்பிடுவதும் இதற்கு வலிமை சேர்க்கும் ஒரு சான்றாகும்.

சிவனணைந்தான் அணியில் நின்று சீவலமாறனை எதிர்த்துப் போரிட்ட வன்னிய மறவர்கள் சிவனணைந்தானுடன் அவனது காதலி சின்னணைஞ்சி சேர்ந்து வாழவும் தென்காசி ஆட்சி சிவனணைந்தானால் கைப்பற்றப்படும் பட்சத்தில் சிவனணைந்தானின் விருப்பப்படி சின்னணைஞ்சியையே தென்காசியின் ராணியாக அமர்த்தவும் உதவிபுரிவதாக வாக்களித்தனர் என்றும் இதற்குப் பிரதிபலனாகத் தென்காசி மூப்புக்கூறு (தலைமை அதிகாரம்) வன்னிய மறவர்களால் கைக்கொள்ளப்பட்டதாகவும் "சிவனணைந்தான் கதை" மற்றும் "ஏழாயிரம் பண்ணை சிதம்பர வன்னியன் கைபீது"[15] ஆகியவற்றினை ஒப்பிட்டுப் படிக்கும்போது அறிந்து கொள்ள முடிகிறது. இக்காலக் கட்டத்திற்குப் பிறகு பாண்டிய அரச குலத்தவர்களின் இருப்பு கங்கை கொண்டான், சங்கரன்

கோயில், கரிவலம்வந்தநல்லூர் ஆகிய ஊர்களின் சுற்று வட்டாரத்தில் சில ஊர்களிலும் திருச்செந்தூர் (மானவீர வளநாட்டு வடபற்று, தென்பற்று)ப் பகுதிகளிலும் மட்டுமே ஓரளவு வலிமையுடன் நிலவிற்று எனத் தெரிகிறது. இவர்களும் மதுரை அரசர் திருமலை நாயக்கரின் மேலாதிக்கத்தை ஏற்றதனால்தான் ஓரளவுக்காவது தங்களின் அதிகாரத்தைக் காத்துக் கொள்ள முடிந்தது. படை நடத்தும் பயிற்சி போன்றவை இவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்று கொண்டிருந்த காலக்கட்டமென இதனைச் சொல்லலாம். இக்காலகட்டத்தில் இருந்துதான் சிவகாசி, விருதுபட்டி(விருது நகர்) போன்ற ஊர்களில் சான்றோர் சமூகத்தவரின் புதிய குடியேற்றங்களும் வணிக ஈடுபாடும் மகமை வசூல் செய்து கோயில் கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப் பட்டன என்பதற்கும் சான்றுகள் உள்ளன.(16) கி.பி. 11–ஆம் நூற்றாண்டிலிருந்தே வலங்கை மகா சேனையர், வணிகக் குழுவினரின் பாதுகாப்புக்காகச் செயல்பட்டு வந்த போதிலும்(17) தமது அரச வர்ணத் தொடர்புகளையும் தொடர்ந்து காத்துவந்த இவர்கள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் தென்காசிப் பாண்டியர் ஆட்சியும் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்துவிட்ட நிலையில் தமது வணிகத் தொடர்புகளையும் அனுபவங்களையும் மட்டுமே நம்பி முழுமையாக வணிகத்தில் இறங்கிவிட்டனர். தமக்கெனச் சுயமான மகமை–வரி வசூல் அமைப்பு, நிர்வாகம், சமூகக்கட்டுமானம் போன்றவற்றைக் காத்துக்கொண்டு கோயில்களையும் உருவாக்கிக் கொண்டனர்.

இந்த இடத்தில் வேறோர் கல்வெட்டுக் குறிப்பையும் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். வலங்கை மகாசேனை என்ற படைப்பிரிவு ராஜராஜ சோழன் ஆட்சிக்காலத்திலேயே பெருங்குளம் (தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம்) பகுதியில் இருந்தது.(18) இப்படைப்பிரிவினரின் குலதெய்வமாகிய பத்ரகாளியின் கோயில் பெருங்குளம் திருவழுதீஸ்வரர் கோயிலின் வடக்கே பெருங்குளம் குளத்தின் படுகையையொட்டி அமைந்துள்ளது.(19) இக்கோவிலில் ஆண்டுக்கொருமுறை நடைபெறும் முதன்மையான திருவிழாவாகிய மகாநவமி (அ) ஆயுதபூஜை விழாவில்(20)

சிவகாசி, விருதுநகர்ப் பகுதியைச் சேர்ந்த சான்றார் சமூகத்தவர் பெருமளவில் வந்து விசேட வழிபாடுகள் நடத்திச் செல்லுவது வழக்கமாகவுள்ளது. இவர்களே மேலே நாம் குறிப்பிடும் கி.பி.17–ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் பெருங்குளம் பகுதியிலிருந்து சிவகாசி, விருதுபட்டி, அருப்புக்கோட்டைப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து சென்ற வலங்கை மகாசேனை வம்சாவாளியினரின் தற்கால வழித்தோன்றல்கள் ஆவர். மேற்குறித்த பெருங்குளம் காளிகோயில் நாயக்க மன்னரின் பிரதானி வடமலையப்பப் பிள்ளையின்(கி.பி. 1650) வர்க்கத்தாராகிய காரைக்காட்டு வேளாளர்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. பெருங்குளம் மாயக்கூத்தர் கோயிலின் முன்மண்டபத்தில் வடமலையப்பப் பிள்ளையின் உருவச் சிற்பம் எழுத்துப் பொறிப்புடன் காணப்படுகிறது. வடமலையப்பப் பிள்ளை நேரடியாகவே பெருங்குளத்திற்கு வந்து, தமது மேற்பார்வையில் வலங்கை மகா சேனை வம்சாவளியினரிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துத் தமது வர்க்கத்தாரிடம் வழங்கி இருக்கவும் வாய்ப்புண்டு. வலங்கை மகாசேனையின் வம்சவழியினர் தமது அதிகாரத்தைப் பறிகொடுத்தாலும், தமது செயல்பாட்டு அரங்கினை மாற்றிக் கொண்டாலும் மகாநவமி எனப்படும் க்ஷத்ரியர் விழாவில் தொடர்ந்து பங்கேற்றுத் தமது பூர்வீக பந்தங்களைப் புதுப்பித்து வருவது நமது வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுகின்ற ஒரு செய்தியாகும்.[21]

கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இடைப் பகுதியிலும் தென்பாண்டி நாட்டில் வாழ்ந்த வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினரின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதற்கும் அரசியல் நிர்ப்பந்தத்தினால் தாமே அதிகாரங்களைக் கைவிட்டதற்கும் சான்றுகள் உண்டு. பாண்டியரின் பழந்துறைமுகமான கொற்கையை அடுத்த ஆற்றூர், வெள்ளக்கோயில் பகுதியில் வாழ்ந்து வந்த வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் கொற்கைக் காணியாளர் ஆகிவிட்ட நற்குடி வேளாளர் வசம் தமது நிலங்களை உழுகுடிகளுடன் சேர்த்து 40 பொன் விலைக்கு விற்றுவிட்டு வெளியேறிச்சென்ற செய்தி கி.பி. 1642 –ஆம் ஆண்டுச் செப்புப்பட்டயம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.[22] தம்

நிலங்களை உழுகுடிகளுடன் சேர்த்து விற்கவேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதற்கான காரணம் அச்செப்புப்பட்டயத்தில் நேரடியாகச் சொல்லப்படவில்லை என்றாலும் திருமலை நாயக்கர் ஆட்சியில் வடமலையப்பப் பிள்ளையின் மேற்பார்வையில் எடுக்கப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளே இதற்குக் காரணமாயிருந்தன என நாம் யூகிப்பது எளிது. குறிப்பாக, கொற்கைப் பகுதியில் திருமலை நாயக்கர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் கி.பி. 1659—60 —ஆம் ஆண்டுகளில் மேலும் சில அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என நாம் அறிகிறோம். மைசூர்ப் படையெடுப்புக் காலத்தில் மதுரை நாயக்க அரசின் மானம் காத்த திருமலை சேதுபதிக்கு —க்ஷத்ரியருக்கும் அரசருக்கும் மட்டுமேயுரியதாயிருந்த— மகாநவமி எனப்படும் ஆயுதபூஜை (அ) நவராத்ரி தர்பார் கொலு நடத்தும் உரிமையையும் கொற்கை(பழைய காயல்) தூத்துக்குடிப் பகுதியின் முத்துக்குளிப்பு உரிமைகளையும் வடமலையப்பப் பிள்ளையின் ஆலோசனையின் பேரில் திருமலை மன்னர் வழங்கினார்.[23] மேலும், முதல் இராஜேந்திர சோழன் காலத்திலிருந்து சேர அரச குலத்தவர் (குலசேகர ஆழ்வார் வர்க்கத்தவர்) தங்கி வாழ்ந்த மன்னார்கோயில் பகுதி[24] இக்காலக்கட்டத்தில் இராமநாதபுரம் சேதுபதிக்கு வழங்கப்பட்டது.[25] மன்னார்கோயில் பகுதியையொட்டிய கல்லிடைக் குறிச்சியில் கி.பி. 15—ஆம் நூற்றாண்டிலேயே வேளாளர் எழுச்சியின் காரணமாக வெள்ளை நாடர் எனப்பட்ட அரச குலத்தவரின் அதிகாரங்கள். பெருமளவு குறைக்கப்பட்டன.[26] இந்நிலையில் கி.பி. 1659—60—ஆம் ஆண்டுகளில் இப்பகுதி சேதுபதி மன்னரின் நுகர்வுக்காக வழங்கப்பட்டது. இது, இப்பகுதியில் எஞ்சியிருந்த வலங்கை உய்யக்கொண்டார் போன்ற அரச வம்சத்தவரைக் கடுமையாகப் பாதித்தது. கி.பி. 1662—ஆம் ஆண்டைச் சேர்ந்த விக்ரமசிங்கபுரம் கல்வெட்டு இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. "முள்ளி நாட்டில் விக்ரம சிங்கபுரம் வ்லங்கை உய்யக்கொண்டார்களில் பெரும்பற்றுச் செவ்வந்தி நாடான் மற்றுண்டான பேர்கள் நொந்து கெட்டுப்போன படியினாலே...." வடமலையப்பப் பிள்ளையை நேரில் சென்று

சந்தித்துப் பணிந்து வேண்டித் தமக்கு விதிக்கப்பட்டிருந்த வரிச்சுமை குறைக்கப்பெற்றுத் துயர் நீங்கினர்.[27]

இதற்குப் பின்னரும் கேரள மாநிலத்தின் திருவிதாங்கூர்ப் பகுதியில் வலங்கை உய்யக்கொண்டார் பற்றிய சில ஆவணங்கள் கிடைக்கின்றன. திருவிதாங்கூர் ஸ்டேட் மான்யுவல் என்ற நூலில் வலங்கை உய்யக்கொண்ட ரவிகுல க்ஷத்ரியர் என்று இவர்கள் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்ட விவரம் உள்ளது.[28] திருவிதாங்கூர்ப் பகுதியில் கி.பி. 19–ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற தோள்சீலைப் போராட்டத்தின் போது மற்ற பல பணிமக்கள் போலவும் பட்டடைச் சாதியினரான தொழில் குழுக்கள் போலவும் சான்றார் சமூகத்தின் பனையேறிச் சான்றார் முதலிய பிரிவினர் நம்பூதிரி பிராமணர் மற்றும் வேளாண் சாமந்த குலத்தைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினரால் நடத்தப்பட்டபோது வலங்கை உய்யக்கொண்ட இரவிகுல க்ஷத்ரியர்கள் அதிகார வர்க்கத்துடன் இணங்கிப்போனதனால் எவ்விதப் பாதிப்புமின்றித் தமது சமூக அந்தஸ்தைக் காத்துக்கொண்டனர். வலங்கை உய்யக்கொண்டார் எனவும் சூரியகுல க்ஷத்ரியர் எனவும் தம்மைக் குறித்துக்கொண்டு அதுவரை சோழகுல அடையாளத்தைப் பெருமிதத்துடன் வெளிப்படுத்திக்கொண்ட இச்சான்றார் குலப்பிரிவினர் இக்காலக்கட்டத்திற்குப் பிறகு தமது தனிப்பட்ட அடையாளத்தைச் சான்றார் குல உயர் பிரிவினரான நிலமைக்காரர்,முக்கந்தர் போன்ற அடுக்குகளில் கரைத்துவிட்டுக் கலந்துவிட்டனர்.[29] ஆனாலும் வில்லுப்பாட்டுப் பாடகர்கள் இவர்களின் பூர்விகப் பந்தத்தை அவ்வப்பொழுது நினைவூட்டி இவர்களின் பெருமைகளைக் கவிதை ஒலியலைகளாகக் காற்றில் மிதந்து கொண்டிருக்கச் செய்தனர்.

வலங்கை–இடங்கைச் சாதிப் பிரிவுகள்

வலங்கைமாலை என்ற இவ்வில்லுப்பாட்டு நூலின் தலைப்பைப் புரிந்துகொள்ள இடைக்காலச் சோழர் ஆட்சியின்போது கி.பி.–10ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட வலங்கை–இடங்கை என்ற சாதிகளின் பிரிவுகள் பற்றி நாம் அறிவது அவசியம். தமிழகச்

சமூக வரலாற்றில் மிகவும் குழப்பப்பட்ட ஓர் ஆய்வு வலங்கை–இடங்கைப் பிரிவுகள் தொடர்பானதாகும். பிராமணர்கள் அல்லாத சமூகங்கள் மட்டுமே, அதிலும் குறிப்பாக நிலவுடைமைச் சமூகத்தவரான வேளாளர்களுக்குக் கீழ்ப்பட்ட தொழில் சாதிகள் மட்டுமே இவ்வாறு வகைப்படுத்தப்பட்டதாக ஆதாரமற்ற அபிப்பிராயங்கள் சில அறிஞர்களால் கூறப்பட்டுள்ளன. கி.பி. 19–ஆம் நூற்றாண்டைய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினியினரின் நிர்வாகக் காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய வலங்கை–இடங்கைப் பூசல்கள் பற்றிய ஆவணக் குறிப்புகளைச் சரியான ஆய்வுக்குட்படுத்தாமல் உள்ளபடியே ஏற்று அவ்விவரங்களைச் சோழர்காலத்திய சமூக அமைப்பின் மீது ஏற்றிப் பார்த்ததன் விளைவாகவே மேற்குறித்த அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கவேண்டும்.[30] இத்தகைய மனமயக்கங்களுக்கு இடந்தராமல் சோழர்காலச் சமூகத்தை ஆய்வு செய்தால் முதன்மையான கேள்வி ஒன்று எழுகிறது. வலங்கை–இடங்கை எனச் சாதிகளைச் செயற்கையாகப் பாகுபடுத்தவேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் என்ன என்பதே அக்கேள்வி. அதிகார அமைப்புகள் வேரூன்றும்போது அதிகாரப் போட்டிகளும் அதிகரிப்பது இயல்பானதே. அத்தகைய சந்தர்ப்பங்களில் அதிகார உயர் அடுக்குகளில் இடம் பெறுவது –அதாவது, பதவியுயர்வு– போன்றவற்றுக்கான விதிமுறைகளை வரையறை செய்யவேண்டிய கட்டாயம் நேர்கிறது. எடுத்துக்காட்டாக, பண்டைக்கால இந்திய வரலாற்றை ஆராய்ந்தால் சாத்திரங்கள் எனப்பட்ட சமூகச் சட்டங்களின் வடிவமைப்புக்கு [framing] அவ்வக்கால அரசியல் சமூக நிர்ப்பந்தங்கள் முதன்மையான காரணம் என்பதும் பலவேளைகளில் பிராமணர்களும் சில வேளைகளில் க்ஷத்ரியர்களும் இத்தகைய சாத்திரங்களை வகைப்படுத்தினர் [codify] என்ற யதார்த்தமும் புலப்படும்.

சோழர் ஆட்சியில் அரசர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தை வேரூன்றச் செய்யவும் விரிவுபடுத்தவும் முனைந்து பல்வேறு போர்க்குடித் தலைவர் குடும்பங்களுடன் மணவுறவு கொண்டனர். அவ்வாறு மணவுறவு கொண்ட சில பூர்வ குடிகள் தாய்வழிச் சமூக அமைப்பினைக்

கொண்டவையாயும் கணவன் இறந்துவிட்டால் மனைவி மறுமணம் புரிய அனுமதிக்கப்படும் சமூகக் கட்டுமானம் கொண்டவையாயும் இருந்தன. அத்தகைய குடியைச் சேர்ந்த ஒரு பெண் பட்டத்து அரசியாகவும் ஏற்கப்படும் சூழல் உருவாகையில் மைத்துனவுறவு கொண்டாடும் அவளது சகோதரர்கள் சோழ அரியணைக்கே உரிமை கொண்டாடத் தொடங்கிவிடக்கூடிய விசித்திரச் சூழல் தோன்றிவிடும். இந்நிலை ஏற்படாமல் தடுக்க ஒரு வழியிருந்தது. மருமகளாக வருகிற பெண் புகுந்த வீட்டுப் பழக்கங்களை ஏற்றுத் தன்னை மாற்றிக்கொண்டு முற்றிலும் அரச குலப்பண்புகளையேற்று அக்குலத்திலேயே இணைந்துவிட முடியும். அந்நிலையில் அவளது திருமணத்துடன் தாய்வீட்டுப் பூர்வகுடியுறவுகள் பெரும்பாலும் அற்றுவிடும். இது முற்றிலும் அரச குலத்தின் ஆண் ஆதிக்கத் தன்மையையும் ஆண்வழிச் சொத்துரிமை அமைப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும். ஆனால், இத்தகைய நிலையிலும் சிக்கல் முழுமையாகத் தீர்ந்துவிடுவதில்லை.

அரச குலத்துடன் மைத்துனவுறவு கொண்டாடும் போர்க்குடிகள் இந்த உறவினைப் பயன்படுத்திச் சலுகைகளையோ செல்வாக்கையோ வளர்த்துக்கொள்ள எல்லா வாய்ப்புகளும் இருக்கவே செய்தன. காரணம் என்னவெனில் இத்தகைய மணவுறவுகள் அரசியல் காரணங்களுக்காக அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் உறவுகளாகும். எனவே, இவற்றின் விளைவுகளும் அத்தகைய அரசியல் காரணங்கள் சார்ந்தவையாகவே இருக்கும். இத்தகைய மணவுறவே கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் மூன்றாம் ராஜராஜனை அவனது மைத்துனனும் பள்ளி[31] குலத்தவனுமாகிய கோப்பெருஞ்சிங்கன் சிறை செய்யும் அளவுக்குச் சோழநாட்டு அரசியலில் அதிகாரஞ்செலுத்தவும் ஊடுருவவும் இடமளித்தது. இதே காலக்கட்டத்தில் மூன்றாம் ராஜராஜனின் மனைவியாகிய புவனமுழுதுடையாள் சார்ந்த வாணர் குலம் அதாவது, மகாபலியின் வழிவந்ததாக உரிமை கொண்டாடிய மறக்குலம் தமிழக அரசியலில் முதன்மையான இடத்தைப் பிடிக்கத் தொடங்கிவிட்டது. பாண்டியர், சோழர்

போர்களின்போது ஒருவரையொருவர் அவமதித்துக் கொள்ளவும் வஞ்சந்தீர்க்கவும் வாய்ப்பாகச் சோழர்கள் வாணனுக்குப் பாண்டியன் எனப் பட்டம் சூட்டவும், இதற்குப் பதிலடியாகப் பாண்டியர்கள் மற்றோர் வாணனுக்குச் சோழன் எனப் பட்டம் சூட்டவும் செய்தனர். மூன்றாம் ராஜராஜனின் பட்டத்தரசி புவனமுழுதுடையாளின் சகோதரன் தாயிலும் நல்ல பெருமாள், கோப்பெருஞ்சிங்கனுடன் கூட்டணியமைத்துக் கொண்டு, "திருநீற்று மாகத சோழன்" என்ற பட்டப் பெயருடன் மகதை மண்டலத்தில் (கல்லைக் குறிச்சி, சேலம் பகுதிகள்) சுயாட்சியமைத்தான்.[32] இது பாண்டிய நாட்டிலும் எதிரொலித்தது. பாண்டியர் தலைநகராகிய மதுரை கி.பி.15–ஆம் நூற்றாண்டில் மறவர் குலத்தவரான வாணர்களின் தலைநகராக மாறிற்று.[33] இத்தகைய நிகழ்ச்சிப் போக்குகள் என்ன உண்மையை உணர்த்துகின்றன? வலங்கை, இடங்கை என்று சாதிகளைப் பிரித்த நடவடிக்கை சோழர்குல ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் உத்தியே என்பதும், இந்நடவடிக்கையின் மூலம் அரச (க்ஷத்ரிய) வர்ணம் சார்ந்த வலங்கைப் போர்க்குடிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்களிடமே அரசியல் அதிகாரம் பெருமளவு பங்கிட்டு அளிக்கப்பட்டிருந் திருக்கவேண்டும் என்பதையும் அவ்வாறு அதிக அதிகாரங்கள் வழங்கப்படாத, ஆனால் அந்தஸ்து என்ற மாயத் தோற்றம் மட்டுமே வழங்கப்பட்டிருந்த இடங்கைப் போர்க் குடியினரிடையே இந்நடவடிக்கை ஒரு தற்காலிக அமைதியைத் தோற்றுவித்தது என்றாலும் அது புயலுக்கு முன் வரும் அமைதியைப் போன்றதே என்ற உண்மையையும் உணர்த்துகின்றன. வலங்கையர் எனும் பிரிவினர் அரசகுலத்துடன் மிக நெருங்கிய போர்க்குடியாகவும் இடங்கையர் மற்றொரு வகைப் போர்க்குடியாகவும் கருதப்பட்டனர் என்பதும் இவ்விரு பிரிவினருமே க்ஷத்ரிய வர்ணத்தவர் தோன்றிய இடமாகப் புருஷ சூக்தம் குறித்திடும் கை அல்லது புஜம் என்ற உறுப்பையே தமது குலங்களின் தோற்றத்திற்கு மூலமாகக் கருதத்தக்க வகையில் ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டது என்பதும் வெளிப்படையாகத் தெரியும் செய்திகளாகும்.

வலங்கைத் தளம், இடங்கைத் தளம் ஆகிய கல்வெட்டுக் குறிப்புகள் இவ்விரு சாதிப்பிரிவுகளுமே

படைப்பிரிவுகள்தாம் என்ற உண்மையை உணர்த்தும்.(34) இவற்றுள் வலங்கைச் சேனை என்பது மரபு வழிப்பட்ட, முறையான போர்ப் பயிற்சிகள் பெற்ற, குடிகாவல் நடைமுறைகளிலும் தேர்ச்சி பெற்ற, காவல் துறை—நீதித் துறைப் பொறுப்புகளையுடைய— அதிகாரம் மிக்க படையாகும். இடங்கைப் படையென்பது வெட்சி—வஞ்சி போன்ற சங்க இலக்கியப் புறத்திணைத் துறை சார்ந்த, அதர்மமாகக் கருதப்பட்ட போர் முறைகளில் ஈடுபடுத்தப்பட்ட படையாகும். இடங்கைப் படைப் பிரிவு என்பது எயினர் போன்ற சாதியினரைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இருகைகளாகப் படைகளை வகுத்துப் போரிடும் மரபு இருந்தது எனப் பெரிய புராணம், ஏனாதிநாதர் புராணம் (பா.13—15) குறிப்பிடுவதிலிருந்து தெரிய வருகிறது. இம்மரபைப் பின்பற்றிப் பிராமணருள் சில பிரிவினர் உட்பட அனைத்துப் போர்க்குடிகளும் இருவகைச் சாதியினராக வகைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. 9—ஆம் நூற்றாண்டு தொடங்கிக் கி.பி. 13—ஆம் நூற்றாண்டு வரை, கங்கைக் கரை வரையிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் தமது புலிக்கொடியைப் பறக்கவிட்ட சோழப்பெருமன்னர்களின் வெற்றிக்குக் காரணமாய் அமைந்த படைகளின் பிரிவுகள் அவற்றின் தன்மைகள் போன்றவற்றைப் பற்றிய ஆழமான ஆய்வுகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. பல்வேறுபட்ட சமூகப்பிரிவினர் சோழ மன்னர்களின் படையில் இடம்பெற்றிருந்தனர் என்பது மட்டும் அறிஞர்கள் அறிந்த உண்மையாகும். கைக்கோளப்படை, வில்லிகள் படை, இடங்கைப் பெரும்படை அல்லது மகா சேனை, வலங்கைப் பெரும்படை அல்லது மகா சேனை போன்ற படைப்பிரிவுகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மிகப் பழங்கால மரபாகிய சதுரங்க சேனை (நாற்பெரும்படை)ப் பிரிவுகளான தேர், யானை, குதிரை, காலாள் ஆகியவற்றுள் தேர்ப்படையின் பயன்பாடு சங்க காலத்திலேயே முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது. அதற்குப் பின்னர்த் தேர்ப் படையின் இடத்தைக் கப்பற் படை நிரப்பிற்று. இடைக்காலச் சோழர்களின் கடற்படை கரையார் (அ) கரையாள்வார் (அ) கரைதுறை

வேளாளர் எனப்பட்ட முக்குவர் சமூகத்தவரைக் கொண்டிருந்திருக்கவேண்டும் என நாம் யூகித்துப் புரிந்து கொள்ள முடிகிறது. நிலைப்படை எனும் படைப்பிரிவு கோட்டாற்றில் (நாகர்கோவிலில்) முதற் குலோத்துங்கன் காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தது என்றும் சேர நாட்டு எல்லைப்புறக் காவல் இப்படையின் பணியாக இருந்தது எனவும் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. இப்படையில் தனுஸ்தம்பர் (தனு தம்பர்) என்றழைக்கப்பட்ட வில் வீரர் பிரிவும் இருந்தது. அரசனின் பட்டப் பெயரால் "தரணி விச்சாதரத் தனுதம்பர்" என இப்படைப் பிரிவுக்குப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.[35] இத்தகைய பல்வேறு கல்வெட்டுக் குறிப்புகளைப் பார்க்கையில் சோழர்படை அமைப்புகளுள் பல தகுதித்தேர்வு போன்ற பல்வேறு தேர்வு முறைகளைப் பின்பற்றிப் போட்டிகள் மூலம் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட படைப்பிரிவுகளாகும் எனும் விவரமும் தெரியவருகிறது. தெரிஞ்ச வில்லிகள், தெரிஞ்ச கைக்கோளர், தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்[36] எனும் பெயர்களால் இத்தகைய படைப்பிரிவினர் அழைக்கப்பட்டனர். சேரநாட்டைப் பொருத்தவரை, சங்க காலத்திலேயே இத்தகைய தேர்ந்தெடுப்பு முறைகள் பின்பற்றப்பட்டன என்பதற்கு "ஆய்ந்து தெரிந்த புகல்மறவர்" என்ற பதிற்றுப்பத்து (69.8) அடி சான்றாகும். "தெரஞ்ஞெடுப்பு" (தெரிந் தெடுப்பு) எனும் மலையாளச் சொல் தேர்தலைக் குறிக்கப்பயன்படுவது இங்கு நம் கவனத்திற்குரியதாகும். இத்தகைய தேர்வினை நடத்துகின்ற தகுதி படைத்த படைப் பிரிவு, பரம்பரையாக வருகிற மூலப்படையாகவும் வலங்கைப் பழம்படையாகவும் இருந்திருக்க வேண்டும்.[37] "ஆசிரியத் தன்மை"யுடைய இத்தகைய பழம்படை கி.பி.12—13—ஆம் நூற்றாண்டுகளில் "பரிக்ரகம்" என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மேற்கூறப்பட்ட விவரங்களின் பின்னணியில் பார்க்கும்போது தான் வலங்கை—இடங்கை எனும் சாதிகளின் பிரிவு சோழர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதற்கான வரலாற்று நிகழ்வுப் போக்குகளை நாம் புரிந்து கொள்ள இயலும். சோழர்களின் காலத்தைச் சேர்ந்த உரையாசிரியர்கள் பரிமேலழகர், பரிதியார் ஆகியோர் திருக்குறள் பொருட்பாலின்,

கல்வி அதிகாரத்தின் முன்னுரையில் ஆட்சியாளர்கள் அல்லது நிர்வாகிகள் கற்க வேண்டிய கல்வி என்பதில் *தொண்ணூற்றெட்டுவகை ஆயுதக்கல்வி* என்பதும் அடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளதை இங்குப் பொருத்திப் பார்க்கலாம்.[38] மக்கள் சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கும், அரச நிர்வாகத்தில் தமக்கும் உரிய பங்களிக்கப்பட்டுள்ளது என்ற உணர்வை ஏற்படுத்தவும், சோழப்பெருமன்னர்களின் வெற்றியிலும் வியாபகத்திலும் இப்பல்வேறு தரப்பு மக்களுக்கும் பங்குண்டு என்ற உணர்வை ஏற்படுத்தவும் இத்தகைய வலங்கை–98 சாதிகள், இடங்கை–98 சாதிகள் என்ற பிரிவு ஒரு காலக்கட்டம்வரை உதவிகரமாகவே இருந்திருக்கிறது. அதுவே பின்னர்ச் சோழ குலத்தவரின் வீழ்ச்சிக்கும் காரணமாகிவிடுகிறது. இதனை வேறுவகையில் சொல்லுவதானால், சோழ அரசின் வெற்றிக்கு முழு உரிமை கொண்டாடிய சோழ அரசகுலத்தவர், வேளாண்மை விரிவாக்கத்தின் அடிப்படையில் அமைந்த அந்த அரசின் வியாபகத்துக்கு முழு உரிமை எடுத்துக்கொள்ள இயலாத நிலை தோன்றி விடுகிறது எனலாம். இதனை "வலங்கை மாலை நூல் குறிப்பிடும் செய்திகள்" பகுதியில் விரிவாக ஆராய உள்ளோம்.

வலங்கை மாலை நூல் குறிப்பிடும் செய்திகள்

(1) வலங்கை மாலை காப்புச் செய்யுள், கடவுள் துதி, ஆகியவற்றுடன் தொடங்குகிறது. வித்யாதர முனிவர், ஏழு நாக கன்னியரையும் ஏலாசினி என்ற சுனையின் கரையில் கூடியதால் சான்றார் குல முதல்வர்கள் எழுவர் பிறந்தனர் என்றும் பிட்டாபுரத்தாள் எனப்பட்ட காளி இச் சான்றார் குலத்தவரை வளர்த்தாள் என்றும் வலங்கை மாலை குறிப்பிடுகிறது.[39] ஆந்திர மாநிலத்தின் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் தக்ஷாராமம், ராஜ மகேந்திரபுரி (ராஜமுந்திரி) ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களுக்கு வடக்கே, ஏலாறு எனப்படும் நதியின் வடகரையில் பிட்டாபுரம் உள்ளது. பிட்டாபுரம் வேங்கி மண்டலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படினும், தென் கலிங்கத்துக்கு மிக அருகில் உள்ளது. கலிங்க நாட்டுச் சிங்கபுரத்துடன் நெருங்கிய வரலாற்றுத்

தொடர்புடைய ஊராகும். ஜைன சமயத்துடனும் பௌத்த சமயத்துடனும் உறவுடைய ஓர் ஊராகும். குப்தர் கல்வெட்டிலேயே பிட்டாபுரம் குறிப்பிடப்படுகிறது. மேலும், குண்டூர் மாவட்டத்தில் கிருஷ்ணா (கண்ண பெண்ணை அல்லது கரும்பனையாறு) நதியின் கரையில் அமைந்துள்ள அமராவதி, தன்ய கடகத்தைத் தலை நகராகக் கொண்டு கி.பி. 4,5–6 (கி.பி. 350–560) ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த ஆனந்த கோத்திரத்து அரசர்கள் பௌத்த சமயத்தை ஆதரித்தனர். கோசலதேசத்து அரண்மனையில் தினமும் உணவருந்தி வந்த ஒரு பிக்கு ஆனந்தராவார். இவர் புத்தரின் சீடர். ஆனந்த கோத்ரம் என்பது இவர் பெயரில் உருவானது எனலாம். இவர்களுடைய சாசனங்கள் சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ளன. நாக குலப் பெண்டிருடன் மணவுறவு கொண்ட சாதவாகன அரச வம்சத்தவரைப் போன்றே, ஆந்திரத்தின் பூர்வ குடியினராகிய நாக வம்சத்துப் பெண்டிர்க்கும் பௌத்த சமயத்தை ஆதரித்த ஆனந்த வம்ச அரச குலத்தவர்க்கும் ஏற்பட்ட மணவுறவில் – ஏலாற்றங்கரையில்– தோன்றியவர்களே வலங்கை மாலையின் நாயகர்கள் எனலாம். பிட்டாவரத்தாள், பிட்டாரம்மன்(புட்டாளம்மன்) போன்ற பெயர்களில் காளியம்மன் தமிழகத்தில் வழிபடப்படுகிறாள். வித்யாதர முனிவர் குறித்த இப்புராணக் கதை சான்றார் சமூகத்தவரின் பெரும்பாலான செப்புப்பட்டயங்களிலும் தவறாமல் குறிப்பிடப்படுகிறது.(40) சான்றார் சமூகத்தவர்க்கு உரிய மடங்களாகக் கொங்கு நாட்டில் நான்கு மடங்களும் சோழ நாட்டில் ஒரு மடமும் உள்ளன. கொங்கு நாட்டுச் சான்றார் மடங்களுக்குச் சிவப்பிராமணர்களும் சோழ நாட்டு (திருவிடை மருதூர்) மடத்துக்குப் பண்டாரம் (வீரக்கொடி வேளாளர்) குலத்தவரும் மடாதிபதியாக உள்ளனர்.(41) கொங்கு நாட்டில் திருமுருகன்பூண்டி, கருமாபுரம், பெருந்துறை, அவல்பூந்துறை ஆகிய இடங்களில் சான்றார் மடங்கள் உள்ளன. இம்மடங்களுள் பெருந்துறை தவிரப் பிற மடங்களில் கி.பி.17–ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்தமைதியில் பொறிக்கப்பட்ட தமிழ்ச் செப்பேட்டுச் சாசனங்கள் உள்ளன. சோழ நாட்டுத் திருவிடை மருதூர்ச் சான்றார் மடத்திலும்

கி.பி. 17—ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் அமைந்த தமிழ்ச் செப்பேட்டுச் சாசனம் உள்ளது. திருமுருகன்பூண்டி, கருமாபுரம் சான்றார் மடச் செப்பேடுகள் புலவர் செ. இராசு அவர்களால் தொகுக்கப்பட்டுத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட "கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்களில்" பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவல்பூந்துறைச் சான்றார் மடச் செப்பேடு, நெல்லை நெடுமாறன் அவர்களால் கண்டறியப் பட்டதாகும். இக்கட்டுரையாசிரியரால் அச்செப்பேடு வாசிக்கப்பட்டுள்ளது.[42] இந்தியக் கல்வெட்டியல் கழகத்தின் ஆய்வேட்டில்[43] இச்செப்பேடு குறித்து ஆய்வுக் கட்டுரையும் எழுதப்பட்டுள்ளது. திருவிடைமருதூர்ச் செப்பேடும் நெல்லை நெடுமாறன் அவர்களால் கண்டறியப்பட்டதாகும். இச்செப்பேடும் இக்கட்டுரையாசிரியரால் வாசிக்கப் பட்டுள்ளது.[44] மேற்குறித்த நான்கு செப்பேடுகளுள் இவ்விரு செப்பேடுகளும், கருமாபுரம் செப்பேடும் சான்றார்களின் சோழகுலத் தொடர்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. இருப்பினும் இந்நான்கு செப்பேடுகளிலும் பொதுவாகச் சான்றார் குலத்தின் 7 பிரிவுகளின் தோற்றம் குறித்த புராணக்கதை குறிப்பிடப்படுகிறது. வித்யாதர முனிவனும் ஏழு கன்னியரும் இக்குல மூதாதையராகவும் காளி இக்குலத்தவரை வளர்த்த தெய்வமாகவும் குறிப்பிடப்படுகின்றனர். வித்யாதரன் என்பது "விஞ்சையர்" (வானில் சஞ்சரிப்பவர்) என்று தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது என்றும், வானம் எனப்பொருள்படும் "வித்யுன்" என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து இச்சொல் தோன்றியதாகவும் கருதப்படுகின்றன. பதினெண் கணங்களுள் யக்ஷர், சித்தர் போன்று வித்யாதரரும் ஒரு கணமாகும். "வானவர்" என்பது சங்க காலத்திலேயே சேர மன்னர்களுக்குரிய ஒரு பட்டமாக வழங்கி வந்ததும் இப்பொருளில் இருக்கக்கூடும். பிற்காலச் சோழ அரசர்களுள் இராஜேந்திர சோழன் சோழ வித்யாதரன் என்றும் மகாபலி குல அரசர்களான வாணர்களுள் சிலர் வாணவிச்சாதரன் என்றும் பட்டம் புனைந்து கொண்டிருந்தனர். "தேவர்" என்ற பட்டத்தை அரசர்கள் விரும்பிச் சூட்டிக் கொண்டதையும் இடைக்காலச் சாசனங்களால் அறிகிறோம். பிராமணர்கள் "பூசுரர்"

(பூவுலகில் வாழும் தேவர்) எனக் குறிப்பிடப்படுவதுடன் இதனை ஒப்பிடலாம். திருவெண்காட்டுச் செப்பேடு[45] கலிங்க நாட்டுக் காந்த விஞ்சைய நகரை (ஓரிசா மாநிலம் "கஞ்சம்" பகுதி) உருவாக்கிய காந்த விஞ்சையன் என்ற சோழ அரசனே வித்யாதர ரிஷி எனக் குறிப்பிடுகிறது. மணிமேகலை (22:27) குறிப்பிடும் "காந்தன்" இவனே.

வித்யாதர முனிவர் நாக கன்னியர் எழுவரைப் புணர்ந்த நிகழ்ச்சியை வலங்கை மாலை (வரி.220–284) விரிவாக வருணிக்கிறது. அத்திகிரி தீர்த்தத்தில் நீராடி வித்யாதர முனிவர் வீற்றிருக்க, ஏலாசுனையில் நீராட வந்த நாக கன்னியர்களைக் கண்டு காமுற்று, தமது சித்து வேலையால் குளிரையும் மழையையும் மேல் காற்றையும் உருவாக்குகிறார். நீராடிக் கரையேறிய நாக கன்னியர் குளிர் காய நெருப்பைத் தேடுகின்றனர். வித்யாதர முனிவர் நெருப்பு வடிவில் நாக கன்னியரைப் புணர்கிறார். அதன் பின்னர் நாக கன்னியர் அங்கு வந்த காரணத்தை வினவுகிறார். விமல முனிவரின் (கபில முனிவர்) சாபத்தால் அறுபதினாயிரம் அரசர்கள் இறக்க, பகீரதன் அவர்களுக்குரிய நீர்க்கடன் இயற்றுவதற்காகத் தவம் செய்து கங்கையை வரவழைத்தான் என்றும் அந்த கங்கையே ஏலாசுனையில் தோன்றிற்று என்றும் கங்கையில் நீராடுவதற்காகவே ஏலாசுனைக்கு வந்ததாகவும் நாக கன்னியர் குறிப்பிடுகின்றனர். நாக கன்னியரைப் புணர்ந்தவர் ரிஷியாதலால் உடனே கன்னியர் கருத்தரித்து ஏழு பிள்ளைகளைப் பெறுகின்றனர்; பெற்ற குழந்தைகளைத் தங்கள் உலகாகிய கீழுலகிற்கு (பாதாள உலகிற்கு) எடுத்துச் சென்றால் பழியேற்படும் என்று கூறி, அக்குழந்தைகளை வித்யாதர ரிஷி வசமே ஒப்படைத்து விட்டுச் சென்று விடுகின்றனர்.

இனி, (வரி 285–375) ஏழு குழந்தைகளும் பத்திர காளிவசம் ஒப்படைக்கப் பட்ட நிகழ்ச்சி வருணிக்கப்படுகிறது. மூவேந்தரின் (தேவேந்திரனின் எனப் பத்திரகாளியம்மன் கதை குறிப்பிடுவதே பொருத்தமாகத் தெரிகிறது) ஊட்டுப்புரைக்காக வளர்க்கப்பட்டு வந்த காராம்பசுவின் பாலை ஏழு குழந்தைகளுக்கும் புகட்டி வித்யாதர முனிவர்

அக்குழந்தைகளை வளர்க்கிறார். காராம்பசுவின் பால் குறைவதையறிந்த மூவேந்தர் (தேவேந்திரர்) படை, சான்றார் சிறுவர்களைத் தண்டிப்பதற்காகப் பிட்டாபுரத்துக்கு வருகிறது. பிட்டாபுரத்துக் காளி, அப்படையைத் தடுத்து, "எங்கே போகிறீர்கள்?"என்று சினத்துடன் வினவுகிறாள். சான்றார் சிறுவர்களைச் சந்திப்பதற்காகச் செல்வதாக வேந்தர் படை கூறுகிறது. அப்படியானால் தானும் அவர்களுடன் வருவதாகக் காளியும் கூறுகிறாள். வேந்தர் படையைக் கண்டு வித்யாதர முனிவர் சீற்றம் கொள்ள, வேந்தர் படை புறமுதுகிட்டு ஓடுகிறது. வித்யாதர முனிவர் காளியிடமும் கோபம் கொள்கிறார். காளி, தானே சான்றோர் சிறுவர்களை வளர்ப்பதாகக் கூறி வித்யாதர முனிவரின் சினத்தைத் தணிக்கிறாள். அதன்பின் காளியே அக் குழந்தைகளை வளர்த்து, எட்டுவித ஆயுதங்களின் பயிற்சியும் அளித்துச் சிறந்த போர்வீரர்களாக உருவாக்குகிறாள்.

தொல்லியல் கண்ணோட்டத்தில் இத் தொன்மக் கதையை அணுகும்போது ஒரு முதன்மையான கருதுகோள் உருவாகிறது. எட்டுவித ஆயுதங்களில் பயிற்சி பெற்ற போர் வீரர்கள் என்பது இரும்பு யுகம் எனப்படும் பெருங்கற்படைக் காலக் கட்டத்தின்(Megalithic Age) தலைமக்களான அரச குலத்தவர்களைக் குறிக்கக்கூடும். வேந்தர் படைகள் என்பது, மழையைப் பயன்படுத்தி விவசாயம் செய்த, வஜ்ராயுதம் என்ற எலும்புக் கருவியை ஆயுதமாகப் பயன்படுத்திய, மருதநிலத் தலைவனான இந்திரனின் படைகளைக் குறிக்கும் எனக் கொண்டால், புதிய கற்கால நாகரிக நிலையிலிருந்த பூர்வ குடியினரை இரும்பு யுகத் தலைமக்கள் வெற்றி கொண்ட நிகழ்வே வித்யாதர முனிவர் வேந்தர் படைகளை வென்றதாகக் குறிப்பிடப்படுகிறது எனலாம். பாதாள உலகாகிய நாகலோகக் கன்னியரை வித்யாதர முனிவர் புணர்ந்த செயல், நாஞ்சில் என்ற செம்பு-கற்கால அல்லது வெண்கலயுக உழவுக் கருவியைப் பயன்படுத்தி, நதி நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயம் செய்த வெள்ளை நாகனாகிய பலதேவன் குலப் பெண்டிரை இரும்பு யுகத்தவர் மணம் புணர்ந்து ஆளும் வர்க்கத்தவராக மாறிய நிகழ்வினை உணர்த்தக் கூடும்.[46] இது கலிங்க தேசப்பகுதியில் நிகழ்ந்திருக்க

வாய்ப்புண்டு. குறிப்பாகச் சோழ அரச குல உருவாக்கம் இப்பகுதியில் நிகழ்ந்திருக்கலாம். பிற்காலச் சோழ அரசர்களின் முடிசூடும் தலமான தில்லை (சிதம்பரம்) குறித்த புராணக் கதைகளில் — வீமவர்மன் என்ற சோழ அரசன் பற்றிய புராணத்தில் சோழர்கள் கௌட (வங்காள) தேசத்தவர் என்றும், கௌடதேசத் தொடர்பால் தான் வேங்கைப் புலி எனப்படும் வங்காளப் புலியைத் தமது சின்னமாகக் கொண்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது, நாம் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

வலங்கை மாலையில் அடுத்ததாக (வரி 376—420) விவரிக்கப்படுவது பத்திரகாளி தாருகனை அழித்த நிகழ்ச்சியாகும். தாருதன் (தாருகன்) என்ற அசுரன் இந்திரனின் நாட்டைக் கொள்ளை கொண்டு, நாக கன்னியைப் புணர்ந்து, தெய்வ கன்னியரைச் சிறையிலிட்டுத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பல கொடுமைகள் இழைக்கிறான். சான்றார் பிள்ளைகள் எழுவரும் தாருதனுடன் போரிட்டு அவனைச் சிறைப்பிடித்து இழுத்து வருகின்றனர். காளி அவனைக் கொன்று அவனது உதிரத்தைக் குடிக்கிறாள்.

இனி, அடுத்துச் சான்றார் குலத்தவருள் ஒரு பிரிவினர்க்குப் பனைமரத் தொடர்பு ஏற்பட்ட பின்னணி விவரிக்கப்படுகிறது. (வரி 420—580) தாருதனின் உதிரத்தைக் குடித்த காளிக்கு நீர் வேட்கை ஏற்படுகிறது. இந்திரனின் சாபத்தால் தேவலோகத்திலிருந்து பூமிக்கு வந்த சுபதேவன் என்ற முனிவனும் அவனது மனைவியும், சுனையில் தேவர்களுக்குரிய அமிர்தத்தை அடைத்து வைத்துக் காத்து வருகின்றனர். அதனைக் கண்ட சான்றார் சிறுவர்கள், காளியின் நீர்வேட்கையைத் தணிக்க அந்த அமிர்தம் பயன்படும் என எண்ணிக் காளியிடம் சென்று கூறுகின்றனர். ஆனால் காளி அங்கு வந்து சேர்வதற்குள் முனிவனும் மனைவியும் சுனையிலிருக்கும் அமிர்தத்தைக் குடித்து விட்டுக் காட்டில் ஒளிந்து கொள்கின்றனர். கோபம் கொண்ட காளி, அவர்களைக் கண்டுபிடித்துப் பனை மரங்களாக மாற்றித் தலைகீழாக நட்டு வைக்கிறாள்; சான்றார் சிறுவர்களிடம், முனிவனும் மனைவியும் உண்ட அமிர்தத்தை

அவர்களிடமிருந்து மீட்குமாறு கட்டளையிடுகிறாள்; தனது சூலத்தை இரண்டாக ஒடித்து, அமுது இறக்கும் குறடாக மாற்றுகிறாள்; தனது கையிலிருக்கும் கபாலத்தையே அமுதத்தைப் பிடிக்கும் கலசமாக மாற்றி வழங்குகிறாள். எழுவருள் ஒருவன் பனைமீது ஏறி அமுது இறக்கிக் காளிக்குப் படைக்கிறான். காளி அதனை அருந்தி, "இது உபவேதம்; மந்திரம்" என்று உபதேசம் அளித்துப் பட்டாடையும் பரிவட்டமும் அணிவித்து எழுவரையும் சிறப்பிக்கிறாள். ஆயினும் பத்தினியாய் நிற்கும் ஒரு பனை மரத்தை எவ்வாறு பல்கிப் பெருகச் செய்வது என்ற சிந்தனை எழுந்தது. பனை மரத்தின் கனிகளை யெல்லாம் சான்றார் சிறுவர்கள் பாற்கடலில் எறிகின்றனர். இரணகை என்பவள் (ரேணி, அயிரேணி எனப்படும் இந்திராணியாக இருக்கலாம்) பாற்கடலுக்குள் புகுந்து, அங்குத் துயில் கொள்ளும் திருமாலைப் போற்றிக் கூத்தாடுகிறாள். திருமாள் அவளுக்கு மந்தார மாலையைப் பரிசாக வழங்குகிறார். இரணகை அந்த மாலையைத் தன்னால் தரிக்க வொண்ணாதென்று துர்வாச முனிவருக்கு வழங்குகிறாள். துர்வாசர் இந்திரனின் முன்பு அம்மாலையை வைக்கிறார். இந்திரன் அதனை ஐராவதத்தின் கொம்பில் வைக்கிறான். ஐராவதம் அந்த மாலையைக் காலின் கீழே போட்டுச் சிதைத்து விடுகிறது. துர்வாசர், இந்திரனின் செல்வமெல்லாம் பாற்கடலில் விழுமாறு சாபமிடுகிறார். பின்னர்த் தேவர்கள் இழந்த செல்வத்தை மீட்கப் பாற்கடலைக் கடைகின்றனர். அப்போது பாற்கடலிலிருந்து பனங்கொட்டை தோன்றுகிறது. அதனைப் புதைத்துப் பயிராக்கி, பதநீர் இறக்கி, மனிதர்க்கும் வானவர்க்கும் திரிசூலிக்கும் (காளிக்கும்) படைத்து வாழுமாறு சான்றார் சிறுவர்க்குத் தேவர்கள் அருள்கின்றனர். தாருதனை வென்ற சகவீரராசன் என்ற பட்டமும் வழங்குகின்றனர். ஆண் பனை (கொட்டையில்லாதது, பெண்பனை (கொட்டையுள்ளது) பற்றிய புதிர் இக்கதைக்கு அடிப்படையாக இருக்கலாம்.

அடுத்து (வரி 581–610) தாருதன் தம்பி சாமீகரனைச் சான்றார் வதைத்த நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. சாமீகரன் இந்திரனை ஏவல் கொண்டவன் என வலங்கை மாலை குறிப்பிடுகிறது. தாருகன், சாமீகரன் என்போரைச் சும்பன்

நிசும்பன் என்றும் புராணங்கள் குறிப்பிடுவதுண்டு. இவர்கள் இருவரையும் காளிதேவி வதைத்தாள் என்றே கொள்வர். (தாருகன். நிசும்பன் இருவரையும் வாசுதேவர் வதைத்தார் என ஜைனப் புராணங்கள் கூறும்.) இவர்கள், சபரர் (எயினர்) குலத்தைச் சேர்ந்த, பாலை நிலப் பூர்வ குடித் தலைவர்களாக – அல்லது பிரதிநிதிகளாக – இருக்கக் கூடும். சாமீகரன் என்ற சொல் சமீகரன் என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். சமீ என்பது வன்னி மரத்தைக் குறிக்கும். காளி தேவியின் முதன்மையான விழாவாகிய மகாநவமி (ஆயுத பூஜை) விழாவில் வன்னி மரம் முதன்மையான இடம் பெறும்; மட்டுமின்றி, விஜயதசமி எனப்படும் பத்தாவது நாள் விழாவில் காளியால் வதம் செய்யப்படும் அசுரனை வன்னிய மறவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதுண்டு.[47] பாலை நிலக் குடிகளான எயினர்களைத் தொல்லியல் பரிபாஷையில் குறிப்பிடுவதெனில் பழங்கற்காலத்தின் பிற்பகுதி நாகரிக நிலையில் வாழ்ந்த வேட்டைக் குடியினர் எனலாம்.[48]

இதனையடுத்து வலங்கை மாலை (வரி. 618–650), சான்றார் சிறுவர்கள் சிவனுக்கும் உமைக்கும் ஆடை நெய்து தந்த நிகழ்ச்சியையும் திருக்கண்டீசுரமுடையார் என்ற திருநாமம் பெற்றதையும் குறிப்பிடுகிறது. இவை பிட்டாபுரத்தில் நிகழ்ந்தவையாகும். நெசவுத் தொழிலுக்குக் கலிங்க நாட்டுடன் உள்ள தொடர்பினை உணர்த்துவதற்காக இக்கதை புனையப்பட்டிருக்கலாம். இலங்கை வரலாற்றிலும், கலிங்க மன்னன் விஜயனின் இயக்கர் குல மனைவி குவேனியால் நெசவு கற்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கலிங்கம் என்ற சொல் உயர்வகை ஆடையைக் குறிப்பதற்குச் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதும் நமது கவனத்துக்குரியதாகும். கி.பி.19 ஆம் நூற்றாண்டைய ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி ஆவணங்களில், ஆந்திரத்தின் சில பகுதிகளில் "ஜான்றோ" என்ற நெசவாளர் சாதியினர் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இச் செய்தியும் மேற்குறித்த புராணக் கதையை உறுதிப்படுத்தும் பிற்காலச் சான்று ஆகலாம்.

சான்றார் சிறுவர்கள் எழுவரும், காஞ்சியின் வடபகுதியை ஆண்ட செகராய கந்திருவோன் என்பவனின்

மகளிர் எழுவரை மணந்து, 210 குழந்தைகளை (இருநூற்றொருவர் எனச் சில இடங்களில் குறிப்பிடப்படுகிறது)ப் பெற்றுப் பின்னர் எழுநூற்றுவராக மாறிய நிகழ்ச்சி வலங்கை மாலை (வரி. 660–790)–யில் அடுத்து விவரிக்கப்படுகிறது. செகராச கந்திருவோன் என்ற ஆரிய குல அரசனின் மகளிரை மணம் முடிப்பதற்கு அமராவதியை ஆண்ட விகடாதிசூரன் விரும்புகிறான். விகடாதி சூரனின் குலம் தாழ்வானது எனக்கூறி, செகராச கந்திருவோன் இதற்கு மறுத்து விடுகிறான். விகடாதி சூரன், காஞ்சியின் மீது படையெடுத்துச் சென்று செகராச கந்திருவோனைக் கொன்று அவனது மனைவி விமலையைச் சிறைப் பிடித்துச் சென்று விடுகிறான். சான்றோர் எழுவரும் விகடாதி சூரனுடன் போரிட்டு அவனைக் கொன்று விமலியைச் சிறை மீட்டு விமலி மக்களை மணக்கின்றனர். இக் கதையில் அமராவதியை யாண்ட விகடன் எனக் குறிப்பிடப்படும் அரசன் வாகாடக வம்சத்தவனாக இருக்கலாம். கி.பி3 –ஆம் நூற்றாண்டளவிலேயே ஆந்திர மாநிலம் குண்டூர்ப் பகுதியிலுள்ள அமராவதியை ஆண்டவர்கள் வாகாடகர்ஆவர். அமராவதியிலுள்ள தூண் கல்வெட்டுகளில் தான் வாகாடக என்ற வம்சப் பெயர் முதன் முதலில் குறிப்பிடப்படுவதாகவும்(49) அமராவதியை யாண்ட அரசர்கள் பட்டியலில் சூரன் என்ற பெயரும் காணப்படுகிறது என்றும்(50) வரலாற்றறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே வாகாடக அரச வம்சத்தவரிடமிருந்து அமராவதியைச் சான்றார் குலத்தவர் கைப்பற்றிய நிகழ்வே இவ்வாறு குறிப்பிடப்படுகிறது எனக் கொள்ளலாம். இது நிகழ்ந்தது கி.பி. 4–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எனக் கொள்வதற்கு வாய்ப்புண்டு. இக் காலக்கட்டத்திலிருந்து அமராவதி, தான்ய கடகம் (தரணிக் கோட்டை) பகுதிகளில் ஆனந்த வம்ச அரசர்களின் சமஸ்கிருதக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைக்கத் தொடங்குகின்றன. ஆனந்த வம்ச அரசர்களுள் கந்தரன் என்ற பெயருடைய அரசர்கள் இருந்துள்ளனர். குண்டூர் அருகிலுள்ள கந்தரபுரம் (கண்டேறு) இவர்களது தலை நகராக இருந்தது. காஞ்சியின் வடபாரிசத்தையாண்ட ஆரிய வம்ச அரசன் செகராச கந்திருவோன் என்பது ஆனந்த கோத்திர அரசன் கந்தரனைக் குறிக்கக்கூடும். கி.பி. 565 –ஆம் ஆண்டளவில், இரண்டாம் கந்தரன் என்ற ஆனந்த வம்ச

அரசனின் பெண் வயிற்றுப் பேரன் ஒருவன் அமராவதிப் பகுதியை ஆட்சி செய்தான் என்றும், அவனுக்கு "சத்சதாமல்ல" என்ற பட்டப் பெயர் இருந்தது என்றும் சேஜர்லா என்ற ஊரில் கபோதேஸ்வரர் கோயிலின் முன்னர் நிறுத்தப்பட்டுள்ள ஒரு கல்வெட்டால் தெரிய வருகின்றன.[51] சத்சதாமல்ல என்பது சப்தசதமல்ல என்பதன் திரிந்த வடிவமாக இருக்கலாம். அவ்வாறெனில் அச் சொல "எழுநூற்று மல்லன்" எனப் பொருள்படும்.

காளி வழிபாடு தொடர்பான பழங்கதைகள் (பழையனூர் நீலி கதை, திருவாலங்காட்டில் சிவனுடன் ஆடித் தோற்ற கதை போன்றவை) கலிங்க நாட்டுச் சிங்கபுரத்துடன் அவ் வழிபாட்டுக்கு உள்ள தொடர்பை உணர்த்தும். மத்திய கலிங்கம் என்பது ஒரிஸா மாநில கஞ்சம் (காந்த விஞ்சைய நகரம்) மற்றும் ஆந்திர மாநில ஸ்ரீகாகுளம் பகுதிகளை உள்ளடக்கியதாகும். இதன் தெற்கே உள்ள தென் கலிங்கத்தில் தான் வலங்கை மாலை குறிப்பிடும் பிட்டாபுரம் உள்ளது. காளியால் வளர்க்கப்பட்ட சான்றார் சிறுவர்களின் வம்சத்தவரை எழுநூற்றுவர் என வலங்கை மாலை குறிப்பிடுவதுடன், கலிங்க அரசனான விஜயன் எழுநூறு வீரர்களுடன் கப்பலேறி இலங்கை சென்று ஆட்சியமைத்தததாக மகா வம்சம் கூறுவதையும் இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.[52]

இதனையடுத்து வலங்கை மாலை (வரி. 790—810), சிவன் வழங்கிய கோட்டீசுரமுடையார் கோட்டையில் சான்றார் விமலை மக்களுடன் மணம் புணர்ந்து வாழ்ந்த போது, நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. சான்றார்கள், காளி வழங்கிய அமிர்த உபதேசத்தினைக் கூறி (மது அருந்தி)க் காளியின் திருக்கூத்தினைக் கண்டனர். அப்போது தவலோகப் பெண்டிரும் கூத்தாட, அவர்களது இடையிலிருந்து துகில் நழுவிற்று. விமலை மகளிர் எழுவரும் தமது கணவரிடம் "இந்த மந்திரத்தை இனிக் கூறத் தகாது" எனக் கூறுகின்றனர். சான்றாரும் அதனைக் கேட்டு மதுப் பானையைத் தெருவில் வைத்து விடுகின்றனர்.

இதனையடுத்துக் கரிகால் சோழன், சான்றார் குல வீரர்கள் இருநூற்றுப் பதின்மர் துணையுடன் சம்பராசுரனை

வென்று இரட்டைச் சங்கு பறித்த நிகழ்வு குறிப்பிடப்படுகிறது. (வ.மா. வரி. 816—840) சம்பரன் என்பவன், ரிக் வேதகால அரசன் சுதாசனால் வெற்றி கொள்ளப்பட்ட கிராத குல அரசனாவான். கிராதர் அல்லது சிலாதர் எனப்படுவோர், மான்—க்மேர் என மானிடவியலாளரால் குறிப்பிடப்படும் மஞ்சள் வண்ணக் குலக் குழுவினர் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவர்கள் சங்கு குளிக்கும் தொழில் நுட்பமறிந்த வேட்டைக் குடியினராகலாம். சம்பரன் பற்றிய இக்கதை வலங்கை மாலையில் இந்த இடத்தில் குறிப்பிடப்படுவது கால ஒழுங்குக்கு உட்பட்டதாக அமையவில்லை. எனினும், இந் நிகழ்வும் கலிங்கக் கடற்கரைப் பகுதியிலிருந்து மத்திய இந்தியா வரை பரவி வாழ்ந்த —நுண் கற்கால (Microlithic Age) நாகரிக நிலையைச் சார்ந்த— பூர்வ குடியினரை, இரும்பு யுகத் தலைமக்கள் வென்று அடிமைப்படுத்திய வரலாற்றை யுணர்த்தும் ஒரு நினைவுப் பதிவே எனலாம். சான்றார் எழுநூற்றுவராக உருவாவதற்கு முன்னர் இருநூற்றுப்பதின்மராக இருந்த நிலையில் இது நிகழ்ந்ததாக வலங்கை மாலை குறிப்பிடுவதும், இது மிகப் பழமையான தொன்மக் குறிப்பு என்பதை உணர்த்துவதாகலாம்.

இதனையடுத்து வலங்கை மாலை (வரி. 844—6) சான்றார் எழுநூற்றுவர், பெருந்துறையில் வாழும் பித்தன் அருளால் கோட்டையில் புகழ் பெற வீற்றிருந்தனர் எனக் குறிப்பிடுகிறது. பெருந்துறை, சிறுதுறை என்பன கிருஷ்ண பெண்ணை எனப்பட்ட கரும்பனையாற்றின் (கிருஷ்ணா நதியின்) துறைகள் எனச் சோழர் மெய்க்கீர்த்தியால் அறியலாம். இவ்வாறு சான்றார் ஆட்சி செய்கையில், சோழர்களின் தலைநகரான அயோத்தியைக் கலியாணன் வளைத்துக் கொள்கிறான். மூன்று முறை சோழர்கள் எதிர்த்துப் போரிட்டும் ஒன்றும் செய்ய இயலவில்லை என வலங்கை மாலை (வரி. 879) குறிப்பிடுகிறது. இறுதியில் சான்றார் படையின் உதவியுடன் கலியாணனைச் சோழன் வெல்கிறான். கி.பி. 1018 முதல் 1052 வரை சோழ நாட்டை ஆட்சி புரிந்த முதல் இராஜாதி ராஜன், "மும்மடி போய்க் கலியாணி செற்ற தனியாண்மைச் சேவகன்" என விக்கிரம சோழன் உலாவில் (கண்ணி. 37—38) புகழப்படுகிறான். எனவே

அக்காலக்கட்ட வரலாற்று நிகழ்வே இவ்வாறு வலங்கை மாலையில் குறிப்பிடப்படுகிறது என்பது தெளிவு. கி.பி. 9 —ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தஞ்சையை மையமாகக் கொண்டு தமிழகத்தில் சோழப் பேரரசு உருவாகத் தொடங்குகிறது. இந்தச் சோழப் பேரரசுடன் தொடர்புடைய சான்றார் குலப் பிரிவினரின் வரலாற்றுப் பெருமைகளே வலங்கை மாலையில் முதன்மையாகப் பாடப்படுகின்றன. எனவே இச் சோழப் பேரரசின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நிர்ணயித்த —அல்லது வலிமையான பாதிப்பை ஏற்படுத்திய— சான்றார் குலப் படைப் பிரிவின் வரலாற்றைப் புரிந்து கொள்வதற்குச் சோழர் ஆட்சி பற்றிய அடிப்படையான புரிதல் தேவையாகும்.

பிற்காலச் சோழர் ஆட்சியில் குறிப்பாக முதல் இராஜராஜசோழன் ஆட்சியில் உடையார் படைக்கொங்கவாளர் எனும் படைப்பிரிவு கல்வெட்டுகள் மூலம் நமக்கு அறிமுகமாகிறது. இராஜராஜ சோழன் காலத்தில் அமைக்கப்பட்ட படைப்பிரிவுகளுள் வலங்கை மகாசேனை அல்லது வலங்கைப் பெரும்படை மிகச் சிறந்த போர்ப்பயிற்சி பெற்ற படையாகும். மரபு வழியில் அமைந்த ஆசான்கள் இப்படைப்பிரிவுக்குப் போர்ப்பயிற்சிகள் அளித்தனர். களரி மற்றும் வர்மக்கலை எனப்படும் உடலின் நுட்பமான நரம்பு மையங்களை வெறுங்கையால் தாக்கும் போர்முறை ஆகியவற்றை இணைத்து "அங்கைப் போர் முறை" என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. சேர நாட்டில் இதில் சிறப்பான பயிற்சி பெற்றோர் இருந்தனர். சேர நாட்டு மரபுப்படி முந்நூற்றுவர் எனப்பட்ட சான்றார் (க்ஷத்ரியப் பிரிவினர்) இக்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். திருமூழிக்களம் எனும் ஊரில் அமைந்திருந்த முந்நூற்றுவர் பிரிவுச் சான்றார் சபையினர் கேரளநாடு முழுமையும் உள்ள கோயில்களை நிர்வகிப்பதற்குரிய கச்சம் (விதிகள் மற்றும் நடைமுறைகளை) வகுத்துச் செயல்படுத்தினர்.[53] இந்த மூழிக்களம் ஒரு க்ஷத்ரிய அவை என்று சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள "கேரளதேச வரலாறு" எனும் நூல் குறிப்பிடுகிறது.[54] இத்தகைய சான்றார் மரபினர் தமிழகத்திலும் அரச குடும்பத்தினருக்குப்

போர்க்கலை மற்றும் அங்கைப் பேர்க்கலை கற்பிக்கும் ஆசான்களாகத் திகழ்ந்தனர் என நாம் கருத வேண்டியிருக்கிறது. இதற்குச் சான்றாகத் திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் கோயிலிலுள்ள கி.பி.10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "இவ்வூர் ஈழச்சான்றான் முந்நூற்றுவப் பெருமானாகிய சோழவேள் ஏனாதி" என்பவன் குறிப்பிடப்படுகிறான்.[55] போர்க்கலைப் பயிற்சியே முதன்மையான பணியாகக் கொண்ட இத்தகைய களரிப் பயிற்றுநர்கள் மற்றும் நிபுணர்களால் பயிற்சியளிக்கப்பெற்று பல்வேறு போர்த் தொழில் நுட்பங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்ற போர் வீரர் குழுவினரே அரச குலப் படைவீரர்களாக அங்கீகரிக்கப்பட்டுத் தனி அந்தஸ்து வழங்கிக் கௌரவிக்கப் பட்டிருக்கவேண்டும். தெலுங்குச் சோழர் ஆட்சிக் காலத்திலேயே மலையமான் குலத்துக்குரிய "நானூற்றுவர்" என்ற பட்டப் பெயரின் எண்ணிக்கையை முன்னூற்றுவரின் எண்ணிக்கையுடன் சேர்த்து "எழுநூற்றுவர்" என்ற எண்ணிக்கைப் பெயர் கொண்ட வாட் படைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. இராஜராஜனின் தந்தை இரண்டாம் பராந்தகன் என்கிற சுந்தர சோழனின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட "பராந்தகக் கொங்கவாளர் எழுநூற்றுவர்" எனப்படுவோர் இத்தகைய வலங்கை உய்யக்கொண்ட வாள் வீரர்களாக இருக்கலாம்.[56] வலங்கை உய்யக் கொண்டவாள் வீரர் என்ற பட்டப்பெயர் கி.பி. 1018-ஆம் ஆண்டில் பதவியேற்று 1052 வரை ஆட்சி செய்த முதல் இராஜாதி ராஜனால் இவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயராக இருக்கலாம். வலங்கை மாலை நூலில் இப்படைப்பிரிவினர் பெற்ற இலங்கை வெற்றியும் மேலைச் சாளுக்கியரான கல்யாணிச் சாளுக்கியருடன் நிகழ்ந்த போரில் பெற்ற வெற்றிகளுமே முதன்மையானவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

சோழர்களின் இலங்கைப் படையெடுப்பும் மேலைச் சாளுக்கியர்களுடனான உக்கிரமான போர்களும் நடைபெற்ற இக்காலக்கட்டத்தில் இலங்கையரசர்களின் பூர்விகத் தலைநகரமான அனுராதபுரம் சோழர்களால் அழிக்கப்பட்டதால், இலங்கையின் தென்கிழக்குப் பகுதியான,

மலைகள் சூழ்ந்த ரோஹணப் பகுதியில் மாவலி கங்கையாற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள கோகர்ணக (சிங்களத்தில் கோ கன்னக) என்ற ஊரை ஒட்டிய பகுதிகளில் தான் இலங்கை அரசர்களே ஆட்சி செலுத்தி வந்தனர்.[57] கி.பி. 1047–ஆம் ஆண்டில் கன்னோசி(கன்யாகுப்ஜம்) நாட்டினைச் சேர்ந்த ஜகதிபாலன் என்ற அரசன் இஸ்லாமிய மன்னர்களின் படையெடுப்பினால் தனது நாட்டை விட்டு வெளியேறித் தமிழகத்திற்கு வந்து சோழர்களுடன் சிறிது காலம் உறவு கொண்டாடி அதன் பிறகு இலங்கை சென்று ரோஹண நாட்டைக் கைப்பற்றிக் கி.பி. 1051 வரை ஆண்டான். இவனை அயோத்தி அரசன் என இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது. இராஜாதி ராஜ சோழனின் மெய்க்கீர்த்தியும், இரண்டாம் இராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியும் இவனை வீரசலாமேகன் எனக் குறிப்பிடுகின்றன. வரலாற்று அறிஞர் தி.நா.சுப்பிரமணியன் அவர்கள் மகாவம்சம் குறிப்பிடுகிற ஜகதிபாலனே சோழர்கள் மெய்க்கீர்த்தியில் வீரசலாமேகன் எனக் குறிப்பிடப் பட்டுள்ளான் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.[58] சோழர் படைகள் வீரசலாமேகனை வென்று அவனது மனைவி மக்களைச் சிறைப்பிடித்துச் சோழ நாட்டுக்குக் கொண்டு சென்றனர் என்றும் மீண்டும் மீண்டும் நடந்த போர்களுக்குப் பின்னர் வீரசலாமேகன் கொல்லப்பட்டான் என்றும் சோழர் மெய்க்கீர்த்திகள் வெளிப்படுத்துகின்றன. மகாவம்சமும் இதனை உறுதி செய்கிறது. வலங்கை மாலை (வரி. 907–947) புக்கரத்தீவு எனப்படும் கோகனக நாட்டை யாண்ட அவந்திக ராயனைச் சான்றார் படை வென்ற நிகழ்வைக் குறிப்பிடுகிறது. இலங்கையின் ஒரு பகுதியாகப் புக்கரத்தீவு அல்லது புஷ்கரத் தீவு இருந்ததைக் கம்பராமாயணம் வாயிலாக அறியலாம்.[59] எனவே, இலங்கையின் ரோஹணப் பகுதியே "புக்கரத் தீவு" என்றும் அந்நாட்டின் பிரதானத் துறைமுகமான கோகன்னகம், "கோகனகம்" என்றும் வலங்கை மாலையில் குறிப்பிடப் படுகின்றன எனத் தெரிகிறது. அவந்தி(மாளவ) அரசர்களுக்குக் குருகுலத்தரையன் என்ற பட்டம் உண்டெனத் தமிழ்க் காப்பியமான "பெருங்கதை"யால் அறியலாம். ஸ்ரீசங்கபோதி சோமலங்கேஸ்வரன் என்ற பட்டப் பெயருடன் இலங்கையை

யாண்ட வீரராஜேந்திர சோழனின் (கி.பி.1063—1070) படைகளால், ரோஹணப் பகுதியிலிருந்த இலங்கையரசன் விஜயபாகுவின் படைத்தலைவன் குருகுலத்தரையன் கொல்லப்பட்டான் எனத் தெரிகிறது. இக்குருகுலத்தரையனே அவந்திக ராயன் அல்லது அவந்திகாசுரனாக இருக்கவும் வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், அவந்திகராயனை வென்றவர்கள் எனும் அடிப்படையில் வலங்கை உய்யக்கொண்டார்களுக்கு அவந்திக நாடாள்வான் எனும் பட்டம் சோழனால் வழங்கப்படுகிறது. கி.பி.15—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபநாசம் (தஞ்சை மாவட்டம்) கல்வெட்டு ஒன்றில் "நாலூர் காணியுடைய அவந்திய நாடாள்வான்" எனும் பெயர் காணப்படுகிறது. இவை வலங்கை மாலை குறிப்பிடும் செய்திகளை உறுதிப்படுத்துகின்ற பிற்கால எச்சங்களாகும்.[60] இத்தகைய வீரச்செயல்களின் விளைவாகச் சோழர் ஆட்சியின் புகழுக்கும் வெற்றிகளுக்கும் பின்னணியாக அல்லது சோழர்களின் வலக்கையாக இருந்து ஆட்சியைக் காத்த (உய்யக் கொண்ட) வீரர்கள் "பூவேந்திய சோழன்" என்றும் பட்டம் பெற்றனர் என "வலங்கை மாலை" குறிப்பிடுகிறது. முதல் ராஜாதி ராஜனின் மெய்க்கீர்த்தியில்தான் "பூவேந்திர சோழன்" எனும் பட்டம் வழங்கப்பட்ட செய்தியைக் காண்கிறோம். "தாதை முன் வந்த போதலர் தெரியல் விக்கிரம நாரணன் சக்கரம் அடிப்படுத்து அருளிற்கவனவதரித்த ஒன்பதாம் நாளால் வாழியர் பூவேந்திர சோழன் என மணிமெளலி புனைந்து" எனும் வரி அம்மெய்க்கீர்த்தியில் காணப்படுகிறது.[61] "பூவேந்திர சோழன் வாய்க்கால்" என்ற வாய்க்கால் திருக்கோடிக்கா கல்வெட்டில் (கி.பி. 12—ஆம் நூற்றாண்டு) குறிப்பிடப்படுகிறது.[62] தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான் குளம் வட்டத்தில் உள்ள பேய்க்குளம் என்ற ஊர் கி.பி. 13—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டாரி மங்கலம் கல்வெட்டில் "பூவேந்திர சோழன் நல்லூர்" எனக் குறிப்பிடப்படுகிறது. பூவேந்திர சோழன் என்ற இப்பெயர் பூபேந்திர சோழன் என்பதன் திரிபாகும். விக்ரமநாரணன், "சக்ரவர்த்தி விக்ரமநாரணன்" எனக் குறிப்பிடப்படுகிறான். இவன் மேலைச் சாளுக்கியரின் படைத் தலைவனாக

இருந்தவன். முதல் இராஜாதிராஜனால் மூன்று முறை கல்யாணி மீது படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது என விக்ரமசோழனுலா(37—38) குறிப்பிடுகிறது. அவற்றுள் ஒரு போரில் விக்ரம நாரணன் மேலைச் சாளுக்கியருக்குப் படைத் தலைவனாகப் பணியாற்றி இருக்கலாம். கி.பி. 1044 —இல் நடந்த போரில் இவன் இராஜாதிராஜனால் வெற்றி கொள்ளப் பட்டிருக்கலாம். (கல்யாணிப் போரில் கவர்ந்து கொண்டுவந்த துவார பாலகர், தஞ்சைக் கலைக் கூடத்திலுள்ளது.) முதலாம் இராஜேந்திர சோழனைப் பத்து நாள்கள் எதிர்த்தவன் விக்ரம நாரணன் என்றும் அதன் முடிவில் பூபேந்திர சோழன் என இராஜாதிராஜன் பட்டம் சூடினான் என்றும் கே.ஏ.என். சாஸ்திரி அவர்கள் கருதுகிறார்.[63] இவ்வாறு பொருள் கொள்வது பொருத்தமாக இல்லை. ஆயினும், இராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியின் பிற்பகுதியில், (இரண்டாவது சாளுக்கியப் போரில்) விக்ரம நாரணன் சாளுக்கியர் படைத் தலைவனாகக் குறிப்பிடப்படுகிறான் என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.[64] இது ஏற்கத்தக்கதே.

மேலைச் சாளுக்கியரின் படைத் தலைவனாகப் பணிபுரிந்த தெலுங்குச் சோழ இளவரசன் விக்ரம நாரணன், முதலாம் இராஜேந்திர சோழனின் இறுதிக் காலக்கட்டத்தில் (கி.பி. 1044 அளவில்) சோழர்களின் அணியில் சேர்ந்து பூபேந்திர சோழன் என்ற பட்டத்தைப் பெற்றிருக்கலாம்.[65] பூபேந்திர சோழன் பற்றிய கதைகள் அல்லது இலக்கியச் செய்திகள் என எடுத்துக் கொண்டால் திருக்காளத்திப் புராணத்தில் உறையூரையாண்ட போஜசோழன் மரபினனான பராந்தகன் என்பவனே பூவேந்திய சோழன் என்று குறிப்பிடப்படுகிறான். உறையூரில் இருந்து மேற்கில் ஒரு கடிகை தொலைவில் காவிரியின் தென்கரையில் இருந்த இவனது தருமபுரம் அரண்மனை மண்மாரி பெய்து அழிந்ததால் திருக்காளத்திக்குக் குடியேறினான் எனக் காளத்திப் புராணம்[66] மற்றும் செவ்வந்திப்புராணம் ஆகியவை குறிப்பிடுகின்றன.[67] இந்த இலக்கியக் குறிப்புகளின் அடிப்படையில் நாம் சிந்தித்துப் பார்த்தால் ராஜாதி ராஜனின் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படும் விக்கிரமநாரணன் என்பவன் காளத்திப் பகுதியைச் சேர்ந்த தெலுங்குச் சோழனாக

(பூவேந்திய சோழனாக) இருக்கக் கூடும். மேற்குறித்த புராணங்களில் போஜ சோழன் எனக் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு ஆராயத்தக்கது. ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட தக்கயாகப் பரணி, (தாழிசை 236) இரண்டாம் இராஜராஜனிடம் "பெருமான் நம்பி" எனப்பட்ட மிகவுயர்ந்த பதவியை வகித்த, வேளாளர் குலத்தவனான திருச்சிற்றம்பல முடையான் பல்லவராயனைப் புகழ்கிறது. இந்நூலுக்குக் கி.பி. 13–14–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பழைய உரை, நம்பிப்பிள்ளை என இவனைக் குறிப்பிடுகிறது.[68] தக்கயாகப் பரணித் தாழிசை 179–க்கான உரை, பெருநம்பி என்றும் அதிகாரி என்றும் பட்டம் பெற்ற இருசாதியினரைக் குறிப்பிடுகிறது. இவர்களுள் ஒரு சாதியினர் குமாரப் பட்டம் (பிள்ளைப் பட்டம்) பெற்றவர்களாகையால் இராசாவும் நம்பிராட்டியும் ஏவின கருமம் செய்யக் கடவர் என்றும், மற்றொரு சாதியினரான *போசராசா வங்கிசோற்பவர்* (போஜ ராஜா வம்சத்தவர்) மந்திரிகளாக இருந்து இராசாக்களையும் நம்பிராட்டிகளையும் சிட்சித்து (ஆணையிட்டும் தண்டித்தும்)த் தங்கள் ஏவல் செய்விப்பரென்றும், இது போசராசா வங்கிசோற்பவரின் வாசி (மரபு வழிச் சலுகை) என்றும் மேற்குறித்த உரை குறிப்பிடுகிறது. இதுமட்டுமன்றி, இவ்வுரை எழுதப்பட்ட காலத்தில் நிலவிய சமூக நடப்புப் பற்றியும் இவ்வுரையில் காணமுடிகிறது. "இவ்வம்சத்தார் மந்திரிகளாகவே இருப்பதல்லது காரியஞ்செய்யார்; *அவர் இக் காலத்துக் கணக்கெழுதுகின்றது முறைமையல்ல;* முடிசூடப்பெறாத அதனையே அல்லாது இராச விபவமெல்லாம் பெறுவர்; மந்திரிகளாவதே முறை" என்று இவ்வுரை கூறுகிறது.[69] இதனைப் படிக்கும்போது, முதல் இராஜராஜனிடம் பெருந்தரத்து உயரதிகாரியாக இருந்த ஈராயிரவன் பல்லவரையனான மும்முடிச் சோழ போசன்[70] நம் நினைவுக்கு வருகிறான். இவனைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகளை ஆராயும்போது, சிவன் கோவிலின் தலைமைக் கணக்கு அதிகாரியாகிய சண்டேஸ்வரருக்கு ஒப்பான சித்திரம் தோன்றுவதாக ஓர் அறிஞர் கூறியுள்ளார்.[71] பல்லவரையன் என்ற பட்டம், வேளாளர்களுக்கு மட்டுமின்றிச் சான்றார் குலத்தவர்க்கும் உரியதாக இருந்ததென்பது

இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதி வரலாற்றால் தெரியவருகிறது. அது மட்டுமன்றி, இலங்கையில் *அதிகாரி*என்ற பதவியைப் பரம்பரையாக அனுபவித்து வந்த சாதியினராகச் சான்றார், வேளாளர், தனக்காரர் ஆகிய மூன்று சாதியினரை அறிஞர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.[72] இவை, சோழராட்சியின் பிற்கால எச்சங்களாகும்.

பூவேந்திர சோழன் பற்றிய கதைகள் வேளாண் செட்டியார் மத்தியிலும் வழங்கப்படுகின்றன. பூவேந்திர சோழன் தங்கள் குலத்தில் பெண் எடுக்க முயன்றதன் விளைவாகவே தாங்கள் பூம்புகார் நகர் விட்டு வெளியேறியதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். காளத்திப் பகுதியை ஆண்ட தெலுங்குச் சோழ மரபினர் "காமிண்டன்" அல்லது "காமுண்ட்லு" எனும் பட்டம் பெற்ற கள் இறக்கும் குலத்தவர் என்றும் "கவுட புராணம்" என்ற ஒரு புராண நூலே இக்குலத்தவரின் பெருமையைக் கூறுகிறது என்றும் தெலுங்கு இலக்கிய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சான்றார் சமூகச் செப்பேடுகளும் இப்பட்டம் பற்றி வலியுறுத்திக் கூறுவதால் வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் ஒரு காலக்கட்டத்தில் தெலுங்குச் சோழர்களுடன் தான் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டனர் என்பது புரிகிறது. தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை மாற்றங்களின் விளைவாகத் தமிழ்ச் சோழர் எனும் தனித்த அடையாளமே சோழ நாட்டில் எந்தக் குலத்தவர்க்கும் நீடிக்காத நிலைமை ஏற்பட்டுவிட்டதாலும் கி.பி. 13—14—15—16—ஆம் நூற்றாண்டுகள் வரை ஆந்திரநாட்டில் தெலுங்குச் சோழர்கள் அரசியல் புயல்களுக்கு ஈடு கொடுத்து நின்று தமது தனித்தன்மையைக் காத்துக் கொண்டதாலும் இத்தகைய ஒரு நிலைப்பாடு ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. கி.பி. 16—ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஈழச் சோழர் என்ற பெயரில் இலங்கையின் கண்டிப்பகுதியை விஜய நகர அரசின் பிரதிநிதிகளாகச் சிலகாலம் ஆட்சிபுரிந்த வீரசேகர சோழன் பரம்பரையினர் பற்றியும் சந்திரசேகர பாண்டியனுடன் இச்சோழன் நடத்திய போர்களின் விளைவாக நாகமநாயக்கர் தமிழக அரசியலில் தலையிட்டதும் பின்னர் மதுரை தஞ்சை நாயக்கத்தனங்கள் உருவாக்கப்பட்டதும் பாளையப்பட்டு வம்சாவளி

வரலாறுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவரங்கம் பகுதியில் விஜய நகர அரசின் பிரதிநிதிகளாக இக்காலக் கட்டத்தில் உறையூர் புரவராதீஸ்வரன், காவேரி வல்லபன் எனும் பட்டங்களுடன் தெலுங்குச் சோழ அரசர்கள் குறுகிய காலத்திற்கு அதிகாரம் செலுத்தியுள்ளதையும் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். வீரசேகர சோழனின் மகனான வெங்கலராஜன், தமிழகத்தின் தென்பாண்டி மண்டலத்தில் ஊடுருவி, வெட்டும் பெருமாள் பாண்டியன் என்கிற திருநெல்வேலிப் பெருமாளின் காலாட்படை வீரர்களான கொண்டையங்கோட்டை மறவர்களுடன் போரிட்ட செய்தி தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் இளவேலங்கால் நடுகற்கல்வெட்டுகளில் (கி.பி.1547) குறிப்பிடப்பட்டுள்ளது. "வெங்கலராஜன் கதைப்பாடல்" என்ற வில்லுப்பாட்டு இவனை வலங்கைச் சான்றார் குலத்தவன் எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்த வெங்கலராஜன் காளத்திப் பகுதியிலுள்ள வேலம்பாட்டி என்ற ஊர்ப் பெயரைத் தனது குடும்பப் பெயராகக் கொண்டவன் எனத் தெரிகிறது. கி.பி.17–ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக் காலக்கட்டத்தை அதாவது, இத்தகைய வில்லுப்பாட்டு நூல்கள் உருவான அதே காலக்கட்டத்தைச் சேர்ந்த சான்றார் குல வீரனே வெங்கலராஜன் ஆவான். அவனைப் பற்றிய வில்லுப்பாட்டும் மானவீர வளநாட்டுப் பகுதியில்தான் உருவாகி நிலவிவந்துள்ளது.

வலங்கை மாலை குறிப்பிடும் செய்திகளுக்கு மீண்டும் வருவோம். மேலைச்சாளுக்கிய வெற்றி, இலங்கை வெற்றி ஆகியவற்றுக்குப் பிறகு வலங்கை உய்யக்கொண்டார் பிரிவுச் சான்றார் குலத்தவர் பெற்ற சிறப்புகள் பலரது மனத்தில் பொறாமை உணர்வைத்தூண்டின. குறிப்பாக வலங்கைமாலை குறிப்பிடும் நிகழ்ச்சிகளைக் கால அடிப்படையில் வரிசைப்படுத்திப் பார்க்கையில் கி.பி. 1070–இல் சோழ அரியணையில் அமர்ந்த முதற் குலோத்துங்க சோழனின் ஆட்சியில் வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர்க்கு எதிரான பல செயல்கள் நடந்திருக்க வேண்டும் என நாம் யூகிக்கிறோம். பெரம்பலூர் மாவட்டம் சிங்களாந்தபுரம் எனும் ஊரில் இக்காலக்கட்டத்தைச் சேர்ந்த (உத்தேசமாகக்

கி.பி.1080–1100) சந்திக்கல் என்ற ஒரு கல்லில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம்(73) அரசர் பெயர் இன்றி ஐந்நூற்றுவர் தெய்வமான ஐம்பொழில் பரமேஸ்வரிக்கு உரிய சமஸ்கிருதப் புகழ்மொழியுடன் தொடங்குகிறது. "ஸ்ரீ வழராலகிக்கு தலைவராகி அறம் வளரக்கலிமெலிய—–– செங்கோலே தேவ ஆகவும் சமய தன்மமினிது நடாத்துகின்ற–– வலங்கை உய்யக்கொண்டார்கள் பதினெண்விஷைய கொடியுயர நோக்கி செய்த சிறப்பாவன" என்ற வாசகம் இக்கல்வெட்டில் காணப்படுகிறது. இது கல்வெட்டுப் பொறிப்போரின் அனுபவக் குறைவால் நேர்ந்த பிழைகள் மலிந்த ஒரு கல்வெட்டாகும். இதனை மீள வடிவமைத்தால், "ஸ்ரீ அமராவதிக்கு தலைவராகி அறம் வளரக்கலி மெலிய–– செங்கோலே தேவி ஆகவும் சமய தன்ம மினிது நடாத்துகின்ற–– வலங்கை உய்யக் கொண்டார்கள் பதினெண்விஷைய கொடியாரை நோக்கி செய்த சிறப்பாவன" எனக் கொள்ளலாம். வலங்கை உய்யக்கொண்டார்கள், வீரக்கொடி வேளாளர் என்றழைக்கப் பட்ட பண்டார இனத்தார்க்குச் செய்த சில கௌரவங்களை இக்கல்வெட்டு கூறுகிறது. மகதை நாடாழ்வாரின் அதாவது வாணர் குலத்தவரின் கூலிச் சேவகரான மட்டக்காடு நாடாழ்வார் என்பவரைக் குத்தியது உட்படச் சில வீரச் செயல்களைச் செய்தமைக்காக வீரக்கொடியார் கௌரவிக்கப்பட்டனர். இது முற்ற முழுக்க வலங்கை உய்யக்கொண்டார்களால் வழங்கப்பட்ட சாசனமாகும். அடுத்ததாக, இவர்கள் அமராவதிக்குத் தலைவர் எனவும் செங்கோலைத் தேவியாகக் கொண்டவர்கள் எனவும் குறிப்பிட்டுக் கொள்ளுவன வலங்கை மாலையிலும் வலியுறுத்தப்படும் பட்டங்களேயாகும். ஒருவகையில் முதன்மையான பௌத்த மதத் தலைமை இடமாகிய ஆந்திர தேசத்து அமராவதியில் இருந்தே தமிழகத்திற்குச் சிற்பக் கலை மரபு பரவியிருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.(74) சிலப்பதிகாரத்தில் முசுகுந்த சோழன் கதை குறிப்பிடப்படும் இடத்தில் அமராவதி காத்து அமரர் தலைவனிடத்துப் பெற்றுவந்த சதுக்க பூதம் முசுகுந்தனால் பூம்புகாரில் நிறுவப்பட்ட செய்தி சுட்டப்படுகிறது. திருவாரூர்ப் புராணமோ முசுகுந்த சோழன்

சிங்களாந்தகபுரம் கல்வெட்டு
(துறையூர் - பெரம்பலூர் மாவட்டம்)
(கி.பி. 1080 - 1100)
முன்பக்கம்

சிங்களாந்தகபுரம் கல்வெட்டு

பின்பக்கம்

திரிசூலம் (காளியின் ஆயுதம்), விளக்குகள், சாமரங்கள், கொற்றக்குடை, சங்குகள், செண்டு (அல்லது சுருள் வாள்), கொடி, எட்டு வகை ஆயுதங்கள்.

சிங்களாந்தகபுரம் கள ஆய்வு

அமராவதியைக் காத்து அமரர் தலைவனிடமிருந்து சப்த விடங்க மூர்த்திகளைப் பெற்று வந்ததாகக் கூறுகிறது. கி.பி. 4–5–6–ஆம் நூற்றாண்டுகளில் களப்பிரர் ஆதிக்கம் தமிழகத்தில் நிலவியபோது தெலுங்குச் சோழர்கள் அமராவதிப் பகுதியில் பல்லவர் மேலாதிக்கத்தை ஏற்று ஆட்சி புரிந்துவந்தனர். அக்காலக்கட்டத்தில் எழுந்த நூலாகவே சிலப்பதிகாரம் கருதப்படுகிறது. எனவே, முசுகுந்த சோழன் மரபினர் தெலுங்குச் சோழராக இருக்கக்கூடும்; இது மட்டுமன்றி அமராவதிப் பகுதியில் இருந்து சோழநாட்டில் பல்லவர் ஆதரவுடன் புகுந்தும், மண உறவு கொண்டும், தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அமராவதியின் கோயிற்கலை மரபுகளை அறிமுகப்படுத்தியும் இருக்கக்கூடும். இத்தகைய யூகங்கள் ஒருபுறம் இருக்க, அமராவதிக்குத் தலைவர் என வலங்கை உய்யக்கொண்டார்கள் தம்மை அழைத்துக் கொள்ளும் மரபு அவர்களது ஒவ்வொரு ஆவணத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த சிங்களாந்தபுரம் கல்வெட்டில் "செங்கோலே தேவியாக" என்ற குறிப்பு வலங்கை உய்யக்கொண்டார்கள் அரச பதவி வகிப்பது, முடிசூடி அரச அந்தஸ்துகளுடன் ஆட்சி புரிவது போன்றவற்றைத் தவிர அனைத்துவித அரச அதிகாரங்களையும் கொண்ட ஒரு குழுவினராக இயங்கி வந்தனர் என்பதை உணர்த்துகிறது. வணிகர் குழுவினர் போன்றோரின் வணிக நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பாகவும், உறுதுணையாகவும் இயங்கிவந்தனர் எனவும் தெரியவருகிறது. வணிகத்தைப் பாதுகாத்தல் குடிகாவல் மரபின் ஒரு அங்கமே. ஆதலால், இவர்கள் வணிகக் குழுவினரின் பாதுகாப்புப் படையினராக செயல்பட்டனரே அன்றி வணிகர்களின் மரபுவழிப் பணி மக்கள் அல்லர். (இதுபற்றி வலங்கை மாலையே பின்னர் ஓரிடத்தில் விரிவாகக் குறிப்பிடுகிறது.) ஆனால், கைக்கோளப் படையினர், தமது ஆச்சன்மாராக (தகப்பனாராக) ஐந்நூற்றுவரையே குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர்.[75]

முதற் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் அதுவரையிலும் அனுபவித்து வந்த அந்தஸ்துகளுக்குச் சவால் விடுக்கப்பட்ட சூழல் எழுந்தது.

இவ்வாறு நாம் கூற அடிப்படையாக இருப்பது முதற் குலோத்துங்கன் தனது படைத்தலைவனாக நியமித்திருந்தது, சற்சூத்திரர் குலத்தோன்றல் என ஆந்திரமாநிலம் கோதாவரி மாவட்டம், திராட்சாராமம் கல்வெட்டில் குறிப்பிடப்படும் கருணாகரத் தொண்டைமானைத்தான் என்ற வரலாற்று உண்மையாகும்.[76] முன்னரே நாம் கண்டவாறு கருணாகரத் தொண்டைமான்தான் கலிங்கத்துப் பரணியின் உண்மையான பாட்டுடைத் தலைவன், கலிங்கப் போரில் இவனுடன் இணைந்து பங்கேற்றவன், இவனது ஊராகிய வண்டாழஞ்சேரியைச் சேர்ந்த வாணாதிராயன் என்றும் தெரிய வருகிறது.[77] முதற் குலோத்துங்கன் கீழைச்சாளுக்கிய மரபினன் ஆவான். அவன், சோழ அரசனாக முடிசூடியதன் பின்னணியில் நிகழ்ந்திருக்கக் கூடிய பல்வேறு அரண்மனைச் சூழ்ச்சிகள், அரசியல் சதிராட்டங்கள் குறித்த ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை எனினும் இவை நடைபெற்றிருக்க வேண்டும் என்பது உறுதி. மரபுக்கு மாறான வகையில் ஆட்சியைக் கைப்பற்றி அதற்கு தர்மசாஸ்திர அங்கீகாரத்தையும் மக்களின் ஆமோதிப்பையும் பெற்று அதன் மூலம் தனது ஆட்சி சட்டபூர்வமானதே எனும் தோற்றத்தை ஏற்படுத்துதற்காகப் பல்வேறு உத்திகளைக் குலோத்துங்கன் பின்பற்றி இருக்க வேண்டும். அவற்றில் ஒன்றுதான் தனது முதன்மைப் படைத்தலைவர்களாகச் சான்றார் குலத்தவர் அல்லாத தொண்டைமான் மரபினரையும் வாணாதிராயர் குலத்தவரையும் குலோத்துங்கன் நியமித்தது எனலாம். அதிகார அடுக்குகளின் பல்வேறு மட்டங்களிலும் இப்படியான மாற்றங்கள் குலோத்துங்கனால் அறிமுகப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். கலிங்கத்துப் பரணி, குலோத்துங்கன் யானையேற்றம், குதிரையேற்றம், முதலியவற்றைக் கற்றான் என்றும் படைக்கலப் பயிற்சியை மட்டும் கற்கவில்லை யென்றும் இவன் திருமாலின் அவதாரமாதலால் ஐம்படைகளும் இவனுக்குரியன என்றும் கூறுகிறது (தாழிசை 247). இதனை இலக்கியக் கற்பனையென ஒதுக்கிவிட முடியாது. சோழ அரச குலத்தவராகவே கருதப்பட்ட வலங்கை உய்யக்கொண்டார்கள் அல்லது சான்றார் மரபினரிடம் குலோத்துங்கன் போர்ப் பயிற்சி பெறவில்லையென்றே இதற்குப் பொருள் கொள்ளவேண்டும்.

இந்த இடத்தில் ஓர் அடிப்படையான வரலாற்று உண்மையை நாம் புரிந்து கொள்ளுவது அவசியம். கி.பி. 8—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார், வேளாளர் குலத்தவராயினும் வளவர் சேனாபதிக் குடியைச் சேர்ந்தவர் எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.[78] ஏயர்கோனின் சம்பந்தி மானக்கஞ்சாறரும், அரசர் சேனாபதிக் குடியைச் சார்ந்த வேளாளர் ஆவார்.[79] தாலஜங்கம(பனை மரத் தொடர்புடைய குலங்கள்)ப் பிரிவினராகிய ஹேஹயரே, ஏயர் எனத் தமிழிலக்கியமான பெருங்கதையில் குறிப்பிடப் படுகின்றனர். பலராமனைத் தமது குல மூதாதையருள் ஒருவராகக் குறிப்பிடும் ஹேஹய நாகர்கள் தொண்டை மண்டலப் பூர்வ குடிகளாவர். தொண்டை மண்டல வேளாளர்கள், சேர நாட்டு வயவருக்கு மைத்துனக் கேண்மை பூண்டவர்கள் எனப் பெரிய புராணம்[80] குறிப்பிடுகிறது. சேர நாட்டு ஈழவர் குலத்தவருடனான மணவுறவின் மூலம் இவர்களும் போர்ப் பயிற்சி பெற்றுத் தேர்ந்திருக்க வாய்ப்புண்டு. முதற் குலோத்துங்கன் இத்தகையோரைத் தனது முதன்மைப் படைத் தளபதிகளாக நியமித்திருக்கலாம். வலங்கை மாலைஅளிக்கின்ற ஒரு விவரம் இக்காலக்கட்ட நிலைமையைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் பூவேந்திய சோழன் எனும் ராஜ பட்டமும் சான்றாண்மை எனும் தகுதியையும் பெற்றுவிட்டதைக் கண்டு பொறாமை கொண்ட சிறுகுடியான் ஒருவன் சோழ அரசனிடம் வலங்கையர் பற்றிக் கோள்மூட்டுகிறான். சோழ நாட்டில் பெருமழை பெய்து காவிரி ஆற்றில் வெள்ளம் பெருகி உடைப்பேற்படுகின்றது. உடைப்பினை அடைக்கும் பணியில் சோழநாட்டின் அனைத்துக் குடிகளும் கட்டாய உடலுழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். வலங்கை உய்யக்கொண்டார்களோ தமது க்ஷத்ரிய வர்ண அந்தஸ்து கருதியும் தமது மரபு வழிப்பட்ட பழக்கம் கருதியும் இவ்வுடலுழைப்பில் ஈடுபடாமல் இருக்கின்றனர். சிறுகுடியான், சோழனிடம் வலங்கை உய்யக்கொண்டார் இவ்வுழைப்பில் ஈடுபடாதது குறித்துக் கோள் சொல்லுகிறான். இதைக் கேட்ட சோழனும் "உள்ளமில்லா நெஞ்சன்" எனும் ஓட்டனை அனுப்பி

இவர்களைத் தனது அவைக்கு வரவழைத்துக் காவிரியின் உடைப்பை அடைக்க ஆணையிடுகிறான். உடைப்படைக்கும் வெட்டி வேலை செய்ய வலங்கைப் படையினர் மறுக்கின்றனர். சோழ அரசன் இவர்களில் இருவரை யானையின் காலால் இடறச் செய்கிறான். அப்படியும் இவர்கள் வெட்டி வேலை செய்ய மறுக்கின்றனர். இறுதியில் காளியின் சாபத்துக்கு அஞ்சிய சோழன் இவர்களை விடுவிக்கிறான். இந்நிகழ்ச்சி சான்றார் குலப் பட்டயங்கள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. செங்கோல் ஏந்தவேண்டிய கையில் மண்வெட்டி ஏந்தமாட்டோம் என்றும் கிரீடம் சுமக்க வேண்டிய தலையில் கூடை சுமக்க மாட்டோம் என்றும், நாடாள்வாராக இருப்போமே தவிர, நாட்டாராக (வேளாண் குடிகளாக) இருக்கமாட்டோம் என்றும் பொருள்பட,

> **"கொத்தெடுத்து மண் வெட்டோம்**
> **கொற்றவரைக் கை முகையோம்**
> **கூடை தொடோம்"**

என்று சான்றார்கள் உரைத்ததாக ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. (வெட்டிப்பேறும் அச்சுப்பேறும் என்ற பின்னிணைப்பைக் காண்க) இந்நிகழ்ச்சிக்குப் பின்னணியாக இருந்த சிறுகுடியான் மற்றும் உள்ளமிலா நெஞ்சன் எனப்படுவோர் யாராக இருக்கலாம் என நாம் ஆராயவேண்டும். வலங்கைமாலை சொல்லிச் செல்லுகிற தொனி கோள் சொல்லுகிற குறும்புக்காரன் எனப் பொருள்படும் வகையில் அமைந்திருந்தாலும் கூட, அரசனுக்கு மிக நெருக்கமான செல்வாக்கு வாய்ந்த உயர் அதிகாரிகளே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என நாம் உறுதியாக நம்பலாம். அவ்வகையில் குலோத்துங்கனின் படைத்தலைவர்களான கருணாகரத் தொண்டைமானும் வாணாதிராயனுமே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றனர் என நாம் யூகிக்கலாம், உள்ளமிலா நெஞ்சன் எனும் ஓட்டன், (அதாவது தகவல் எடுத்துச் செல்லும் ஓட்டக்காரன்) என்று குறிப்பிடப்படுபவன் வாணாதிராயனாக இருக்கலாம் என நாம் யூகித்திட வேறு

பின்னணியும் உண்டு. வாண வன்னெஞ்சன் எனும் பெயர் கொண்ட வாணாதிராயர்களும் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு சோழர் அரசியலில் முதன்மையான பங்கு வகித்தனர்.[81] இப்பெயர், மறக்குல அகம்படியர்களான வாணர்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும். கருணாகரத் தொண்டைமான் வலங்கை உய்யக் கொண்டார்களின் சிறுகுடியைச் சேர்ந்தவனாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வாய்ப்பு உண்டா எனும் கேள்வி எழுவது இயல்பு. இக்கேள்விக்கு விடைகாணும் முன் நாம் சிறுகுடி, பெருங்குடி எனும் கருத்தாக்கங்களைப் புரிந்து கொள்வது அவசியம். ஆண் ஆதிக்கத்தில் அமைந்த முறையான குடும்பம் எனும் அமைப்புக்குள் அடக்கக் கூடியவையே குடிகள் ஆகும். இல், குடி, குலம் மூன்றும் ஒருபொருட் சொற்கள் எனத் திருக்குறள் பொருட்பால், குடிமை எனும் அதிகாரத்தில், "இற்பிறந்தார் கண்ணல்லதில்லை" எனத்தொடங்கும் குறளுக்கான உரையில் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.[82] குடும்பம் எனும் அமைப்பு வேரூன்றிவிட்ட பின்னரும் பெருங்குடி, சிறுகுடி எனும் இருவேறு பிரிவுகள் வரையறுக்கப்பட்டன. சிலப்பதிகாரத்தில் "பெருங்குடி வணிகன் பெருமட மகள்" எனக் கண்ணகி குறிப்பிடப்படுகிறாள். அதாவது கணவன் பிரிந்து சென்றுவிட்டாலோ, இறந்துவிட்டாலோ மனைவி மறுமணம் புரியாமல் கைம்மைநோன்பு, உடன்கட்டை ஏறுதல் போன்ற வழக்கங்களைப் பின்பற்றும் குடும்ப அமைப்பு பெருங்குடி என வரையறுக்கப்பட்டது. சங்க இலக்கியமான புறநானூற்றில் (பா.261) "பேரில்" (பெருங்குடி)–லைச் சேர்ந்த ஒரு வீரன் இறந்து அவனுக்காக நடுகல் எழுப்பப்படுகிறது. அவனது மனைவி கைம்மை நோன்பின் அங்கமாகக் கூந்தலை மழித்துவிடுகிறாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[83] இதற்கு மாறாகச் சிறுகுடி என வரையறுக்கப்பட்ட குடும்பங்கள் தாய்வழி உரிமைகள் கொண்ட குடிகளாகும்.

கொங்கு நாட்டைச் சேர்ந்த பேரூரில் சிறுகுடியார் மடம் எனும் ஒரு மடத்தில் உள்ள கி.பி. 17–ஆம் நூற்றாண்டுப் பட்டயம் "கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்" என்ற

நூலில் புலவர் செ.இராசு அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.[84] மேலைச் சிதம்பரம் எனப்படும் பேரூர், சான்றார் குலத்தவரால் உருவாக்கப்பட்ட ஊராகும். கி.பி.1678–இல்(சித்தார்த்தி வருடம்) பேரூர்க்கோயில், வாயுறைக்கா நாட்டுக் களந்தைக் காணியுடைய பூலுவர்(வேட்டுவக் கவுண்டர்) பெரும்பற்றார் சந்திரகுமாரக் கொப்பண மண்ணாடியார் கந்தசுவாமிக் கவுண்டரால் திருத்தியமைத்துக் கட்டப்பட்டது.[85] கி.பி.17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூர் அரசர்களின் ஆதிக்கம் நிலவியபோது பேரூரில் சிறுகுடியார் மடம் நிறுவப்பட்டது என்பது சிறுகுடியார் மடத்துப் பட்டயத்தால் தெரியவருகிறது. எனவே கொங்கு நாட்டில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வேட்டுவர்–வேளாளர் குல எழுச்சி முழுமை பெற்றுவிட்டதென்பது தெளிவாகிறது. இருபத்து நாலுநாட்டுப் பட்டயம் மூலமாகவும் இவ்வுண்மை தெரியவருகிறது.[86] தமது மடத்துப்பட்டயத்தில் சிறுகுடி வேளாளர் தம்மைக் "கருணாகரர் கிளைஞர் அதிபன்" என்றும் "கலிங்கமும் கொண்டு பரணியும் ஏற்றோர்"[87] எனவும் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். இது மட்டுமன்றிச் சான்றோர் குலத்தவர்க்கு உரிய பெருமைகளாகச் சான்றார் குல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல பட்டங்களை இச்சிறுகுடியாரும் குறிப்பிட்டுக் கொண்டுள்ளனர். தமது சிறுகுடியில் 5 பிரிவுகள் உள்ளன என்றும் செஞ்சநாட்டார், பஞ்சநாட்டார், ஆரணத்தார், மருமூட்டில்லம், சோழியர் என்பவையே அப்பிரிவுகள் என்றும் குறிப்பிட்டுக் கொண்டுள்ளனர். இப்பிரிவுகளில் மருமூட்டில்லம், சோழியர் ஆகியவை கொங்கு நாட்டின் மேற்கேயுள்ள கேரள மாநிலத்தில் ஈழவர் குல உட்பிரிவுகளாகத் தெளிவாக நிலவுகின்றன. அதாவது சோழ நாட்டின் மையப்பகுதியான தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இன்றைக்கும் பரவலாகக் காணப்படும் சோழிய வேளாளர்கள் ஈழவர் குலப்பிரிவினரே என்பதும், கருணாகரத் தொண்டைமான் இத்தகைய ஒரு உட்பிரிவினன் என்பதால்தான் சிறுகுடி வேளாளர் "கருணாகரர் கிளைஞர் அதிபர்" எனத் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர் என்பதும் நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மைகளாகும். வலங்கை மாலை, (வரிகள் 1850–60)

மேற்குறித்த நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு காளியின் சாபத்தால் பஞ்சம் ஏற்பட்டது என்றும் சோழன் வலங்கை உய்யக்கொண்டாருடன் சமாதானத்துக்கு வந்தான் எனவும் வலங்கை உய்யக்கொண்டார்கள் சிறு குடியாரைக் குடுமியைப் பிடித்திழுத்து ஈழவர் எனும் பெயர் கொடுத்து தமக்கு ஆடை நெய்து தரும் பணியையும் வழங்கினர் என்றும் குறிப்பிடுகிறது.

> **தேசிகநாதன ருளால் சிறுகுடியோர் தங்களுக்கு**
> **தங்கள் வரிசைகளும் சான்றாண்மையும் கொடுத்து**
> **எங்கள் பேர் சொல்லி இருந்துபிழை என்றுரைத்தார்**
> **(வ.மா.வரிகள் 1861-63)**

என்ற வரிகளைப் பார்க்கையில் சிறுகுடியோர் சான்றோர் குலப்பெருமைகளில் பெரும் பகுதியைத் தமக்கும் உரியனவாகக் கூறிக்கொள்ளுவது நியாயமாகவே தோன்றுகிறது.[68] இலங்கை வெற்றியில் சிறுகுடியார்க்கும் நியாயமான பங்கு இருந்திருக்க வேண்டும். "சூசகர் கருணாகர வீரர்" என்ற ஒற்றர் படைப் பிரிவினர்க்கும் இலங்கைக்கும் தொடர்பிருந்தது. கருணாகரத் தொண்டைமானைப் பல்லவர் தோன்றல் என ஜெயங்கொண்டார் தமது கலிங்கத்துப் பரணியில் குறிப்பிடுவதால் இவன் பல்லவ வம்சத்தவனாக இருக்கவேண்டும் எனக் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கருதியுள்ளார்.[89] கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காரைக்காட்டு வேளாளர் மரபினனான சிவந்தெழுந்த பல்லவராயன், பல்லவ மகேந்திர வர்மனையும் கருணாகரத் தொண்டைமானையும் பெருமான் நம்பிப் பல்லவரையனையும் தனது குல முன்னோராகக் குறிப்பிட்டுக் கொள்ளுகிறான்.[90] பல்லவ அரச குலத்தின் முதன்மையான ஒரு பிரிவினர் அபராஜித பல்லவன் காலத்திலேயே (கி.பி.9–ஆம் நூற்றாண்டின் இறுதி) காராள வேளாளரிலும், வேறொரு பிரிவினர் "பல்லவகுல பாரிஜாதன்" எனப் பட்டம் புனைந்த கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் (கி.பி.13–ஆம் நூற்றாண்டு) பள்ளி குலத்திலும் இணைந்து கலந்திருக்க வாய்ப்புண்டு. (அபராஜிதம் என்பது ஏர்க் கலப்பைக்குரிய பெயராகும்) வேளாண் சாமந்த குலம் என்பது நெகிழ்ச்சியான மண

உறவுகளுடையதாக இருந்தது இதற்குக் காரணம் ஆகலாம். (அதாவது மண உறவல்லாத சம்பந்தத்தில் பிறந்தோரையும் தமது குலத்தில் இணைத்துக்கொள்ளுவது. இதைப் பற்றி வேறோர் இடத்திலும் விவாதித்துள்ளேன்). கருணாகரத் தொண்டைமானைப் பொருத்தவரை, அவனுடைய ஈழ குல மூலத்தைச் சுட்டிக்காட்டும் மறைமுகச் சான்றுகள் சில உள்ளன. இலங்கையில் யாழ்ப்பாணத்து இணுவில் எனுமிடத்தில் கருணாகரத் தொண்டைமானின் அரண்மனை இருந்ததாகவும், அங்கு இளந்தாரிப் பிள்ளையார் என இலங்கை வழக்கில் அழைக்கப்படும் விநாயகர்க்கு அவனால் கோயில் ஒன்று கட்டப்பட்டதாகவும் நம்பப்படுகின்றன. அக்கோயில் தற்போது கருணாகரப் பிள்ளையார் கோயில் என வழங்கப்படுகிறதெனக் கே.கே. பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[91] இளந்தாரி என்பது பிறங்கடை என்பது போன்ற பொருளுடையது; "இளைய தாரத்து மக்கள்" எனப் பொருள்படும் கௌரவ அடைமொழி. மேலும், கருணாகரத் தொண்டைமானின் மனைவி "அழகிய மணவாளினி மண்டையாழ்வார்" என்ற பெயருடையவளாவாள். மண்டையாழ்வார் என்பது கள் விற்போர்க்குரிய சாதிப் பெயராக "அமரகோசம்" என்ற சமஸ்கிருத நிகண்டு குறிப்பிடும் "மண்டஹாரக" என்ற பட்டப் பெயருடன் தொடர்புடையதாக இருக்கவேண்டும். மண்டைய ராயர் என்ற பட்டம் சோழர் காலக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.[92]

இக்காலகட்டத்தில் வலங்கை உய்யக்கொண்டார்களின் அரசியல்—அதிகார அந்தஸ்து வணிகர் குழுக்களைச் சார்ந்து ஓரளவு காத்துக் கொள்ளப்பட்டது எனத் தெரிய வருகிறது. வலங்கை உய்யக் கொண்டார் எனும் வழக்கு குறிப்பிடப்படாவிட்டாலும் கி.பி. 11—ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிக்குரிய சமுத்ராபட்டி வீரதாவளம் (மேலூர் வட்டம்) கல்வெட்டின் மூலம் கொற்றக்குடை பன்மர் முந்நூற்றுவர், கொங்கவாள் எழுநூற்றுவர் என்ற க்ஷத்ரியப் பிரிவினரும் வணிகக் குழுவினர்க்குப் பாதுகாப்புப் படையினராகச் செயல்பட்டனர் எனத் தெரிகிறது. வலங்கை மாலை (வரி.2065—2160) கூறும் குறிப்புகளையும் பார்க்கையில்

சோழ மன்னன் வணிகர் குலப்பெண்டிரை வணிகர்களின் விருப்பத்துக்கு மாறாக மணம் புரிய முயன்றபோது வலங்கை உய்யக்கொண்டார்கள் அதனைத் தடுத்துப் போரிட்டு வணிகரின் மானத்தைக் காத்தனர் என்றும் இதற்கு நன்றி செலுத்தும் விதமாக வணிகர் வலங்கை உய்யக் கொண்டார்களைத் தம் தோளில் சுமந்து சிறப்பித்தனர் என்றும் தெரிகின்றன. வலங்கை உய்யக்கொண்டார்கள் "செட்டி தோளேறும் பெருமாள்" என்ற சிறப்புப் பட்டத்தைப் பெறுகின்றனர்.[93] இந்நிகழ்ச்சிகளுக்கு இடையில் காளி சாபத்தினால் ஏற்பட்ட பஞ்சம், வறட்சி, நாட்டில் மழைபெய்து செழிப்படைய என்னவழி என அரசன் ஜோதிடர்களைக் கேட்டுச் சான்றார் குலத்தவருடன் சமாதானமாகப் போவது ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன எனக் கண்டோம். இந்த இடத்தில் வலங்கைமாலையில் (வரி1035–1124) குறிப்பிடப்படும் ஒரு நிகழ்வினைச் சற்று ஆராய்ந்து பொருள் புரிந்து கொள்ளுவது அவசியமாகிறது. அதாவது நாட்டில் கற்புள்ள பெண்டிர் இருந்தால்தான் மழை பொழியும் எனச் சான்றார் குலத்தவர் கூறியதாகவும் அதன்படி கற்புடைய பெண்டிரைத் தேடியபோது நாட்டில் கற்புடைய பெண்ணே காணக்கிடைக்கவில்லை எனவும், காட்டாவூர்த் தச்சன் மனைவி ஒருத்திதான் கற்புள்ளவள் எனச் சான்றார் கண்டறிந்து கூறியதாகவும் அதாவது அவள், கிணற்றுத் துலாவில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கையில் கணவன் அழைத்ததாகவும், அவள் துலாவை அப்படியே நிற்கச் சொல்லி ஆணையிட்டு விட்டுச் சென்று திரும்பினாள் என்றும் அதுவரை துலா அப்படியே நின்றதென்றும் பிறகு அவளுடைய அருளால் மழை பெய்து நாடு வளம் பெற்றதாகவும் ஒரு குறிப்பு வலங்கைமாலையில் உள்ளது.[94] இதன் பொருள், என்னவென நம்மால் மிகச்சரியான விளக்கம் தர இயலவில்லை, எனினும் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்துக் கொள்ள முடிகிறது. அதாவது, அரச குடும்ப அளவில் தாய்வழிச் சமூகக் கூறுகள் உள்ள குலக்குழுக்களின் கலப்பும் அக்குலக் குழுக்களின் பாரம்பரிய நெறிமுறைகள், சோழ அரசகுடும்பத்தின் பழக்க வழக்கங்களில் நிகழ்த்திய

தாக்கங்களினால் ஏற்பட்ட மாற்றங்களுமே இவ்வாறு கற்பொழுக்கம் சீர்குலைந்தது பற்றிய மறைமுகமான தாக்குதலாக வலங்கைமாலையில் இடம் பெற்றுள்ளன வெனக் கொள்ளலாம். முதற் குலோத்துங்கனின் ஆட்சித் தொடக்கக் காலத்தில் சோழ நாட்டின் பல பகுதிகளில் வலங்கை—இடங்கைச் சாதிகளுக்கிடையில் கலவரம் நிகழ்ந்துள்ளது எனக் கல்வெட்டுகளால் தெரிய வருகிறது.[95] சாதிகள் ஒன்றோடொன்று தலைதடுமாறி, ஒருவர்க்கொருவர் "கை"மிகுந்து பெண்டிர் கற்பு குலைந்தது என்று கலிங்கத்துப் பரணியிலும் (தாழிசை246—247) குறிப்பிடப்படுகிறது. இந்நிலைமையே வலங்கை மாலையிலும் குறிப்பிடப்படுகிறது. அது ஒருபுறம் இருக்க, காட்டாவூர்த் தச்சன் மனைவி மட்டும் கற்புடையவள் என வலங்கைமாலை கூறக் காரணம் என்ன என யோசிக்கையில் வலங்கை உய்யக்கொண்டார் படைப்பிரிவினர் சோழ அரச குடும்பத்துடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த காலத்தில்கூட விஸ்வகர்ம சமூகத்தவர் அல்லது கண்மாளர், இவர்களுடன் நெருங்கிய நட்புடனும் விசுவாசத்துடனும் இருந்தனர் எனக் கொள்ளலாம். வணிகக் குழுக்களுக்கும் முதன்மையான தொழில் சாதியினராகிய விஸ்வகர்மாக்களுக்கும் சுமூகமான உறவு இருந்தால்தான் உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனை மட்டுமின்றி உலோக மூலாதாரங்கள், உயர்வகை மரங்கள் முதலான கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றைக் கையகப்படுத்துதல், உற்பத்திப் பொருள்களாகச் சமைத்தல் ஆகியவை செம்மையாக நடைபெற இயலும். பலவகை ஆயுதங்கள் மற்றும் இதர போர்த்தொழில் உபகரணங்கள், போர்ப் பயணத்துக்கான ரதங்கள் போன்றவற்றை உருவாக்கவும் முடியும். எனவே தமக்குப் பலவகையிலும் விசுவாசமாக இருந்த விஸ்வகர்மாக்களைப் பெருமைப்படுத்தும் விதத்திலும், ஒரு காலத்தில் சோழ அரச குலத்துக்கே ஆச்சாரியர்களாக (ஆசாரி) மதிக்கப்பட்டுப் பின்னர்ப் பணிமக்களாக மாற்றப்பட்ட விஸ்வ பிராமணர்களின் உயர்குடித் தன்மையையும், தம்குலப் பெண்டிர்க்கும் தமது வித்தையைக் கற்பிக்கும் பெருந்தன்மை, பிராமணர், க்ஷத்ரியர் முதலிய வர்ணத்தவர்க்குக் கூட

இல்லாத நிலையில் பெண்டிர் கற்பு(கல்வி) என்பதைப் பொருத்தவரை அதனை உறுதியாகக் காப்பாற்றி வருபவர்கள் விஸ்வ பிராமணர்களே என்ற ஒரு வெளிப்படையான நிலைமையையும் உணர்த்துவதற்காக வலங்கைமாலை இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். கண்மாளர் சாதியினர் சோழ அரசருக்குக் குலகுருவாக இருந்தனர் எனவும் கண்மாளர் சாதியினர் மீது பொறாமை கொண்ட வேத வியாசர் சூழ்ச்சி செய்து அவர்களை அப்பதவியில் இருந்து நீக்கச் செய்தார் என்றும் வலங்கை–இடங்கைச் சாதிகள் பற்றிய புராணக் கதைகள் குறிப்பிடுகின்றன.[96] கி.பி. 1264 – ஆம் ஆண்டைச் சேர்ந்த, தஞ்சை மாவட்டம் ஆலங்குடிக் கல்வெட்டு, "காட்டாவூரம்மையாலே கனக மழை பொழிவித்தோர்" என்று விஸ்வகர்மாக்களைப் புகழ்கிறது.[97]

சோழ நாட்டில், கி.பி.1125–1129–ஆம் ஆண்டுகளுக் கிடையில் பெரும் வெள்ளமும் அதனைத் தொடர்ந்து கொடும் பஞ்சமும் ஏற்பட்டன எனத் தெரிய வருகின்றன.[98] வலங்கை மாலை குறிப்பிடும் காலக்கட்டம் இதுவே.

கவுதாரி உருவெடுத்துக் கறையானை அழித்தல்

இனி அடுத்த நிகழ்வாக வணிகர்களிடமிருந்து பொருள்களையெல்லாம் கறையான் கவர்ந்து சென்றபோது வலங்கை உய்யக்கொண்டார்கள் கவுதாரி உருவெடுத்துக் கறையானைக் கொத்தித் தின்றதாக வலங்கைமாலை குறிப்பிடுகின்றது. கவுதாரி உட்படப் பறவைகள் கறையானை விரும்பி உண்ணும். கவுதாரியின் இயக்கப் பாணியில் எதிரியிடம் போரிட்டு வீழ்த்திய ஒரு நிகழ்வினை இக்குறிப்பு உணர்த்தக் கூடும்.[99] கரையார், கரையாள்வார், கரைதுறை வேளாளர் என அழைக்கப்படும் முக்குவர் சமூகத்தின் கடற்படை ஆதிக்கத்தை வலங்கை உய்யக் கொண்டார்கள் வேரறுத்து வணிகர்களின் கப்பல்களைப் பாதுகாத்ததையும் வணிகர்களின் சரக்குக் கப்பல்களுக்கும் சோழ நாட்டுத் துறைமுகங்களுக்குப் பாதுகாப்புப் படையாகச் செயல்பட்டதையும் வலங்கை மாலை இக்கதை மூலம் உணர்த்துகிறது எனலாம். தூத்துக்குடியைச் சேர்ந்த பேரா. அ. சிவசுப்பிரமணியம் அப்பகுதி கடற்கரைப் பரதவரிடம்

"சம்பாபாயி கீழிருக்கு, சாணாப் பய(ல்) மேலிருக்கான், சம்பாபாயை இழுத்துவிட்டா(ல்), சாணாப் பைய ஓடுறான் பாரு" என்ற நாட்டுப்புற வழக்கு (பாடல்) வழங்கி வருகிறது எனக் குறிப்பிட்டார். இதன் பொருள் முழுமையாக அவர்களுக்கு விளங்கவில்லை என்றாலும், துவேஷ உணர்வுள்ள ஒரு பாடல் குறிப்பு என்பது அவர்களுக்குப் புரிந்தே உள்ளது. இப்பாடல் வரியில் குறிப்பிடப்படும் சம்பா என்பது சீன நாட்டு மரபில் கட்டப்பட்ட "சம்பான்" என்ற பெயர் கொண்ட கப்பல் வகையைக் குறிப்பிடும் என்பது எனது கருத்து. சம்பாபாய் என்பது இதன் பாய் மரத்தைக் குறிப்பதாகப் பொருள் கொண்டு கரையார்க்கும் சான்றோர்க்கும் நடந்த மோதல் குறித்த ஒரு செய்தியைப் பூடகமாகக் குறிப்பதாகக் கொள்ளலாம். கரையார் சமூகத்தவர் பற்றிய சில விவரங்களை நாம் இங்குத் தெரிந்து கொள்ளுவது வலங்கை மாலையைப் புரிந்து கொள்ள உதவும். பரதவர் சமூகத்திலிருந்து வேறுபட்ட ஒரு பிரிவினரான கரையார்கள் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் துறைமுக நகரங்களில் பரவலாக வாழ்கின்றனர். இவர்களில் பெரும் பகுதியினர் கி.பி. 14—ஆம் நூற்றாண்டில் மதுரை சுல்தான்கள் ஆட்சியின் விளைவாகவும் அதன் பின்னர் டெல்லி சுல்தான்களின் ஆட்சி மற்றும் பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான் ஆட்சி போன்றவற்றின் தொடர்பாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இஸ்லாம் பரவிய வேகத்தின் தாக்கத்தினாலும் இஸ்லாமிய மதத்தைத் தழுவினர். மரைக்காயர் (மரக்கல நாய(க)ர்) எனும் பட்டத்தையும் தம் பெயருடன் இணைத்துக் கொண்டனர். மேலைக் கடற்கரைப் பகுதிகளில் முக்குவர் எனவும் முகவீரர் என்றும் அவர்கள் சாதி குறிப்பிடப்படுகிறது. முகவீரர் என்பது துறைமுக வீரர் என்பதன் சுருக்கமாகும். கரைதுறை என்றாலும் துறைமுகத்தைக் குறிக்குமாதலாலும், பிள்ளை எனும் பட்டம் புனைவதாலும் இவர்கள் கரைதுறை வேளாளர் எனத் தமிழகத்தில் அழைக்கப்படுகின்றனர். கன்னட (துளு) நாட்டு உடுப்பிப் பகுதியில் முகவீரர்களிடையே மரக்காலர் எனும் சாதிப் பட்டம் உள்ளது. இது மரக்கல நாய(க)ர் என்பதன் சுருக்கமே. கொச்சிப் பகுதியில் வாழும் கிறித்தவ

முக்குவரிடையே மரக்காயர் என்ற சாதிப் பட்டம் உள்ளது. முக்குவர் பற்றிய திருவிதாங்கூர் சமஸ்தானப் பகுதி நாட்டுப் பாடல்கள் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. அப்பாடல்களில் "அரச மக்கள்" என்றே இவர்கள் குறிப்பிடப்பட்டுகின்றனர்.

கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய, குருகுலத்தரையன் எனும் குலப்பெயர் கொண்ட கரையார் சமூகத்தவர் கடற்படைத் தலைவர்களாக இருந்துள்ளனர். கி.பி. 1067–ஆம் ஆண்டுக்குரிய திருமுக்கூடல் கல்வெட்டு, இலங்கைக் கடற்படைத் தலைவனான குருகுலத்தரையனைச் சோழர் படைகள் கொன்றன என்ற செய்தியைத் தெரிவிக்கிறது.[100] சிங்கள பௌத்த சமயத்தைப் பின்பற்றிய கரையார் சமூகத்தவர் "கரவா" என அழைக்கப்பட்டனர். இலங்கை அனுராத புரத்திலுள்ள கி.பி. 2–ஆம் நூற்றாண்டு, சிங்கள பிராமி குகைக் கல்வெட்டு ஒன்று "தமெட கரவா மகாநாவிக" எனக் குறிப்பிடுகிறது. இதன் பொருள், "மாநாய்கன் அல்லது கப்–பல் தலைவராகிய தமிழ்க் கரையார்" என்பதாகும். "மாநாய்கன்" என்பது இவரது இயற்பெயராகவோ, குலப்பட்டமாகவோ இருக்கலாம். கரையார் சமூகத்தவரின் வரலாற்றுப் பங்களிப்பு குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ள இது சரியான இடமன்று, ஆயினும் நாம் விவாதிக்கின்ற காலக்கட்டமாகிய கி.பி. 12–13–ஆம் நூற்றாண்டுகளின் நிகழ்வுகளைச் சரியான வரலாற்றுப் போக்கில் வைத்து நோக்கிப் புரிந்து கொள்ள வசதியாகவே மேற்குறித்த கல்வெட்டை இங்குக் குறிப்பிட்டேன். கி.பி. 14–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17–ஆம் நூற்றாண்டு வரை நாகப்பட்டினம் பகுதியில் வருணகுலத்தான் அல்லது வருணகுல ஆதித்தன் என்ற குடும்பப் பெயருடன் கடற்படைத் தலைவர்களாக இருந்த கரையார் சமூகத்தவர் பற்றித் தமிழ் இலக்கிய ஏடுகளிலும் போர்ச்சுகீசிய ஏசுசபை (Jesuit Mission) ஆவணங்களிலும் குறிப்புகள் உள்ளன. இக்காலக்கட்டத்தில் இஸ்லாமிய ஆட்சியாளர்களின்

ஆதரவைப் பெற்று அதிகாரம் செலுத்திய இஸ்லாமியக் கரையார் சமூகத்தவர் தவிர மறக்குல அகம்படியர் சமூகத்தவராகிய வாணாதிராயர்களுடன் மண உறவு கொண்டு அதன் மூலம் க்ஷத்ரியர் அல்லாத போர்க்குடிகள் மற்றும் வேளாண் குடிகளின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தி அதற்கொரு அரசியல் வடிவம் கொடுத்த இந்து சமயக் கரையார் சமூகத்தவரும் இருந்திருக்க வேண்டும். திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள திருநெடுங்களம் சிவன் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.14 –ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் மூலமாகச் சுருதிமான்களும் குருகுலத்தரையர்களும் கூட்டணியமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றினர் என ஊகிக்க முடிகிறது.[101] குருகுலத்தரையன் எனும் பட்டப்பெயர் வாணாதிராயர் குலத்தவர்க்கும் சிலநேரம் வழங்கியுள்ளது.[102] "அரச மக்கள்" என்று முக்குவர்களின் நாட்டுப்பாடல் குறிப்பிடுவதைப் போல "அரசு புத்திரன் சாமந்தன்" என்று வாணாதிராயர் ஓரிருவர் குறித்துக் கொண்டதையும் கி.பி.14–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் பார்க்க முடிகிறது.[103] இதே வாணாதிராயர் குலத்தவர்கள் கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் விஜயநகர அரசின் அரவணைப்பில் தனி அரசு கண்டபோது தம்மை "ராஜகுல சர்ப்ப கருடன்" அதாவது அரசகுலம் எனும் நாகத்திற்கு கருடன் போன்றவர் என்றும் குறிப்பிட்டுக் கொள்வது வேறு கதை. பழமையான க்ஷத்ரிய குலத்தினை வீழ்த்தி அதிகாரத்தைப் பறித்துக் கொண்டவர்கள் என்பதே இதன் பொருளாகும்.

எவ்வாறிருப்பினும் கரையார் சமூகத்தவர் எழுச்சியினால் வணிகர்க்கு, குறிப்பாகக் கப்பல் வணிகர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் வலங்கை உய்யக்கொண்ட படை வீரர்களால் களையப்பட்டன என்று நாம் புரிந்து கொள்ளலாம். கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் மதுரை சுல்தான்கள் ஆட்சி நிலவிய காலக் கட்டத்தில் திருச்சிராப்பள்ளியை அடுத்த கண்ணனூரில் (சமயபுரத்தில்) ஹொய்சள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் ஆண்டு வந்தான். இதே காலக்கட்டத்தில் சேர அரசனான வீரகேரளன் என்கிற இரவிவர்மன் குலசேகரன், மாறவர்மன் குலசேகரன் என்ற பெயரிலேயே மதுரையைத்

தவிர தமிழகத்தின் பிற பகுதிகளைச் சில காலம் ஆட்சி செய்தான். "ஐவர் ராஜாக்கள் கதை" எனும் வில்லுப்பாட்டு நூல் இவனைப் பற்றியதே என்பது எனது கருத்தாகும். கன்னடிய இளவரசியை மணம் புரிய மறுத்தது, மதுரை மீனாட்சியம்மனை அவமதித்ததால் கறையான் அவனது ஆயுதங்களை அரித்து விடுவது போன்ற செய்திகள் "ஐவர் ராஜாக்கள் கதை"யில் குறிப்பிடப்படுகின்றன.[104] கடற்படையினராகிய கரையார் குலத்தவர்களும் கருநாடக நாட்டு துவார சமுத்திரத்தைச் சேர்ந்த ஹொய்சளரும் வீரகேரளனுக்கு எதிரணியில் இடம் பெற்றிருந்தனர் என்பதையே இக்குறிப்புகள் உணத்துகின்றன போலும். கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் ஹொய்சள அரசர்களே தம்மை "வலங்கை மீகாமன்" என அழைத்துக் கொண்டதும், கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் வாணாதிராயன் ஒருவன் வலங்கை மீகாமன் எனப் பட்டம் சூடியிருந்ததும் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கவை.[105] இவ்வாறு கரையார் சமூகத்தவர் தமிழக அரசியலில் ஒரு குறிப்பிடத் தக்க பங்கு வகித்த காலக்கட்டத்தில் வலங்கை உய்யக்கொண்டார்கள் அவர்களுடன் முரண்பட்டு நின்றுள்ளனர் என்பது தெளிவாகிறது. கப்பற்படையை வழிநடத்தும் யுக்திகளிலும் கடற்போர் முறைகளிலும் கைதேர்ந்த கரையார் சமூகத்தவரை வலங்கை உய்யக்கொண்டார்கள் வென்ற நிகழ்வு இவர்களுடைய தனித்தன்மை வாய்ந்த போர் முறையின் சிறப்புத் தன்மையைக் காட்டும். அதே வேளையில் மாந்தையர் எனப்படும் கப்பல் கட்டும் தச்சர்களின் ஒரு பகுதியினர் வலங்கை உய்யக்கொண்டார்களுக்கு உறுதுணையாக இருந்திருக்க வேண்டும் என நாம் யூகிக்கலாம். விஸ்வகர்மா பிரிவினருள்ளும், மாந்தையர் (தச்சர்) பிரிவைச் சேர்ந்த காட்டாவூர்த் தச்சன் மனைவியே கற்புள்ளவள் என வலங்கையர் கூறியதாகச் சோழநாட்டில் மழை பொழியாமல் பஞ்சம் நிலவிய பொழுது நடந்த சம்பவங்களை வருணிக்கும் பொழுது வலங்கைமாலை குறிப்பிடுவதையும் இந்த இடத்தில் தொடர்பு படுத்திப்பார்க்கலாம்.

வலங்கை மாலையின் இறுதிப் பகுதியில் (வரிகள் 3044 – 3047)

"குறையில்லா மாந்தைக் குலத்தோர் எனப் பிறந்த
எண்ணாயிரம் தொழிலை ஏத்திப் படிப்பவர்கள்
கண்ணாளர் வங்கிசமும் கலிதீர்ந்து வாழியவே"

எனக் குறிப்பிடப்படுவது இங்குக் கவனிக்கத் தக்கது. இன்றளவிலும் சான்றார் குலத்தவர்க்கு மட்டும் பணிமக்களாக இருக்கும் ராஜகண்மாளர் என்ற பிரிவினர் உள்ளனர். மாந்தையர் என்பது, மாவித்தையர் அல்லது மாவிந்தையர்(பெருங்கல்வியாளர்) என்பதன் திரிபெனக் கருதுகிறேன். ஆசார்யன் பட்டம் குறித்து விஸ்வபிராமணர்களுக்கும் பிராமணர்களுக்குமிடையே ஏற்பட்ட வழக்கு, வரலாற்று ஆய்வாளர்கள் அறிந்த ஒன்றே.

இந்த இடத்தில் வரலாற்றுச் சம்பவங்களை நிகழ்த்து கலைகளாகப் பாடிச் செல்லும் இத்தகைய வில்லுப்பாட்டு இலக்கியங்களின் ஒரு பொதுவான போக்குக்கான காரணத்தை நாம் ஆராய வேண்டியுள்ளது. நேரடியாகப் பல சம்பவங்களைக் கூறாமல் "சிறுகுடியான் ஒருவன்" என்றும், "உள்ளமில்லா நெஞ்சன் என்னும் ஓட்டன்" என்றும், "கறையானைக் கவுதாரி வடிவெடுத்துக் கொத்தித் தின்றவன்" என்றும் பூடகமாகக் குறிப்பிட வேண்டிய அவசியம் என்ன? கடந்த காலப் பெருமைகளை நினைவுறுத்தி ஒரு பெருமித உணர்வு எய்துவது என்ற நோக்கம் இத்தகைய பாடல்களால் நிறைவேறுகிறது என்பது ஒருபுறம் இருக்க, கடந்த காலப் பகைமை கிளறப்படக் கூடிய அபாயமும் இதில் உள்ளது. எனவே சம்பவங்களை வெளிப்படையாகச் சொல்லாமல் சற்றுப் பூடகமாகப் பாடிச் செல்கிறார்கள் எனலாம்.

வலங்கை மாலை குறிப்பிடும் பிற நிகழ்ச்சிகள்

வலங்கை மாலை வரி 2211 – 2305 இல் குறிப்பிடப்படும் சில நிகழ்ச்சிகள் சரியாக இந்த மன்னர் காலத்தில்தான் நடந்தனவெனச் சொல்ல முடியாவிட்டாலும் அந்நிகழ்ச்சிகள் தொடர்புடைய சில சொல்லாட்சிகள் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படுவதால் அவற்றின் காலத்தை வரையறுத்துச் சொல்லுதல் ஓரளவு இயலும். சோழ அரசனின் மனைவி, அரசனின் தம்பியிடம் மோகம்

கொண்டதாகவும் அவளுடைய எண்ணத்திற்கு அரசனின் தம்பி இணங்காததால் அவன் மீதே அரசி பொய்ப்பழி சுமத்தியதாகவும் மனைவி சொல்லை நம்பிய அரசன் தனது தம்பியைக் கொல்லுமாறு வலங்கை உய்யக்கொண்டார் வசம் ஒப்படைத்ததாகவும், வலங்கையர் அரசனின் தம்பியை ஓரிடத்தில் மறைத்துவைத்துவிட்டு அவனைக் கொன்று விட்டதாகக் கூறிச் சோழனை நம்பச் செய்தனர் என்றும் பின்னர் ஒருநாள் நடந்த நிகழ்ச்சிகளை நாடகம் போல் அமைத்துத் "தம்பித் துணை நாடகம்" என்ற பெயரில் அரண்மனையில் அரங்கேற்றியதாகவும் தனது தவறை உணர்ந்த சோழன் மனம் வருந்தியதாகவும் அப்போது வலங்கையர் அரசனின் தம்பியை மறைவிடத்திலிருந்து கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தியதாகவும் வலங்கை மாலை குறிப்பிடுகிறது. சான்றோர் குலப்பட்டயங்களிலும் "தம்பித் துணை நாடகம் கட்டிவைத்தோர்" என்ற பட்டம் குறிப்பிடப்படுகிறது. சோழர் கல்வெட்டுகளில் இந்நாடகம் பற்றிய குறிப்பு இல்லாவிட்டாலும் கூட முதல் இராஜாதிராஜ சோழன் காலக் கல்வெட்டுகளில் கி.பி. 1053– அளவில் "தம்பித் துணைச் சோழ வளநாடு " (மரக்காணம் பகுதி, தென்னார்க்காடு மாவட்டம்) என்ற நாட்டுப் பிரிவும் "தம்பித்துணை விண்ணகர் ஆழ்வார்" (தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம் வெள்ளூர்) என்ற பெருமாள் கோயிலும் குறிப்பிடப்படுகின்றன.[106] "தம்பித்துணை" என்பது, முதல் இராஜாதிராஜனின் தம்பியும், சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என்ற பெயரில் பாண்டிய நாட்டை ஆண்டவனுமான இரண்டாம் இராஜேந்திர சோழனுக்குத் துணை நின்ற சான்றார் குலத்து வலங்கை உய்யக்கொண்டார்களையே குறித்திருக்க வேண்டும். வலங்கைப் பழம்படையில் முதன்மையான ஒரு பிரிவு, இக்காலக்கட்டத்தில் நெல்லைச் சீமையில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

ஈழத்து அரசன் மகள் ஏகவல்லி என்ற பெண்ணைப் பாண்டிய மன்னனுக்கு வலங்கையர் மணமுடித்து வைத்ததாக ஒரு செய்தி வலங்கைமாலையில் (வரிகள் 2715 – 2760) குறிப்பிடப்படுகிறது. இந்த நிகழ்வு கி.பி. 1165–1170–ஆம்

ஆண்டில் பாண்டிய நாட்டில் நடைபெற்ற அரசுரிமைப் பூசலின் போது பாண்டிய குடும்பத்தின் ஓர் அணிக்குத் தலைமைதாங்கிய குலசேகர பாண்டியன் என்பவனுடன் தொடர்புடைய நிகழ்ச்சியாக இருக்கலாம். இலங்கை இளவரசி ஏழகவல்லி என்பவளை இக் குலசேகர பாண்டியன் மணமுடித்ததாக அறிய முடிகிறது. "பாண்டியனார் குலசேகரர் ஈழத்தானுடனே சம்பந்தம் பண்ணவும் இவனும் இவருங்கூட நின்று சோழ ராச்சியத்துக்கு விரோதமாயிருப்பன செய்யவும்" என்று கி.பி. 1175—ஆம் ஆண்டுக்குரிய திருவாலங்காட்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதற்கு இலங்கையில் சோழர் காலத்திலிருந்தே நிலைப்படையாகத் தங்கியிருந்த வலங்கைப் படையினராகிய ஏழகத்தார் உதவி புரிந்திருக்கலாம். ஏழகத்தார் எனப்பட்ட வீரக் குழுவினர் பாண்டி நாட்டின் சில பகுதிகளில் இக்காலக்கட்டத்தில் கோட்டை அமைத்தும் அரண்மனை கட்டியும் அதிகாரம் செலுத்தியுள்ளனர். பாண்டியர் கல்வெட்டுகளில் ஏழகத்தார் கோயிற்றமர் (கோயில் தமர் = அரண்மனை உடன் கூட்டம்) எனும் குறிப்பு காணப்படுகிறது. மறப்படை, ஏழகப்படை ஆகியவை பாண்டியரின் முதன்மையான படைகளாக இக்காலக்கட்டத்தில் இருந்தன என்பது சோழ மன்னர் மெய்க்கீர்த்திகளால் தெரிகிறது.[107] இலங்கையில் எஞ்சியிருந்த வலங்கைப் படையினரின் வம்சாவளியினர் பாண்டிய நாட்டிலும் செட்டிநாடு, கானாடு பகுதிகளிலும் குடியேறி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி இருக்க வேண்டும் என நாம் முடிவு செய்யலாம். முதற் குலோத்துங்க சோழனின் படைத் தலைவன் மணவிற்கூத்தன் நரலோக வீரன் காலிங்கராயன் என்பவனால் கி.பி. 12—ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பாண்டிய நாட்டுப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.[108] அக்காலக்கட்டத் திலிருந்தே பாண்டிய நாட்டிலிருந்த சோழ பாண்டிய அரச மரபினரும் வலங்கைப் படையினரும் குலோத்துங்க சோழனுக்கு எதிராகப் பாண்டிய அரச குலத்தவருடன் நெருங்கிய உறவு கொள்ளத் தொடங்கியிருக்கக்கூடும். இவர்களுடன் ஏழகத்தாரும் கி.பி. 1170 அளவில் இணைந்து கலந்திருக்கலாம்.

கானாடு, கோனாடு (அதாவது இன்றைய புதுக்கோட்டை மாவட்டம் அரிமழம், பொன்னமராவதி)ப் பகுதிகளில் கி.பி. 13—ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வலங்கை உய்யக் கொண்டார்கள் சில ஊர்களில் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்துள்ளனர். கி.பி. 1218 —ஆம் ஆண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்டபோது இவர்கள் பாண்டிய மன்னனுக்கு ஆதரவாகவும் உறுதுணையாகவும் செயல்பட்டுள்ளனர். பொன்னமராவதிப் பகுதியில் உள்ள பனையூரின் அருகில் பெருநல்லூர் (தற்போது பொன்னனூர்) திருக்குமரீஸ்வரக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.—1227ஆம் ஆண்டுக் கல்வெட்டு இதற்குச் சான்றாகும்.[109] இதற்குப் பின்னர் வலங்கை உய்யக்கொண்டார்கள் பாண்டிய அரச குலத்தவருடன் மணவுறவு கொண்டு நெருங்கி வாழ்ந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கி.பி. 13—ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியைச் சேர்ந்த பனையூர் (புதுக்கோட்டை மாவட்டம்) அறிவீஸ்வரமுடைய நாயனார் கோயில் கல்வெட்டில் பாண்டி நாட்டிலிருந்து சோழநாடு மீது படையெடுத்து வந்த தண்பொருந்தக் கரை (தாமிரபரணிக் கரை) மறவர்களும் பெருமாக்களும் சேர்ந்து இக்கோயிலை அமைத்த குறிப்பு காணப்படுகிறது. "பெருமாக்கள்" எனப்பட்ட பாண்டிய அரச குலத்தவருடன் வலங்கை உய்யக்கொண்டார்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கலாம் என இத்தகைய குறிப்புகளால் நாம் உய்த்துணர முடிகிறது.

வலங்கைமாலை (வரிகள் 2381—2485) குறிப்பிடுகின்ற ஒரு புராணச் செய்தி, இந்நூல் குறிப்பிடும் பிற வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்பு இன்றித் தனித்துக் காணப்படுகிறது. இலங்கையில் இருந்த தாடகை, குருபோளனி என்ற பெண்டிர் சிங்கராசனுக்கு வலங்கையர் எழுநூற்றுவரால் மணமுடிக்கப் பட்ட செய்தி அவ்வரிகளில் குறிப்பிடப்படுகிறது. "சிங்கத்தை வங்கத்தில் ஏற்றி" என்ற ஒரு தொடரால் சான்றார்குலப் பட்டயங்களும் இப்புராணத்தைக் குறிப்பிடுகின்றன. "மகாவம்சம்," கலிங்கத்திலிருந்து 700 வீரர்களுடன் விஜயன் கப்பலில் புறப்பட்டு இலங்கை வந்ததாகவும் குவேனி,

தாடகை என்ற இருவரை மணந்து இலங்கையை ஆட்சி புரிந்ததாகவும் குறிப்பிடுகிறது. குருபோளணியைச் சான்றாரும், தாடகையைச் சிங்கராசனும் மணம் முடித்ததாக வலங்கைமாலை குறிப்பிடுகிறது. இவர்களில் தாடகையை மும்முலை நங்கையாக வலங்கைமாலை குறிப்பிடுகிறது. இது தாரகை அல்லது விண்மீன் என்ற பொருள்படும் மீனாட்சி பற்றிய குறிப்பே ஆகும். திருவிளையாடல் புராணத்தில் இவளுடைய பெயர் தடாதகைப் பிராட்டியார் என்றும், சிவனுடைய பெயர் சோமசுந்தரர் —பாண்டிய குல முதல்வனாகிய நிலவுத் தெய்வம்—என்றும் குறிப்பிடப்படுகின்றன. வலங்கை உய்யக்கொண்டார்கள் எனும் பட்டம் சோழ நாட்டில் கி.பி. 10—11ஆம் நூற்றாண்டில் வழக்குக்கு வந்த பெயராகத் தெரிகிறது. ஆனால் இப்புராணக் கதையோ கி.மு. 7—ஆம் நூற்றாண்டு அளவில் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இவற்றுக்கு இடைப்பட்ட காலம் மிக நீண்டதாகும். இச்சம்பவங்களுக்கிடையே நாமாக ஒரு தொடர்பை உருவாக்கிப் பார்ப்பதென்றால், சான்றார் குலத்தவர்க்குப் பட்டயங்களில் வழங்குகிற இலங்காபுரித் தலைவர் என்ற பட்டத்தை மையமாக வைத்துத்தான் புரிந்து கொள்ள முடியும். அதாவது "எழுநூற்றுவர்" என்ற வலங்கைப் படையினரின் எண்ணிக்கை அடிப்படையிலான பெயர், கலிங்க நாடு மற்றும் இலங்கை நாட்டு ஆட்சிக் குடியினர் என்ற அடிப்படையில் தோன்றியிருக்கக்கூடும். இது மேலும் ஆழமான ஆய்வுக்குரிய ஒன்றாகும்.[110]

அடுத்ததாக, பாண்டிய நாட்டில் வலங்கை உய்யக்கொண்டார்கள் மாடக்காசு உண்டாக்கி வழக்கப்படுத்தியதாக வலங்கைமாலை குறிப்பிடுகிறது. (வரி 2878—2930) இக்காசுக்குச் சான்றார்கள் மாடை என்றும் ஒரு பெயர் உள்ளது. (வரி 2923) சான்றார் காசு அல்லது சாணார் காசைப் பற்றி, விஜயரகுநாத சேதுபதியைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட "பணவிடுதூது" என்ற இலக்கியத்தில் (கி.பி. 18 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்) குறிப்பு உள்ளது. தரம் மிகுந்த பத்தரை மாற்றுப் பொன்னால் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட காசைச் சாணார் காசு எனத் தமிழகத்திலும், கேரளத்திலும் மக்கள் அழைக்கின்றனர். இக்காசில் ஒருபுறம்

பனைமரத்தின் முன்னர் சான்றார் ஒருவர் நிற்பது போன்ற உருவம் காணப்படுவதாகவும், இது உண்மையில் சிலுவையின் முன்னர் நிற்கும் நீதிபதி ஒருவரைச் சித்திரிக்கும் என்றும், இவை வெனிஸ் நாட்டு செக்வின்ஸ் **(Sequins)** அல்லது டியூக்கட்ஸ் **(Ducats)** என்றும் நாயணவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் இப்பிரச்சினையில் எழக்கூடிய முக்கியமான கேள்வி என்னவென்றால், சான்றார் குலத்தவர்கள் திருவிதாங்கூர் அரசருக்குக் காசுகள் அடித்துக் கொடுத்தார்கள் என்ற செவிவழிச் செய்தியும், உலோகத்தின் தரத்தை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்கும் பதவியில் இருந்திருக்கிறார்கள் என்பதும் நம்பகத்தன்மை உடையவையாக இருப்பதால் நாணயவியல் அறிஞர்களின் கருத்து மறுபரிசீலனைக்குரியதோ எனத்தோன்றுகிறது.[111] எனவே சான்றார் காசு பற்றிய பிரச்சினையில் புதிய கண்ணோட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் அனுராதபுரத்தை ஆண்ட கைவாறன் என்ற மன்னனை வலங்கை உய்யக்கொண்டார்கள் வென்ற நிகழ்ச்சியும் வலங்கைமாலையில் (வரிகள் 2580—2717) குறிப்பிடப்படுகின்றது. இந்தப் போரும் சோழர் சார்பில் இலங்கையில் வலங்கை உய்யக்கொண்டார்கள் பங்கேற்ற போராகும். இது வலங்கைமாலையின் பிற்பகுதியில் குறிப்பிடப்படுவதன் காரணம் தெளிவுபெறவில்லை.

ஆயினும் இப்போரில் பெற்ற வெற்றியின் காரணமாகவே இலங்காபுரி வேந்தன் என்றும், பூவேந்திய சோழன் என்றும் வலங்கையர் பட்டம் பெற்றதாகவும் வலங்கைமாலை(வரிகள் 2715—16) குறிப்பிடுகின்றது. கைவாரநாடு என்ற பெயர் பிற்காலச் சோழர் ஆட்சியின் போது, பெங்களூர் பகுதியில் உள்ள, கோலார், சிந்தாமணி வட்டங்கள் அடங்கிய பகுதிக்குச் சூட்டப்பட்ட பெயராகும். இப்பகுதியைச் சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் "பிரம்மாதி ராஜர்கள்" சுயேச்சையாக ஆண்டனர் எனத்தெரிகிறது. இவர்கள் இலங்கையின் அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்தோராக இருக்கலாம். இவர்களைச் சான்றார் படை

வென்றிருக்கலாம். "கைவாரி" என்பது நின்ற நிலையில் அரசனை வாழ்த்திப்பாடும் சூதர் மரபினர்க்குரிய பெயராகவும் "பட்" (Bhat) என்பது அமர்ந்த நிலையில் அரசனை வாழ்த்திப்பாடும் மாகதர் மரபினர்க்குரிய பட்டப்பெயராகவும் சிலப்பதிகாரத்தின் (5:48) அரும்பதவுரையில் குறிப்பிடப்படுகின்றன.[112] யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் போன்ற பிராமணகுலக் கலப்புள்ள பட்டர்கள் (பிரம்மாதி ராஜர்கள்) கைவாரன் என வலங்கைமாலையில் குறிப்பிடப்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. பட்டர் என்ற சாதிப்பட்டத்தைப் புனைந்துகொள்ளும் சிவாச்சாரியார் (குருக்கள்) மரபினரிலும், ஆரிய பட்டரிலும் போர்த்தொழில் வல்லமை மிக்க பிரம்மாதி ராஜர்கள் இருந்துள்ளனர் எனக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.[113] அல்லது துளு பாண்டிய குலத்தாருக்குப் பிறந்த விக்கிரமப்பண்டு என்ற சிங்கள அரசனை, (கி.பி. 1044–1047) சோழர் படைகள் வென்ற நிகழ்ச்சியை இது குறிப்பிடக்கூடும். இராஜாதிராஜன் மெய்க்கீர்த்தியும் இலங்கை அரசனான விக்கிரம பாண்டியன் மீது சோழர் படைகள் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுகின்றது. சூளவம்சமும் இவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனால் இவன் சோழர் படைகளால் கொல்லப்படவில்லை. ரோஹண நாட்டைக் கைப்பற்றிய அயோத்தி அரசன் ஜகதிபாலனால் கி.பி.1047–இல் கொல்லப்பட்டான். இந்த ஜகதிபாலனே அமந்திகாசுரன் என வலங்கைமாலையில் குறிப்பிடப்படுகிறான் என முன்பே கண்டோம். விக்ரமபண்டுவின் மகனான பராக்கமன், ஜகதிபாலனுக்குப் பிறகு இரண்டாண்டுகள் ரோஹணத்தை யாண்டான்; சோழர்களால் கொல்லப்பட்டான்.[114] விக்கிரமபண்டுவின் மகனான பராக்கமனே ஸ்ரீவல்லப மதனராஜன் எனக் கல்வெட்டியல் அறிஞர் ஹுல்ஷ் கருதியுள்ளார்.[115] கைவாரநாடு என்பது துளு மொழி வழங்கும் பகுதியன்று, கன்னட மொழி வழங்கும் பகுதியே ஆகும். கி.பி. 1051–1053 –ஆம் ஆண்டு அளவில் இலங்கையின் ரோஹணப் பகுதியை ஆண்ட கன்னரன் வழி வந்த ஸ்ரீ வல்லப மதனராசன் என்பவன் சோழப்படைகளால் தோற்கடிக்கப் பட்டான் எனச் சோழர் மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது.

மகாவம்சமோ விக்ரமபண்டுவுக்கும் கன்னட அரசவம்சப் பெண்ணுக்கும் பிறந்த பராக்கிரம பாகு என்ற அரசனே இக்காலக்கட்டத்தில் இலங்கையை ஆண்டதாகவும், சோழப் படைகளால் தோற்கடிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறது. வலங்கைமாலை குறிப்பிடும் கைவாரன் இவனாகவும் இருக்கக் கூடும். அவ்வாறு கொண்டால் இது நிகழ்ந்தது கி.பி. 1055—இல் எனலாம்.

வலங்கைமாலையின் இறுதிப் பகுதியில் (வரி.2960–3010) வேறொரு சரித்திரச் சம்பவமும் இடம் பெறுகிறது. பூம்புகாரில் வணிகர்களிடம் "எடுப்பு" எனப்படும் கட்டாய சுங்கம் வசூலித்த வலையர் குலத்தவன் ஒருவனைச் சரிசம எடையுள்ள இரு கூறாக வெட்டிக் கொன்று வலங்கை உய்யக்கொண்டார்கள் பெரும்புகழ் பெற்றனர் எனக் குறிப்பிடப்படுகிறது. கி.பி. 13—ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், "பாரரசர்கள் (பரராசர்கள்?) நாய(க)ன்" என்ற பட்டப்பெயர் சூட்டிக் கொண்ட ஒரு சிற்றரசன், தனது அரண்மனைக்குரிய வரியாக (கோயிற்றமர்ப் பேறாக)க் கடைகளில் எடுக்கும் கறிப்பாட்டத்தைத் திருவண்ணாமலைக் கோயிலுக்கு வழங்கியுள்ளான்.(116) இவன் கோப்பெருஞ்சிங்கனாகவே இருக்கக்கூடும் என்பதும், பூம்புகார்ப் பகுதியிலும் இவனது ஆதிக்கம் விரிவு படுத்தப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கன. இவனது பெயர் "அதிசூரன்" என வலங்கை மாலை குறிப்பிடினும் இவன் கோப்பெருஞ்சிங்கனாக இருக்கக்கூடும். கரையானைக் கௌதாரி வடிவமெடுத்துக் கொத்தித் தின்றதாக வலங்கைமாலையில் குறிப்பிடப்படுவதை முன்பே பார்த்தோம். போர்ப் பயிற்சி முறைகளில் ஆயுதமின்றி வெறுங்கை மற்றும் கால்களால் வெட்டியும் அடித்தும் போரிடும் "சைலாத்து" என்ற அங்கைப் போர் முறைகளிலும் சிரமம் அல்லது சிரம்பம் (சிலம்பம்) எனப்படும் கம்பு விளையாட்டிலும், வாட்போர் முறைகளிலும், இன்றைய கராத்தே, குங்பூ போலவே பல்வேறு மிருகங்கள் மற்றும் உயிரினங்களின் இயக்கப்பாணியைப் புகுத்திப் பல்வேறு வகையான போர் முறைகள் சான்றார் குலத்தவரால் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்தகைய ஒரு போர்

முறையே கரையார்களுக்கு எதிரான தாக்குதலில் வலங்கைச் சான்றார்களால் கடைப்பிடிக்கப்பட்ட கௌதாரிப்பாணித் தாக்குதல் முறையாக இருந்திருக்கவேண்டும். அதுபோன்றதே எதிரியைச் சரிசம எடையுள்ள இருகூறுகளாக வெட்டிய நிகழ்வுமாகும்.

வலங்கை மாலை நேரடியாகத் தொடாத ஒரு வரலாற்று நிகழ்வினை இச்சந்தர்ப்பத்தில் ஆராய்வது அவசியமெனத் தோன்றுகிறது. ஏனெனில் வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் சோழர் ஆட்சியின் இதயத்துடிப்பையே ஒரு குறுகிய கால அளவிலாயினும் இயக்கி வந்தது உண்மையாக இருப்பின் அவர்களுடைய ஆதிக்கம் சோழ மண்டலத்தில் குறைந்த பின்னர்ச் சோழர் ஆட்சியின் இதயத்துடிப்பு சிறுகச் சிறுகச் தொய்ந்து போய்க் காலப் போக்கில் முற்றிலும் நின்றிருக்க வேண்டும் என்பது தானே நாம் எதிர்பார்க்கக் கூடியது? வரலாற்று ஆய்வாளர்கள் இதுவரை இதற்கான சரியான விடையைக் கண்டறிய இயலவில்லை. ஆனால் விடைகாணும் முயற்சிகள் நடந்துள்ளன என்பதும் உண்மையே. அதாவது கி.பி. 1278—ஆம் ஆண்டிற்கு பின்னர்ச் சோழர் ஆட்சி எந்தத் தடயமும் இல்லாமல் மறைந்து போனதற்குக் காரணமாக இருந்த தமிழ்ச் சமூக இயக்கப் போக்குகள் எவை? தமிழகத்தின் வடதிசையில் பள்ளி குலத்தைச் சேர்ந்த காடவரையர், சம்புவரையர் போன்றவர்களும், மையப் பகுதியில் மறவர் குல அகம்படியர்களான வாணர்களும் எழுச்சி பெற்றுத் தன்னரசு அமைத்து விட்டனர். கன்னட ஹொய்சள மரபினர்களும் அவர்களது தண்ட நாயகர்களும் தமிழக அரசியலிலும், சமூகக் களத்திலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்கான உந்து சக்தியாகத் திகழ்ந்தனர். முதற்குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்திலேயே தோன்றிவிட்ட சில மரபுகள், வேளாளர் எழுச்சிக்கு வித்திட்டதோடு மட்டுமின்றிச் சோழர் அரசியலிலும் சோழ அரச குடும்ப உறவுகளிலும் வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர்க்கு எதிரான சக்திகள் ஊடுருவ இடமளித்துவிட்டன. இதன் விளைவாக வலங்கை உய்யக்கொண்டார்கள் சிறுகச் சிறுகச் சோழ அரச குடும்ப உறவுகளைத் துண்டித்துக் கொள்ளவும் தொடங்கியிருக்க

வேண்டும். கொங்குச் சோழர், தெலுங்குச் சோழர் போன்ற சிலருடன் மட்டுமே வலங்கை உய்யக்கொண்டார்கள், (எழுநூற்றுவர்) நெருங்கிய மண உறவு கொண்டிருந்திருக்க வேண்டும்.

முதற் குலோத்துங்கன், மரபை மீறிச் சோழ அரசனாக முடிசூடினான் என்ற உண்மையும் தனது செயலை நியாயப்படுத்துவதற்காகப் பல அரசியல் சதிராட்டங்களில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்ற ஊகமும் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆந்திர மாநிலத்தில் கிடைக்கும் ஆவணங்களை ஆராய்ந்தால் வெகுஜன இயக்கப்போக்குகளைத் தொடக்கிவைத்த முதல்வன் என்றே குலோத்துங்க சோழனைக் குறிப்பிட இயலும். இப்போக்கினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டவன் விக்கிரம சோழன் எனத் தெரிகிறது. இதற்கு இருவகையான ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. குலோத்துங்கனின் ஆட்சியில் வேளாண் குடிகளுக்கு நாட்டு வரி நீக்கப்பட்டமை போன்ற நிர்வாக நடவடிக்கைகள் குறித்த கல்வெட்டு ஆதாரங்கள் ஒரு வகை. நெல்லூர் மாவட்டம், வெங்கடகிரி வட்டம், தீர்த்தம்பாடு கொல்லிதிப்பா மலை —பைரவ கோனா— கி.பி. 1073 —ஆம் ஆண்டுக் கல்வெட்டில், "வெள்ளான் குடி ஒரு குடி இருக்கிலும் ஆயிரங் குடி இருக்கிலும் அவ்வூர் பயிர் செய்த வெள்ளாளரை நாட்டு வரி கொள்ளாதோமாக" என்ற ஆணை குறிப்பிடப்படுவது ஓர் எடுத்துக்காட்டாகும். "சித்திரமேழி ஆவணக் கணக்கன்" இந்த ஆவணத்தை வரைந்துள்ளான்.[117] இவ்வாறு வேளாண் குடிகளின் அமைப்பாகிய சித்திர மேழிப் பெரிய நாட்டுக்குச் சாதகமாகவும், அது ஆற்றல் வாய்ந்த அமைப்பாக உருவாகிற விதத்திலும் அமைந்த வரிச் சலுகைகள் குலோத்துங்க சோழனால் அளிக்கப்பட்டன. குலோத்துங்க சோழனின் இத்தகைய நடவடிக்கைகள் அவனுக்கு ஹொய்சள அரசர்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தன. குலோத்துங்கனுக்கு ஹொய்சள இளவரசி ஏழிசை வல்லபியின் பால் பிறந்த விக்கிரம சோழன், நிர்வாக ரீதியாக மட்டுமின்றி, அரசியல் ரீதியாகவும் இப்போக்கினைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். இது பற்றிக் கிடைக்கிற அரசியல்

தன்மையுடைய ஆதாரங்கள் இரண்டாம் வகைப்படும். இந்த இரண்டாம் வகை ஆதாரங்களை ஆராயும் முன்னர் முதல் வகை ஆதாரங்கள் மேலும் என்னென்ன கிடைக்கின்றன எனப் பார்ப்போம்.

கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப் பட்டணம் வட்டம், தொண்ணூர் எனப்படும் தொண்டனூர் கி.பி. 12 –ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹொய்சளர்களின் தலை நகராக இருந்தது. கி.பி.1110 முதல் 1150 வரை இவ்வூரிலிருந்து ஆட்சி செய்த ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் (பிட்டி தேவன்) இராமானுஜரை ஆதரித்தவனாவான்.[118] இவனது ஆட்சியிலும் வேளாண் குடிகள் க்ஷத்ரிய வர்ணத்தவரை விட உயர்வாகப் போற்றப்பட்டனர். இது இராமானுஜரின் ஆலோசனைப் படி நடைபெற்றிருக்கவும் வாய்ப்புண்டு. தொண்ணூரில் உள்ள கிருஷ்ணன் கோயில் கோபுரம் கி.பி. 12 –ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வீர வல்லாளன் ஆதரவுடன் சித்திர மேழிப் பெரிய நாட்டாரால் கட்டப்பெற்றதாகும். கொற்றக் குடையுடன் சித்திர மேழி உருவம் பொறிக்கப்பட்ட கல்தூண் ஒன்றும் இதற்கு அடையாளமாக நிறுவப்பட்டது. தொடக்கத்தில் கல்தச்சர்கள் வேளாண் குடிகளுக்குக் கட்டுப்பட்டுக் கோபுரம் கட்ட மறுத்துவிட்டதாகவும், வீர வல்லாளன் வேளாண் குடிகளைச் சிறப்பிக்கும் வகையில் கல்தச்சர்களைக் கொண்டு கொற்றக் குடையுடன் சித்திர மேழி(கலப்பை)யைக் கல்லில் பொறித்து நாட்டச் செய்தான் என்றும் கதை வழங்குகிறது.[119] கி.பி. 1180 அளவில், வீர வல்லாளன், மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குக் கட்டுப்பட்டு மைசூர்ப் பகுதியை ஆண்டு வந்தான். வீர வல்லாளனின் மனைவி சோழ இளவரசியாவாள். இக்காலக் கட்டத்தில் மூன்றாம் குலோத்துங்கன் சித்திர மேழிப் பெரிய நாட்டாருக்குச் சாதகமாகப் பல நடிவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, அவனது மெய்க்கீர்த்தியின் தொடக்க வாசகமான "புயல் வாய்த்து மண் வளர" என்பது சித்திர மேழிப் பெரிய நாட்டாரின் சாசனங்களில் அவனது காலத்துக்குப் பிறகும் தொடர்ந்து பொறிக்கப்பட்டு வந்தது.

முதற் குலோத்துங்கனின் அரசியல் நடவடிக்கைகள் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின என்பதற்குப் பல

ஆதாரங்கள் கிடைக்கின்றன. குலோத்துங்க சோழனுக்குச் சோழ இளவரசி மதுராந்தகியின் வயிற்றில் பிறந்த பராந்தக சோழன், விக்கிரம சோழனின் எழுச்சியால் பாதிக்கப்பட்டான். குலோத்துங்கனிடமிருந்து இலங்கையை மீட்ட விஜயபாகு கி.பி. 1114 —இல் இறந்தான். அப்போது பராந்தக சோழன் ஆந்திர மாநிலம் திராக்ஷாராமம் பகுதியிலிருந்து வேங்கிப் பகுதியை நிர்வகித்து வந்தான். கி.பி.1118 —இல் இலங்கையரசனின் படைத் தளபதியான "விஜயபாகு மாசாத்து நாயன்" என்ற பட்டப் பெயருடைய, உய்ய வந்தான் திருவண்ணாமலையனான சேதராயன், பராந்தகனுக்கு ஆதரவாக இருந்தான். அதாவது தெலுங்குச் சோழர்களும் இலங்கையிலிருந்த சோழர் குலப் படைவீரர்களும் பராந்தகனை ஆதரித்தனர். விக்ரம சோழனோ, ஹொய்சள அரசன் விஷ்ணு வர்த்தனன் ஆதரவுடன் சோழ அரசனாக முடிசூடியதோடு, கி.பி. 1121 — இல் தனது அண்ணன் பராந்தகன் மீது படையெடுத்துத் திராக்ஷாராமத்தை எரியூட்டினான். இப்போரில் பராந்தகன் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.[120] இதன் பின்னர் வேங்கி அரசு, சதுர்த்தான்வயர் அல்லது சூத்ர குலத்தவராகத் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்ட வெலநாண்டி யரசர்கள் வசம் வழங்கப்பட்டது. மட்டுமின்றி "சோடர்" என்ற பட்டமும் வெலநாண்டி யரசர்களுக்கு வழங்கப்பட்டது. கி.பி. 1186 —ஆம் ஆண்டைய பிட்டாபுரம் கல்வெட்டு இவ்வரலாற்றை எடுத்துரைக்கிறது.[121] இதே போன்று கி.பி. 1118 —க்குப் பின்னர்க் குண்டூர்ப் பகுதியை விக்கிரம சோழன் வசமிருந்து பெற்ற கொண்டபடுமடி சிற்றரசர்களும், அமராவதி சிற்றரசர்களுடன் மணவுறவு கொண்டு எழுச்சி பெற்ற காகதீய அரசர்களும் தம்மைச் சூத்திர குலத்தவர் என்றே பெருமிதத்துடன் கூறிக் கொள்கின்றனர்.[122] இதன் பின்னர் எழுச்சி பெற்ற கொண்ட வீடு ரெட்டியரசர்களும் சூத்திர வர்ண உரிமையையே கொண்டாடினர்.[123] இத்தகைய வேளாண் குடியினரின் எழுச்சி, திடுமென ஏற்பட்ட ஒன்றன்று; எனினும் க்ஷத்ரிய வர்ணத்தவருக்கு எதிரான இந்த எழுச்சி, க்ஷத்ரிய தர்மப் படி பூணூல் அணிந்து வேதம் பயின்றவனாகக் கலிங்கத்துப் பரணியில் (கண்ணி. 247) குறிப்பிடப்படும் முதற் குலோத்துங்க

சோழனின் ஆதரவில் தான் முழுமையான முனைப்பை எய்திற்று என்பது நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய ஒன்றாகும். இத்தகைய ஆதாரங்களுடன், கி.பி. 1121 –இல் பெரம்பலூர் வட்டம், ஆடுதுறையில் பள்ளி குலத்தவர் கோயில் மரியாதைகளைப் பெறத் தொடங்கிய வரலாற்றுப் பின்னணியையும் நாம் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.[124]

விக்கிரம சோழனின் மகள் வழிப் பேரனான (நெறியுடைப் பெருமாள் என்பவரின் மகனான) எதிரிலிப் பெருமாளை இராஜாதிராஜதேவர் என்ற பெயரில் முடிசூட்டி வைத்தவன் வேளாண் குலத்தவனான திருச்சிற்றம்பலமுடையான் பல்லவரையன் ஆவான். இக்காலக் கட்டத்திலிருந்து பெருமான் நம்பிப் பல்லவரையன் (கி.பி. 1147–70) போன்ற வேளாளர் குலத்தவர், சோழ அரச குடும்பத்துடன் நெருங்கிய உறவு கொள்ளத் தொடங்கினர்.[125] இரண்டாம் இராஜராஜ சோழனின் ஆட்சி இறுதிக் கட்டத்தை எட்டும்போது பெருமான் நம்பிப் பல்லவரையனை மையமாக வைத்தே சோழர் ஆட்சிச் சக்கரம் சுழன்றது. இக்காலக் கட்டத்தில் நிகழ்ந்த பாண்டிய வாரிசுரிமைப் போரின் விளைவாக இலங்கையர்க்கும் பாண்டியர்களுக்கும் நெருக்கமான உறவு ஏற்பட்டது. அதே நேரத்தில் சோழ நாட்டு அரசியலிலும் சமூக அமைப்பிலும் அரச குலத்தவர்க்கு எதிரான சக்திகள் ஆதிக்கம் பெற்றன. பெருமான் நம்பிப் பல்லவரையனால் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையில் அரசனாக்கப்பட்ட இரண்டாம் இராஜாதிராஜன், (கி.பி.1163–1178) இராஜ குலவரின் காணிப்பற்று நிலங்களை அவர்களிடமிருந்து பறிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டான். சான்றாகப் பழுவூர்ப் பற்று நிலங்கள் இராஜ குலவரிடமிருந்து விடுவிக்கப்பட்டன.[126] இவை கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் அஞ்சு நாட்டார் என்றும் திரணி நாட்டார் என்றும் அழைக்கப்பட்ட சுருதிமான்கள் வசம் இருந்தன என்பதற்கு ஆதாரம்[127] இருப்பதால், இந்நிலங்கள் வேளாண்மை சார்ந்த போர்க்குடிகளுக்குக் கி.பி. 12 –ஆம் நூற்றாண்டிலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. கும்பகோணத்துக்கு அருகேயுள்ள திரைலோக்கியில் பொறிக்கப்பட்டுள்ள இரண்டாம் இராஜராஜனின் கல்வெட்டு[128] ஒன்று (கி.பி.1150–1161).

"இராஜகுலவர் காணிப்பற்று, ஜீவிதம், பரிக்ரகம் (போர்ப் பயிற்சி அவை), மாண் ஊர்கள் எனப்பட்ட (அரச குல மாணாக்கர்க்கு வழங்கப்பட்டிருந்த?) இடங்கள், அரச குலத்தவர் உடுக்கும் கூறை உள்ளிட்டு நெய்யும் நகரங்கள்" ஆகியவற்றின் அனுபோக உரிமையில் இராஜ குலவர்க்கு எதிரான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கிறது. கி.பி.13—ஆம் நூற்றாண்டைய திரைலோக்கிக் கல்வெட்டுகளில் சித்திரமேழிப் பெரியநாட்டார் ஆதிக்கம் இப்பகுதியில் ஏற்பட்டுவிட்டதற்கான தடயங்கள் உள்ளன.(129) க்ஷத்ரிய வர்ணத்தவர்க்கு எதிரான சூழல் உருவாகி வளர்ந்துவிட்டது என்பதையே இவை உணர்த்துகின்றன. இறுதியாக, மூன்றாம் குலோத்துங்க சோழனின் மகளைப் பள்ளி குலக் கோப்பெருஞ்சிங்கன் மணமுடிக்கவும், குலோத்துங்கனின் மகனான மூன்றாம் ராஜராஜன் வாணர்குல நிலை விளக்கு புவனமுழுதுடையாளைப் பட்டத்தரசியாகக் கொள்ளவும் நேர்ந்த செயல்கள் நிலைமையின் தீவிரத்தை அதிகரித்தன. கி.பி. 1222—ஆம் ஆண்டைச் சேர்ந்த திருவண்ணாமலைக் கல்வெட்டில் சித்தாந்த சைவத்தின் முதல் சந்தானக் குரவரான மெய்கண்டார் குறிப்பிடப்படுகிறார். வேளாளர் சமூகத் தபஸ்விகள் சைவத்தின் தலைமக்களாகவும் ராஜ குருக்களாகவும் அங்கீகரிக்கப்படும் மரபு தொடங்கி விட்டதையே இது காட்டுகிறது. அருண சமுத்திரம் என்ற பெயரில் திருவண்ணாமலையைத் தமது இரண்டாவது ராஜதானியாகக் கொண்டு செயல்படத் தொடங்கிய ஹொய்சளர்களுக்குச் சமய அரங்கில் ஜனநாயக நெறிமுறைகளை அறிமுகப்படுத்திய பெருமை உண்டு. அதாவது கி.பி. 12—ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ நாட்டில் சாதி வேறுபாடுகளைப் பெருமளவுக்குக் களைய முற்பட்டுப் பெரும் எதிர்ப்பையும் அரச தண்டனையையும் எதிர்கொண்ட வைணவக் குரவர் ராமானுஜர் புகலிடம் தேடி ஓடி வந்தபோது, அவரை அரவணைத்துக் காத்ததோடு அவரது தாசனாகவும் நடந்து கொண்டவன் ஹொய்சள விஷ்ணு வர்த்தனன் என்கிற பிட்டி தேவனே(கி.பி. 1115—1150). இதுமட்டுமின்றி, சைவ சமயத்திலும் சாதி ஏற்றத்

தாழ்வுகளைச் சமன்படுத்திய பசவேஸ்வரரின் நெறியைப் பெருமளவில் ஏற்றுச் செயல்பட்டவர்கள் ஹொய்சள மன்னர்களாவர்.[130] கி.பி. 1344–ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளிச் சீமையில் அமைந்துள்ள கண்ணனூர் (சமயபுர)ப் பகுதியில் ஹொய்சள வீரவல்லாளரின் ஆட்சி நடைபெற்றது. இதற்குச் சமகாலத்தில் மாகத சோழர் என அழைத்துக் கொண்ட வாணாதிராயர்கள் விருத்தாசலம், சேலம், ஆறகழூர் பகுதிகளில் அதிகாரம் செலுத்தி வந்தனர். சம்புவரையர்களோ வட ஆர்க்காடு திருவண்ணாமலை முதலிய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். மதுரையில் இஸ்லாமியர் ஆட்சி நடைபெற்று வந்தது. இஸ்லாமியரின் கப்பற்படை வலிமை வாய்ந்ததாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்று தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் அமைந்துள்ள சில கல்லறைக் கல்வெட்டுகள் கொண்டு ஊகித்து அறிய முடிகிறது.[131] இவற்றுள் சில கல்லறைக் கல்வெட்டுகளில் கொற்றக்குடைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்லறைக் கல்வெட்டுகளை ஆராய்ந்ததில் உத்தேசமாகக் கி.பி. 1340–ஆம் ஆண்டிலிருந்து இஸ்லாமிய மதமாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று உணரத்தக்க வகையில் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவரின் முன்னோர் பெயர்ப் பட்டியல் அமைந்துள்ளது. இவர்கள் மதுரை சுல்தான்களின் கடற்படைத் தலைவர்களான தமிழ் மற்றும் மலையாள முஸ்லீம்களே என உணர முடிகிறது. இத்தகைய ஒரு அரசியல் பின்னணியில் பார்க்கும் போது கி.பி.12–13–ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியா முழுமையுமே இஸ்லாமிய ஊழி வெள்ளத்தில் சிக்கித் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் தென்னிந்தியாவிலும் இந்த வெள்ளம் பரவிடாமல் தடுக்கின்ற பிரயத்தனத்தில் இஸ்லாமிய எதிர்ப்பு அணியாக உருவான ஒரு ஜனநாயகக் கூட்டணியே சம்புவரையர், வாணர் மற்றும் ஹொய்சளர் கூட்டணியாகும் என்பதிலும் வேளாளர்களின் சமூக மற்றும் சமயத் தலைமையை இக்கூட்டணி ஏற்றிருக்க வேண்டுமென்பதிலும் ஐயமில்லை. வலை வீசிய திருவிளையாடல் நிகழ்த்திய போது சிவனுக்குப் படகு செய்து கொடுத்தவர்கள் என்று பெருமிதத்துடன்

குறிப்பிட்டுக் கொள்ளும் சிவன்படகர் (செம்படவர்) சமூகத்தவர் முதன்மையான ஒரு சிவஸ்தலமாகிய திருவண்ணாமலையில் அடிமுடிகாண இயலாத அனற்பிழம்பைக் குறிக்கும் வகையில் கார்த்திகை தீபம் ஏற்றுகின்ற சமய மரியாதையை இன்றுவரை அனுபவித்து வருகின்றனர். நாட்டார் என்ற சாதிப்பட்டம் இவர்களுக்குரியதாக இப்பகுதியில் நிலவுகிறது. இது ஹொய்சளர் தமது ஸ்திர ராஜதானியாகத் திருவண்ணாமலையைக் கொண்டு செயல்படத் தொடங்கிய காலக்கட்டத்தில், அதாவது கி.பி. 13–14–ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மரபாக இருக்க வேண்டும். இத்திருத்தலத்து இறைவன், ஹொய்சள வீரவல்லாளனைத் தனது தகப்பனாக மதித்து, மாசி மகத்தன்று அவனுக்குப் பிதிர்க் கடன் செய்வதாக ஒரு மரபு இருப்பது குறிப்பிடத்தக்கது. இது ஓர் அசாதாரணமான வழக்கமாகும். ஹொய்சள அரசர்கள் மக்கள் நாயகர்களாகக் கருதிப் போற்றப்பட்டனர் என்ற பிரத்யட்ச நிலையையே இது உணர்த்துகிறது.

ஹொய்சளர்களின் மற்றொரு ராஜதானியாகிய கண்ணனூர் (சமயபுரம்) பகுதியில் சித்திர மேழிப் பெரிய நாட்டார் எனப்படும் வேளாளகுலக் கூட்டமைப்பின் செல்வாக்கு விரிவடைந்து வந்தது என்பதற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.[132] சோழர்களின் பூர்விகத் தலைநகரமான உறையூர் (திருச்சிராப்பள்ளி)ப் பகுதியிலும் சித்திர மேழிப் பெரிய நாட்டாரின் ஆதிக்கத்தில்தான் அனைத்துச் சமூக மக்களும் வாழ்ந்தனர் என்று அறிகிறோம்.[133] இவ்வாறு வேளாளரின் சமூக மற்றும் சமயத் தலைமையில் அன்றைய தமிழ்ச் சமூகத்தின் பெரும்பகுதி செயல்படத் துவங்கிவிட்ட சூழலில் தமிழக அரசகுலப் பாரம்பரியத்துடன் தம்மை அடையாளம் காட்டிக் கொண்ட வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினரின் குரல் ஓங்கி ஒலிக்காமல் போனதில் வியப்பொன்றுமில்லை. கி.பி.13–ஆம் நூற்றாண்டிலேயே சோழ அரசுக்கு எதிராகக் குறுநிலத் தலைவர்கள் கூட்டணியமைத்து ஆதிக்கம் பெற்றமை பற்றியும் இடங்கைச் சாதிகள் தம்முள் இறுக்கமான நட்புறவை ஏற்படுத்திக்கொண்டமை பற்றியும் அறிஞர்கள் ஆய்வு

செய்துள்ளனர். ஆயினும் இந்த நிகழ்வுப் போக்கின் சமூகப் பரிமாணங்களையும் அவற்றின் அரசியல் தாக்கங்களையும் பற்றி ஆழமாக ஆராயவில்லை.[112]

இதனை ஆழமாக ஆராய்ந்தால் சோழ அரச குலத்தின் ஒரு பெரும் பகுதியே தனது அரச குல அடையாளங்களை முற்றிலும் விட்டொழித்து வேளாண் சாமந்தர் குலமாகத் தன்னை அடையாளம் காட்டியிருக்கலாம் என்ற முடிவிற்கே நாம் வரவேண்டியுள்ளது. சான்றாகச் சோழ அரசியலில் முக்கியப் பங்கு வகித்தவர்களும், திருவாய்க் கேள்வி என்ற பதவிப் பெயரின் வடமொழி ஆக்கமாகக் கருதப்படும் சுருதிமான் என்ற பெயரைத் தமது குலப்பெயராகக் கொண்டவர்களுமான பார்கவகுல க்ஷத்திரியர் (மூப்பனார்) மலையமக்கள் மற்றும் நத்தமக்கள் ஆகிய சாதியினரையும் தம்முடன் இணைத்துக் கொண்டு சித்திரமேழித் தலைவர் என்றும் பூமி புத்திரர் (மண்மகள் புதல்வரான வேளாளர்) என்றும் தம்மை அறிவித்துக் கொண்டதையும், இடங்கைச் சாதிகளின் கூட்டணியில் இணைந்ததையும் கி.பி. 13–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் காண்கின்றோம்.[135] மலையமக்கள் எனப்படுவோர், முதல் இராஜராஜனின் தாய் வானவன் மாதேவி பிறந்த மலையர் குலத்தவராவர். நத்தம் என்ற சொல்லுக்கு, சிறைப்பிடிக்கப்பட்ட உயர்குடிப் பெண்டிர் வாழ்விடம்–அதாவது, வேளம் என்ற பொருளுமுண்டு.[136] பள்ளி குலத்தைச் சேர்ந்த கோப்பெருஞ்சிங்கனின் பாட்டன் "அசல (மலைய) குல உத்தமன்" என்றும் கோப்பெருஞ்சிங்கன் "காராள வல்லபன்" என்றும் பட்டம் புனைந்து கொள்ளுவதையும் காண்கிறோம்.[137] இதே காலக்கட்டத்தில் புதுக்கோட்டைப் பகுதியில் சேமப்பிள்ளை என்று அழைக்கப்பட்ட அந்தஸ்தும், அதிகாரமும் மிக்க ஒருவர் நிர்வாகம் செலுத்தி வந்துள்ளார். இவரைச் சோழர் குலத்தவர் என்றே சில அறிஞர்கள் கருதியுள்ளனர். ஆனால் இவர் காரைக்காட்டு வேளாளர் இனத்தவராக இருக்கலாம் என்பது எனது கருத்தாகும். கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவந்தெழுந்த பல்லவராயனின் முன்னோர்களுள், சேமன் ஆய்ப்பாடிப்

பல்லவராயன் என்பவன் ஒருவன் எனத் தெரிகிறது.[138] சிவந்தெழுந்த பல்லவராயன் காரைக்காட்டு வேளாள மரபினன் ஆவான். இவனைக் கி.பி. 12—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழ அரசன் இரண்டாம் ராஜராஜனின் தளபதி பெருமான் நம்பிப் பல்லவராயனின் வம்சத்தவனாகச் "சிவந்தெழுந்த பல்லவராயன் உலா" நூல் குறிப்பிடுகிறது. மேற்குறித்த உலா நூலில் அதன் ஆசிரியர் மல்லைச் சிற்றம்பலக் கவிராயர், சிவந்தெழுந்த பல்லவராயனை "வழுதி மகன்" என்றும் "சோழன் மகன்" என்றும் சோழரின் புலிக் கொடியும் மேழி(கலப்பை)க் கொடியும் இவனுக்குரியன என்றும் குறிப்பிடுகிறார்.[139] மல்லைச் சிற்றம்பலக் கவிராயர், சோழ அரச குலத்தாரின் சிறுகுடியாராகிய சோழிய வேளாளர் குலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.[140] அரச குலத்தவர்க்கு மகட்கொடை நேர்ந்து உறவு கொண்டாலும் அவ்வுறவில் தோன்றும் வாரிசுகளுக்கு அரச குல அந்தஸ்து வழங்கப்படாமல் வேளாளர் குல அந்தஸ்தே சோழர்களால் வழங்கப்பட்டது என்பதையும் நிலைமை இவ்வாறு இருப்பினும், தமது அரச குலத் தொடர்பைச் சுட்டிக் காட்டிக் கொள்வதில் சிவந்தெழுந்த பல்லவராயன் மரபினர் பெருமிதம் கொண்டனர் என்பதையுமே இக்குறிப்பு உணர்த்துகிறது.

கி.பி. 14—15—ஆம் நூற்றாண்டுகளில் வலங்கை உய்யக் கொண்டார்கள் பாண்டிய அரச குலத்துடன் நெருங்கிய உறவு கொண்டும், வணிகக் குழுவினர்க்குப் பாதுகாப்பாகச் செயல்பட்டும், தமது நிலையை ஓரளவு காத்துக்கொண்டனர். ஆயினும், தமிழக அரசியலில் அவர்களை ஓரம்கட்டும் முயற்சி வலுப்பட்டுவிட்டது என்றே தெரிகிறது. கி.பி. 14—ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் காலத்து ஸ்ரீமுஷ்ணம் (தென்னார்க்காடு மாவட்டம்) கல்வெட்டு ஒன்று, "செழுமணி முடி சூடியருளுங் கோமான் சீயாக்கினையே தெய்வமாக அடங்கலரை முன்னழைத்து இடங்கைச் சமயம் இனிது நடாத்துகிற கைக்கோளர் வாழ்க" எனக் குறிப்பிடுகிறது.[141] கி.பி. 15—ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், விஜயநகர அரசர் இரண்டாம் தேவராயரின் பிரதானியும், ஹொய்சள அரச வம்சத்தவர் என்று கருதப்படுபவரும் ஆன லக்கண தண்ட

நாயகர்[142] தமிழகத்தில் எழுச்சி பெற்றுவிட்ட ஜனநாயகப் போக்கினை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகவோ ஹொய்சளர்கள் துவக்கி வைத்த பணியினை நிறைவு செய்யும் வகையிலோ, ஏதோ ஒருவகையில் வாணாதிராயர்களை மதுரை அரசராக முடிசூட்டிவைத்தார். சற்றொப்ப இதற்குச் சமகாலத்தில் பள்ளி குலத்தவரான சம்புவராயர்கள் வடதமிழகத்தின் ஆட்சியாளர்களாக விஜயநகரப் பேரரசால் அங்கீகரிக்கப்பட்டனர். எவ்வாறு வாணர்கள் விஜயநகர அரசர்களுள் பெரும்பாலானோரின் சம்பிரதாயத்தையொட்டித் தம்மையும் வைணவ சமயத்தில் இணைத்துக் கொண்டார்களோ அது போன்றே பள்ளி குலத்தவர்களும் வைணவ சமய ஆச்சாரங்களை ஏற்றனர். இராமானுஜரை ஆதரித்த ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் (பிட்டி தேவன்) தொடங்கிவைத்த ஜனநாயக எழுச்சி இக்காலக்கட்டத்தில் முழுமையடைந்தது எனத்தோன்றுகிறது.

இந்த ஆய்வுக் கட்டுரையில் வலங்கை மாலையில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுப் போக்கு ஓரளவிற்குக் கால முரண்பாடு இல்லாத வகையில் தொடர்பு படுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பிற்காலச் சோழர் ஆட்சி குறித்த சில சிக்கல்கள் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.[143]

அடிக்குறிப்புகள்

1. "பத்ரகாளியம்மன் கதை" சண்முகா வெளியீடு, 7/144 என்.ஜி.ஓ.காலனி, நாகமலை, மதுரை

2. அடையாறு பிரம்ம ஞான சபை நூலகச் சுவடி, 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சான்றார் சமூகத்தவர் தாம் க்ஷத்ரிய வர்ணத்தவர் என்பதை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றங்கள் உட்படப் பல தளங்களில் முயற்சி மேற்கொண்டிருந்த காலகட்டடத்தில், தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு அனுப்பப்பட்டு இங்கு சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. இதனைத் தற்போது உறுதிப்படுத்த இயலவில்லை. இச்சுவடி இங்கிருப்பதைக் கண்டறிந்தவர் முனைவர் ஆ. தசரதன் ஆவார். சுவடி படிப்பதில் இவருக்கு உதவி புரிந்தவர் திரு. பூமிநாகநாதன்

ஆவார். முனைவர் ஆ. தசரதனால் வலங்கைமாலை பதிப்புக்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.

3. "வெங்கலராசா கதை" வில்லுப்பாட்டு –பதிப்பு: குமரி மாவட்டம், அகத்தீஸ்வரம், ஆறுமுகப் பெருமாள் நாடார், 1979.

4. Annual Report on Epigraphy -548/1904

5. "வீரநாராயண விஜயம்" –பதிப்பு: ந.கந்தசாமி, கமலம் பதிப்பகம், இராசிபுரம் 637408 ஆண்டு 1986. வீரநாராயணன் என்பது முதற்பராந்தக சோழனின் பெயராகும். இவனால் தெரிந்தெடுக்கப்பட்ட கைக்கோளப் படைகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. (South Indian Inscriptions. Vol.XIII No.45, Vol.XIX No.166)

6. Travancore Archaeological Series, Vol. I, p.384 – "பூண் நித்திலத்துப் புயவீரமாறன் புகல் கவி" என்ற தனிப்பாடல் குறிப்பால் இம்மன்னனே பெருங்கவிஞன் எனத் தெரிகிறது.

7. "நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்" –ராமலிங்க குருக்கள், வி.ஏ.குமரய்யா நாடார், 1937.

8. "வரலாறு" – இதழ்–9,10–பக்.5–10 டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை, திருச்சி–17

9. "செந்தமிழ்ப் புலவோர் தொழுந் தென்னவன் மானை வந்த செண்பகராமன்" –பா.749 பதிப்பு: எஸ்.கே.இராமராஜன், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை–90, 1985.

10. "சின்னணைஞ்சான் கதை", –பதிப்பு: ஆர். நிர்மலா தேவி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை–113, ஆண்டு 1998.

11. S.I.I. Vol.XXII Part.II, 430

12. கங்கை கொண்ட சோழன் என்பது முதல் இராஜேந்திர சோழனுக்குரிய பட்டப் பெயரேயாயினும், இராஜேந்திர சோழனின் தமையன் ஒருவனுக்கு அப்பெயர் இருந்ததாகவும், இந்த கங்கை கொண்ட சோழனுக்குச் சேர, பாண்டிய நாடுகளை நிர்வகிக்கும் அதிகாரம்

வழங்கப்பட்டதாகவும் முதல் இராஜாதிராஜன் மற்றும் இரண்டாம் இராஜேந்திரனின் மெய்க்கீர்த்திகளால் தெரிய வருகின்றன. இந்த கங்கை கொண்ட சோழனின் மகனான ஆளவந்தான் என்பவன் கி.பி. 1050 ஆம் ஆண்டிலிருந்து விக்ரம சோழ பாண்டியன் என்ற பட்டப் பெயரில் பாண்டி நாட்டையும் சேர நாட்டின் எல்லைப் பகுதிகளையும் நிர்வகித்து வந்தான் என்பது கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. –(pp.52-54. "The Cholas" -N.Sethuraman, Kumbakonam, 1977)– முதற் குலோத்துங்கன், மரபை மீறிச் சோழ அரசாட்சியைக் கைப்பற்றிய பின்னரும் விக்ரம சோழ பாண்டியனின் சுயாட்சி நீடித்தது. அக்காலகட்டத்திலிருந்தே, பாண்டிய அரச குலத்தாருடன் இச் சோழ பாண்டியர்கள் மண உறவு கொள்ளவும், அரசியல் உறவு கொள்ளவும் தொடங்கியிருக்கலாம்.

13. கி.பி. 1561--ஆம் ஆண்டில், மதுரை அரசர் கிருஷ்ணப்ப நாயக்கர், மானூர்ப் பகுதியிலிருந்த பற்று நிலங்களைத் திருநெல்வேலி சிவன் கோயிலுக்கும் நெல்லை சிந்து பூந்துறையில் தமது தகப்பனார் விஸ்வநாத நாயக்கர் பெயரில் தாம் எடுப்பித்த விஸ்வநாதீஸ்வரம் கோயிலுக்கும் தானமாக வழங்கினார். (S.I.I. Vol. V-No.410) பற்று நிலங்கள் என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுபவை பூர்விக அரச குலத்தார்க்குரிய நிலங்களே என்பதில் ஐயமில்லை.

14. தாருகாபுரம் செப்பேடு—பதிப்பிக்கப்படாத கட்டுரை:— சொ.சந்திரவாணன், காப்பாட்சியர்—குற்றாலம் அகழ்வைப்பகம், தொல்லியல் துறை, த—நா. மேலும் பார்க்க: நடுவக்குறிச்சி பாளையப்பட்டு வம்சாவளி, ஊத்துமலை பாளையப்பட்டு வம்சாவளி, (பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3).

15. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 4 —பதிப்பு: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 1981 ராமவர்மா, வன்னிய மறவர்களுக்குத் தென்காசி

மூப்புக்கூறு வழங்கியதாக இக்கைபீது குறிப்பிடுகிறது. திருவிதாங்கூர் அரசன் வென்று மண் கொண்ட பூதலவீர ராமவர்மனை (கி.பி. 1545) இது குறிக்கக்கூடும். தென்காசி, திருநெல்வேலிப் பகுதிகளில் இம் மன்னனின் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

16. p.48, p.67 Virudhunagar an Archaeological Source book by, V. Vedhachalam, Madhuca Krishnan, & G.Sethuraman, Sivakasi. 2000.

17. முதல் இராஜாதிராஜனின் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் பசினி கொண்டா கல்வெட்டு, கி.பி. 1050 (A.R.E.342/1912) : "ஐந்நூற்றுவர் பெருநிரவி சமையமும் இச் சமயத்து திருவடிக்குப் பணி செய்யும் கொங்கவாளரும் பன்மையும்", இக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். "வலங்கை———" என்ற தொடரும் இக் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. (Appendix 2, Inscription No.7, Ancient and medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic sherds, Edited by: Noboru Karashima, Taisho University, Tokyo, Japan, 2002) இக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் "பன்மை" என்ற சொல் பன்மர் அல்லது வர்மா எனப்படும் க்ஷத்ரிய வர்ணப் பட்டப் பெயரின் திரிபாகும். பணஜிக சமய தர்மத்துக்குப் பணிந்து இவர்கள் பணிபுரியினும், இவர்கள் குடிகாவல் மரபினர் என்பதும், நாட்டாட்சியின் ஓர் அங்கமே வணிகப் பாதுகாப்பு என்பதால் சோழ அரசனால் இப்பணிக்கு இவர்கள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதும் நாம் புரிந்துகொள்ளக் கூடியவையே.

18. பெருங்குளம் கல்வெட்டுகள், A.R.E. 229, 231, 232, 241, 243/ 1933.

19. கள ஆய்வில் கண்டறியப்பட்டது. இக்கோயிலின் மூலஸ்தானத்திலுள்ள பத்ரகாளி சிற்பம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பெருங்குளம் திருவழுதீஸ்வரர் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் இத்தெய்வம் குறிப்பிடப்படுகிறது.

(A.R.E.236/1932-33 - கல்வெட்டு நேரில் படிக்கப்பட்டது) இக்காளி கோயிலின் முன் மண்டபத்தில் இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த சப்தமாதர் சிறபத் தொகுதியும் உள்ளது.

20. "ஆயுத பூசை" பின்னிணைப்பு – 2 பார்க்க

21. பெருங்குளம் திருவழுதீஸ்வரர் கோயிலின் 11–12–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் வலங்கை மகாசேனையைச் சேர்ந்த எட்டி ஆனந்தன் என்பவர் பெயர் குறிப்பிடப்படுகிறது. எட்டி என்ற சொல் "ஸ்ரேஷ்டி"(செட்டி) என்ற சொல்லின் திரிபே. செல்வன் அல்லது திருவுடையவன் என்பது இதன் பொருளாகும். வலங்கை மாலை வில்லுப்பாட்டை இயற்றிய ஸ்ரீ ராசராச சுந்தரம், "செட்டி ஆனந்தன் திருவடிபெற்ற சீடன்" எனக் குறிப்பிடப்படுகிறார். (வரி 182) எட்டி பட்டம் பெற்ற ஆனந்தன் என்பவர் போர்க்கலை ஆசானாக அல்லது பணிக்கராகவே இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட எட்டி ஆனந்தன் பரம்பரையில் வந்த, கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு குருநாதரே செட்டி ஆனந்தன் என நாம் புரிந்து கொள்ளலாம்.

"விருது கட்டி அங்கம் வெட்டி" வென்ற பணிக்கர்களின் குடியேற்றம் என்ற பொருளிலேயே "விருதுகள் வெட்டி" என்று விருதுபட்டி பெயர் பெற்றது. இது நிகழ்ந்தது கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் எனக் கருதப்படுகிறது.

22. "நற்குடி வேளாளர் வரலாறு"– சிவகளை சுப்பையா பிள்ளை

23. Rise and fall of the Poligar of Tamil Nadu -Dr. K. Rajayyan, Madras University கி.பி.17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொற்கையைச் சேதுபதி மன்னரின் படையினர் தீயிட்டுக் கொளுத்தினர். இந்நிகழ்ச்சியின் போது இறந்த ஒரு மறவர் படைத்தலைவன் நினைவாகக் கொற்கைக் குளத்தின் ஒரு பகுதியில் "கொக்கு சுட்டான் சாமி" ("கொற்கை சுட்டான்" என்பதன் மருஉ) என்ற பெயரில் சேதுபதி

மன்னர்களின் சாதிப் பிரிவைச் சேர்ந்த செம்பி நாட்டுச் சிறுதாலி கட்டி மறவர்களால் வழிபடப்படும் ஒரு தெய்வம் உண்டு. (நாசரேத், ஆறுமுகனேரிப் பகுதியைச் சேர்ந்த செம்பி நாட்டுச் சிறுதாலிகட்டி மறவர்கள் அண்மைக் காலம் வரை ஆண்டுக்கொருமுறை வழிபட்டு வந்தனர். தற்போது அவ்வழக்கு நின்றுவிட்டது.) இந்நிகழ்ச்சி, வலங்கை உய்யக்கொண்டார்கள் மற்றும் பாண்டிய அரச குலத்தவர்க்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரின் போது நிகழ்ந்ததாகலாம். இதன் பின்னரே கொற்கை, தூத்துக்குடிப் பகுதி முத்துக் குளிப்பு உரிமை திருமலை மன்னரால் சேதுபதிக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

24. திருக்குறுங்குடிப் பெருமாளே குலசேகர ஆழ்வாராகப் பிறந்து ராசை மூதூரில் (மன்னார்கோயிலில்) வீற்றிருந்தார் எனச் "சீவலமாறன் கதை" (பா.184) குறிப்பிடுகிறது. மன்னார்கோயில், சேர அரசன் ராஜசிம்மனால் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் கற்றளியாகக் கட்டப்பட்டது. இக்கோயிலில் குலசேகர ஆழ்வார்க்குத் தனிச் சன்னிதி உள்ளது.

25. Rise and fall of the Poligar of Tamil Nadu -Dr. K. Rajayyan, Madras University

26. A.R.E. 325/1916

27. A.R.E.297/1916 கல்வெட்டின் வாசகங்கள், நெல்லை நெடுமாறன் அவர்கள் உதவியுடன் நேரில் படிக்கப்பட்டன. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட நாள், புரட்டாசி மாத உத்தர நட்சத்திர நாளாகும். இந்நாளே, மகாநவமியின் கால்கோள் நாளாகக் கருதப்படும் புரட்டாசி மாத அமாவாசையாகும்.இந்தப் பொருத்தமும் நம் கவனத்தை ஈர்க்கிறது.

28. Travancore State Manual -R.Nagamayya, Vol.II, p.393 and chapter VI p.221, Year-1906

29. "சான்றோர் சமூக வரலாறு" பின்னிணைப்பு 1 பார்க்க

30. புதுச்சேரிப் பகுதியில் கி.பி. 1785 வரை வலங்கைப் பிரபுக்களே சமூகத்தின் தலைமைப் பதவிகளை வகித்து வந்தனரென்பதும், இடங்கைச் செட்டிகளின் தீவிர முயற்சியாலும் பொருட்செலவாலும் இந்நிலை மாற்றப்பட்ட தென்பதும் "இரண்டாம் வீரா நாய்க்கர் நாட்குறிப்"பால் (பக்.122) புலனாகும். (பதிப்பு: ஓர்சே. மா. கோபால கிருஷ்ணன், நற்றமிழ்ப் பதிப்பகம் சென்னை—8, 1992) இதனையொத்த விவரங்களுக்குப் பார்க்க: செங்குந்தர் வெற்றிப்பட்டயம் பக். 208—212, கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் —செ.இராசு கி.பி. 19—ஆம் நூற்றாண்டில், பிராமணர், வேளாளர் ஆகிய சாதியினர் மத்திய சாதியினர் என்றும், பிற சாதியினர் அனைவரும் இவர்களுக்குக் கீழ்ப்பட்ட தொழில் சாதியினர் என்றும், இத்தொழில் சாதியினரே வலங்கை—இடங்கைச் சாதியினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர் என்றும் வரலாற்றுக்கு முரணான சித்திரம் ஒன்று உருவாயிற்று.

31. S.I.I. Vol.VII No.1004; A.R.E.374/1916 "பள்ளி" என்ற சாதிப்பெயர் இழிவானதாகக் கருதப்படுகிறது. ஆயினும் இப்பெயரே இக்கட்டுரையில் பயன்படுத்தப்படக் காரணம், வன்னியர் என்ற பெயர், மறவர் குல உட்பிரிவொன்றின் பெயராகவே கி.பி.16 ஆம் நூற்றாண்டுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற வரலாற்று உண்மையாகும். பள்ளி குலச் சம்புவரையர்களும், காடவர் குலக் கோப்பெருஞ்சிங்கனும் தம்மை வன்னிய குலாந்தகன், வன்னியர் மணாளன் (வன்னியர்களின் எதிரி) என்றே தெளிவாகக் குறிப்பிட்டுக் கொண்டுள்ளனர். முற்கால வன்னியர்கள், அகம்படியர், சுருதிமான் (மூப்பனார்), குலத்தவருடன் கலந்திருக்கக்கூடும்.

32. தென் பொன்பரப்பிக் கல்வெட்டுகள் —வெ.இரா. துரைசாமி, நாமகிரிப் பேட்டை. "ஆவணம்" இதழ்—4 ஜனவரி 1994, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சை; திருவண்ணாமலைக் கல்வெட்டு —S.I.I. Vol.VIII, No.79.

33. p.170, Madurai through the Ages, Dr. D. Devakunjari, Society for Archeaological, Historical and Epigraphical Research, Madras 600018. -1979.

34. "வலங்கைத் தளம்" –கி.பி. 1200–ஆம் ஆண்டுக் கல்வெட்டு Epigraphia Carnatica IX An. 67 "இடங்கை மகாசேனை" – கி.பி. 1100–ஆம் ஆண்டுக் கல்வெட்டு –Ep.Carnatica IX Cp. 117.

35. Travancore Archeaological Series, Vol.I, p.247

36. "இவ்வூர் இருக்கும் வெள்ளாளன் ஸ்ரீராஜராஜ தேவர் படை ஜனநாதத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காறரில் வண்ணக்கன் ஐய்யாறனாகிய சித்திர(மே)ளி"–கி.பி. 1007 – மேல்சேவூர், செஞ்சி வட்டம்.S.I.I. Vol.XVII, No.238 – வேளக்காரப் படையென்பதே வேளம் எனப்பட்ட, சிறைப் பிடிக்கப்பட்ட உயர்குடிப் பெண்டிரின் பிள்ளைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

37. "வலங்கைப் பழம்படைகளிலார்" –கி.பி. 1014 –முதல் இராஜராஜனின் தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டு (S.I.I. Vol. II, No.35)

38. பக்.17, "திருக்குறள் உரைக்கொத்து" , பொருட்பால், – பதிப்பு: தி.பட்டுச்சாமி ஓதுவார், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1960, மேலும் ஒப்பு நோக்குதற்குப் பார்க்க– "நவநீதப் பாட்டியல்" நூற்பா, 58க்கான பழைய உரை (பக்.51 நவநீதப்பாட்டியல் மூலமும் உரையும்– உ.வே.சா. நூலகப் பதிப்பு, 1961)

39 பிட்டாபுரத்தில் ஆத்தி மர நிழலில் காளி அமர்ந்திருந்தாள் எனப் பத்திரகாளியம்மன் கதை வரி 491 (தி.நடராசன் பதிப்பு) குறிப்பிடுகிறது. இது சோழர் குலத் தொடர்பைக் குறிக்கும்.

40. இந்த ஏழு பிள்ளைகள் தொடர்பாகப் பிற சமூகத்தவரின் ஆவணங்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்வது நலம் பயக்கும். சப்த கன்னியர், சப்த மாதர் வழிபாட்டு மரபுகளுடன் தொடர்பு படுத்தி ஆராயப்பட வேண்டும்.

41. திருவிடை மருதூர்ச் சான்றோர் மடம் தற்போது இயங்காத நிலையில் உள்ளது. அங்கு நாடார் சங்கம் இயங்கி வருகிறது.

42. "அவல் பூந்துறைச் சான்றோர் மடச்செப்பேடு" இந்நூலில் பதிப்பிக்கப்படுகிறது.

43 "Rajakulaguru copper plate of Aval Pundurai" : by S.D. Nellai Nedumaran & S. Ramachandran, in, Studies in Indian Epigraphy-Journal of the Epigraphical Society of India, Vol. XXVII. pp.185-195, Mysore,2001.

44. "திருவிடை மருதூர்ச் சான்றோர் மடச்செப்பேடு" இந்நூலில் பதிப்பிக்கப்படுகிறது.

45. வித்யாதரர்களின் நகராக மணிமேகலையில் (17:22) குறிப்பிடப்படும் காஞ்சன நகர் இதுவாகலாம். திருவெண்காட்டுச் செப்பேடு, வின்பிரட் ஐயர் என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

46. "சங்க கால உற்பத்திக் கருவிகள்" —எஸ். ராமச்சந்திரன், "ஆய்வு வட்டக் கட்டுரைகள்". தொகுதி—5, பதிப்பாசிரியர்: வெ. கிருஷ்ணமூர்த்தி, சென்னை—17.

47. கன்னியாகுமரியை யடுத்த மகாதானபுரத்தில் இவ்வாறு நிகழ்ந்து வருவதாகத் தொல்லியல் துறை அலுவலர் தே. கோபாலன் குறிப்பிடுகிறார்.

48. பொறியாளர் திரு. த. தங்கவேல் அவர்களுடனான உரையாடலில் கிட்டிய கருதுகோள்.

49 p.141, Some early dynasties of South India -Sudhakar Chattopadhyaya -Motilal Banarsidas, Delhi, 1974.

50 p.100, Sketch of the dynasties of Southern India -Robert Swell, Cosmo Publications, Delhi, 1975.

51 S.I.I. Vol. VI no. 594.

52. கி.பி. 11,12,13 —ஆம் நூற்றாண்டுகளில் கீழைச் சாளுக்கிய — சோழ அரச வம்சங்களுக்கிடையே உருவான மணவுறவிலும் (தானார்ணவனுக்கும் ஆர்ய மகாதேவிக்கும் பிறந்த விமலாதித்தன், குந்தவையை மணந்தது), ராஜஸ்தானின் துங்கபுரிப் பகுதியை யாண்ட

வாகட அரச வம்சத்துக்கும் தமிழகத்தை யாண்ட ஹொய்சள அரச வம்சத்துக்குமிடையே உருவான மணவுறவிலும் (வாகட சூரபாலதேவன் பெண் வயிற்றுப் பேர்த்தி தேவகி தேவியை ஹொய்சள வீர சோமேஸ்வரன் காஞ்சியில் வைத்து மணம் புரிந்தது) வலங்கை மாலை குறிப்பிடுகின்ற மணவுறவைப் போன்றே, அரசியல்–சமூகவியல் போக்குகளை நிர்ணயிக்கிற வீச்சும் வியாபகமும் உள்ளன. ஆயினும் வலங்கை மாலை குறிப்பிடுவது சான்றோர் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் மிகவும் முற்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்த நிகழ்வாகவே தோன்றுகிறது. (வாகடர்–ஹொய்சளர் மணவுறவு பற்றி அறிவதற்குப் பார்க்க: pp. 50-60. Gadyakarnamrta by Sakalavidya Chakravarttin -text and study by Dr. S.S. Janak'i -The Kuppyswamy Sastry Research Foundation, Madras-4. 1981).

53. Travancore Archeaological Series, Vol.III, Part -I, No.49.

54. பக்.10, "கேரளதேச வரலாறு" –பதிப்பு: டி.சந்திரசேகரன், கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், 1960).

55. S.I.I. Vol.XIII, No.65.

56. "Rajakulaguru Copper plate of Avalpundurai" - by S.D. Nellai Nedumaran and S. Ramachandran, in the J.E.S.I. Vol. XXVII

57. சூளவம்சம் – அத்தியாயம் 57, வரி.6. (Cūlavamsa, translated by William Geiger, Asian Educational Service, New Delhi, 1992.

58. தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் தொகுதி –3 பகுதி 2 பக்.57 GOML பதிப்பு 1957.

59. யுத்த காண்டம்–படைக்காட்சிப் படலம்–பா. 16,17,38.

60. பாபநாசம் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் கோபுரக் கிழக்குப்புற ஜகதிக் கல்வெட்டு. நேரில் படிக்கப்பட்டது. "அமந்திய நாடாள்வான்" என்ற வடிவமே கல்வெட்டில் காணப்படுகிறது. முன்பிருந்த இவர்கள் பெற்று வந்த சுவந்திரம் குறிப்பிடப்படுகிறது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டில்

நாடாள்வான் என்பது சான்றார் குலத்தவர்கசு மட்டுமேயுரிய சாதிப்பட்டமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டு ஆவணங்களில் இச்சாதிப் பட்டம், நாடவான், நாடான் என்ற வடிவங்களில் பயன்படுத்தப்படுகிறது. எனவே "நாலூர் காணியுடைய அவந்திய நாடாள்வான்" என்பது சான்றார் குலத்தவன் ஒருவனைக் குறிக்கும் எனக் கொள்வதில் தவறில்லை எனக் கருதுகிறேன். அவந்தி அல்லது மாளவம் (மத்திய இந்தியப் பகுதி) போஜர் எனப்பட்ட யாதவ குலப் பிரிவினரால் ஆளப்பட்டதெனப் புராணங்கள் கூறுகின்றன. அவந்திய நாடாள்வான் என்பது போஜராஜா வம்சத்துடன் சான்றார் குலத்துக்கு இருந்த தொடர்பினைக் காட்டுகிற பட்டமாகவும் இருக்கக்கூடும்.

61. இந்த விக்கிரம நாரணன் பற்றிய தீவிரமான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் வலங்கை மாலையையும் சோழர் மெய்க்கீர்த்தியையும் சாளுக்கியர் சாசனங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தால் இது தெளிவு பெறும் என்பது திண்ணம்.

62. தொடர் எண் 201/1979 "திருக்கோடிகா கல்வெட்டுகள்", தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

63. p. 222, The Colas -K.A.N.Sastry.

64. S.I.I. Vol.V, No.550, lines 15-19. 75-76.

65. கி.பி. 11—ஆம் நூற்றாண்டுக்குரிய திருச்செங்காட்டங்குடிக் கல்வெட்டொன்றில் "(சக்கர)வர்த்தி விக்ரம நாரண பருமர்" என்ற பெயர் காணப்படுகிறது. துண்டுக் கல்வெட்டு தொடர் எண்.67/1977, நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி—I

66. காளஹஸ்தி மஹாத்மியம் —அத்யாயம் 85

67. ஒரு கடிகை என்பது ஒரு நாழிகை நேரத்தில் (24 நிமிடத்தில்) நடக்கக் கூடிய தொலைவாக இருக்கலாம். திருச்சிராப்பள்ளி தலைமை அஞ்சல் நிலைய வளாகத்திலுள்ள கி.பி. 19—ஆம் நூற்றாண்டைய மைல்கல்

ஒன்றில் ஒரு நாழி என்பது ஒரு மைல் தொலைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கி.ஸ்ரீதரன், ப.17 "ஆவணம்" – இதழ்2 தொல்லியல் கழகம்,1992.

68. பக். 95, 298–299, தக்கயாக்க பரணி மூலமும் உரையும். உ.வே.சா. பதிப்பு, 1960.

69. பக். 73–74 மேற்படி நூல். போஜ ராஜா வம்சம் என்பது மளவப் பகுதியை ஆண்ட யாதவ குலப் பிரிவு எனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. கி.பி.13–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் மாளுவர் அல்லது வாளுவர் எனக் குறிப்பிட்டுக் கொண்ட ஒரு சாதியினர் பற்றிச் சில விவரங்கள் உள்ளன. இவர்களுக்குக் கணக்கந்தைகள் (கணக்குத் தந்தைகள்) என்ற பிரிவினருடன் ஏதோ ஒரு வகை உறவு இருந்தது என நரசமங்கலம் (மாமண்டூர்) கல்வெட்டால் தெரியவருகிறது. (ப. 41–46, "வரலாறு", இதழ் 3 இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம். திருச்சிராப்பள்ளி–17, ஆகஸ்ட் 1994) "கணக்கப் பிள்ளை" என்ற வேளாளர் குலப் பட்டப் பெயரிலிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளும் பொருட்டு இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். தேவகோட்டை அருகேயுள்ள செம்பொன்மாரிப் பகுதியில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டு வரை அதிகாரம் செலுத்தி வந்த மாளுவச் சக்கரவர்த்தி பரம்பரையினர் கணக்கந்தைப் பிரிவினராக இருக்கலாம். இது தனித்த ஆய்வுக்குரியது.

70. p.189, The Colas -K.A.N.Sastry.

71. "மும்முடிச்சோழபோசன்" –இல.தியாகராஜன்,தொல்லியல் ஆய்வுத் தொகுதி –தொல்லியல் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை –1985.

72. ப. 119, யாழ்ப்பாண ராச்சியம் –கலாநிதி. சி.க. சிற்றம்பலம், யாழ். பல்கலைக் கழகம், இலங்கை.

73. A.R.E.237/1943-44 (நேரில் படிக்கப்பட்டது.) இக்கல்வெட்டின் சமஸ்கிருத மெய்க்கீர்த்திப் பகுதியில் அய்யப்பொழில்புர பரமேஸ்வரியின் புகழ்

குறிப்பிடப்படினும், ஐந்நூற்றுவர் பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை.

74. p.54, Amaravati Sculptures in the Madras Government Museum, C. Sivarama murti, Bulletin of the Madras Government Museum, 1956.

75. கி.பி.11 ஆம் நூற்றாண்டைய திருவிடைமருதூர்க் கல்வெட்டு –S.I.I. Vol.XIX, No.4

76. S.I.I. Vol. IV no. 1239. line 6

77. வாசி கொண்டரசர் வாரணங்கவர வாணகோவரையன் வாள்முகத்தூசி கொண்டு என்று கலிங்கத்துப்பரணி (தாழிசை 365) குறிப்பிடுவதாகத் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் சற்று ஐயத்துடன் குறிப்பிடுகிறார். (பிற்காலச் சோழர் வரலாறு ப.292 அடிக்குறிப்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு 1974) இவ்வாணகோவரையன், சுத்தமல்லன் உத்தம சோழனான இலங்கேசுவரன் என்ற பெயருடையவன் என அவர் கூறுகிறார். வண்டாழஞ் சேரியுடையான் கோளரி உலகுய்யவந்த வாணாதிராயன். கி.பி.1122 ஆண்டுக்குரிய திருச்சேறை சாரபரமேஸ்வரர் கோயிற் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான். (S.I.I. Vol. XXVI - no.663)

78. பெரிய புராணம், ஏயர், 5.

79. பெரிய புராணம், மானக், 7.

80. பெரிய புராணம், திருக்குறிப்பு. 4

81. S.I.I. Vol.XII, No.164,234.

82. ப. 649, திருக்குறள் பொருட்பால் உரைக்கொத்து –பதிப்பு: தி. பட்டுசாமி ஓதுவார், திருப்பனந்தாள் காசிமடம், 1960.

83. நடுகல் வழிபாட்டு மரபு ஆனிரை மீட்டல் குறித்த கரந்தைத் திணைக்குரியது. வெட்சிப்போர்க்கு (ஆனிரை கவர்தல்)-உரியது கொற்றவை (துர்க்கை) வழிபாடு ஆகும்.

84. பக். 285–89 கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், பதிப்பாசிரியர் புலவர். செ.இராசு –தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை 1991.

85. S.I.I.Vol.V. No.235.

86. பக். 59–60 கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள், பதிப்பாசிரியர் புலவர். செ.இராசு –தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை 1991.

87. பரணி நட்சத்திரம் என்பது துர்க்கைக்குரியதாகும். காளிவழிபாட்டில் புரட்டாசி மாத உத்தராட நட்சத்திரத்தில் நடைபெறும் மகாநவமி விழாவே முதன்மையானதாகும். காளிவழிபாட்டுச் சான்றோர்களை விட துர்க்கை வழிபாட்டுக் குலக்குழுவினர் முதன்மை பெறத் தொடங்கிவிட்ட நிலை இந்நிகழ்வால் உணர்த்தப்படுகிறது என்றும் கொள்ளலாம்.

88. சங்க காலத்துப் பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய தொண்டைமான் இளந்திரையன் "வயவர் பெருமகன்" என அப்பாடலில் (வரி 101) குறிப்பிடப்படுகிறான். இன்றும் ஈழவர் சமூகப் பிரிவினராகிய தீயர், வடகேரளப் பகுதியில் வயவர் என்றே அழைக்கப்படுகின்றனர். பெரும்பாணாற்றுப்படையில் (வரி 30) தொண்டைமான் இளந்திரையன் "முந்நீர் வண்ணன் பிறங்கடை" எனக் குறிப்பிடப்படுகிறான். "பிறங்கடை" என்பது புறங்கடை அல்லது புறக்கடை (நேர்வழி அல்லாத வாரிசு) எனப் பொருள்படும். "பிறங்கடை" என்ற சொல் கன்னடத்தில் பெர்கடே, ஹெக்டே என்னும் வடிவில் சில சாதியினர்க்குப் பட்டமாக வழங்கப்படுகிறது. முந்நீர் வண்ணன் பிறங்கடை என்பது பலராமனைக் குறிப்பதாகக் கொண்டால் தாலஜங்கமப் பிரிவினராகக் கருதப்படும் ஹேஹயர் (ஏயர்)களுடன் தொடர்புபடுத்துவது எளிது. மூஷிக வம்சம் என்ற சேரநாட்டு சமஸ்கிருதக் காவியம், மூஷிக வம்ச க்ஷத்ரியர்கள் தொடக்க காலத்தில் ஹேஹய நாகர் வம்சத்தில் பெண் எடுத்ததாகக் குறிப்பிடுகிறது.

89. The Colas -p.333, K.A.N. Sastry, Madras University.

90. "சிவந்தெழுந்த பல்லவராயன் உலா" —பதிப்பு: இரா. நாகசாமி, கல்வெட்டு காலாண்டிதழ் 6,7,8 —தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

91. p.17, p.156, South India and Srilanka, -K.K. Pillai, University of Madras, 1975.

92. சான்றார் சமூகத்தின் உயர் அடுக்கான நிலைமைக்கார நாடார் பிரிவினருள் "மண்டக்ராசா" என்ற குடும்பப் பெயர் கொண்டோர் உள்ளனர். இவர்கள் சோழ அரச குலத் தொடர்புடையோராகத் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். தற்போது தஞ்சைப் பகுதிக் கள்ளர் சமூகத்தவருள் ஒரு பிரிவினரின் பட்டமாகப் பயன்படும் "மன்றாயர்", மண்டையரரயரின் திரிபே.

93. பேரூர்ச் சிறுகுடியார் பட்டயத்தில் இப்பட்டம் "செட்டி தோளேறும் பெருமாள்" என்றில்லாமல் "செட்டி தோள் ஏறும் சேவகன்" என்றிருப்பது கவனிக்கத் தக்கது. "பெருமாள்" என்பது அரச பட்டமாகவும் "சேவகன்" என்பது வீரன் எனும் பொருளிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

94. பெண்டிர் கற்பு பற்றிய வள்ளுவர் குறளும், வள்ளுவர் மனைவி வாசுகி பற்றிய கதை நிகழ்ச்சியும் இங்கு நினைவுகூரத்தக்கவையாகும்.

95. ப. 93, தென்னிந்தியக்கோயில் சாசனங்கள். பாகம் 3, பகுதி 2. (தமிழ்ப் பகுதி)

96. சோழன் பரிமளன் கதைக்குறிப்பு—மேற்கோள் "வலங்கை—இடங்கைச் சாதிகள்—ஒரு புதிய பார்வை" — த.தங்கவேல். கற்பு என்ற கருத்தோட்டம் கல்வியுடன் தொடர்புடையதாகும். "கற்பமைந்த கரதலத்துச் சிற்ப மார்த்தாண்டன்" என விஸ்வகர்மா ஒருவரைப் பாண்டிய மன்னனின் தளவாய்புரச் செப்பேடு (வரி215—216) குறிப்பிடுகிறது. ப. 114, பாண்டியர் செப்பேடுகள் பத்து — தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை—14—1967.

97. S.I.I. Vol. VI, no.439.

98. ப. 325–6, பிற்காலச் சோழர் சரித்திரம், தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.

99. கேரளத்து ஈழவர்களுள் "கோழிக்காலர்" என்ற பிரிவு உள்ளது. இது, கோழிகள் தமது கால்களால் சண்டையிடும் பாணியைப் பின்பற்றிச் செய்யப்படும் போர் முறைகளில் வல்லவர்கள் என்ற பொருளை உணர்த்தக்கூடும். தமிழகத்திலும் ஈழகுலச் சிறுகுடியார் (சோழிய வேளாளர் அல்லது ஆரண்யத்தார் எனப்பட்ட கானாட்டார்) இத்தகைய போர் முறையில் வல்லவர்களாக இருந்திருக்க வேண்டும். கி.பி.1165 அளவில் லங்காபுரத் தண்டநாயகன் இராமநாதபுரம் சீமையைத் தாக்கியபோது "golihalas" என்ற படைப் பிரிவினர், சோழர்களின் சார்பாக அவனை எதிர்த்தனர் எனச் சூளவம்சம் (76:247,260) குறிப்பிடுகிறது. –(Culavamsa, Part II, pp. 85-86. Wilhelm Geiger, Motilal Banarasidas, 1996) – இது கோழிக்காலரையே குறிக்கும்.

100. Epigraphia Indica, Vol.XXI, No.243.

101. "வரலாறு" ஆய்விதழ் 2, (பிப். 1994) திருநெடுங்களம் கல்வெட்டுகள். மு. நளினி.

102. ப.33, பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள் – வெ.வேதாசலம், மதுரை, 1987

103. Inscriptions of Pudukkottai State No.492.

104. "ஐவர் ராசாக்கள் கதை" –நா.வானமாமலை பதிப்பு, மதுரை. "பெருமாள் புலவர் பாடிய ஐவர் ராசாக்கள் கதை"1909 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளதாக முனைவர் ஆ. தசரதன் தெரிவிக்கிறார். சிறுநாடார் குடியிருப்பு ஜெகநாதன் ஐவர் ராசாக்கள் வழிபாடு குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளார். அவருடனான உரையாடலில் தெரிவிக்கப்பட்ட செய்திகளே இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

105. "தக்ஷதக்ஷிண புஜ" எனச் சில கல்வெட்டுகளில் ஹொய்சள அரசன் வீரசோமேஸ்வரன் குறிப்பிடப் படுகிறான். (p. 433, The Colas, K.A.N.Sastry) இது "வலங்கை மீகாமன்" எனப் பொருள்படும் பட்டமாகும். கி.பி.1245 ஆம் ஆண்டைச் சேர்ந்த இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் பசுவந்தனை (தூத்துக்குடி மாவட்டம்)க் கல்வெட்டில் "வலங்கை மீகாமீச்சுரம்" என்ற கோயில் குறிப்பிடப்படுகிறது. இம் மன்னன் வீரசோமேஸ்வரன் ஆதரவுடனே ஆட்சி செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே வலங்கை மீகாமன் என்பது இக் காலகட்டத்தில் ஹொய்சளர்க்குரிய பட்டமாகவே இருக்கவேண்டும் எனக் கருதுகிறேன். வாணாதிராயனுக்கு வலங்கை மீகாமன் என்ற பட்டம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் இருந்தது என்ற செய்தி, திருவாதவூர், பெண்ணாகடம் கல்வெட்டுகளால் தெரியவருகிறது. (பார்க்க: A.R.E. 418/1958—59 மற்றும் ப. 173, வரலாற்றில் பெண்ணாகடம்—ச.கிருஷ்ணமூர்த்தி, திருக்குறள் பதிப்பகம், சென்னை 78.—2001)

106. A.R.E. 30/1919.

107. "ஏழகம் பட மறப்படை பட" —மூன்றாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி

108. S.I.I. Vol. IV No.225 (சிதம்பரம் கோயிற் கல்வெட்டு) No.222 —ம் பார்க்க

109. "திருக்குமரீஸ்வரம் உடைய நாயனார் கோயிலில் இவூர் வலங்கை உய்யக் கொண்டார்கள் முன்பு செ(ய்')த தன்மங்களாவன ஆளுடையார்க்கு நாச்சியாரையும் எழுந்தருள்வித்து அமுதுபடிக்கு ஸ்ரீகரண வயக்கலும் பரளு வயக்கலும் இலை குழியும் கொண்டுவிட்டு மண்டபமும் சோபானமும் பெருங்கதவும் தன்மம்" — "ஆவணம்" இதழ் 2, ப.4 கரு. ராசேந்திரன் கண்டுபிடிப்பு.

110. அ.கு. 56 பார்க்க.

111. Kavadik Kasu (Sanrar-Kasu)-by Nellai Nedumaran, Studies in South Indian Coins, Vol. VII, p.145 - 151 Published on behalf of South Indian Numismatic Society, Chennai.

112. ப. 139, சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் —உ.வே.சா.பதிப்பு, 1978

113. கி.பி. 1570—ஆம் ஆண்டுக்குரிய சாம்பவர் வடகரைக் கல்வெட்டு T.A.S. Vol.I, p.387.

114. சூளவம்சம் 56:16.

115. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் — தி.நா. சுப்பிரமணியன், பாகம்—3, பகுதி 2—பக்.56.

116. S.I.I. Vol. VIII, No.136.

117. A.R.E. 290/1949-50. கல்வெட்டு வாசகங்கள் நேரில் படிக்கப்பட்டன. இதனையொத்த குறிப்பு, Epigraphia Carnatica, Vol.X Mulubahal, 49a - இல் உள்ளது. பார்க்க : Colas - p.539.

118. முதற் குலோத்துங்கனின் மகனான விக்ரம சோழன் இராமானுஜரை ஆதரித்தவனாவான். "அகளங்க நாட்டு ஆழ்வார்" என்ற பெயரில் வைணவர்கள் விக்ரம சோழனைப் போற்றுவர். ஆனால் கி.பி. 1138 —இல் இரண்டாம் குலோத்துங்க சோழனால் இராமானுஜர் விரட்டப்பட்டு, ஹொய்சள விஷ்ணு வர்த்தனனிடம் புகலடைந்தார். (ப. 241, தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் —தொகுதி 3, பகுதி 2, தி.நா. சுப்பிரமணியன், கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1957).

119. p.42, Archaeology in Mysore -Annual Reports -1906-1911 - R.Narasimhachar, Mythic Society, Bangalore, 1973.

120. ப. 133, தெ.கோ.சா. —தொகுதி 3, பகுதி 2 — தி.நா.சுப்பிரமணியன்.

121. p. 33, Epigraphia Indica -Vol.IV.

122. p. 272. Historical sketches of Ancient Deccan -K.V.S. Aiyer, -Cosmo Publications, New Delhi, 1980.

123. p. 286, Epigraphia Indica -Vol.III.

124. A.R.E.35/1913 –மேற்கோள் ப.131, தெ.கோ.சா.–தொகுதி 3, பகுதி 2, தி.நா. சுப்பிரமணியன்.

125. பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டில், (Epigraphia Indica, Vol.XXI, No.31) பெருமான் நம்பிப் பல்லவரையனின் வர்க்கத்தாரில் சோழ அரசன் ராஜராஜனின் பிள்ளைகளும் குறிப்பிடப்படுகின்றனர். இது எப்படி சாத்தியம் எனில், க்ஷத்திரிய வர்ணத்தவராக அடையாளம் காட்டிக் கொண்ட சோழ அரசன், முறையான மண உறவு அல்லாத, வேளத்து உறவு – அல்லது வேளாட்டி முறை உறவு– சம்பந்தம் கொண்டு பிறந்த பிள்ளைகளே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றனர் எனக் கொள்வதே சாத்தியமாகும். இக் கல்வெட்டில் விருந்தங்கள் என்ற சொல் பந்து அல்லது சம்பந்தி என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது.

126. A.R.E.257, 259/1926. இக் கல்வெட்டுகளின் வாசகங்கள் வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம் நூலில் பக். 233–34–இல் வெளியிடப்பட்டுள்ளன. (ஆசிரியர்: நொபொரு கராஷிமா, மொழி பெயர்ப்பு: சு. இராசகோபால் முதலியோர், தொல்லியல் கழகப் பதிப்பு, 1995)

127. அரியலூர் வட்டம் எறகுடிக் கல்வெட்டு –கி.பி. 1278 – பதிப்பு: க.கருப்பையா, ப. 33, ஆவணம், இதழ் 6, சூலை

128. தொடர் எண்.129/1979, கும்பகோணம் கல்வெட்டுகள் பதிப்பாசிரியர் : நா, மார்க்சீய காந்தி, வெளியீடு: தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத் துறை, சென்னை, 1980. "ராஜகுலவர் காணிப்பற்று ஜீவிதம் பரிக்கிறகம் மாண் ஊர்களிலும் நாமுடுக்குங்கூறை உள்ளிட்டு நெய்யும் நகரங்களும்" என்ற வாசகம் நேரில் படிக்கப்பட்டது.

129. தொடர் எண்.140/1979, மேற்படி நூல். இக்கல்வெட்டின் இறுதிப்பகுதி நேரில் படிக்கப்பட்டது. "சித்திரமேழிப் பெரிய நாட்டார்" என்ற குறிப்பு உள்ளது.

130. முதற் குலோத்துங்கனின் ஹொய்சள மனைவிக்குப் பிறந்தவனே விக்ரம சோழன் எனத் தி.நா. சுப்பிரமணியன் கருதுகிறார். இந்த ஹொய்சள வம்சப் பெண் ஏழிசை வல்லபி எனத் தோன்றுகிறது. (தென்னிந்தியக் கோயில் சாசனங்கள். பக். 136).

131. இக்கட்டுரை ஆசிரியர் காயல்பட்டினத்தில் மேற்கொண்ட கள ஆய்வுகளின் மூலம் மரக்காயர் என்ற பட்டப் பெயர் கொண்டவர்களின் கல்லறைக் கல்வெட்டுகள் பல கண்டறியப்பட்டன. இக்கல்லறைகள் கி.பி.1400–ஆம் ஆண்டிலிருந்து அண்மைக் காலம் வரையிலான காலத்தைச் சேர்ந்தவையாகும்.

132. கி.பி. 1242 –க்குரிய கல்பாளையம் கல்வெட்டு (ப.58, ஆவணம், இதழ்–2, ஏப்ரல் 1992 –மு.வீராசாமி, அர. அகிலா, ஆ. பொன்மணி, மு. நளினி)

133. ஹொய்சள வீரவல்லாளன் மதுரை சுல்தானால் கி.பி. 1342–இல் கொல்லப்பட்ட பிறகு அவனது மனைவி சிக்காயி தாயி, "பாண்டிய சக்ரவர்த்தி" என்ற பட்டத்துடன் ஆட்சிபுரிந்தாள். விஜயநகர அரசர் ஹரிஹரருடன் அவளுக்கு இணக்கமான அரசியல் உறவு நிலவிற்று. (p.49, Introduction, Annual report on Epigraphy for 1930-31) திருச்சிராப்பள்ளிப் பகுதியில் கி.பி. 15–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர அரசர் காலக் கல்வெட்டுகள் சிலவற்றில், முன்னர் நிலவிய சிக்கரசர் ஆட்சிக் கால நடைமுறைகளே தற்போதும் பின்பற்றப் படவேண்டும் என்றும் அவையே வேளாண் குடிகள் அல்லது நாட்டார்க்குச் சாதகமான நடைமுறைகள் என்றும் தீர்மானிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது என நொபொரு கராஷிமா தெளிவுபடுத்தியுள்ளார். (p.148, Towards a new formation - South Indian Society under Vijayanagar) சிக்கரசர் என்பது சிக்காயி தாயியையோ அல்லது ஹொய்சள தண்ட நாயகனான வீரசிக்க கெத்தையனையோ (கி.பி. 1350) குறித்திருக்க வேண்டும். ஹொய்சள தண்டநாயகர்கள், "கோபிநாத" என ஒப்பமிடும் மரபு உண்டு. (S.I.I.Vol.V. No.163) விஜய நகரக்

காலக் கல்வெட்டு ஒன்றில் சிக்கரசர் ஆட்சிக் காலத்தில் வழக்கிலிருந்த கோபிநாதன் கோல் குறிப்பிடப்படுகிறது. (இல. தியாகராசன், பக்.31–32, "ஆவணம்", இதழ் 2, தொல்லியல் கழகம், 1992)

134. அறிஞர் ஒய்.சுப்பராயலு அவர்களால் எழுதப்பட்டுள்ள சமூக மாற்றமும் வலங்கை இடங்கைப் பிரிவுகளும் —("Social change and the Valangai and Idangai divisions" - in "KAVERI". Prof. Y. Subbarayalu felicitation volume -Editor: S.Rajagopal, Panpattu veliyiittakam, Chennai 2001) — என்ற கட்டுரை, இடங்கைப் படைப் பிரிவுகள் எவ்வாறு வேளாண் நிலவுடைமைச் சாதிகளாக மாறின என்பது குறித்து விவாதிக்கிறது. ஆனால், வலங்கைப் படைப் பிரிவுகளும் இடங்கைச் சாதிகளில் சேர்ந்திருக்க வேண்டும் என்பது போன்ற ஒரு குழப்பமான சித்திரத்தை உருவாக்குகிறது. இவ்வாறு நிகழ்ந்திருந்தால் இதற்கான நிர்ப்பந்தம் என்ன என்ற கேள்வி குறித்து இக்கட்டுரை ஆராயவில்லை. வலங்கை உய்யக்கொண்டார் பற்றிய பிரச்சினைகளை இக்கட்டுரை பரிசீலிக்கவே இல்லை.

135. A.R.E.276/1943-44 —வாலிகண்டபுரம் கல்வெட்டு — க்ஷத்ரியர்களுக்கு எதிரான இவ்வணியில் பிராமணர்களும் இணைந்திருந்தனர் என இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. விஸ்வ புருஷனின் முகத்தில் (தலையில் அல்லது வாயில்) தோன்றியதாகக் குறிப்பிடப்படும் பிராமணர்களும், பிரம்ம க்ஷத்ரியர்களாகக் கருதத்தக்க க்ஷத்ரியக் கலப்புடைய ஆரியர் மற்றும் அந்தணர்களும் இடங்கைச் சாதிகளின் கூட்டணிக்கு மூளையாகச் செயல்பட்டிருக்கின்றனர் என்பது இக்கல்வெட்டால் உறுதியாகின்றது. சைவ சித்தாந்த சந்தான குரவர்களுள் ஒருவராக மெய்கண்டாருக்குப் பின் உமாபதி சிவாச்சாரியார் சேர்க்கப்பட்டிருப்பதை ஒரு வகையில் இந்நிகழ்வின் தொடர்ச்சியாகக் கருதலாம். தஞ்சை மாவட்டம் கள்ளப் பெரம்பூர்க் கல்வெட்டு ஒன்று (S.I.I. Vol. XVII, No. 627) கி.பி.1118 —ஆம் ஆண்டிலேயே பிராமணர்கள் இடங்கைப் பற்றுடன் இணக்கமாக இருந்த நிலையை உணர்த்துகிறது.

136. "வேளத்தை நத்தமென்பர்" –திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது –கண்ணி 208–9 பதிப்பு: மு. சண்முகம் பிள்ளை, தொல்பொருள் ஆய்வுத் துறை 1981. "வெள்ளாளம் பற்றில் நத்தத்தில்" –திருப்பனையூர்க் கல்வெட்டு, நன்னிலம் கல்வெட்டுகள் தொடர் எண் 198/ 1978 –தொல்பொருள் ஆய்வுத்துறை, 1980. கலிங்கத்துப் பரணி (தாழிசை 40) வேளம் பற்றிக் குறிப்பிடுகிறது.

137. S.I.I. Vol. VII -941; VIII -121.

138. Pudukkottai State Inscriptions, No. 587.

139. கண்ணிகள் 10–20, 28, 162 –சிவந்தெழுந்த பல்லவரையன் உலா பதிப்பாசிரியர்: இரா.நாகசாமி, கல்வெட்டு காலாண்டிதழ் 6,7,8 (இராட்சச வருடம் ஆடி மாதம்) தொல்பொருள் ஆய்வுத்துறை.

140. திருக்கோளபுரத் தலபுராணம், உ.வே.சா. நூலகம், ஓலைச்சுவடிகளின் விளக்கம், பகுதி 2, ப.125.

141. ஸ்ரீ முஷ்ணம் நித்தீஸ்வரர் கோயிற்கல்வெட்டு – நேரில் படிக்கப்பட்டது.

142. p.1584, Mysore Gazetteer. Vol. II- Part-III, Editor. C.Hayavardhana Rao. Bangalore,1930.

143. இது எனது தனிப்பட்ட முயற்சியன்று. நாட் கணக்கிலும், மாதக் கணக்கிலும், ஆண்டுக் கணக்கிலும் என்னுடன் வாதித்தும் சான்றார் சமூக வரலாற்று ஆய்வாளர்களின் பல நூல்களை எனது பார்வைக்குக் கொண்டுவந்தும் உதவிபுரிந்த செட்டிகுளம் அ. கணேசன் மற்றும் பொறியாளர் பால்குளம் த. தங்கவேல் பி.இ. அவர்களுக்கு எனது நன்றி. அவ்வப்போது நான் சொல்கிற ஆய்வுக்குறிப்புகளைக் குறிப்பேட்டில் எழுதித் தொகுத்தளித்த காஞ்சிபுரம் சௌமிய நாராயணனுக்கும் நன்றி. கடந்த 15 ஆண்டுகளாக என்னுடன் இணைந்து பல்வேறு கள ஆய்வுகளில் பங்கேற்றுக் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தி, ஆய்வுக் கட்டுரைகளையும் இணைந்து எழுதி வெளியிட்டு வந்துள்ள நெல்லை நெடுமாறன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் பூந்துறைச் சான்றோர் மடச் செப்பேடு
முன் பக்கம்



ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் – அவல் பூந்துறை – சான்றோர் மடம் – செல்வரத்ன சிவாச்சாரியார் வசமுள்ள செப்பேடு – சுமார் 50 செ.மீ. நீளம், 30 செ.மீ. அகலம் – இருபுறமும் எழுதப்பட்டுள்ளது.



அவல்பூந்துறைச் சான்றோர் மடச் செப்பேடு
பின்பக்கம்

அவல் பூந்துறைச் சான்றோர் மடச் செப்பேடு

பக்கம் - 1 *(சந்திர சூரியர், தாரகாசுரனை மிதித்த நிலையில் காளி, காளியின் வலப்புறம் 7 வீரர்கள், ஏணி, வடலிப் பனை மரம், காளியின் இடப்புறம் 7 மாதர்கள். காளியின் உருவம் 4 கரங்களுடன் சித்திரிக்கப் பட்டுள்ளது. முன்கரங்கள் டமரு ஏந்திய நிலையிலும் வரதத்திலும் பின்கரங்கள் பாசம், சூலம் ஏந்திய நிலையிலும் உள்ளன.)*

உ

ஜிவமயம்

1. வய்ய நீடுக மாமளு மன்னுக மெய்விரும்பிய அன்பர் விழங்குகை சய்வ நன்னெறிதான் தழைத்தோங்குக தெ
2. ய்வ வெண்டிரு நீறு சிறக்க வே அருழால் ஆதிநந்திகசுரெனுக் கிரகத்துத் (திருவாய்) திருவாய் மொழி
3. ந்தருழினபடி கிறெதத்திறேதத்துவாபரக் கலியுகம் இந்த நாலுயுகங் கொண்டது ஒரு சதுர்யுகம் இப்படி சது
4. ர்யுகம் ஆயிரம் சதுர்யுகங் கொண்டது பிறமாவுக்கு ஒரு பகல் இந்த ஒரு பகலில் பதி நாலு மனுக்கள் சகார்த்
5. தம் யிப்படி யிரவு பகல்க் கொண்டது பிறமாவுக்கு ஒருதினம் யிந்தத் தினம் முன்னுத்தறுபது கொ
6. ண்டது ஒரு வருடம் இந்த வருடம் நூறு கொண்டது ஒரு பிறம பிரளையம் இப்படி கோடி பிரளையம் கொண்டது விஷ்டுவு
7. க்கு ஒரு பகல் இப்படியிரவு பகல்ரண்டு கொண்டது விஷ்ணுவுக்கு ஒரு தினம் இந்த தினத்தில் முன்னூற்றறுபதுகொண்

8. டது ஒரு வருடம் இந்த வருடம் நூறு கொண்டது விஷ்ணு சகார்த்தம் இப்படி கோடி விஷ்ணு சகாற்த்தங் கொண்டது உமா.

9. தேவிக்கி அவிழ்ந்த கூந்தல் முடிக்குநேரம் இப்படிப்பட்ட மகாப்பிரளைய காலத்தில் ஒரு பிறமப்பிரளையத்தில் துருவமண்

10. டல பரியந்தம் சலப்பிரளையமான காலத்தில் வுலகமெல்லாமழியுங் காலத்தில் காஞ்சிபுரமென்னு நகரம் அழிவில்

11. லாமல் தோணி போலேமிதந்து பிரளைய முடிந்த பின்பு பிறமதேவன் கரத்திற் பிறந்து லோகசிஷ்டிசெய்தபடியி

12. னாலதற்கு பிரமபுர மென்றுந் தோணிபுரமென்று காஞ்சிபுரமென்று இப்படி பன்னிரண்டு திருநாமத்

13. தையுடைய திருநகரத்தில் அனேகந் தேவாள் அனேகஞ் சதுர்யுகம் புசை செய்தருளிய தேவதேவன் தே

14. வோற்றுமன் தேவதா சாறுவபுமன் பதிப்பிரியன் பாதஙற்சலன் பார்பதி வல்லபன் பார்வதி மனோகரன் பார்

15. பதி பிராண நாயகன் முத்திக்கு வித்து முக்கணீசுரன் நின்ற கோலமழகிய நிமலனனுக்கிரகத்தினால்

16. செம்புத்தீவில் திருவட தேசத்தில் தொண்ட மண்டலத்தில் சிவசுப்பிறமண்ணிய சுவாமியார் சுரலோகரட்ச

17. கர் தெட்சண விப்பிரப் பிரியர் விசுவமூற்தி சரவணபவன் சண்முகப் பிறதாபன் குக்குடத்துவசன் குங்கு

18. மவற்னன் குஞ்சிதாறூடன் கௌரி திருமகன் கணபதி சகோதறன் தெய்வானை வள்ளி மனோகரன்டே

19. தவர் சிறைமீட்ட தேவசேனாபதி அமரர்சிறை மீட்ட அமராபதி காவலன் பக்கரைப் பகட்டரக்கர் ப 20. ட்டிடப் படைக் கௌத்திற் கொக்கரித்துடற்கிளித்த குக்குடத்துவ(ச)ன் சக்கிரவட்ட மெட்டிரட்டி

21. தாவிச் சிரகாலடிக்குற தோகைப் பிரதாபதுரங்கன் சிஷ்டிக்கும் விறுமனைச் சிரசு திண்டாடக்

22. குட்டிக் குடுமியை யெட்டி வாங்குங் கோல விறும பதங் கொடுத்தருளிய குமார கண்டி

23. ரவன் பரமேசுரர் திருவுளப் படிக்கி காஞ்சி நகரத்தில் ஆதிசைவரில் கௌணிரிஷி கோ

24. த்திரத்தில்ச் சிவபாத இறுதையர் தேவியார் காமாச்சியம்மன் திருவவுதாறத்தில்

25. திருவவு தாரம்(ஞ்) செய்து ஓதாதுணரவுமை தனவமுத மூட்ட வுண்டருளி

26. ய சற்சனசுத்த சிவாசார சைவ சமைய பரிபாலகறாகிய திரிஞான சம்மந்த

27. ப்பெருமாள் மடாதிபறான ஆதிசைவ ஆண்டகுருறாய சுவாமியாரவர்கள் அனுக்கிர

28. கப்படிக்கி ஸெஸ்த ஸ்ரீ மன்மகாமண்டலேசுரன் அரியராயர் விபாடன் பாஷைக்குத்த

29. ப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் முதல்வராய கண்டன் மேதினி மீசுர கண்ட

30. ன்சமர கோலாகலன் வீரகஞ்சுகன் வீரப் பிரதாபன் மேதினி காவலன் கண்டனாடு கெ

31. ாண்டு கொண்டனாடு கொடாதவன் ஒருகுடை நிழற்கீளுலகமுளுதாண்டவன் இராசாதி

32. றாசன் றாசபரமேசுரன் றாசமார்த்தாண்டன் றாசபுங்கவன் றாசநாறாயணன் றாசகேச

33. ரி அசுபதி கெசபதி நரபதி நவகோடி நாராயணன் பூறுவபட்சம தெட்சண உத்திர சத்த

34. சமுத்திராதிபதி எம்மண்டலமுந்திறை கொண்டருளிய றாசப்பிரதாபன் றாசாக்க

35. ள்தம்பிறான் றாசமன்னியன் றாசவற்த்தனன் றாசகிரிடி றாசசம்பிரமன் றாசகோலாகலன்

36. றாசவுத்துங்கன் றாச கண்டீரவன் றாசபராக்கிரமன் றாசவுக்கிரமன் றாசசுரோத்துமன்

37. துலுக்கர் தள வி(ய)பாடன் துலுக்கர் மொகந்தவுள்த்தான் ஒட்டிய தளவி(ய)பாடன் ஒட்டி

38. யர்மோகந்தவிழ்த்தான் மட்டடங்காத மாற்றலர் தம்மை வெட்டியெ விரு(து*) கட்டிய சம

39. ர்த்தன் கொட்டத்து மன்னர் குரும்பெலாந்தவிழ்த்துத் திட்ட மடக்கித்திறை கொழும் பெருமான்

40. மன்னற் மன்னியர்கள் வந்தடி பரவப் பொன்முடி கவிழ்த்துப் புவி புரந்திடுவோன் நீ

41. திசேரமைக்ஷர் நின் கொலுமுன்றில் கோதிலா மொழியைக் கொடுசெவிக்குறைக்க(வு*)

42. ற்றது கேட்டுவொருகுடை நிழலிற் பெற்றரசாளும் பிறபல திறன் ஐந்தரு நிகரோன் மந்தி

43. ரகிரியோன் சந்திரவதனன் இந்திரலோலன் கங்கை மானதியோன் சங்கமாநிதி

44. யோன் பொங்கமாயு(ல*)க மெங்குமே யாழுவோன் நீதியாய்ச் செங்கோல்க் காதியாயமைந்

45. தோன் தீது தானகற்றி யேதுவாய் யிரித்திப் பூதலந்தனிலே புண்ணிய மென்னு

46. ம் ஆதுலசாலை அந்தணர் வேள்வி ஓதுவாற்குணவு உபையமடங்கள் இப்படிமு

47. ப் பத்திரண்டரமும் வழுவா (ம*)ல் நடாத்திய வேதநான் மறையும் மிகுந்(த*)தோற்சைவம்

48. ஆமெனுஞ் சமையம் ஆறுதானின்று போதவேயுலகில் பூற்தியாய் விழங்கத் தாழ்வ

49. துகளைந்து தாஷ்டிக முடனே வாள்வது கொண்டு மனமிகுந்தன்பற் சேகரமா

50. க செகந்தனை யாழும் கண்டர்கண்ட கட்டாரி க்ஷாமுவ துஷ்டர் கண்டதுஷ்டர்

51. மோகந்தவிழ்த்த ஒட்டியர் சுரதான றாசமனோ பயங்கர றாசதேவேந்திர வனதுர்க

52. சல துற்ககிரிதுற்க பதிதுற்க மனுச்சக்கிறயீசுர ராயக்குலிங்கங் குச்சரங் குடகங் குருச்சேத்

53. திரங்கலிங்கங் கற்னாடங் கலியாணங் கடாரங் கவந்தி கவுடங் கன்னோசி கம்பபடி முதலா

54. ன அன்பத்தாரு தேசங்களுக்கு முதலான பிறதிஷ்டாபனாசாரி எண்டிசை முகம் புரக்குமி

55. ந்திரசுரத்தன் அபகடறாய மகுட விபாடன் அஷ்ட்டதிக்கு மனோபயங்கரன் அட்டலட்சுமி

56. பொருந்திய மார்பன் திக்குவிசையங் கொண்ட சூரசிங்கன் துஷ்ட்ட நிக்கிர சிஷ்ட்டப

57. ரிபாலன் அஷ்ட்ட போகபுரந்தரன் நவரற்றின கெசித கிரீடமகுட நவரற்றின மாலையாபர

58. பரன்ர்றற்றின சிம்மாசனாதீசன் சங்கீத சாயித்திய வித்தியாவினோதன் கோடிமன்னி

59. யறாசதானன் பூலோக தேவேந்திரன் ந(ா)கலோகறாச கண்டன்ரணமுக சுத்தவீரன்

60. சொக்கப்புவறாயகண்டன் புண்டரீக புருடோத்துமன் சகலசாம்பிறாச்சிய லட்சுமிவாசன்

61. பூலோக நாதன் பூமண்டலாதீசுரன் சண்டப்பிறசண்டன் கண்டற்கொரு கண்டன் சத்து

62. ருக்கள் மணவாழன் சமைய கெம்பீரன் சமையநாராயணன் சமையத்துரோகர் கண்

63. டன் தகமைபெறு சற்கார் தயவுழ சகாயன் தனகனக விஷ்திறாபரண கழதழ சத்திர

64. ன் சாமரை வைபவேந்திரன் சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன் அறிவு

65. க்கு அகஷ்தியன் பொருமைக்குத் தற்மன் பரிக்கு நகுலன் கரிக்கு உதையன் ஞானத்துக்கு சகா

66. தேவன் கோபத்துக்கு காலாக்கினி உக்கிரத்துக்கு நரசிம்மன் தேசத்துக்கு மாற்தாண்டன் செகத்து

67. க்குறாவசல்லவன் ஆண்மைக்கு காற்த்திகேயன் ஆயிசுக்கு பிறமதேவன் ஸ்ரீகிஷ்ட்டணன் சங்க

68. ாரத்துக்கு ருத்திரன் போகத்துக்கு இந்திரன் பிறதிக்கனைக்குப் பரசுராமன் பிறபைக்கு சூரியன் கா

69. ந்திக்கு சந்திரன் சாந்திக்கு வீஷ்ட்டுமன் ஆசாரிக்கு வதிஷ்ட்டன் தானத்துக்கு கற்னன் மான

70. த்துக்கு திரியோதினன் பிலத்தில் ஆதிசேஷன் விஷ்ட்டுமையில் விசுவாமித்திரன்

71. சகாவில் விக்கிரமாதித்தன் சாயித்தியத்தி(ல்) வால்மீகற் போருக்கு வீமன் கெம்பீரத்தி

72. ல் சமுத்திரன் சங்கீதத்தில் தும்புறு ஆக்கினைக்கு சுக்கிறீபன் சாமிகாரியத்தில் அனுமந்த

73. ன் காவியத்திற் காளிதாசன் உச்சிதத்தில் போசன் சத்தியில் வீரபத்திரன் சுத்தியில் ஆங்கா

74. ரகன் பத்தியில் பிரகல(ந)ாதன் புத்தியில் விபூஷணன் புத்திரனிற் குரு புத்திரன் மதியிற்

75. சறஷ்சுபதி சதிக்குப் பாஞ்சாலி ரூபத்தில் மன்மதன் வாலிபத்தில் மார்க்கண்டன் எ

76. த்தினத்திற் பகீரதன் கெற்சிதத்திற் சத்த மேகம் தனத்திற் குபேரன் பிலவந்தத்தில்

பக்கம் 2

1. வாலி இரட்சண்ணியத்தில் நாறாயணன் இத்தினை சத்தியவாய்மையால் தத்துவக்கியான
2. ராய் மனுவுக்கியான சாஷ்த்திரப் பிரமாணராய் வெகுவிதமான மேகப்பரிட்சையும் இதியா
3. சந்தானும் இபலோக்கியமும் இரதவாதமும் இந்திரப்புளூலம் ஆகம சாஷ்த்திரம்
4. அஷ்டாங்கயோகம் அத்திப்பரி(ட்*)சை அசுவப்பரிட்சை முதலான அறுபத்துநாலுகலை
5. க்கியான ரூடராய் ஒப்பாருமிக்காருமின்றிச் சிராக்கியமா னாபிரமானராய் அசுவத்தாமன் மாபெ
6. லிவேதவியாசர் அனுமார் விபூடணன் கிறுபையாசாரியார் பறசுறாமன் இவற்களை
7. ப்போல அதிக சிரஞ்சீவியாய் செம்பொன் மேருவுக்கிணையாய் நம்பினோர் க(ளு)
8. பாயத்தம்பிரான் தனக்கொப்பாய் சத்ததீவும் சத்தசாகரமும் ஷட்பாலகரும் அஷ்டகுல
9. பறுபதமும் அட்டவாரணமு மட்டமானாகமுஞ் சூழ்ந்தமையாலடங்கிய(ச*)த்த தீவுக்குஞ்ச
10. ங்குதாமறை காமதேனு சிந்தாமணி யென்னும் ஐந்து தறுப்போல கெங்கை
11. யமுனை கோதாவிரி சிந்து கிஷ்ணவேணி காவேரி சரஷ்பதி யென்னுஞ் சத்தமகா
12. னதியும் படைத்துக் தராதலந்தனக்கு தானவனாக நரர்பதியாக நாற்றிசை யிரஞ்சரத
13. கெசதுரகபதாதியென்னுஞ் சதுறங்க பலதாஷ்டீக வல்லவராய் விசைய நகற

14. த்தில் வீறசிம்மாசனத்திலெழுந்தருளிய ஸ்ரீவிருப்பாச்சிறாயர் வீறவசந்தறாயர் போச

15. றாயர் வீரநரசிங்க தேவமகாறாயர் தன்மறாயபூபதிறாயர் அகழங்கதேவமகாறாயதேவ

16. றாயர் சூடும்புலி தேவ மகாறாயர் உச்சமவலி தேவ மகாறாயர் உத்துங்க மகாறாயர் கட்டாரிறாயர்

17. அல்லமாப்பிறபு தேவ மகாறாயர் சென்ன வசவ தேவ மகாறாயர் யெரிதிம்மறாயர் திரும

18. லைறாயர் சிக்கறாயர் ஆனைகுந்தி வெங்கிட்டறாயர் கஷ்த்தூரி றாயர் கதம்பறாயர் பிறவிட தேவம

19. காறாயர் யீசுரப்பனாயக்கமகாறாயர் கிரு(ஷ்)ணதேவ மகாறாயர் வில்வறாயர் பவழேந்திற தேவ

20. மகாறாயர் சதாசிவ மகறாயர் றாமறாயர் கிஷ்ணறாயர் விக்கிரம தேவ மகாறாயர் சீரங்கறா

21. யர் பிறுதிவிறாச்சிய பறாக்கிற(ம*)ம் பண்ணியருழா நின்ற காலத்தில் தெட்சண சிம்மாசனாதிப

22. தியாகிய பாண்டிய வம்மிஷத்தில் சந்திறகுல தீபறாகிய பாண்டியனென்பவன் மதுரைஎ

23. யயாண்டு(க்) கொண்டிருக்குங் காலத்தி(ல்) ஸொஷ்தஸ்ரீ விசையாற்புத சாலியவாகன சகாற்

24. த்தம் 328 — அப்போது கலியுக சகாற்த்தம் 3483 வருடமாயிற்று யிதின்மேற் செ

25. ல்லானின்ற சித்திபானு வருடம் வைகாசி மீ பூருவ பட்சம் நவமி மிருகசீர நட்செத்திரம் சித்திய

26. நாம யோகமுங் கவலவாகறணமுங் கூடிய சுபதினத்தில் கொங்குமண்டலத்தில் மேல்க

27. ரைப்புந்துரை நாட்டில் எழுந்தருளிய ஆண்டகுருசுவாமி யாறவற்கள் பாதசன்னிய் தானத்துக்கு

28. கண்டனாடு கொண்டு கொண்ட நாடு கொடாதவறான மாட்டுதலையைமான்ந்தலையாக்கின மகாபெ

29. ரியோறான மதுப்பானையைபால்ப் பானையாக்கினவற் அரிபூசை குருபூசை மயேஷ்வற பூசை மறவாத தீ

30. றன் விபூதி ருத்திறாட்ச மாலிகாபரணறான பத்திரக்காளி பரிவுடன் வழர்த்த யீஷ்வர குமாறன் ஆண்டதம்பி

31. றான்பாதத்தை அனுதினமும் மறவாதவன் மேதினியில் மேல்மிசை கொண்டவறான விகடாதிசூர

32. னைவென்று நிமலி சிறைமீட்டவற் குபேரனற்க்குதவி செய்தவறான கருணாகடாட்சமுள்ளவ

33. றான சம்பறாசூரனை வென்றவன் தேவற்சிறை மீட்டவன் தெய்வலோகங் குடியேத்தி தேடே

34. வந்திரனுக்கு முடிசூட்டி வைய்த்தவன் பார்பதி தேவிபுத்திரன் வாலியை வென்ற சூரியப்பிறதாபன் சேனா

35. பதிப் பட்டமும் பெற்றவன் தெய்வலோகத்துக்குச் சென்று கருமல்லிகை பிடிங்கிக் குடுத்தவன் பூடே

36. வந்தியசோளன் பிறவற நெரிகண்டவன் அறுபத்திமூவரிலொருவன் யேநாதி நாதனென்று பேறு

37. பெற்றவன் சூறபாண்டி நாதரைச் சிறப்புடன் கண்டவன் வாது காத்தவன் தம்பித்துணை நாடகங்கட்டி

38. வைத்தவன் சமற சங்கு சமையசங்கு மோகினிசங்கு மூன்று சங்கமுள்ளவன் மணிக்கெங்கைவ

39. மூநாடன் உத்திர தேசத்தில் யயோத்தி மானகரில் தாயார் தமக்கு சத்திறவர்ணத்தினால் நாயக்கப் பட்டமு(ம்)

40. நலம்பெற பெற்றவன் கொங்கு மண்டலமு(ம் *) குடகு றாச்சியமு(ம்*) சோழ மண்டலத்துக்கு சிவந(ா*)யக்க

41. பட்டமும் பெற்றவன் சவுந்திற பாண்டியன் றன்னுடமண்டலத்தில் தாடாழ்வானென்று நாடாழ்

42. வாரென்று சோழ மண்டலத்திற் கவுண்டு பட்டமும் பேறு பெற்றவன் சந்திற குலதீரச

43. மைய நாறாயணப்பட்டமும் பேறு பெற்று விருதுமுடையவன் மாவிலிவாணன் வைகைக்கரை

44. நாடு முகுந்தப் பட்டமும் பேறுபெற்றவன் கற்பகனாடு கடகரை நாடுமடைக்கிப் பட்டமுடையவன்

45. அரிதான வடதிசை வேட்டைக்கருளிய(வ*)றான நாக கொடியு(ம்*)சிங்க கொடியு(ம்*) சமையவிசே

46. ஷமுள்ளவன் நாகலோகத்தில் நவமணி தரிந்த மணிமாற்பன் அன்னவன்னப் பாவா

47. டையுமுள்ளவன் சந்தனமாலையு(ம்*) சதுரொளி மாலையு(ம்*) புஷ்கனியு(ம்*) பெறுமையுமுடையவன்

48. யீழ நாடுயிலங்காபுரி வாழால்வழி திரந்த பெரியோற் மதியாத மன்னரை மகுடந்தகுத்து பரிசூ

49. ரரைக்கொல்லு பாக்கியப் பிறதாபன் மதுறாபுரியில் பாண்டியனுக்கு வாளது பத்தி மதுரைமண்ட

50. லிகர் சோழ மண்டலமுந் தொண்ட மண்டலமு கம்பமானதியுங் கலியாணபுறமு காணியு

51. ம் பெற்றவன் வையகமளை பொழிய வைத்தவன் கொட்டுப்பிடித்து கூடையுமெடுத்து வெட்டிம

52. ண்சுமந்ததில்லை யென்று வீரப்பிறதாபன் அகாசூரன் விக்கிறமாதித்தன் பொன்னுலோகமும்

53. பெற்று புகள் கீறத்தியு பெற்றவன் அற்சுனவலங்கை பிறதாபன் எழுநூற்று வங்கிஷமகாமே

54. தவர் பூசை பத்திப் பிரியாதவன் அருள்பெற பெற்றவன் தாழ்ந்தவற்கினிய தாபமாற்றினவற் வா

55. ழைக்கிரண்டு குலை வறவளைத்தவன் காவேரி கரை கண்டவன் சத்த சமுத்திரமுமசையாத எழுநூத்

56. துக்கோடி பேறுமுடையவன் பொய்த்தலைக்கி மெய்த்தலை யரிந்து வெட்டினவன் குலமு முப்புரிநூலுமு

57. டையவன் தாரை சின்னமும்றட்டை வெண்சங்கு அமுர்தமுடைய சிங்கத்தை வங்கத்திலேற்றி சேற

58. சோழன் பாண்டியன் மூவறாசாகளுஞ் சிங்காசனத்தில் வைத்து வெள்ளவட்டக் குடையு விருதும் வெஞ்

59. சாமறமும் வெள்ளப் புறவிய முள்ளவன் வெள்ளானை வேந்தன் செட்டியளபிமானமும் பட்டங்கா

60. த்தவன் செட்டி தோளேறிய செல்வக் குமாற அமந்தியாசூரனையுத்த சத்திறாதிகளைய் வெட்டி நிலையிட்டவ

61. ன்றாச மெச்சிய காளாஞ்சியு பலவரிசையு வெகுமானமும் பெற்றவன் வாடாத மாலையு வணங்கா முடி

62. பட்டமும் பெற்றவன் ஒரு நொடியிலுலக மாண்டவன் வருவ துன்பமும் வண்மையாயிநீ(க்)கினோற் பத்திற

63. மாத்துபசும் பொன்னுடையோற் உத்திர தேசத்திலுயர்ந்த பட்டமுள்ளோற் மாடக்காசு மறகத கொடியு.

64. தனம் பெறகாசஞ் சறுவமும் படைத்தவன் கோட காலத்தில் குழுந்த வனத்தில் சிவனுமுமையு தாகத்துடநே

65. தயங்கின வேளையில் வேதப்பனையை விரலால் வளைத்து போத அமுர்தத்தை புடிசொம்பிலிறக்கிநாத

66. னுமைக்கு நன்றாய் கொடுத்து மனமகிழ்ந்த(ன்)னார் மந்திர வாழும் வரிசையுங் கொடுத்து துலங்கு மகுடமு

67. டியது சூடியிலங்காபுரி(க்)கி மீழந்தனக்குவணங்காதேயென்று வைத்த வங்கிசத்தோறான மாந்துளிர்

68. மேனியன் மகாதேவர் புத்திரன் கொங்கன் நாடான் மாதுரையான் கலியாணியன் யிள யிந்த ஐந்து

69. வகுப்பாருஞ்சேற்ந்து காஞ்சிபுரத்தில் நாடு கூடி நம்மளுக்கு சுவாமியாற் வேணுமென்று மேல்கரைப்

70. புந்துரை நாட்டிலிருந்த ஆண்ட குருசுவாமியாறென்பவரை அழைத்துக்கொண்டுபோய் பட்டாபிஷேகஞ் செய்து எ

71. ழுதிக் கொடுத்த த(ா*)ம்பிற சாசினமாவது ஆண்டகுரு சுவாமியாற் பாதத்துக்கு உடல்பொருழாவி மூன்றுந் தெத்தம்ப

72. ண்ணி வருடமொண்ணுக்கு தலைகட்டு ஒண்ணுக்கு தன்காசிலே கால்க்காசும் கலியாணத்துக்கு இரண்டு சந்திரப்ப

73. ணமும் எங்கள் வம்மிசத்தோற் எந்த தேசம் எந்த நாட்டிலே யிருந்தபோதிலும் யிந்தப்படிக்கிக் குடுத்துக்

74. கொண்டு சுவாமியாரிட்ட கண்டினை தெண்டினை யாக்கினை ஆபறாதத்துக்கு உட்பட்டு நடந்துக் கொள்

75. வோமாகவும் யிந்தப்படிக்கி நடவாமல் எங்கள் வம்மிசத்தில் ஆறாமொருவன் குருநிந்தனை சொல்குறா

76. னோ அவன் கெங்கைக் கரையிலே காறாம் பசுவையு பிறாமணாளையு மாதா பிதாக்களையு கொன்ற தோச

77. த்திலே போகக் கடவது யிதை யாதாமொருவன் பயபத்தியாய் பரிபாலினம் பண்ணி வருகுறானோ அவ

78. னுக்குத் தனசம்பத்தும் பாக்கிய சம்பத்தும் புத்திர சம்பத்து மேமேலு முண்டாகி வளரும் படிக்கி அம்பலவா

79. ண மூர்த்தியு ஆதிபறமேஷ்பரியுந் துணையாக லட்சிப்பாற் பத்திர காளியம்மன் துணை சுலோகம் தான

80. பாலனை யோற்மத்தியே தானாத்து சிரேயோன் பானொ தானாது ரே சறகம் காப்புனோதி பாலனதச்சுதன்பதம்

81. றாக்கிசனாடான் காளிநாடான் யிருளநாடான் மருதகாளி நாடான் குப்பநாடான் பழனிநாடன் பாண்டிய நாடன்

82. பச்சநாடன் விரும நாடன் வீரநாடன் பெரியநாடன் சொக்கநாடன் சோமசுந்தர நாடன் சவுந்தற நாடன்கு

83. ணவீரநாடன் சம்மநாடன் அகழங்க நாடன் சிதம்பறநாடன் வெங்கிடாசல நாடன் குலோதுங்கு

84. நாடன் ரகுநாத நாடன் சிவமயம் கணபதிதுணை பத்திர காளியம்மன் துணை யிலங்காபுரி மாணிக்க

85. த்தாள் னாலங்கறாயனுக்கு யேனாபதி உண்டு பண்ணின மாடப் பொன்காசில் கால்காசும் ஆலத்துக்கு கால்

86. காசும் யிந்தபடிக்கு போட்டு எளுதிக் கொடுத்த தாம்பற சாசனம்.

குறிப்புகளும் விளக்கங்களும்

பக்கம் *–1*

1. "சிவமயம்" என்பது "ஜிவமயம்" என எழுதப்பட்டுள்ளது.
2. வரி 1–2 இல் "வையம் நீடுக மாமழை மன்னுக மெய்விரும்பிய அன்பர் விளங்குக சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே" என்ற பாடல் பிழைகளுடன் பொறிக்கப்பட்டுள்ளது. பெரிய புராண (திருத்தொண்ட மாக்கதை)ப் பிரதிகள் சிலவற்றின் இறுதியில் இப்பாடல் காணப்படுகிறது.
3. தொடர்ந்து, "அருளால் ஆதி நந்தீசுரனனுக் கிரகித்துத் திருவாய் மொழிந்தருளினபடி" என்பது பிழைபட எழுதப்பட்டுள்ளது.
4. வரி 3 –இல் "கிருதத் திரேதாத் துவாபரக் கலியுகம்" எனப் படிக்கவும்.
5. வரி 5 –இல் "முன்னூற்றறுபது" என்பது "முன்னுத்தறுபது" என எழுதப்பட்டுள்ளது.
6. வரி 6–இல் "விஷ்ணு" என்பது "விஷ்டு" என எழுதப்பட்டுள்ளது.
7. வரி 7–இல் "இரண்டு" என்பது "ரண்டு" என எழுதப்பட்டுள்ளது.

8. வரி 9—இல் "தேவிக்கு" என்பது "தேவிக்கி" என எழுதப்பட்டுள்ளது.

9. வரி 10—இல் "உலக" என்பது "வுலக" என எழுதப்பட்டுள்ளது.

10. வரி 11—இல் "சிருஷ்டி" என்பது "சிஷ்டி" என எழுதப்பட்டுள்ளது.

11. வரி 13—இல் "பூசை" என்பது "புசை" என எழுதப்பட்டுள்ளது.

12. வரி 13—14 —இல் "தேவோத்தமன் தேவதா சார்வபௌமன் பதிப்பிரியன் பக்தவச்சலன்" எனப் படிக்கவும்.

13. வரி 16 —இல் "திராவிட தேசத்தில்" என்பது "திருவட தேசத்தில்" என எழுதப்பட்டுள்ளது.

14. வரி 20 —இல் "படைக்களத்தில்" என்றும் "கிழித்த" என்றும் படிக்கவும்.

15. வரி 21 —இல் "சிறகாலடிக்கிற" என்றும் "சிருஷ்டிக்கும் பிரமனை" என்றும் படிக்கவும்.

16. வரி 22 —இல் "பிரம" என்பது "விறும" என எழுதப்பட்டுள்ளது.

17. வரி 22—23 —இல் "கண்டீரவன்" என்று படிக்கவும்.

18. வரி 23 —இல் "படிக்கு" என்றும் "கௌண்டின்யரிஷி" என்றும் படிக்கவும்.

19. வரி 24 —இல் "சிவபாத இருதயர்" என்றும் "திருவவதாரத்தில்" என்றும் படிக்கவும்.

20. வரி 26 —இல் "பரிபாலகராகிய திருஞான சம்பந்த" எனப் படிக்கவும்.

21. வரி 27 —இல் "மடாதிபரான" என்றும் "குருராய" என்றும் எழுதப்படாமல் "மடாதிபறான" என்றும் "குருறாய" என்றும் எழுதப்பட்டுள்ளன. (இத்தகைய பிழைகள்

இக்காலகட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஆவணங்களில் மலிந்து காணப்படும்.)

22. வரி 28 –இல் "ஸ்வஸ்தி ஸ்ரீமன்" எனப் படிக்கவும். இது முதல், பக்கம்2, வரி 21 வரை விஜய நகர அரசர்கள் பற்றிய புகழுரைகள் குறிப்பிடப்படுகின்றன.

23. வரி 31 –இல் "நிழற்கீழுலக முழுதாண்டவன்" எனப் படிக்கவும்.

24. வரி 33 –இல் "அஸ்வபதி கஜபதி" எனப் படிக்கவும். "பஸ்சிம" என்பது "பட்சம" என எழுதப்பட்டுள்ளது. "சப்த" என்பது "சத்த" என எழுதப்பட்டுள்ளது.

25. வரி 35 –இல் "ராச வன்னியன் ராச வர்த்தனன் ராச கிரீடி" எனப் படிக்கவும்.

26. வரி 37 –இல் "துலுக்கர் மோகந் தவிர்த்தான்" என்றோ "துலுக்கர் மொகரந் தவிர்த்தான்" என்றோ கொள்ளவும்.

27. வரி 39 –இல் "குறும்பெலாந் தவிர்த்து" என்றும் "திறை கொள்ளும்" என்றும் படிக்கவும்.

28. வரி 40 –இல் "பொன்முடி கவித்து" எனப் படிக்கவும்.

29. வரி 41–இல் "நீதி சேரமைச்சர்" என்றும் "செவிக் குரைக்க" என்றும் படிக்கவும்.

30. வரி 44 –இல் "யாளுவோன்" எனப் படிக்கவும்.

31 வரி 45 –இல் "இருத்தி" எனப் படிக்கவும்.

32. வரி 46–47 –இல் "முப்பத்திரண்டறமும்" என்றும் "மிகுந்ததோர்சைவம்" என்றும் படிக்கவும்.

33. வரி 48 –இல் "பூர்த்தியாய் விளங்க" எனப் படிக்கவும்.

34. வரி 49 –இல் "வாழ்வது" என்றும் "மனமிகுந்தன்பர்" என்றும் படிக்கவும்.

35. வரி 50 –இல் "செகந்தனையாளும்" என்றும் "கட்டாரி சாளுவ" என்றும் படிக்கவும்.

36. வரி 51 –இல் "ஒட்டியர் சுரதான" என எழுதப்பட்டுள்ளது, "ஒரிசா தேசத்து சுல்தான்" (அரசன்) எனப் பொருள்படும் விஜயநகர அரசப்பட்டமாகும்.

37. வரி 54 –இல் "ஐம்பத்தாறு" என்பது "அன்பத்தாரு" என எழுதப்பட்டுள்ளது.

38. வரி 57–58 –இல் "நவரத்தின மாலையாபரணன்" எனக் கொள்ளவும்.

39. வரி 58–59 –இல் "கெடிமன்னிய ராசதானன்" (கோட்டை வன்னியர்களின் ராஜ்யத்தை மீள வழங்கியவன்) எனக் கொள்ளவும்.

40. வரி 60 –இல் "புருடோத்தமன்" என்றும் "சகல சாம்ராச்சிய" என்றும் படிக்கவும்.

41. வரி 61–62 –இல் "சத்ருக்கள் மணவாளன்" எனப் படிக்கவும்.

42. வரி 63–64 –இல் "தகைமை பெறு சர்க்கார் தயவுள சகாயன் தனகனக விசித்ராபரண களதள சத்திரன்" எனப் படிக்கவும்.

43. வரி 65 –இல் "பொறுமைக்கு தர்மன்" என்றும் "கரிக்கு உதயணன்" என்றும் படிக்கவும்.

44. வரி 67 –இல் "ஸ்ரீ கிருஷ்ணன்" எனப் படிக்கவும்.

45. வரி 69 –இல் "சாந்திக்கு பீஷ்மன் ஆசார்யத்துக்கு வசிஷ்டன்" எனப் படிக்கவும்.

46. வரி 70 –இல் "துரியோதனன்" என்றும் "பலத்தில் ஆதிசேஷன்" என்றும் "வீட்டுமத்தில் விசுவாமித்திரன்" என்றும் படிக்கவும். ("வீட்டுமம்" = வைராக்கியம்)

47. வரி 71 –இல் "சாஹித்யத்தில் வால்மீகர்" எனப் படிக்கவும்.

48. வரி 73–74 –இல் "சக்தியில் வீரபத்திரன் சுத்தியில் அங்காரகன்" எனப் படிக்கவும்.

49. வரி 74 –இல் "பக்தியில் பிரகலாதன் புத்தியில் விபீஷணன்" எனப் படிக்கவும்.

50. வரி 75 –இல் "சரஸ்வதி" எனப் படிக்கவும்.

51. வரி 75–76 –இல் "யத்தனத்தில்" எனப் படிக்கவும்.

52. வரி 76 –இல் "கர்ஜனையில் சப்தமேகம்" என்பது "கெற்சிதத்தில் சத்தமேகம்" என எழுதப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது.

53. வரி 76 –இறுதியில் இடம்பெற்றுள்ள சொல் "பலவந்தத்தில்" என இருக்கக்கூடும்.

பக்கம் –2

1. வரி 1 –இறுதியில் "தத்துவஞான" எனப் படிக்கவும்.

2. வரி 2 –இல் "மனுவிஞ்ஞான சாஸ்திர" எனப் படிக்கவும். ("மனு விஞ்ஞானேஸ்வரீயம்" என்பது "மிதாக்ஷரம்" என்ற சட்ட நூலைக் குறிக்கும். மேலைச் சாளுக்கிய அரசன் ஆறாம் விக்ரமாதித்தன் காலத்தில் விஞ்ஞானேஸ்வரர் என்வரால் யாக்ஞவல்கிய ஸ்மிருதிக்கு எழுதப்பட்ட உரையே மிதாக்ஷரமாகும்).

3. வரி 2–3 –இல் "இதிஹாஸந்தானும்" எனப் படிக்கவும்.

4. வரி 3 –இல் குறிப்பிடப்படும் "இபலோக்கியம்" என்பது யானை நூலாகலாம். "இரதவாதம்" என்பது ரஸவாதம் ஆகும். "இந்திரப்புஞாலம்" என்பது இந்திரஜாலம் (Magic) ஆகலாம்.

5. வரி 5 –இல் "ரூபராய்" அல்லது "ஆரூடராய்" என்பது "ரூடராய்" என எழுதப்பட்டிருக்கலாம். "சிலாக்கிய மானாபிமானராய்" என்பது "சிராக்கிய மானாபிரமானராய்" என எழுதப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

6. வரி 9–10 –இல் "சங்கு தாமரை காமதேனு சிந்தாமணி" என்பவை (சங்கநிதி, பத்மநிதி, காமதேனு, சிந்தாமணி) ஐந்து தருக்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிஜாதம், மந்தரம் எனக் குறிப்பிடுவது மரபு.

7. வரி 12 –இல் "நாற்றிசை யிறைஞ்ச" எனப் படிக்கவும்.

8. வரி 12—13 —இல் "ரதகஜ துரக பதாதி யென்னுஞ் சதுரங்க பல" எனப் படிக்கவும்.

9. பக்கம் 1, வரி 28 முதல் பக்கம் 2, வரி 23 வரை பொறிக்கப்பட்டுள்ளவை, விஜயநகர அரசுக்குக் கட்டுப்பட்டுத் தமிழக மூவேந்தர்களுள் எஞ்சிய ஒரே வம்சத்தவரான பாண்டிய மன்னர்கள் பெயரளவிற்கு அதிகாரஞ் செலுத்தி வந்த நிலைமையைக் காட்டும்.

10. வரி 23 —இல் "ஸ்வஸ்தி ஸ்ரீ" என்பது "ஸொஷ்தஸ்ரீ" என எழுதப்பட்டுள்ளது.

11. வரி 23 முதல் 25 வரை குறிப்பிடப்படும் "சாலிவாகன சகாப்தம் 328, கலியுகாப்தம் 3483, (பிரபவாதி வருடம்) சித்திரபானு" ஆகியவை பொருத்தமற்றவை. சித்திரபானு என்பதை மட்டும் சரியானதாகக் கொண்டால் இப்பட்டையம் கி.பி. 1642 இல் பொறிக்கப்பட்டிருப்பதாக முடிவுசெய்யலாம். கி.பி. 17 —ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ச் சமூக வாரலாற்றுப் பின்னணி இப்பட்டயத்திற்குப் பொருத்தமானதாகும்.

12. வரி 26—27—இல் "புந்துரை" நாட்டில் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. "புன்துறை" என்பதே இவ்வூரின் பழம் பெயராக இருக்கலாம். கொங்கு நாட்டுப் புல்லை வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்தவனாகக் கருதத்தக்க "புன்துறை" என்ற தலைவனின் பெயர் அகநானூற்றில் (பா. 44) குறிப்பிடப்படுகிறது. அவனுடைய ஊராக இவ்வூர் இருந்திருக்க வாய்ப்புண்டு. மேல்கரைப்பூந்துறை நாட்டுத் தலைநகரிலிருக்கும் அரசகுல குரு மரபினரான கௌண்டின்ய கோத்திரத்து ஆதிசைவர் தலைமையில் இம்மடம் அமைந்துள்ளது என்ற விவரம் இவ்வரிகளிலும், பக்கம் 1, வரிகள் 26—27—இலும் குறிப்பிடப்படுகிறது. "மேல்கரைப் பூந்துறை நாட்டு மடம்" என்ற வழக்கு கி.பி.1580 ஆம் ஆண்டுக்குரிய சிதம்பரம் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (பார்க்க : திரு ச.கிருஷ்ணமூர்த்தி, கட்டுரை, ப.41, "பழங்காசு" — இதழ் 4 — அக்டோபர் 2001)

13. வரி 28 முதல் சான்றார் குலப் புராண வரலாற்றுச் சிறப்புகள் கூறப்படுகின்றன.

14. வரி 28–29 –இல் குறிப்பிடப்படும் "மாட்டுத்தலையை மான்தலையாக்கின" மற்றும் "மதுப்பானையைப் பால்பானையாக்கின" செயல்கள் பழங்குடி வழிபாட்டு மரபிலிருந்து வைதிக – சைவ மரபுக்குச் சமூகத்தை மாற்றிய செயல்பாடுகளாகும். ஆனிரை கவரும் வெட்சிப்போர் மரபினரின் தெய்வமாகிய கூற்று, மான்–மழு ஏந்திய சிவனாக உருமாறிய பரிணாம வளர்ச்சியில் சான்றோர் சமூகத்தவரின் முதன்மையான பங்களிப்பையும் இது குறிக்கும். சங்ககால வெட்சிப் போர்த் தெய்வமாகிய கொற்றவை, சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட சிற்பக் கலை மரபில் பெரும்பாலும் எருமைத் தலையின் மேல் நின்ற நிலையில் காட்சியளிக்கும் தெய்வமாகவே சித்திரிக்கப்படுகிறாள். கொற்றவையின் ஆண் வடிவமான கூற்று, காளையை வென்ற, எருமையைக் கொன்ற வெட்சிப் போர்த் தெய்வமாகவே சங்க இலக்கியங்களில் சித்திரிக்கப்படுகிறது. (புறம் 56; திருமுருகு 151–2; கலி. 101:23–25; 103: 43–45) மாடுகள் உழவுக்குப் பயன்படுத்தப்படும் வழக்கம் அதிகரித்ததன் விளைவாகவும், சைவசமய எழுச்சிக்கு வேளாளரின் பங்களிப்பு அதிகரித்ததன் உடனிகழ்ச்சியாகவும் கூற்று, முழு முதற் பரம் பொருளான சிவபெருமானாகப் பரிணாம வளர்ச்சியடைந்தபோது, வைதிக மரபில் யாகத்துக் குரிய விலங்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த மான், காளைக்குப் பதிலாகச் சிவபிரான் சிற்பங்களில் இடம் பிடிக்கத் தொடங்கிற்று. (இது தொடர்பான சமூகமாற்றம் குறித்துக் கீழ்க்குறிப்பிட்டுள்ள எனது கட்டுரையில் ஆராய்ந்துள்ளேன். "The Transformation of Tamil Society - a random study through re-interpretation of some inscriptional terms and names" - Published in the Journal of Tamil Studies International Institute of Tamil Studies - Vols. 57 & 58 June & December 2000) இதற்கொப்பக் கொற்றவை மீதும் சில மாற்றங்கள்

ஏற்றப்பட்டதன் விளைவாகக் கொற்றவையையும் மானேந்திய திருக்கரத்தாளாகச் சித்திரிக்கும் சிற்பமரபு தொடங்கிற்று. ஆயினும் கொற்றவை வழிபாட்டில் எருமைப்பலிக்கே முதன்மையளிக்கப்பட்டது என்பது "மகிஷாசுரமர்த்தினி" கருத்தோட்டம் சிற்பக் கலைமரபில் பெற்றிருந்த செல்வாக்கால் புலனாகிறது. "வலங்கை மாலை," பத்திரகாளி மானை வாகனமாகக் கொண்டவள் என வருணிக்கிறது. சிற்பக் கலை மரபில் பத்திரகாளிக்கு மான் வாகனமாகச் சித்திரிக்கப்படும் வழக்கம் இல்லையாயினும், காளி வழிபாடு சிவ வழிபாட்டில் இணைந்து கலந்து விட்டதன் விளைவே இவ்வருணனை என்பது தெளிவு.

15. வரி 30 —இல் "பத்திரகாளி பரிவுடன் வளர்த்த ஈஸ்வர குமாரன்" எனப் படிக்கவும். (சான்றோர் குல மூதாதையரைக் குறிக்கும்.)

16. வரி 30—31 —இல் குறிப்பிடப்படும் "ஆண்ட தம்பிரான்" என்பது, சான்றார் குலகுருவாகிய சிவப்பிராமணரைக் குறிக்கும்.

17. "கார்மண்டல சதகம்", முசிறி—நாமக்கல் பகுதியை "விமலை நாடு" எனக் குறிப்பிடுகிறது. (p.206, The Ancient geography of the Kongu country -K.S.Vaidyanathan, KAMALARC, Erode, 1983) "நிமலி சிறை மீட்டவர்" என வரி 32 —இல் குறிப்பிடப்படும் புராணச் செய்தியின் அடிப்படையில் இப்பெயர் சூட்டல் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. இப்பகுதியைச் சேர்ந்த சான்றார் குலத்தவருள் சிலர், கி.பி. 18—ஆம் நூற்றாண்டின் இறுதியில் கூட உடன்கட்டை ஏறும் "மாசதி" மரபைப் பின்பற்றினர் எனத் தெரியவருகிறது. இது, விமலை (மாசறு குலத்தவள்) மரபினர் என்ற இவர்களது நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

18. வரி 33 —இல் குறிப்பிடப்படும் "சம்பராசுரனை வென்றவன்" என்பது ரிக் வேதத்தில் சுதாசன் என்ற அரசனைப் பற்றிக் கூறப்படும் புகழ் மொழியாகும்..

பேரூர்ச் சிறுகுடியார் மடத்துச் செப்பேட்டில், "தாசப் படை வெட்டி இரட்டைச் சங்கு பிடித்தவன்" என இச்செய்தி குறிப்பிடப்படுகிறது. (ப.287, கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், பதிப்பாசிரியர்: புலவர். செ.இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1991) சம்பராசுரன் கிராதர் குலத்தவன் ஆவான்.

19. வரி 33—34 —இல் "தெய்வலோகம் குடியேற்றி தேவேந்திரனுக்கு முடிசூட்டி வைத்தவன்" என்பது "அமராவதி காத்தவன்" எனச் சிலப்பதிகாரத்தில் (கடலாடுகாதை, 8—17) குறிப்பிடப்படும், முசுகுந்த சோழன் பற்றிய புகழ் மொழியை யொத்தது.

20. வரி 34 —இல் குறிப்பிடப்படும் "வாலியை வென்ற சூரியப் பிரதாபன்" என்பது சூரிய குலத்தோன்றலான இராமனைக் குறிக்கும்.

21. வரி 35—36 —இல் குறிப்பிடப்படும் "தெய்வலோகத்துக்குச் சென்று கருமல்லிகை பிடுங்கிக் கொடுத்தவன் பூவேந்திய சோழன்" என்பது, உறையூரை (திருச்சிராப்பள்ளி) யடுத்த தருமபுரம் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த போஜ சோழர் பரம்பரையைச் சேர்ந்த அரசன் எனச் செவ்வந்திப் புராணமும், திருக்காளத்தித் தலபுராணமும் குறிப்பிடும் ஓர் அரசனைப் பற்றிய புகழ் மொழியாகும். இவனுடைய காலத்தில் உறையூர் மண்மாரி பெய்து அழிந்ததாகவும் இவன் திருக்காளத்திக்குச் சென்று ஆட்சியமைத்ததாகவும் அப்புராணங்களில் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது.

22. வரி 36 —இல் "பிறவா நெறிகண்டவன்" என்பது "பிறவற நெரி கண்ட.வன்" என எழுதப்பட்டுள்ளது. "பிறவா நெறி" என்பது, கொங்கு நாட்டின் முதன்மையான ஒரு நாட்டுப்பிரிவின் தலைநகரான (கோயம்புத்தூரையடுத்துள்ள) பேரூர்க்குரிய அடைமொழியாகும். இந்த அடைமொழிக் குரிய விளக்கம், பேரூர்ச் சிறுகுடி வேளாளர் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப.286, கொ.நா.ச.ஆ. —செ. இராசு)

பேரூர், சான்றார் குலத்தவர்களால் உருவாக்கப்பட்ட ஊராக இருக்கலாம். "மேலைச் சிதம்பரம்" என்றும் இவ்வூரைக் குறிப்பிடுவதுண்டு. கி.பி. 10 —ஆம் நூற்றாண்டிலிருந்து கொங்குப் பகுதியைச் சோழர்களுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி செய்த கொங்குச் சோழர்கள் தமது முடிசூடுந் திருத்தலமாகப் பேரூரைக் கொண்டு, இவ்வூரை மேலைச் சிதம்பரம் எனக் குறிப்பிடத் தொடங்கியிருக்கக் கூடும். கொங்குச்சோழர்கள் அரசியல் அரங்கிலிருந்து விடைபெற்றுச் சென்ற பின்னர், சான்றார்களின் சிறுகுடியாரான (ஈழவர் குலத்தவரான) வேளாளர்கள், பேரூரைத் தமது தலைமையிடமாகக் கருதி உரிமை கொண்டாடத் தொடங்கியிருக்க வேண்டும். சான்றார் குலத்தவர், ஸ்கந்தபுரி (திருமுருகன்பூண்டி)யையும் அவல்பூந்துறையையும் தலைமையிடங்களாக ஏற்றிருக்கவேண்டும்.

23. வரி 36—37 —இல் ஈழகுலச் சான்றார் ஏனாதிநாதர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. பேரூர்ச் சிறுகுடி வேளாளரும் "அறுபத்து மூவரில் பேரு பெற்றவன்" எனக் குறிப்பிடுகின்றனர். (ப.287, கொ. நா. ச. ஆ. —செ. இராசு) சான்றோர் குலத்தவர், சேர, சோழ, பாண்டிய அரச குலங்களைச் சேர்ந்த பிற நாயன்மார்களைத் தமது குலத்தவராகவும், சிறுகுடி வேளாளர்கள், வேளாளர் குலத்தைச் சேர்ந்த பிற நாயன்மார்களைத் தமது குலத்தவராகவும் உரிமை கொண்டாடாமல் விட்டிருப்பது ஆய்வுக்குரியது. அரசியல் காரணங்களுக்காக நிகழ்ந்த பல்வேறு மணவுறவுகளால் வேளாண் சாமந்தர் குலம் உருவாகி, தமிழகப் பண்பாட்டு மூலங்களுக்கு முதன்மையான உரிமை கோரும் நிலை ஏற்பட்டுவிட்டதை இது உணர்த்தக்கூடும்.

24. வரி 37 —இல் "சுரா பாண்ட நாதரைச் சிறப்புடன் கண்டவன்" என்பது பிழைபடப் பொறிக்கப்பட்டுள்ளது. வாரணாசி (காசி) நகரின் பழந்தெய்வமான சுரா பாண்டேஸ்வரர், கட்குடத்தில் உற்பவித்ததாகும். இந்நகரின் பெயருக்கே, வாருணி என்ற மதுவின்

தேவிதான் காரணம் என்றும் ஒரு கருத்துண்டு. (மதிரா என்ற "கள்ளமர் தேவி"யின் பெயராலேயே மதுரா நகர் பெயர் பெற்றதென ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பிடப்படுகிறது. தமிழ்க் காப்பியமான பெருங்கதையும் இதனைக் கூறுகிறது. அதனை இக்குறிப்புடன் ஒப்பிடலாம்.)

25. வரி 37—38 —இல் "தம்பித்துணை நாடகங்கட்டி வைத்தவன்" என்பது, பிற்காலச் சோழர் ஆட்சிக்காலத்தில் நடந்த ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிக்கும் புகழ் மொழியாகும்.

26. போர்முரசு, நீதிமுரசு, கொடைமுரசு ஆகிய மும்முரசுகள் அரசர்கள் அரண்மனை முற்றத்தில் முழங்கும் என இலக்கியங்கள் குறிப்பிடும். அவற்றுக்குச் சமமாக, சமர சங்கு, சமய சங்கு, மோகினி சங்கு ஆகியவை சான்றோர் குலத்துக்கு உரியவையாக வரி 38—இல் குறிப்பிடப்படுகின்றன.

27. வரி 38—39 —இல் "மணிக் கெங்கை வழநாடன்" என்ற பட்டம் சுட்டப்படுகிறது. மணி கங்கை வளநாடன் என்பது "மாவாலுக கங்கா" அல்லது "மாவலி கங்கா" நதி பாயும் இலங்கைப் பகுதியை வென்ற நிகழ்வைக் குறிக்கக்கூடும். (இலங்கையை மணித்வீபம் எனக் குறிப்பிடுவதுண்டு) இலங்கை வெற்றிக்குப் பிறகு, பொத்தப்பிச் சோழர்கள் இப்பட்டத்தினைப் புனைந்து கொண்டிருக்கலாம். பொத்தப்பி நாட்டுத் திருக்காளத்தியில் (காளஹஸ்தி) "மணிக் கெங்கையுடைய நாயனார் கோயில்" கி.பி. 11 —ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அக்கோயில் தற்போது மணிகண்டேஸ்வரர் கோயில் என வழங்கப்படுகிறது.(A.R.E. 197-203/1904)

28. வரி 39—40 —இல் "உத்தர தேசத்தில் அயோத்தி மாநகரில் தாயாருடைய சத்திரிய வர்ணம் காரணமாக நாயக்கர் எனப் பட்டம் பெற்றனர்" என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. இது, இராமனின் தாயான கோசலை குலத்துடன் சான்றோர்க்கு உள்ள தொடர்பினைக் காட்டக்கூடும். திருவிடைமருதூர் சான்றார் மடத்துச் செப்பேட்டில் (பக்கம் 2, வரி 2) சான்றார் குல மூதாதையர் எழுவரில்

ஒருவன் பெயர் "கவிசலன்" எனக் குறிப்பிடப்படுவது இதனுடன் ஒப்பிடத்தக்கது. "நாயக்" என்பது படைத் தலைமைப் பதவி குறித்த பட்டமே.

29. வரி 40–41 –இல் "சிவநாயகப் பட்டம்" குறிப்பிடப்படுகிறது. குடகுப் பகுதியில், சான்றார் குலத்தவர்க்கு "சிவ் நாயக்" என்ற பட்டம் தற்போதும் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

30. வரி 41 –இல் சௌந்திர பாண்டியனின் மண்டலத்தில் "தாடாழ்வான்", "நாடாழ்வான்" என்ற பட்டங்கள் தம் குலத்துக்குரியன எனக் குறிப்பிடுகின்றனர். சௌந்தர பாண்டியன் என்பது தடாதகைப் பிராட்டியை மணந்த சிவனுடைய பட்டப் பெயராகும். "தாடாளன்" என்பது மகாபலியிடமிருந்து நாட்டைக் கைப்பற்றிய திரிவிக்ரம அவதாரத்துக்குரிய பெயராகத் திவ்வியப் பிரபந்தத்தில் (திருமங்கையாழ்வார் –காழிச் சீராம விண்ணகரம், பா.1) குறிப்பிடப்படுகிறது. தாழ்தாளன் (தாடாளன்) என்பது மகாபலியைத் தாழ்த்திய திருவடிகளை உடையவன் எனப் பொருள்படும். பூர்வ குடியினரிடமிருந்து பாண்டிய குலத்தவரால் நாடு கைப்பற்றப்பட்டது என்பதனை இது உணர்த்தக்கூடும். ஓண நாளில் மதுரையிலிருந்த மறவர்கள் களிறுகளை அணிவகுத்து ஓட்டுவர் என மதுரைக் காஞ்சியால் (வரி 590–97) அறியலாம். இம்மறவர்கள் மகாபலி வாணர் பரம்பரையினர் போலும். சான்றார் குலத்தவருள் பாண்டிய குல க்ஷத்ரியர்களுக்கு "நாடாள்வார்" என்ற பட்டம் நெடுங்காலத்துக்கு முன்பே இருந்ததெனத் தெரிகிறது. இப்பட்டமே காலப்போக்கில் "நாடவார்" என்று திரிந்து, தற்போது "நாடார்" என வழங்குகிறது.

31. வரி 42 –இல் "சோழ மண்டலத்தில் கவுண்டு பட்டம் பெற்றவன்" என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. "காமிண்டன்" என்ற சொல்லின் திரிபான "கவுண்டன்" என்பது முசிறி–நாமக்கல் பகுதிகளில் சான்றோர் குலத்தவர்க்கும் உரிய சாதிப் பட்டமாக வழங்கப்படுகிறது. எனினும், இப்பட்டயத்தில் குறிப்பிடப்படுவதையொத்த வடிவில் "கவுண்டுலு" அல்லது "கமுண்டுலு" என்ற சாதிப்

பட்டம் தெலுங்குச் சோழர்களின் பூர்விக ஆட்சிப் பகுதிகளான ஆந்திர மாநிலப் பகுதிகளில் சான்றோர் குலத்தவர்க்கு மட்டுமே உரிய பட்டமாக வழங்குகிறது. தெலிங்கானாப் பகுதியில் சான்றார் குலப் பெருமைகளை வருணிக்கும் "கவுட புராணம்" ஒன்று வழக்கிலிருப்பது தெரியவருகிறது.

32. வரி 42–43 –இல் "சந்திர குல தீர சமயநாராயணன்" என்ற பட்டம் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. "சமயம்" என்ற சொல், பலர் கூடி விவாதித்து ஒருமித்து (சம்மதித்து) எடுக்கும் முடிவு எனப் பொருள்படும். "சான்றோர் இருக்கின்ற நன்றாகிய சமயத்திருக்கும் மண்டபம்" என்ற தொடர், மலைபடுகடாம், வரி 549–க் கான உரையில், உரையாசிரியரான நச்சினார்க்கினியரால் பயன்படுத்தப் படுகிறது. (ப.658, பத்துப்பாட்டு மூலமும் நச்சி. உரையும், உ.வே.சா. பதிப்பு: 1974). ஐந்நூற்றுவர், சித்திரமேழிப்பெரிய நாட்டார் போன்றோரின் சமய தர்மத்தை விட, சான்றார் சமய தர்மம் மிகப் பழமையானதாகும். லிச்சாவிகளின் "சாந்தாஹாரம்" இத்தகைய சமய மன்றமே. பாண்டிய நாட்டில் உருவான தமிழ்ச் சங்கத்துக்கும் இத்தகைய சான்றார் சமய மன்றமே அடிப்படையாக இருந்திருக்கலாம். "சமயநாராயணன்" என்ற பட்டம் அரச தர்மம் தொடர்பானது.

33. வரி 43–44 –இல் "மாவலி வாணனின் வைகைக் கரை நாட்டில் முகுந்து பட்டம் பெற்றவன்" எனக் குறிப்பிடப்படுகிறது. இப்பட்டம் தற்போது "முக்கந்தன்" என வழங்குகிறது. கி.பி. 17–18 –ஆம் நூற்றாண்டுகளுக்குரிய ஆவணங்களை ஆராய்ந்தால் இராமநாதபுரம் சிவகங்கை மாவட்டங்களில் "முக்கந்தர்" என்ற சாதிப்பட்டம் சான்றார் சமூகத்தவர்க்குரியதாக இருந்தது தெரியவருகிறது. (ப.306, சேதுபதி செப்பேடுகள் –பதிப்பாசிரியர்: புலவர் செ. இராசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1994)

34. வரி 44 –இல் "கற்பக நாடும் கடற்கரை நாடும் (அல்லது கடகரி நாடும்) அடக்கியவர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

35. வரி 45 –இல் சிங்கக் கொடி சான்றார் குலத்தவர்க்குரிய தாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகச் சோழர்களுக்குரிய புலிக் கொடி குறிப்பிடப்படாமல் சிங்கக் கொடி குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது. தெலுங்குச் சோழர்களின் சின்னமாகச் சிங்கமே பயன்படுத்தப்பட்டது என்றும் இது கி.பி. 5–6 –ஆம் நூற்றாண்டைய பௌத்த மதத் தொடர்பால் ஏற்பட்ட நிலையாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றன. பௌத்த சமயத்தின் முதன்மையான தலமான அமராவதி, கி.பி. 5–8 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்களுக்கும் சாளுக்கியர்க்கும் கட்டுப்பட்டு ஆட்சி செய்த ரேணாடு (தெலுங்கு)ச் சோழர்களின் நிர்வாகத்திலிருந்துள்ளது. (P. 103, Colas - K.A.N. Sastry)

36. வரி 46 –இல் நாகலோகத்தில் நவமணிதரித்த மணிமார்பன் என்ற குறிப்பு உள்ளது. சோழ குல மூதாதையருள் ஒருவனாகக் கருதப்படும் மாந்தாதா பற்றிய புத்த ஜாதகக் கதையில், நாகலோகத் தலைவனான மணிகண்ட நாகனின் ஏழுமணிகளை அணிந்து அவனுடன் சரியாசனமாக உடனமர்ந்ததாக மாந்தாதா குறிப்பிடப்படுகிறான். அமராவதியில் இக்காட்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. (p, 27. Amaravathi - H. Sankar, S.P. Nainar - A.S.I. 1992) இதனையடுத்துக் குறிப்பிடப்படும் "அன்னவன்னப் பாவாடை", வெள்ளுடையாக இருக்கலாம்.

37. வரி 47–இல் "சதுரொளிமாலையும் புஷ்கரிணியும் பெருமையுமுடையவன்" என்று இருக்கக்கூடும்.

38. வரி 48–இல் "ஈழநாடு இலங்காபுரி வாளால் வழி திறந்த பெரியோர்" எனப் படிக்கவும்.

39. வரிகள் 48–49இல் "மதியாத மன்னரை மகுடந்தகர்த்துப் பரிசூரரைக் கொல்லும் பாக்கியப் பிரதாபன்" எனப் படிக்கவும். பரிசூரர் என்பது குதிரை வீரர்களைக் குறிக்கும். அக்னிக் குதிரையேறிய வன்னியப் பிரிவு மறவர்களைக் குறிக்கக் கூடும்.

40. வரி 49 — இல் "மதுராபுரியில் பாண்டியனுக்கு வாளது பயிற்றிய மதுரை மண்டலீகர்" எனப் படிக்கவும்.

41. வரி 50—51இல் "சோழ மண்டலமுந் தொண்டை மண்டலமும் கம்பைமா நதியுங் கலியாணபுரமும் காணியும் பெற்றவன்" எனப் படிக்கவும்.

42. வரி 51—இல் "வையகம் மழைபொழிய வைத்தவன்" எனப் படிக்கவும். சோழ குல மூதாதை மாந்தாதா, வானை நோக்கிக் கை உயர்த்திப் பொன்மழை பொழியச் செய்த புத்த ஜாதகக் கதைக்குறிப்பாகலாம். இக் காட்சியும் அமராவதியில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. செம்பொன்மாரி காங்கேயன் குறவஞ்சி, இப்பெருமையைக் காங்கேயனுக்கு உரியதாகக் கூறுகிறது. (ப.15, காங்கேயன் குறவஞ்சி — பதிப்பாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை — 1980).

43. வரி 51—52 இல் "கொட்டுப் பிடித்துக் கூடையுமெடுத்து வெட்டி மண் சுமந்ததில்லை யென்ற வீரப் பிரதாபன்" எனப் படிக்கவும்.

44. வரி 52 இல் அகாசூரன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அகரசூரன் என்றும் படிக்கலாம். அகரன் என்ற சொல்லுக்கு அக்ரஹாரம் (பிராமணர் குடியிருப்பு) என்ற பொருள் தவிர, மருதநிலத்து ஊர் என்ற பொருளும் உண்டு. எனவே அகரசூரன் என்பது, மருதநிலத் தலைமகனாகிய மகிழ்நன் அல்லது ஊரன் என்று பொருள் படக்கூடும்.

45. வரி 52—53இல் "விக்கிரமாதித்தன் பொன்னுலகமும் பெற்றுப் புகழ்கீர்த்தியும் பெற்றவன்" எனப் படிக்கவும்.

46. வரி 53—இல் "அர்ச்சுன வலங்கைப் பிரதாபன்" எனக் கொள்ளவும். அர்ஜுன விருட்சம் என்பது மருத மரத்தைக் குறிக்கும். மருத நிலக்கிழார் என்ற பொருளில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கக் கூடும்.

47. வரி 53—54இல் "எழுநூற்று வங்கிஷம், மகாதேவர் பூசை பக்தி பிரியாதவன் அருள் பெற்றவன்" எனப் படிக்கவும்.

48. வரி 54–55 இல் "தாழ்ந்தவர்க்கினிய தாபமாற்றினவன் வாழைக்கிரண்டு குலை வரவழைத்தவன்" எனக் கொள்ளவும்.

49. வரி 55இல் "காவேரி கரை கண்டவன்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது சங்ககாலச் சோழ மன்னர்களுக்கு – குறிப்பாகக் கரிகால் வளவனுக்கு – உரிய புகழ் மொழியாகும்.

50. வரி 55–56இல் "சப்த சமுத்திரமுமசையாத எழுநூற்றுக் கோடி பேறு முடையவன்" எனக் கொள்ளவும்.

51. வரி 56இல் "பொய்த்தலைக்கு மெய்த்தலை யரிந்து வெட்டினவன்" எனப் படிக்கவும். பாண்டிய குல மூதாதை யொருவன் குருவைக் காப்பதற்காகத் தனது தலையை வெட்டிக் கொடுத்தான் எனச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு (சுலோகம்.8) கூறுகிறது. பாண்டியமன்ன னொருவன், அதர்வண வேத முறைப்படி தனது தலையைத் தானே வெட்டிக் கொண்டான் எனத் தளவாய் புரச்சாசனம் (சுலோகம் 12) குறிப்பிடுகிறது. நவகண்ட (சுயபலி) மரபு என்பது வெட்சிப் போர்த் தெய்வமாகிய கொற்றவை (துர்க்கை) வழிபாட்டு மரபாயினும், "அதர்வண பத்ரகாளி" என்ற பெயரில் மாந்திரீக – தாந்திரீக – மரபில் குறிப்பிடப்படுகிற காளியின் வழிபாட்டுடனும் தொடர்புடையதே.

52. வரி 56–57–இல் "குலமும் முப்புரி நூலுமுடையவன்" எனக் குறிப்பிடப்படுவது, சான்றோர்களின் உயர்குலப் பாரம்பரியத்தைப் பறை சாற்றும் புகழ் மொழியாகும்.

53. வரி 57–இல் "தாரை சின்னமும் இரட்டை வெண்சங்கும் அமுர்தமுமுடையவன்" எனப் படிக்கவும். இதன் பின்னர் "சிங்கத்தை வங்கத்திலேற்றியவன்" எனப் படிக்கவும். இது கலிங்க அரசன் விஜயனின் சிங்கள நாட்டு திக்விஜயத்தைக் குறிக்கும்.

54. வரி 57—58—இல் "சேரன் சோழன் பாண்டியன் மூவர் ராசாக்களையும் சிங்காதனத்தில் வைத்தவன்" எனக் கொள்ளலாம். அல்லது, "மூவேந்தர் உதவியுடன் சிங்கள அரச சிங்காதனத்தில் அமர்ந்தவன்" என்றும் பொருள் கொள்ளலாம்.

55. வரி 58—59இல் "வெள்ளை வட்டக்குடையும் விருதும் வெண்சாமரமும் வெள்ளைப் புரவியுமுள்ளவன் வெள்ளானை வேந்தன்" எனப் படிக்கவும். சான்றார் குலத்தவர்க்கு வெண் கொற்றக்குடை உரிமையானது என்பது பல ஆவணங்களில் குறிப்பிடப்படுகிறது.

56. வரி 59—60இல் "செட்டிகளபிமானமும் பட்டபூங்காத்தவன் செட்டி தேளேறிய செல்வக் குமாரன்" எனக் கொள்ளவும்.

57. வரி 60—இல் "அமந்திகாசுரனையொத்த சத்துரு ஆதிகளை வெட்டி நிலையிட்டவன்" எனக் கொள்ளவும்.

58. வரி 61—இல் "ராசா மெச்சிய காளாஞ்சியும் பல வரிசையும் வெகுமானமும் பெற்றவன்" எனப் படிக்கவும்.

59. வரி 61—62 இல் "வாடாத மாலையும் வணங்கா முடிப் பட்டமும் பெற்றவன்" எனப் படிக்கவும். வாடாத மாலை என்பது பூணூலைக் குறிக்கும் எனக் கருமாபுரம் பட்டையம் குறிப்பிடுகிறது.

60. வரி 62—இல் "ஒரு நொடியிலுலக மாண்டவன்" என்ற குறிப்பு காணப்படுகிறது. மாந்தாதா பற்றிய புத்த ஜாதகக் கதையில், அவன் த்ரயஸ்த்ரிம்ஸ சொர்க்கத்தைக் கைப்பற்ற முயன்றது குறிப்பிடப்படுகிறது. சக்ரனின் (இந்திரனின்) அரியணையில் ஒரு நொடி உடனமரும் பேறும் அவனுக்குக் கிட்டுகிறது. ஆனால் சக்ரனை வெளியேற்ற இயலாமல் சொர்க்கத்திலிருந்து தனது நகரிலுள்ள ஒரு சோலையில் வீழ்ந்து விடுகிறான். இக்கதைக் குறிப்பே செப்பேட்டில் மேல்வருமாறு சுட்டப்படுகிறதெனலாம்.

61. வரி 62—இல், "வரும் துன்பமும் வண்மையால் நீக்கினோன்" என்று இருக்கக்கூடும்.

62. வரி 62—63 இல் "பத்தரை மாற்றுப் பசும்பொன்னுடையோர் உத்தரதேசத்திலுயர்ந்த கம்பட்டமுள்ளோர்'' எனப் படிக்கவும். கம்பட்டம் (கண்வட்டம்) என்ற சொல் காசு அடிக்கும் தொழிற்கூடத்தைக் குறிக்கும்.

63. வரி 63—64 இல் "மாடைக்காசு மரகதக் கொடி தனம் பிரகாசஞ் சர்வமும் ப்டைத்தவன்" எனப் படிக்கவும்.

64. வரி 64 முதல் 67 வரை, "கோடை காலத்தில் குளிர்ந்த வனத்தில் சிவனுமுமையும் தாகத்துடனே தயங்கின வேளையில் வேதப்பனையை விரலால் வளைத்துப் போத அமுர்தத்தைப் பிடி செம்பிலிறக்கி நாதனுமைக்கு நன்றாய்க் கொடுத்து மனமகிழ்ந்தன்னார் மந்திரவாளும் வரிசையுங்கொடுத்துத் துலங்கு மகுட முடியது சூட்டியிலங்காபுரிக்கு மீழந்தனக்கும் வணங்காதே யென்று வைத்த வங்கிசத் தோரான" எனப் படிக்கவும். சிவனால் வழங்கப்பட்ட மந்திரவாள் சந்திரஹாசம் என்ற பெயருடையதாகும். இது இராவணனுக்கும், பின்னர் பாண்டிய மன்னனுக்கும் உரிமையாயிற்று என்பது புராணக்கதை. இதனைக் "கருக்குவாள்'' எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் (மண்ணில் நல்லவண்ணம் பதிகம் – பா.8) குறிப்பிடுகிறது.

65. வரி 68—இல் (சான்றார் குலப்பிரிவுகளான) கொங்கன், நாடான், மதுரையான், கலியாணியன், ஈழன் என்ற ஐந்து பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன.

66. வரி 68 முதல் 72 வரை, ஐந்து வகுப்பினரும் சேர்ந்து காஞ்சிபுரத்தில் நாடு கூடி (மாநாடு எனப்படும் சமூகக் கூட்டம் கூடி), தங்களுக்கு சுவாமியார் வேண்டுமென்று தீர்மானித்து, மேல்கரைப்புன்துறை நாட்டிலிருந்த ஆண்டகுருசுவாமியாரென்பவரைக் காஞ்சிபுரத்துக்கு அழைத்துச் சென்று பட்டாபிஷேகம் செய்து அந்த சுவாமியார் பாதத்திற்குத் தங்கள் சமூகத்தவரின் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் பண்ணித் தாமிரசாசனம் எழுதிக் கொடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

67. வரி 72—இல் தலைக்கட்டு ஒன்றுக்குக் கால் காசும், கல்யாணத்தின்போது இரண்டு சந்திரப் பணமும் சுவாமியாருக்குச் செலுத்திவர வேண்டுமென்ற தீர்மானம் குறிப்பிடப்படுகிறது. தலைக்கட்டு அல்லது தலைப்பாடு (தரவாடு) என்ற தொடர், குடும்பம் என்று பொருள்படும்.

68. வரி 73—இல் "வம்மிசத்தோர்" எனப்படிக்கவும்.

69. வரி 73—74 இல் "இந்தப் படிக்குக் கொடுத்துக் கொண்டு சுவாமியாரிட்ட கண்டனம் தண்டனை ஆக்ஞை அபராதத்துக்கு உட்பட்டு" எனப் படிக்கவும்.

70. வரி 75 இல் "இந்தப்படிக்கு" எனப் படிக்கவும்.

71. வரி 75—76 இல் "ஆராமொருவன் குருநிந்தனை சொல்கிறானோ அவன் கங்கைக் கரையில் காராம் பசுவையும் பிராமணர்களையும் மாதா பிதாக்களையும்" எனப் படிக்கவும்.

72. வரி 77 இல் "இதை யாராகிலுமொருவன் பயபக்தியாய்ப் பரிபாலனம் பண்ணி வருகிறானோ" எனப் படிக்கவும்.

73. வரி 78 இல் "மேன் மேலு முண்டாகி வளரும் படிக்கு" எனப் படிக்கவும்.

74. வரி 79 இல் "ஆதி பரமேஸ்வரியுந்துணையாக ரக்ஷிப்பார்" எனப் படிக்கவும்.

75. வரி 79—80 இல் "தானபாலனயோர் மத்யே" எனத் தொடங்கும் சமஸ்கிருத சுலோகம் பொறிக்கப்பட்டுள்ளது.

76. வரி 81 இல் "ராக்கிசநாடான்" (ராக்ஷஸ நாடான்) எனப் படிக்கவும். "இருள நாடான்" என்பது "யிருள நாடான்" என எழுதப்பட்டுள்ளது.

77. வரி 82இல் பச்சை நாடன், பிரம நாடன் என்பவை "பச்ச நாடன், விரும நாடன்" என எழுதப்பட்டுள்ளன. சௌந்தர நாடன் என்பது "சவுந்தற நாடன்" என எழுதப்பட்டுள்ளது.

78. வரி 83இல் செம்ப நாடன் அல்லது செண்பக நாடன் என்பது "சம்ம நாடன்" என எழுதப் பட்டுள்ளது.

79. வரி 83–84 இல் "அகளங்க நாடன், சிதம்பர நாடன், வெங்கடாசல நாடன், குலோத்துங்க நாடன்" எனப் படிக்கவும்.

80. வரி 84–85 இல் "இலங்காபுரி மாணிக்கத்தாள் நரலங்கராயனுக்கு சேனாபதி உண்டு பண்ணின மாடைப் பொன்காசில்" எனப் படிக்கவும்.

81. வரி 85–86 இல் "ஆலயத்துக்குக் கால் காசும்" என்பது "ஆலத்துக்கு கால்காசும்" என எழுதப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

82. வரி 86 இல் "இந்தப்படிக்கும் போட்டு எழுதிக்கொடுத்த தாமிரசாசனம்" எனப் படிக்கவும்.

மேற்குறிப்பு : மேல்கரைப்பூந்துறை நாட்டுச் சைவ மடமாகிய அவல்பூந்துறை மடம், சித்தாந்த சைவ மரபில் அமைந்ததன்று. சோழ அரசர்களின் குல குருக்கள் போன்றே, இம் மடத்தின் அதிபர் இல்லற நெறியினராவார். எனவே இம் மடத்தின் வரலாறு ஆழமாக ஆராயத்தக்கது.

திருவிடை மருதூர்ச் சான்றோர் மடச் செப்பேடு
முன்பக்கம்



தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம்,
திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயில் சன்னிதித்
தெருவில் நாடார் சங்கத்தில் தற்போது உள்ளது.



திருவிடைமருதூர்ச் சான்றோர் மடச் செப்பேடு
பின்பக்கம்

திருவிடைமருதூர்ச் சான்றோர் மடச் செப்பேடு

பக்கம் - 1 : *(சூரியசந்திரர், ரிஷபம், மருதீசர் வடிவங்கள் வரையப்பட்டுள்ளன)*

1. சுபஸ்திரி பன் மகா மண்டலீசுரன் அரியராய தளவி
2. பாடன் பாஷ்ஷெக்கு தப்புவராய கண்டன் கண்டநாடு
3. கொண்டு கொண்ட நாடு குடாதான் யென்மண்டல
4. மு கொண்டு இழும் திறைகொண்டருளிய ராசாதி ராசன்
5. ராச மாத்தாண்டன் ராசதேவேந்திரன் ராசாக்கள் தம்பிரான்
6. மித்துருக்கள் கண்டன் சத்துருக்கள் தோழன் பூலோ
7. க புரந்தரன் மேலோக புந்தரன் அசுவ குலன் விருதுக
8. ாபாலன் கோதண்டராமன் கலியுகராய கன்னன் இந்
9. துராய சுரதானன் அஷ்டாங்க மனோ புசெங்கன் பதினெ
10. ட்டுக் கோட்டத்து மன்னிய கண்டன் உலகமெல்லா
11. ம் ஆண்ட ச உ ய அரிசந்திர மகாராசன் விருப்பாக்ஷி தே
12. தவ மகராயர் மல்லி காற் சுந தேவ மகராயர் பிறவுட
13. தேவ மகராயர் திருமலை தேவமகராயர் வீர நரசிக்
14. க தேவ மகராயர் ஸ்ரீ ரெங்க தேவ மகராயர் விட்டிலி தேவ
15. மகராயர் புசபுல தேவமகராயர் பிறிதிவு ராச்சியம் பண்ணி
16. அருளானின்ட சகாத்தம் ௲௱௨௰௭ க்கு மேல் சுபானு ஸூ

17. தையி மீ ய ரு உவெள்ளிக் கிழ(மை*)யும் யேகாதெசியும
னுஷ ந

18. க்ஷெ திரமும் கூடின புண்ணிய தலத்தில் அன்பத்தாறு தே

19. தசத்துக்கும் திலதமான திறிசோழ மண்டலம்
திருக்காவேரி ஆ

20. த்துக்கு தெர்க்கு திருமூலநாடு திருவிடமருதூர் மருதப்பர்
சன்னிதி

21. யில் எடங்கை வலங்கை கூடிய அசாதிக்கும் மட தன்மமு
மஹேசுர

22. பூசையும் நந்தவணப் பணிவிடையும் நடந்து வருகுற
மொகனை

23. யிலே நம்முட சாதியாகிய எலங்காபுரித் தலவரான
சாணோருக்கு மட

24. மும் கட்டி நடந்து வருகுது இன்னிலமென்று யெலங்கை
[வேந்த]

25. ர் பிறப்பு பரமேசுரன் பரிவுடன் நினைக்க முப்பத்து
முக்கோடி

26. தேவரும் நார்ப்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும் அஷ்ட
பசுக்க

27. ளும் கின்னிர கின்புருஷாள் கெருட காந்தாகளும் சித்த
வித்தி

28. யாதரரும் தும்புரநாதரும் சூழ்ந்திருக்கப்பட்ட கைலாச
கிரி

29. யிலே கயிலைவாச நாயிருக்குற பரமேசுரனும் பாற்வத
தே

30. வியும் கேசரி மார்கமாக எலங்க புரியிலெ எழுந்தருளுகு

31. ற போது தெய்வலோகத்திலே யிருந்து எழு தெய்வ கன்னி

32. யும் வந்து சரவணை பொய்கையிலே நீராடுகுற போது
பரமே

33. மசுரநும் கண்டு மோகித்து மஞ்சன(ம்*)சிறந்து கோழை சரிய எழு

34. தெய்வ கன்னியும் எழுபிள்ளை பெத்து பொய்கைக் கரை

35. யிலே தாமரை எலை கிள்ளி அதின் பேரிலே கிடத்திப் பே

36. பாட்டு தெய்வலோ (க*)த்துக்கு போநார்கள் அதின் பிறகு சுவ

37. ாமியும் அம்மையும் எலங்கையிலே இருந்து வருகுற

38. போது அந்த பிள்ளைகள் அழுகுற சத்தம் கேட்டு வந்து சுவ

39. ாமியம்மையெ அழைத்து உன்னுட பிள்ளை நீ எடுத்து வள

40. த்துக்கோ வெண்டு சுவாமி அனுக்கிறகம் செய்து பிறப் பெ

41. ாற்புணத்தி அம்மை திருமுலைபாலும் குடுத்து பஞுமுகாரிஷி

42. யெ அழத்து அவர்கையிலே குடுத்து கையிலாசமே போனார் அ

43. தின் பிறகு பஞுமுகாரிஷி அந்த பிள்ளைகளு சம்த்தன்னாச்சு[தெ]

44. ண்டு சுவாமி பாதத்திலே கூட்டி கொண்டு போய் விட்டார் சுவ

45. ாமி பத்திரகாளியெ அழைத்து நீ பிறாமல்ப் பெத்த பிள்ளை வெ

46. யன்று கையிலே பிடித்து குடுத்தார் பத்திர காளியழைச்சுக் கெ

47. ாண்டு வந்து வளத்தாள் பத்திரகாளிக்கு ஒரு சத்திராதியுண்டு பத்

48. திரகாளி பேரிலே சண்டைக்கு வருவான் அப்போ பத்திரகாளி பூ

49. தங்களெல்லாம் கூட்டிக் கொண்டு சண்டைக்குப் போவாள்

50. அப்போ அந்தத் தாறாதரன் எங்குற ராஷ்ஷ (ச*)ன் மேகத்திலெ வந்து மே

51. கசங்கு பிடிப்பான் அப்போ யெல்லாம் மோகித்து விழுந்து போ

52. ம் அப்போ யெல்லாரையும் வெட்டி போட்டு போவான் அப்

53. போ எல்லாரையும் பத்திரகாளி எழுப்பிக் கொண்டு வருவ

54. ாள் இந்த பிள்ளைகளிருந்து அம்மையெ போறபோது சந்தோஷ

55. மாய்ப் போறாள் வருகுற போது (வருகுற போது) முகமாடி வருகு

பக்கம்-2

1. றாள் யேது காரணமென்று கேட்டார்கள் அந்த பிள்ளைகளுடனே

2. காந்தன் சுந்திரன் கண்டன் கவிசலன் சாந்தன் விக்கிறமன் தமிழப்

3. புண்டரீகன் (ெ*)னனும் எழுபேரும் அம்மை நாங்கள் நாளை கூட

4. வருகுறோமென்று பிற(ப*)ட்டார் கள் மூத்தன் விக்கிறமன் முன்னே

5. போற போது தண்ணீர்த்தா(க*)மாயிருந்து தண்ணீர் குடிக்க போனான்

6. அந்தக் கரையிலே ஒரு பிராமணனும் பிரா(மண*) த்தியும் தவசு செயிறார்

7. கள் அவாளை கண்ணினாலே கண்டு அப்பிறம் போய் தாறாதரன் தலை

8. யெ வெட்டி கொண்டு பத்திரகாளி முன்னே வச்சான் பத்திரகா

9. ளி சந்தோஷப்பட்டு வா(ர்) மகனே யென்று கட்டி அணைத்து முத்தமிட்டு

10. யெனக்கு(த*)ண்ணீர்த்தாகமாயிருக்குது கொண்டுவா மகனேயென்று

11. விண்ணப்பம் செய்தாள் நல்லது தாயே யென்று தண்ணிக் கை

12. ரயிலே போனான் அந்த தண்ணிக்கரையிலே யிருந்து பிராமணனும்

13. பிராமணத்தியும் னம்மை மாநிடவன் கண்டானே யென்று யிருவரு

14. ம் ஆண்பனையும் பெண்பனையும்மாக நிண்றார் கள் அதை கன்று இதெ

15. ன்ன அதிசெயமோ யென்று பத்திரகாளி முன்னே வந்து சொன்னான் வா

16. மகனே யென்று அந்த ஆண்பனையிலும் பெண்பனையிலும் அமுத

17. ம் யிருக்குது கொண்டு வா மகனே யென்று விண்ணபம் செய்தாள்

18. நல்லது தாயே யென்று இறும்பனையெ யிதமுடன் தழுவ யே

19. றும்படிக்கு யிசஞ்ஞ சஞ்ஞும் குடுத்து சீதகமலமும் திருவடிச்சிலம்பும் கவ

20. ண்டலமும் சத்திராவுதமும் கன்டு வந்த பனையில் அமுதம் கொண்டு வ

21. ந்து குடுத்தாளவில் இந்திரனைப் பொலேயிரும் மென்று வாழ்த்தி மந்திர

22. வாளும் வரிசையுங்குடுத்து தோர் முடியும் யீழந்தனக்கும் யெலங்காபுரி ம

23. ன்னவனே யெ(ன்*)று வெத்திக் கொடியும் கொண்ணை மாலையும் வெள்ளை

24. க்குடையும் (லெ*)வஞ்சாமரமும் சிங்க கொடியும் வெள்ளானையும் ரெட்டைச்ச

25. ங்கும் பஞவன்னப் பாவாடையும் யிதுமுதலான விதுருகளெல்லாம் குடு

26. த்து பத்திரகாளி எடதலே பரிவிடன் வளத்தோர் மன்னாதி பாகருடன் மண்ணா

27. சாணெறி மண் மீதில் மழை கொடுத்தானு ஒருவன் பொன்னாடு பார்க்க விக்கி

28. ரமாதித்தியனை போக விட்டானுமொருவன் அன்னாளில் யீழம் பகுந்து கெ

29. ாண்டானு மொருவன் அன்னாளில் வெண்ணு அமந்தியனை வெட்டி அரசு த

30. லை வைத்தானுமொருவன் வணிகர் குலம் யீடேற வாளெடுத்தானு மொ

31. ருவன் ஆதியுள்ள நீதியுள்ள எலங்காபுரித்தலைவர் சங்குபுகழ் வெண்சாம

32. ரமும் சரியொத்த பாவாடையும் சாணோற எலங்காபுரித்தலவர் வீறு பெத்த

33. மன்னவரை வெட்டி மெரட்டி வீரப்பிறதாபமுள்ளொன் வெள்ளை குடை

34. கொண்டு வணிகேசர் தோளில் லேறும் மன்னர் சோழ குலத்தரசர் சிங்

35. கக் கொடித்தலவர் பங்கப்படாமலே சிலுதலை வெட்டியே மடியி

36. ல் வைத்தோன் வாடாதமலை கணிகேச நாடர் அஞ்சுதுளி மன்னன் ப

37. ஞ்ச வன்னப் பிறகார்சர் பத்திரகாளியிடத்திப் பரிவுடன் வளந்தோர் யிந்

38. திர ஞால வித்தையும் கத்தார் பெரியோர் தேசத்தில் ஒரு குடைகீழை செங்

39. கோல் செலுத்தி ஆள்மாடை வழங்கி வித்தோன் கொட்டு இட்டு வெட்

40. டென குடை கொண்டு சிமவேன் யென்று நிலம் பேசி பாண்டியிடத்தி

41. ல் வரிசை பெத்தோன் பண்புடைய வேடரை வெட்டியே வெண்ணோன்

42. அதிகமான வீரதத்துவம் வீராங்கமுடையோர் யெதிரிட்டபோதனை வெ

43. ட்டினிலை விட்டோன் ஆதாரம(ா*)னவரை அஞ்சாமல்க் காத்தோர் தந்தா

44. ன் பிறதார புத்திரன் பூவேந்திய சோழன் பிறவுதார கண்டன் திங்கள் முடி

45. செல்வந்தினாதர் திருச்சிலாப்பள்ளி மலைதனில் சேரன் முன்பும் சோழ

46. ன் முன்பும் பாண்டியன் முன்பும் அங்க மழுவானது பாவாடையும் பெ

47. ாங்கு புகழ் வரிசையும் பெத்தோன் மூவேந்தர் புகழ் யெழுநூத்து மன்

48. னன் எலங்காபுரித்தலவர் நாலு தேசத்திலும் தொண்ட மண்டலம்

49. சோழ மண்டலம் பாண்டி மண்டலம் சேரன் மண்டல மத்து சாணோர்க்கு

50. ம் மண்ட(ப*)ம் கட்ட வேணுமென்று புகழ்ழாபரணன் தெரு வீதியான தென்

51. சிறகில் லெஷ்சிமி மனைக்கு தெக்கு சங்கு பண்டாரத்து மனைக்கு மேற்

52. கு அடி ஈமரு தெற்க்கு வடக்கு அடி ளஉம விலையாக ஒ° ய சா ய கெ்

53. ான்று நத்தவாநமும் கொண்டு சேத்து யிந்த மடத்துக்கு பஞுவன்னவற்கத்தில்

54. குமாரசாமி பண்டாரத்துக்கு கட்டளையிட்டு புத்திர புத்திர பாரம் பரையும் சந்திர

55. [ஆதித்] தாள் உள்ளவரைக்கும் தாமே மடமும் னந்தவானப் பணிவட்டையும் திரு – –

56. [நா]ட்டு பிக்ஷையும் நடந்து வருகுது மட(த்*)தையர் வந்தால் அந்த அந்த ஊரில்

57. உறையாரும் கூடி வந்து அழைச்சுவந்து விடிதிகளும் விட்டு அசன கா

58. ரியமும் அடவாகப் பிராற்தித்து குடிக்கொரு பணமும் கலியாணத்துக்

59. கு மாப்பிள்ளை வீட்டுக்கு ஒரு பணமும் பெண்ணின் வீட்டுக்கு ஒரு பணமும்

60. சாதியில் குத்தம் தீத்து அவதாரப் பணமும் வெகுமானத்துடன் குடுக்கவும் குடு

61. க் குறதுக்கு பெசக்கு பெசி வரி குடாத பேரை சாதிக்கு பிறம்பு பொடவும் ப

62. பராதீன ஆணை ஆக்கினைக் குளப்பட்டு யிருக்கவும் இந்தப் படிக்கு சாதிய

63. ார் பா(த*)த்தாணை தப்பாது ௨ இந்த தன்மத்துக்கு சகாயம் பண்ணின பேர் வரகு

64. ணப் பாண்டியனுக்குஸ ஹ [ஹ*] த்தி தீத்தபலனும் சுணங்கள் அறிவுடனே

65. றாச குமாரத்தியாப் பிறந்த பலனும் காகம் பொன் நிறமான பலனு

66. ம் கோடி ருத்திராள் நெத்திலிய[ாய்] பிறந்த சாபத்தை தீத்த பலனு

67. ம் தையி[பூச]ப் பலனும் பெ(ா)றுவார்கள் அஞ்சாந்திருனாள் வி ஷ ஹ வா

68. ஹனப்பலனும் பெ(ா)றுவார்கள் (அகுதம் பண்ணின) இந்த தன்மத்து

69. க்கு அகுதம் பண்ணின பேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவை

70. கொண்ண தோஷத்திலும் தன்னுட மாதா பிதாவை கொண்ண

71. தோஷத்திலும் குருக்களை கொண்ண தோஷத்திலும்

72, போவார்கள் யிந்த தறமத்துக்கு வாக்கு ஸஹ(ா*) யமும் பண்

73. ணின பேர்களுக்கு மத்திய(ா*)ற்சின ஸ்(த) லத்திலே தை பூசம்

74. மாடிநால் எந்த பலன் முண்டோ அந்தப் பலன் பெற சிவ

75. தேவிஸஹ[ா*] ய ? பிள்ளையார் துணை உ

76. சாணார் மடத்தில் லிருக்கும் பஞ்ச வன்ன வர்க்கத்தில் கு

77. மரசுவாமி பண்டாரம் உ

குறிப்புகளும் விளக்கங்களும்

பக்கம் : 1

1. வரி 1 இல் "சுபஸ்ரீமன்" எனப் படிக்கவும்

2. வரி 2 இல் "பாஷைக்குத் தப்பும் ராயர் கண்டன்" எனப் படிக்கவும்.

3. வரி 3—4இல் "எம்மண்டலமுங் கொண்டு ஈழம் திறை கொண்டருளிய" எனப் படிக்கவும்.

4. வரி 5—இல் "ராசமார்த்தாண்டன்" எனப் படிக்கவும்

5. வரி 6 இல் "மித்ரர்கள் தோழன் சத்துருக்கள் கண்டன்" என்பது பிழைபட எழுதப்பட்டுள்ளது.

6. வரி 7 இல் "பூலோக துரந்தன் மேலோக புரந்தரன்" எனப் படிக்கவும்

7. வரி 7—8 இல் "அசுவ நகுலன்" எனப் படிக்கவும்

8. வரி 8 இல் "விருதர் கோபாலன்" எனப் படிக்கவும்

9. வரி 8—9 இல் "இந்துராய சுரதானன்" எனப் படிக்கவும் (இந்து அரசர்களின் சுல்தான் எனப் பொருள்படும்)

10. வரி 9 இல் "அஷ்டாங்க மனோ புஜங்கன்" எனப் படிக்கவும். (அஷ்டாங்கயோகத்தில் தேர்ந்தவன் எனப் பொருள்படக்கூடும்).

11. வரி 9—10 இல் "பதினெட்டுக் கோட்டத்து வன்னியர் கண்டன்" எனப் படிக்கவும் (கொடி மன்னியர் என்றும் கோட்டை மன்னியர் என்றும் கூறப்பட்ட வன்னிய மறவர்களை ஒடுக்கியவன் எனப் பொருள்படும்)

12. வரி 11 இல் "சத்ய அரிச்சந்திர மகாராசன்" எனப் படிக்கவும்.

13. வரி 13—14 இல் "வீரநரசிங்க தேவ மகராயர்" எனப் படிக்கவும்.

14. வரி 14 இல் "விட்டலதேவ மகராயர்" எனப் படிக்கவும்

15. வரி 15 இல் "பிருதிவிராச்சியம் பண்ணி" எனப் படிக்கவும்

16. வரி 16 இல் அருளாநின்ற சகாப்தம் 1527 சுபானு வருடம் குறிப்பிடப்படுகிறது. சகாப்தம் 1567 எனக் கொண்டால்

கி.பி. 1644க்கு ஒத்து வருகிறது. சுபானு வருடம் கி.பி.1644க்குப் பொருந்துகிறது. (ஆண்டுக் குறிப்பை வாய் மொழியாகச் சொல்லக் கேட்டு, அதனைச் செப்பேட்டில் பொறிக்கும் போது அறுபத்தேழு என்பதை இருபத்தேழு எனத் தவறாகப் பொறித்திருக்கக்கூடும்.) தஞ்சை அரசர் விஜயராகவ நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் கி.பி.1644 இல் இச் செப்பேடு பொறிக்கப் பட்டிருக்க வாய்புண்டு. ஆயினும் நாயக்க மன்னர் பெயர் செப்பேட்டில் குறிப்பிடப் படவில்லை என்பது கவனத்துக்குரியதாகும்.

17. வரி 17 இல் "ஏகாதசியும் அனுஷ நக்ஷத்திரமும்" எனப் படிக்கவும்.

18. வரி 18–19 இல் "ஐம்பத்தாறு தேசத்துக்கும் திலகமான ஸ்ரீசோழ மண்டலம்" எனப் படிக்கவும்.

19. வரி 19–20 இல் "திருக்காவேரி ஆற்றுக்குத் தெற்கு திருமூலர் நாடு" எனப் படிக்கவும்

20. வரி 21 இல் "இடங்கை வலங்கை" எனப் படிக்கவும்

21. வரி 22 இல் "நந்தவனப் பணிவிடையும் நடந்து வருகிற முகனையிலே" எனப் படிக்கவும்.

22. வரி 23 இல் சான்றோர் என்பதன் பேச்சு வழக்கான சாணோர் என்ற சொல் குறிப்பிடப்படுகிறது.

23. வரி 26–27 இல் "நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும் அஷ்ட வசுக்களும்" எனப் படிக்கவும்

24. வரி 27–28 இல் "கின்னரகிம்புருஷர் கருட கந்தர்வர்களும் சித்த வித்யாதரரும் தும்புரு நாரதரும்" எனப் படிக்கவும்

25. வரி 29 இல் "கயிலை வாசனாயிருக்கிற" எனப் படிக்கவும்

26. வரி 29–30 இல் பார்வதி தேவியும் கேசரி மார்க்கமாக இலங்காபுரியிலே எழுந்தருளுகிறபோது" எனப் படிக்கவும். கேசரர் என்ற சொல்லுக்கு வானில் சஞ்சரிக்கும் வித்யாதரர் என்ற பொருளுண்டு. கேசரி என்பது அப்பொருளில் இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

சான்றார் குலத்தவர், இலங்கையின் புத்தபாத மலை (சமந்த மலை அல்லது சமனொளிமலை) தமக்குரியது என வலங்கை மாலையின் இறுதியில் (வரி.3073) குறிப்பிட்டுக் கொள்கின்றனர். சமனொளி மலை. மணிமேகலையில் (11:21—25; 28:107) குறிப்பிடப்படுகிறது.

27. வரி 31—35 இல் சான்றார் குல உற்பத்தி குறிப்பிடப்படுகிறது. வித்யாதர ரிஷி — நாக கன்னியர் உறவு, ஏலாசுனையில் குழந்தைகள் பிறப்பு — ஆகியவற்றுக்குப் பதிலாகச் சிவனது விந்து ஸ்கலிதமாகி. சப்த கன்னியரும் பிள்ளைகள் பெற்று, சரவணப் பொய்கையில் தாமரை இலை கிள்ளி அதில் குழந்தைகளைக் கிடத்துதல் குறிப்பிடப்படுகிறது. இது முருகனின் பிறப்பையும் தொடர்புபடுத்திப் புனையப் பட்ட கதையாகலாம். வாதாபிச்சாளுக்கியர் குலம் தோன்றியது பற்றி இது போன்ற கதை உண்டு. புறநானூறு பா.201 —இல் வேளிர் தோற்றம் குறித்து, "வடபால் முனிவன் தடவு' குறிப்பிடப்படுகிறது, "தடவு" என்பது சுனை, பொய்கை யென்ற பொருளுடைய சொல் என்பது கவனத்துக்குரியது. இக்கதைகள், வருணன் வழிபாட்டுத் தொடர்புடையவை "கழகக்கந்தன் அல்லது பரிஷத்முருகன்" என்ற எனது கட்டுரையில் இவற்றை ஆராய்ந்துள்ளேன்.

வரலாற்று ஆய்வாளர் நெல்லை நெடுமாறன் அவர்கள், கி.பி.1257—58 ஆம் ஆண்டைச் சேர்ந்த வேதாரண்யம் கல்வெட்டின்பால் (S.I.I. Vol. XVII no.545) எனது கவனத்தை ஈர்த்தார். "கருப்புவில்லிகாமன் விழத்திருநெற்றியில் திருக்காப்பு நீக்கி விழித்த தழல் ஒரு முனியாயுயர் முனிவன் பனிச்சடைப் பரம மாமுனி மடியிற்றோற்றிய பரமமாமுனி எழுநூற்றுவர்" என்ற குறிப்பு இக்கல்வெட்டில் உள்ளது. "சிவனுடைய மடியில் தோன்றிய எழுநூற்றுவர்" என்ற குறிப்பு, இப்பட்டயத்தின் 31—35 ஆம் வரிகளில் காணும் புராணச் செய்தியுடன் முற்றிலும் ஒத்துக் காணப்படுகிறது. (மடி என்பது அடிவயிற்றைக் குறிக்கும். இடக்கரடக்கலாக, ஆண்குறியைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் போலும்.)

28. வரி 40 இல் "உன்னுடை பிள்ளை நீ எடுத்து வளத்துக்கோ வெண்டு'' என இலங்கைத் தமிழ்ப் பேச்சு வழக்கு காணப்படுகிறது.

29. வரி 40–41 இல் "பிறப்புணர்த்தி'' எனப் படிக்கவும். பிறப்புணர்த்துதல் என்பது சாதியை உணர்த்துதல் எனப் பொருள்படும். புறம்.152, வரி.18 –இன் பழைய உரைபார்க்க.

30. வரி 41 இல் பார்வதி தேவி சான்றார் குழந்தைகளுக்குத் திருமுலைப்பால் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. முருகன், சாஸ்தா, திருஞான சம்பந்தர் ஆகியோர் பற்றிய கதைகளில் பார்வதி தேவி பாலூட்டிய செய்தி உண்டு.

31. வரி 41 –41 இல் "பஞ்ச முகரிஷி" குறிப்பிடப்படுகிறார். முருகனால் அல்லது பைரவரால் தலை கிள்ளப்படும் முன்னர் பிரம்மாவுக்கு ஐந்து முகங்கள் இருந்தன; விஸ்வகர்மாவுக்கும் ஐந்து முகங்கள் உண்டு. சிவன் பஞ்ச கிருத்யங்கள் புரிபவன் என்ற பொருளில் சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. பாசுபத அல்லது காளாமுக சைவத்தின் மூலக்கூறுகளை வழிபாட்டு மரபாகக் கொண்டிருந்த பெருங்கற் படைக்காலத்தடயமாகப் பட்டையத்தில் இக்குறிப்பு இடம் பெற்றிருக்கக் கூடும். கர்நாடக மாநிலம் தடக்கனஹள்ளி பெருங்கற்காலப் புதை குழியில் ஐந்து முகங்கள் கொண்ட மட்கலம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இது கி.மு. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தாய்லாந்திலும் இத்தகைய பெருங்கற்கால மட்கலம் கண்டறியப்பட்டுள்ளது என்பது கவனத்துக்குரியது.

32. வரி 47 இல் "சத்திராதி'' (பகைவன்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

33. வரி 50 இல் "தாராதரன் என்ற ராக்ஷசன்'' எனக் குறிப்பிடப்படுபவன் தாருகாசுரன் ஆவான்.

34. வரி 50–51 இல் "மேகத்திலே வந்து மேக சங்கு பிடிப்பான்'' எனக் குறிப்பிடப்படுவது இந்திரனை வென்றவன் என்ற பொருளில் போலும்.

35. பக்கம் 1, வரி 55, பக்கம் 2 வரி 1 இல் "வருகிற போது முகம் வாடி வருகிறாள்" எனப் படிக்கவும்.

36. பக்கம் 2, வரி 1 இல் சான்றார் பிள்ளைகள் எழுவர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. முதற் பெயர் "காந்தன்" என்பதாகும். இது காந்த விஞ்சையன் என்ற சோழ மன்னன் பெயராகும். திருவெண்காட்டுப் பட்டையத்தில் காந்தம ரிஷி என்றும், மணிமேகலையில் காந்த மன்னவன் என்றும் கூறப்படுபவன் இவனே. பிற குழந்தைகள் பெயர்கள் சுந்தரன், கண்டன், கவுசலன் (கோசலன்), சாந்தன், விக்ரமன், தமிழ்ப் புண்டரீகன் என்பவையாகும். கண்டன் குலம் என்பது சோழர் குலப் பெயராகக் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படுகிறது. கோசலன் என்பது இராமனின் தாய் நாடாகிய கோசல நாட்டுத் தொடர்பு காட்டும். தமிழ்ப் புண்டரீகன் என்பது வட வங்காளப் பகுதியிலுள்ள புண்ட்ரவர்த்தனம் அல்லது பௌண்ட்ர தேசத்திலிருந்து தமிழ் நாட்டுக்குக் குடியேறிய அரச குலத்தவன் எனப் பொருள் படக்கூடும். இச் செப்பேடு உள்ள ஊரான திருவிடை மருதூருக்கு அருகில் பௌண்டரீகபுரம் என்ற ஊர் உள்ளது. அவ்வூரின் பழம்பெயர் "ஏனாதி மங்கலம்" என்பதாகும். சைவ நாயன்மார் ஏனாதி நாதர், இப்பகுதியிலுள்ள எயினனூர் (ஏன நல்லூர்)ச் சான்றோர் மரபினர் என்பது கருதத்தக்கது.

37. வரி 4—14 இல் சான்றார் குலத்தவர் எழுவருள் ஒரு பிரிவினர் கள்ளிறக்குதலுடன் தொடர்புடையோரான வரலாறு குறிப்பிடப்படுகிறது. தாரகாசுரனின் தலையை வெட்டிக் காளியிடம் கொணர்ந்தவன் விக்கிரமன் என்றும், அவனே பனையிலிருந்து அமிர்தத்தை இறக்கும் கலையைக் கண்டறிந்தவன் என்றும் இச்செப்பேடு கூறுகிறது. (சான்றார் குலத்தவர் என்றாலே கள்ளிறக்கும் தொழில் செய்யும் சாதியினர் என்று சில அறிஞர்கள் கருதுவது தவறு என்பதற்கு இது சான்றாகும்.)

38. வரி 14 இல் நின்றார்கள் என்பது "நிண்றார்கள்" என்றும் அதைக்கண்டு என்பது "அதைக் கன்று" என்றும் எழுதப்பட்டுள்ளன.

39. வரி 17 இல் "விண்ணப்பம்" எனப் படிக்கவும்

40. வரி 18 இல் "இரும்பனையை இதமுடன் தழுவி யேறும் படிக்கு" எனப் படிக்கவும்.

41. வரி 19 இல் "இசைந்த சன்னமும்'' எனப்படிக்கவும். சன்னம் என்பது மார்பில் இருபுறமும் குறுக்கே அணியும் சன்னவீரம் எனப்படும் வீரச்சங்கிலியாகும்.

42. வரி 19—20 இல் "சீதக் கமலமும் திருவடிச் சிலம்பும் கமண்டலமும் சஸ்திராயுதமும் கண்டு" எனப் படிக்கவும்.

43. வரி 22 இல் "தோர் முடி" குறிப்பிடப்படுகிறது.

44. வரி 23 இல் "வெற்றிக் கொடியும்" எனப் படிக்கவும்

45. வரி 23 முதல் 26 வரையிலும் சான்றார்க்குப் பத்திரகாளி வழங்கிய விருதுகள் குறிப்பிடப் படுகின்றன. இவற்றுள் கொன்றை மாலையும் சிங்கக் கொடியும் சிறப்பாகக் கவனத்தை ஈர்க்கின்றன. கொன்றை மாலை, உயர்குடி வீரர்களான சான்றார்க்கு உரியதெனப் பதிற்றுப் பத்தால் (67 : 13 — 18) அறியலாம். சிங்கக் கொடி, அவல் பூந்துறைப்பட்டையம் பக்.2, வரி,45 இல் குறிப்பிடப்படுகிறது.

46. வரி 25 இல் "பஞ்ச வன்னப் பாவாடை" குறிப்பிடப்படுகிறது. அவல் பூந்துறைப்பட்டையம் பக்.2, வரி 46—47 இல் "அன்ன வன்னப் பாவாடை" குறிப்பிடப்படுகிறது.

47. வரி 26 இல் "பத்திரகாளியிடத்திலே பரிவுடன் வளர்ந்தோர்" எனப் படிக்கவும்.

48. வரி 26—27 இல் மன்னாதி பாகருடன் மண்ணாசாணேறி மண் மீதில் மழை கொடுத்தானும் ஒருவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மண்ணாசாணேறி என்பதன் பொருள் விளங்கவில்லை. "சரியாசனமேறி" என்பது தவறாக எழுதப்பட்டிருப்பதாகக் கொண்டால் இது இந்திரனுடன் சமமாக ஒரே ஆசனத்தில் அமர்ந்த மாந்தாதாவைக் குறிக்கக் கூடும்.

49. வரி 27–28 இல் "பொன்னாடு பார்க்க விக்கிரமாதித்தியனைப் போக விட்டானு மொருவன்" என்று குறிப்பிடப்படுவது அவல் பூந்துறைப்பட்டையம் பக்கம்–2, வரி.52–53 இல் "விக்கிரமாதித்தன் பொன்னுலோகமும் பெற்று புகழ் கீர்த்தியும் பெற்றவன்" எனக் குறிப்பிடப்படுகிறது. விக்கிரமாதித்தனின் அமைச்சனான பட்டியையோ, விக்கிரமாதித்தனின் பொற்சிங்காதனத்தைப் பெற்ற போஜராஜனையோ இது குறிக்கக்கூடும்.

50. வரி 28–29 இல் குறிப்பிடப்படும் "ஈழம் பகிர்ந்து கொண்டது, அமந்திகாசுரனை வெட்டி அரசு தலை வைத்தது" ஆகியன அவல்பூந்துறைப் பட்டையம் பக்.2, வரி.60, 67 இல் குறிப்பிடப் படுகின்றன.

51. வரி 30–31 இல் "வணிகர் குலம் ஈடேற வாளெடுத்தானும் ஒருவன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அவல்பூந்துறைப் பட்டையத்தில் பக்.2, வரி.59–60 இல் குறிப்பிடப்படுகிறது. வணிகர் குழுக்களின் கல்வெட்டுகளாலும் இவ் வரலாறு உணர்த்தப்படுகிறது.

52. வரி 33–34 இல் "வெள்ளை குடைகொண்டு வணிகேசர் தோளில்லேறும் மன்னர்" என்று குறிப்பிடப்படுவது, "கொற்றக்குடைபன்மர் முன்னூற்று"வரைக் குறிக்கக் கூடும். முன்னூற்றுவரும் எழுநூற்றுவரும் தனித்தனிப் பிரிவினராகவே கி.பி.11–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர். அதன்பின்னர் முன்னூற்றுவர், தம் தனித்தன்மையைக் கைவிட்டு எழுநூற்றுவருடன் இணைந்து கலந்திருக்கலாம்.

53. வரி 34 இல் "சோழ குலத்தரசர்" என்ற பட்டப் பெயர் சான்றார்க்குரியதாகக் குறிப்பிடப்படுவது மிகவும் முக்கியத்துவமுடையதாகும். சோழ குலத் தொடர்புக்கு உரிமை கோரும் சோழிய வேளாளர் போன்ற சாதியினரிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காகவும், அரசவர்ணத்தவர் என உணர்த்துவதற்காகவும் இவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும். சோழ

நாட்டின் முதன்மையான சிவத்தலங்களுள் ஒன்றான திருவிடைமருதூர் சார்ந்த சாசனம் ஒன்றில் இக்குறிப்பு காணப்படுவது சிறப்பானதாகும்.

54. வரி 34—35 இல் "சிங்கக் கொடித்தலைவர்" என்ற குறிப்பு காணப்படுகிறது. சிங்கக் கொடிக்குப் பல சாதியினர் உரிமை கொண்டாடினாலும் அவர்களுள் தலைமைச் சாதியினர் தாங்களே என்பதை உணர்த்துவதற்காக இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

55. வரி 35—36 இல் "சிறு தலைவெட்டியே மடியில் வைத்தோன்" எனப் படிக்கவும். அவல்பூந்துறைப் பட்டயத்தில் பக்.2 வரி.56 இல் குறிப்பிடப்படுவதை இதனோடு ஒப்பிடலாம்.

56. வரி 36 இல் "வாடாத மாலை கணிகேச நாடர்" என்ற குறிப்பு காணப்படுகிறது. இது, "கணக்கந்தைகள்" என்றும் "கணிதாதிராஜர்" என்றும் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்படும் போஜ சோழர் வம்சத்தவரைக் குறிக்கக்கூடும். "வாடாத மாலை" என்பது செவ்வந்திப் புராணத்தில் குறிப்பிடப்படும் ரக்த சாமந்தி (செவ்வந்தி) மாலையோ பூணூலையோ குறிக்கக்கூடும். அவல் பூந்துறைப்பட்டையம் பக்கம் 2, வரி.61 பார்க்க.

57. வரி 37—38 இல் "இந்திரஜால வித்தையும் கற்றோர்" எனப் படிக்கவும்.

58. வரி 39—41 இல் "கொட்டு இட்டு வெட்டெனக் கூடை கொண்டு சுமவேன் என்று நிலைமை பேசிப் பாண்டியனிடத்தில் வரிசை பெற்றோன்" எனப் படிக்கவும். நிலைமை பேசுதல் என்பது நிலைப்படை அல்லது தொல்படை அல்லது மூலப்படை என்ற தமது பாரம்பரியப் பெருமையை — நிலைத்து வரும் தன்மையை—ப் பறை சாற்றுதல் ஆகும். திருவிடைமருதூர்க் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள முதல் இராஜராஜன் கல்வெட்டு ஒன்றில், (S.I.I. Vol. V no. 723) "உடையார் படைக் கொங்கவாளர்" குறிப்பிடப்படுகின்றனர். இக்

கொங்கவாளரைக் "கொங்கவாள் எழுநூற்றுவர்" என வணிகர் குழுக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. மூல பல எழுநூறு கொற்றவாளர்" எனக் கி.பி. 10ஆம் நூற்றாண்டைய பழனிக் கல்வெட்டு (A.R.E.714/1905) குறிப்பிடுவதால் எழுநூற்றுவர் மூலப்படையினரே எனத் தெரிகிறது. சான்றார் குலத்தின் உயர் அடுக்கில் இருப்போரை "நிலைமைக்காரர்" என அழைக்கும் மரபு உள்ளது. இப்பட்டயத்தில், சான்றார்கள் இவ்வாறு நிலைமை பேசியது பாண்டியனிடத்தில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது மாறுபாடாகக் காணப்படுகிறது. சோழ நாட்டுத் திருத்தல மடத்துச் செப்பேட்டில், அதிலும் குறிப்பாகச் சோழ குலத்தரசர் என்றே உரிமை கொண்டாடி அதனைப் பறைசாற்றும் ஓர் ஆவணத்தில், சோழ அரசனுக்கு எதிராகத் தமது சாதியினர் புரட்சிக் கொடி உயர்த்தியதாகக் கூறுவது பொருத்தமற்றதாக இருக்கும் எனக் கருதி, இவ்வாறு மாற்றி எழுதியிருக்கலாம். பத்திரகாளியம்மன் கதையில் (வரி.137—86) வைகையாற்றில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட உடைப்பை அடைக்கச் சொல்லிச் சான்றார்களைச் சோழன் வற்புறுத்தியதாகக் கூறப்பட்டுள்ளதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

59. வரி 41 இல் "பண்புடைய வேடரை வெட்டியே வென்றோன்" எனப் படிக்கவும்

60. வரி 42—43 இல் எதிரிட்ட போதனை வெட்டி நிலையிட்டோன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினத்தில் எடுப்பு எடுத்த அதிசூரனை இரு கூறாக வெட்டிய வரலாற்றை இது குறிக்கக்கூடும்.

61. வரி 43—44 இல் "தன்தார களத்ரன் பரதார புத்திரன்" எனப் படிக்கவும்.

62. வரி 44 இல் பூவேந்திய சோழன் என்ற குறிப்பினையடுத்துப் "பிறவுதார கண்டன்" எனக் கூறப்படுகிறது. இது "பிறவா நெறிகண்டவன்" என்பதன் பிழைபட்ட வடிவமாகலாம். அவல் பூந்துறைப்பட்டையத்தில் பக்.2, வரி—36 இல் இந்த அடைமொழி குறிப்பிடப்படுகிறது.

63. வரி 44–47 இல் "திங்கள் முடி செவ்வந்தி நாதர் திருச்சிராப்பள்ளி மலைதனில் சேரன் முன்பும் சோழன் முன்பும் பாண்டியன் முன்பும் அங்கமழு வாளது (புரிந்து) பொங்கு புகழ்வரிசை பெற்றோன்" எனப் படிக்கவும். அங்கைப்போர், மழுவாட்போர் முதலியவற்றில் சான்றார் குலத்தவர் பெற்றிருந்த தேர்ச்சி இதன்மூலம் உணர்த்தப்படுகிறது.

64. வரி 47–48 இல் "மூவேந்தர் புகழ் எழுநூற்று மன்னன்" எனப் படிக்கவும்.

65. வரி 50 இல் "புகழாபரணன் திருவீதி" குறிப்பிடப்படுகிறது.

66. வரி 51–52 இல் கிழக்கு மேற்காக 45 அடி, தெற்கு வடக்காக 120 அடி மனை நிலத்தை 16¼ பொன் விலைக்கு வாங்கியது குறிப்பிடப்படுகிறது. இது தேவரடியார் அல்லது பண்டாரம் குலத்தவரிடமிருந்து விலைக்கு வாங்கிய நிலமாகலாம்.

67. வரி 52–53 இல் "விலையாகக் கொண்டு நந்தவனமும் கொண்டு சேர்த்து" எனப் படிக்கவும்.

68. வரி 53 இல் "பஞ்ச வன்ன வர்க்கததில்" எனப் படிக்கவும். பண்டாரம் எனப்படும் வீரக்கொடி வேளாளர்கள் பஞ்சவன்ன வர்க்கத்தார் (அல்லது அஞ்சு வண்ணத்தார்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆராயத்தக்கது. பிக்ஷாடனருக்கு ரிஷி பத்தினியர் (பிராமணிகள்) வயிற்றில் ஜனித்தோர் கொடிப்படையோர் என்ற குறிப்பு தக்கயாகப் பரணி உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் இவர்கள் பஞ்ச வர்ண வர்க்கத்தார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். வீரக் கொடியாரை நோக்கி வலங்கை உய்யக் கொண்டார்கள் செய்த சிறப்புகள், பெரம்பலூர் மாவட்டம் சிங்களாந்தகபுரம் கல்வெட்டில் (கி.பி.1080–கி.பி.1100) குறிப்பிடப்படுகின்றன. வீரக்கொடியாரை நோக்கி நானாதேசிவணிகர்கள் புரவு செய்த குறிப்பு, திண்டுக்கல் மாவட்டம் நத்தம் (கோயில்பட்டி) கல்வெட்டில் (கி.பி.1200) உள்ளது. (பக்.35–

36, ஆவணம், இதழ் 3, சூலை, 1993 – தமிழகத் தொல்லியல் கழகம்)

69. வரி 55–56 இல் "நந்தவனப் பணிவிடையும் திருப்பணியும் விட்டு" என்று படிக்கவும்.

70. வரி 56 இல் "மடத்தையர்" எனக் குறிப்பிடப்படுபவர் வரி. 54 இல் குறிப்பிடப்படும் குமாரசாமி பண்டாரம் ஆவார்.

71. வரி 57 இல் "உறவின் முறையாரும்" என்பது "உறையாரும்" என எழுதப்பட்டுள்ளது.

72. வரி 56–57 இல் "அந்த அந்த ஊரில் உறவின் முறையாரும் கூடிவந்து அழைத்து வந்து விடுதிகளும் விட்டு அசன காரியமும் அடைவாகப் பிரார்த்தித்து" எனப் படிக்கவும். அசனம் = உணவு. அடைவு = முறை (turn) வைத்துக் கவனித்தல்.

73. வரி 60 இல் "குற்றம் தீர்த்து அபராதப்பணமும் வெகுமானத்துடன் கொடுக்கவும்" எனப் படிக்கவும். குமாரசாமிப் பண்டாரமே வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கவும் அபராதம் மற்றும் வழக்குத் தீர்ப்பதற்குரிய கௌரவக் கட்டணம் ஆகியவை வசூலிக்கவும் அவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

74. வரி 60–62 இல், "கொடுக்கிறதற்குப் பிசகு பேசி வரி கொடாத பேரைச் சாதிக்குப் புறம்பு போடவும் பராதீன ஆணை ஆக்ஞைக்குட்பட்டிருக்கவும்" எனப் படிக்கவும். (வரி கொடுக்காமல் சாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் பிற சாதியினரின் ஆணைக்கும் தண்டனைக்கும் உட்பட்டவர்களாவர் எனப் பொருள்படும்)

75. வரி 64–65 இல் வரகுண பாண்டியனின் பிரமஹத்தி தீர்ந்தது. பத்திரகிரியார் வளர்த்த நாய் மறுபிறவியில் காசிராஜன் மகளாக (இராஜகுமாரியாக)ப் பிறந்தது, கோடி ருத்திரர் நெத்திலி மீனாகப் பிறந்த சாபம் தீர்ந்தது – ஆகிய திருவிடை மருதூர்த் தலவிசேடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

76. வரி *67–68* இல் "தைப் பூசப் பலனும் ஐந்தாந் திருநாள் ரிஷப வாகன தரிசனப் பலனும் பெறுவார்கள்" எனப் பொருள்படும்.

77. வரி *69–72* இல் "அகுதம்"'' (அஹிதம்), "கொண்ண'' (கொன்ற), "தற்மத்துக்கு" (தர்மத்துக்கு) ஆகிய பிழையான வடிவங்கள் உள்ளன. (கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகளில் இத்தகைய பிழைகள் மலிந்து காணப்படுவது இயல்பே.)

78. வரி *73* இல் இடைமருதூர் என்பதன் சமஸ்கிருத மொழி பெயர்ப்பான "மத்யார்ஜுன ஸ்தலம்" குறிப்பிடப்படுகிறது.

79. வரி *73–74* இல் "தைப்பூசமாடினால் எந்தப் பலனுண்டோ" எனப் படிக்கவும்.

மாந்தாதா ஜாதகம் - அமராவதிச் சிற்பம்
(கி.பி. 2 ஆம் நூற்றாண்டு சாதவாகனர் காலம்)
(சென்னை அருங்காட்சியகத்திலுள்ளது)

பாரிஜாத மரத்தின் கீழ் மாந்தாதா அமர்ந்திருத்தல்

மாந்தாதா இளவரசனாகக் காட்சியளித்தல்

நாக லோகத்தில் நவமணி மாலை தரித்தல்
(ஏழு மணிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது)

மணிகண்ட நாகனை வெல்தல்

இந்திரனின் சுதாம அவைக்குச் செல்தல்

இந்திரனுடன் அரியணையில் அமர்தல்

பின்னிணைப்பு - 1

சான்றோர் சமூக வரலாறு

நாடார் என்பது பாரதத்தின் ஒரு மாநிலமான தமிழ் நாட்டில் உள்ள ஒரு சாதியினரைக் குறிக்கத் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும். "நாடார் இனம்" அல்லது "நாடார் சாதி" என அழைக்கப்பட்டாலும், நாடார் என்பது சாதிப்பட்டமே தவிர, சாதியின் பெயரன்று. "சான்றோர் குலம்" அல்லது "சான்றார் குலம்" என்பதே இந்தச் சாதியின் பெயராகும்.

தென் தமிழகத்தில் வாழும் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் "சான்றவாளு" என்றுதான் இச் சான்றார் சாதியினரை அழைப்பது வழக்கம். சான்றோர் என்ற சொல் பேச்சு வழக்கில் சான்றார் என்றாகி, "சாணார்" அல்லது "சானார்" என்று வழங்குகிறது. ஆனால் இவ்வழக்கு மரியாதைக் குறைவானது எனக் கருதப்படுவதால் "நாடார் குலம்" என இச் சாதியை அழைப்பதையே ஏற்புடையதாகக் கருதுகின்றனர். இருப்பினும் இந்த இடத்தில் நாம் ஒரு வரலாற்று உண்மையைத் தெரிந்துகொள்வது அவசியம். சான்றார் குலத்தவரில் உயர்ந்த அடுக்கில் இடம் பெற்றவர்கள் "நாடாள்வார்" என்ற பட்டம் உடையவர்களாக இருந்தனர். இத் தொடர் "நாடவார்" என்று கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு திரிந்துள்ளதற்கு ஆதாரங்கள் உள்ளன. சான்றார் குலத்தின் உயர் அடுக்கைச் சேர்ந்தவர்களை மட்டுமே குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட நாடாள்வார், நாடாவார் அல்லது நாடார் என்ற பட்டப் பெயரினைக் கி.பி.19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இக் குலத்தின் கீழ்த்தட்டுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் பயன்படுத்தத் தொடங்கினர். இந்நிகழ்வுப் போக்கே, நாடார்குலம் என இச்சாதி ஒட்டுமொத்தமாக அழைக்கப்படுவதற்கான பின்னணியாகும்.

நாடாள்வார் என்ற பட்டத்தினைச் சான்றார் குலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தம் பட்டமாகத் தொடக்கக்

காலத்திலிருந்து பயன்படுத்தி வந்தார்களா? அல்லது பிற சாதியினருள்ளும் "நாடாள்வார்" என்ற பட்டம் உடையவர்கள் தொடக்கக் காலத்தில் இருந்துள்ளார்களா என்ற கேள்வியைப் பரிசீலிப்பதற்கு முன்பாக, சான்றோர் குலத்தின் அனைத்துப் பிரிவினரும் "நாடாள்வார்" என்ற பட்டத்தின் சுருக்கமான "நாடார்" என்பதைத் தம் சாதிப் பட்டமாகப் பயன்படுத்தத் தொடங்கியதற்கு என்ன வரலாற்றுப் பின்னணி அல்லது காரண காரியத் தொடர்பு இருந்தது என்பதை அறியலாம்.

போர் முறையில் இருவகைப் போர் முறைகள் இருந்தன. 1. அறப்போர் முறை 2. மறப்போர் முறை, அறப்போர் முறை என்பது, ரத கஜ துரக பதாதி அல்லது தேர், ஆனை, குதிரை, காலாட் படைகளாகிய நாற்பெரும் படைகளையும் போரில் ஈடுபடுத்தி முறைப்படியாகப் பயிற்சியளித்து நடத்தப்பெறும் போர் முறையாகும். வில், வாள், முதலிய போர்க் கருவிகள் இன்றி கைக், கால் முதலிய உடல் உறுப்புகளைப் பயன்படுத்தியும் செய்யும் போர் முறையும் அறப்போர் முறையில் அடங்கும்.

புறமுதுகிட்டு ஓடுபவர்கள், முதியோர், பெண்டிர், குழந்தைகள், பொதுமக்கள், நிராயுதபாணிகள் ஆகியோரைத் தாக்காமல் இருப்பது முதலியனவும் அறப்போர் மரபுகள் ஆகும். ஆயுதங்கள் இன்றிச் செய்யப்படும் போர் "மற்போர்" என்றும், "அங்கப்போர்" என்றும் இருவகைப் படும். மற்போர் பற்றி அனைவரும் அறிவர். அங்கப் போர் என்பது "அங்கைப் போர்" என்பதன் திரிபாகும். "அகங்கை" என்பதன் சுருக்கமாகிய "அங்கை" என்பது இன்றைய கராத்தே குங்பூ என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லாகும். கராத்தே குங்பூ போர்முறையுடன் வர்மக் கலையின் கூறுகளையும் இணைத்துச் செய்யப்படுவதே அங்கைப் போர் ஆகும். படு வர்மம் 12, தொடு வர்மம் 96, ஆக மொத்தம் 108 வர்ம ஸ்தானங்களை (மனித உடலின் நரம்பு மையங்களை) வெறுங்கையால் தாக்கி எதிரியை வீழ்த்துவதே அங்கைப் போர் ஆகும். இதனை "அங்கை வெட்டு" அல்லது "அங்க வெட்டு" என வழங்குவர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டின்

பிற்பகுதியில் அல்லது 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தில் அங்கம் வெட்டிய திருவிளையாடல் என்ற தலைப்பில் இச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்கக் களரி, அங்கக்காரர் போன்ற சொல்லாட்சிகள் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய அறப்போர் முறை என்பது சான்றார் போர் மரபாகும்.

சங்க இலக்கியங்களில் சான்றோர் என்ற சொல்லாட்சி பரவலாக இடம் பெற்றுள்ளது. இச் சொல்லுக்குப் போரில் அமைதியுடைய வீரர் எனப் பழைய உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். அண்மைக் காலத்துத் தமிழறிஞரான ஞா. தேவநேயப் பாவாணர் ரோமானிய நாகரிகத்தில் Knight என வழங்கப்பட்ட உயர்வர்க்கப் போர்வீரர்களுக்குச் சமமான தமிழக வீரர்கள் சான்றோர் என அழைக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டிருப்பது நாம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். Knight என்ற பட்டம் பெற்ற உயர்வர்க்கப் போர் வீரனுக்குக் குதிரைகள் பூட்டிய தேர் வழங்கப்படுவது ரோமானிய மரபாகும். "தேர்தர வந்த சான்றோரெல்லாம் தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே (புறநானூறு 63:5–6) என்ற பாடலடிகளிலிருந்து சான்றோர் எனப்படுவோர் தலையாய போர் மரபினர் என்பதை உணரலாம். சான்றோர் என்ற பட்டம் பெற்றவர்கள் அனைவருமே இத்தகைய அறப்போர் முறையுடன் தொடர்புடையோர் ஆதலால் தாங்கள் சத்திரிய வர்ண மூலத்திலிருந்து தோன்றியவர்கள் என்ற அடிப்படையில் ஒரே குலத்தவராக அடையாளம் காட்டிக் கொண்டனர் என்றும் இந்த அடிப்படையிலேயே பிற்காலத்தில் நாடாள்வார் அல்லது நாடார் என்பதைத் தம் சாதிப் பட்டமாகப் பயன்படுத்தத் தொடங்கினர் என்றும் அறியலாம்.

தமிழகச் சத்திரியகுலம்

தமிழகப் போர்க் குடிகளுள் குறிப்பிடத்தக்க போர்க்குடியினராக மறவர் சாதியினரை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மறவர்கள் போர்க்குடியினர் என்பதில் ஐயமில்லை. ஆயினும், முறைப்படியான போர்ப்பயிற்சி

பெற்ற வீரர்கள் மறவர்களே எனக் கருதுவதற்கில்லை. அடிப்படையில் மறவர்கள் வேட்டைக் குடியினர் ஆவர். நானிலம் என வழங்கப்படக்கூடிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களோடு தொடர்புடைய போர்க்குடிகளாக மறவர்கள் தென்படவில்லை. பாலை நிலத்துக் கள்வர், எயினர் முதலிய குடியினரே மறவர்களாகப் பரிணமித்தனர். சங்ககால அரசர்களின் படைகளில் மறவர்கள் இடம் பெற்றிருந்தனர் என்பது உண்மை. இம் மறவர்கள் ஆ.நிரை கவர்தல் எனப்படும் வெட்சிப் போர் முறை, பகைவர் நாட்டைக் கொளுத்துதல் எனப்படும் வஞ்சிப்போர் முறை, மாற்றார் நாட்டுப் பெண்டிரைச் சிறையெடுத்தல் ஆகிய மறப்போர் உத்திகளில் அரசர்களால் பயன்படுத்தப்பட்டனர். மறவர்கள் வஞ்சிப் போர் முறையிலேயே தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டனர் என்பதற்குக் கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பொன்னமராவதிக் கல்வெட்டில் சான்று உள்ளது. (Pudukkottai State Inscriptions, 278)

நாகரிக வாழ்க்கை நடைமுறைகளை நிர்ணயித்தல், நாட்டாட்சி, நீதி நிர்வாகம் போன்றதுறைகளில் பெரும்பாலும் மறவர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்றே தெரியவருகிறது. அதனால்தான்போலும் மறவர்கள் தம்மை அரசர் குலத்தவர்க்கு எதிரிகள் என்றும் அரச குலத்தவர்க்குப் பெண் கொடுப்பது தம் குலவழக்கம் இல்லை என்றும் அரச குலத்தவர் அஞ்சப் பிறந்தவர்கள் தாங்கள் என்றும் தம் குலத்தின் பெருமையைப் பறைசாற்றி வந்தனர். சத்திரிய வர்ணத்தவர் என்று தம்மை அவர்கள் குறிப்பிட்டுக் கொண்டதில்லை. முன்னொரு காலத்தில் அரச குலத் தொடர்பின் அடிப்படையில் வர்மன், தேவன் என்ற பட்டங்களைப் புனைந்துகொண்டு தம்மைச் சத்திரியர்களாக அடையாளப்படுத்திக்கொள்ள முயன்ற வாணாதிராயர்கள் போன்ற அகம்படியர் குலத்தவர்களும், கி.பி.12–13ஆம் நூற்றாண்டளவில் தம் தாய்வழி மூதாதையர் குலம் ஆகிய மறக்குலத்துக்குள் இயல்பாகவே தம்மை ஆட்படுத்திக் கொண்டனர். அதனால்தான் கி.பி.15ஆம் நூற்றாண்டில், வாணாதிராயர்கள் தம்மைக் "கங்கை குலத்தவர்" என்றும்,

"காராளர்" என்றும், இராசகுலமான நாகத்துக்குத் தாங்கள் கருடன் போன்றவர்கள் (ராஜகுல சர்ப்பகருடன்) என்றும் பெருமைபடப் பேசத் தொடங்கினர். இக் காலக்கட்டத்தி விருந்து தான் "கள்ளர் மறவர் அகம்படியர்" என்ற முக்குலத்தவரும் இணைந்து "தேவர் குலத்தவர்" என உரிமை கொண்டாடத் தொடங்கினர்.

வைணவ உரை நூல்களுள் "அகம்படியர் கிளர்ந்தால் அரசரால் அடக்க வொண்ணாததுபோல" என்ற குறிப்பு உள்ளது. ஒருவகையில் பார்த்தால் தமிழகத்தில், அரசர் அல்லது சத்திரிய குலத்தவரின் வீழ்ச்சி என்பது அகம்படியர்களால் தொடங்கி வைக்கப்பெற்றுக் கள்ளர், மறவர்களால் நிறைவு செய்யப்பட்டது என்று தோன்றுகிறது. பழஞ் சேரநாடு ஆகிய கேரளத்தில் உள்ள நாயர் சமூகத்தவர் "நாயன்மாராய உள் அகம்படிக்கார்" என்று மலையாள இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். தாய்வழிச் சமூகத்தவரான நாயர்கள் மகாபலியின் வம்சத்தவராக அதாவது வாணாதிராயர்களின் குலத்தவராகவே அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள் என்பது கேரள மாநில விழாவாகிய ஓணம் விழா நடைமுறைகளால் தெளிவாகிறது.

மதுரையில் கி.பி.1319 ஆம் ஆண்டில் இசுலாமியரின் ஆட்சி தொடங்கிய காலக்கட்டத்தில், பாண்டியர் குலம் வீழ்ச்சியடைந்து விட்டதால் மறவர் குலத்தவர்கள் தலையெடுத்து மதுரையிலிருந்து தஞ்சைவரையிலான பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கினர் என மதுரைத் தலவரலாறு என்ற பழைய நூல் குறிப்பிடுகின்றது. இதே கருத்தினைக் கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையில் வாழ்ந்த வேளாளகுல புராட்டஸ்டன்ட் கிறித்துவரான வேதநாயக சாஸ்திரியார் தம் இடங்கைப் புராணம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கள்ளர், மறவர், அகம்படியரைத் தவிர்த்துக் குறிப்பிடத்தக்க ஒரு போர்க்குடியினர் வன்னியர் என அழைக்கப்படும் பள்ளி குலத்தார் ஆவர். பள்ளி குலத்தவர் வன்னியர் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆயினும், வன்னியர் என்ற சொல் மறவர் குலத்தில் ஒரு பிரிவினரைக்

குறிப்பதற்கே கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. சான்றாக ஏழாயிரம் பண்ணை பாளையப்பட்டு வம்சாவளி சிதம்பர வன்னியன் கைபீது போன்றவற்றைக் குறிப்பிடலாம். கி.பி.13ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் சோழகுலப் பெண்ணை மணம் புரிந்த கோப்பெருஞ்சிங்கன் தன்னை "வன்னியர் மணாளன்" என்று அழைத்துக்கொண்டதை அண்ணமங்கலம் குகை, சிங்கப்புருவக் கல்வெட்டால் அறியலாம். இப்பள்ளி (வன்னியர்) குலத்தவர்களும் மறப்போர் மரபினரே ஆவர். வெட்சிப்போர்த் தெய்வமாகிய கொற்றவையே (துர்க்கை என்ற மகிசாசுரமர்த்தனியே) இவர்களின் குலதெய்வம் என்று வன்னிய புராணம் குறிப்பிடுகின்றது. இவர்கள் வன்னியச் சத்திரியர் என்றும், அக்னி குலச் சத்திரியர் என்றும் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டாலும் விசய நகரமன்னர் ராமராயர் இவர்களை வேளாளர் குலத்தவராக அங்கீகரித்துத் தீர்ப்பு வழங்கியதாகக் கண்ணகுலப் பட்டயம் — (கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் — பதிப்பு : செ. இராசு, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை 1999) குறிப்பிடுகின்றது.

அடுத்து, பார்க்கவகுல சத்திரியர் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் சாதியினர் தமிழகத்தில் தஞ்சை, புதுக்கோட்டை,சேலம் போன்ற மாவட்டங்களில் வாழ்கின்றனர். இவர்கள் மூப்பனார், உடையார், நயினார் போன்ற சாதிப் பட்டங்களைத் தரிக்கின்றனர். சுருதிமான், நத்தமான், மலையமான் என்பவை இக்குலக் குழுக்களின் பெயர்களாகும். இவர்கள் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் தம்மை "மண்மகள் புதல்வர்" (பூமி புத்திரர்) என்று அழைத்துக் கொண்டதோடு வேளாளர் சமூகக் கூட்டமைப்பான சித்திரமேழிப் பெரிய நாட்டாருடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறெல்லாம், தமிழகத்தின் போர்க்குடியினர் பலர் வேளாளர் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அல்லது வேளாளர் சமூகத்தினரின் தலைமையை ஏற்றுத் தம்மைக் காராளர் குலப் பிரிவினராகவே அடையாளம் காட்டிக் கொள்கின்றனர்.

இந்த நிலையிலும் தாம் சத்திரிய வருணத்தவர் எனத் தெளிவான, திடமான முழக்கத்துடன் தொடர்ந்து தம் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி வந்தவர்கள் சான்றார் குலத்தினர் ஆவர்.

தமிழகச் சத்திரியர்கள் – சான்றோர்குலத்தவரா?

தமிழ்ச் சமூக வரலாற்றாய்வில் முதன்மையான பிரச்சினைகளுள் ஒன்று "அரசர் குலம்" அல்லது "சத்திரிய வருணம்" இருந்துள்ளதா? என்பதாகும். சங்க காலத்திலேயே அரச வருணத்தவர்க்கு வேளாளர்கள் மகட்கொடை வழங்கி மணவுறவு கொண்டார்கள் என்றும், அதனால் அரச வருணமும் வேளாளர் குலமும் ஒன்று கலந்திருக்க வாய்ப்புள்ளது என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்து ஆய்வுலகத்தில் பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. பலர் ஏற்றுக்கொள்வதால் ஒரு கருத்து உண்மையாகிவிடாது. வேளாளர் குலம் என்பது சூத்திர வருணம் என்ற நான்காவது குலமே ஆகும். வேளாளர் குலத்தவர் பலர் போர்த் தொழிலில் ஈடுபட்டனர் என்பது உண்மையே ஆயினும் அவர்கள் போர்த்தொழிலைத் தமது பரம்பரை உரிமையாக எந்தவொரு ஆவணத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால் அரச குலம் என்பது போர்த் தொழிலையும் குடிகாவலையும் தன் பரம்பரை உரிமையாகக் கொண்ட குலமாகும். அல்லது, போர்த்தொழில், குடிகாவல் (பிரஜானாம் பரிபாலனம்) ஆகியவற்றைத் தமது பரம்பரை உரிமையாகக் கொண்டவர்களே அரச வர்ணத்தவராக சாஸ்திரங்களால் அங்கீகரிக்கப்பட்டனர் எனக் கொள்ளலாம். சங்ககாலம் என்று அறியப்படுகின்ற கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுகள் முதலான ஆவணங்களை ஆராய்ந்தால் அரச குலத்தின் அடையாளங்கள் தெளிவாக விளங்கும்.

கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தமிழகத்தின் பெரும் பகுதிகளைத் தம் அதிகாரத்தின் கீழ்க் கொணர்ந்த களப்பிரர்கள் அரச குலத்தவர் அல்லர். களப்பிரர் காலக்கட்டத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள்,

"கீழ்க்கணக்கு நூல்கள்" என்றும் "வேளாண் வேதம்" என்றும் அறியப்படுவதால் களப்பிரர் ஆட்சிக் காலத்தில்தான் வேளாளர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர் எனத் தெளிவாக அறியமுடிகின்றது. இக்காலத்திற்கு முன்பு வேளாளர்கள்அரச குலத்தவருடன் மணவுறவு கொண்டனர் என்று சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

களப்பிரர் ஆட்சி என்பது வைசிய – சூத்திர வருணத்தவரின் ஆட்சிதான் என்று கொள்வதற்குச் சான்றுகள் உள்ளன. இக்காலகட்டத்திலிருந்துதான் சூத்திர வருணத்தவராகிய வேளாளர்கள் போர்த்தொழில், குடிகாவல், ஆகிய சத்திரிய வருணத் தொழில்களில் ஈடுபட்டுப் பயிற்சி பெற்று எழுச்சியுற்றிருக்க வேண்டும். களப்பிரர் ஆட்சிக்கு மகாபலிவாணர் போன்ற பழைமையான போர்க்குடிகளும் படைத்துணை புரிந்திருக்க வாய்ப்புண்டு. வரலாற்றின் இந்நிகழ்வுப் போக்கே கி.பி.13ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் பெரும்பாலான சாதியினர் வேளாளரின் சமயாசார அல்லது சித்தாந்தத் தலைமையை ஏற்று அணிதிரண்ட நிகழ்வுக்கு முன்னோடி எனலாம். மெய்கண்டார் என்ற வேளாளர் குலத்தவர், அச்சுத களப்பாளர் என்ற களப்பிர வம்சாவளியினர் ஆகியோரே சைவசித்தாந்தத்துக்கு முழுவடிவம் கொடுத்தனர் என்பதும் இன்றளவும் தமிழகச் சைவ ஆதீனங்கள் இப்பெருமக்களைத் தம் சந்தான குரவர்களாகக் கொண்டு ஒழுகுகின்றன என்பதும் நாம் கவனத்தில் கொள்ளத்தக்கவையாகும்.

சங்ககால அரச குலம் என்பது "மூவேந்தர் குலம்" மற்றும் வேளிர், மலையமான்கள், அதியமான், போன்றோரின் குலங்களாகும். இவர்களுள், வேளிர்கள் புராணகால வடபாரத யதுகுல அரச மரபோடு தொடர்புடையவர்கள் ஆவர். சங்க காலத்திலேயே வேளிர்குலம் என்பது தமிழக அரச குலத்தில் (அதாவது சத்திரிய வருணத்தில்) ஒன்று கலந்திருக்கக் கூடும் எனத் தெரிகிறது. எஞ்சி நின்றிருக்கக் கூடிய வேளிரின் கிளைக் குலங்கள் சில களப்பிரர் எழுச்சியின்போது களப்பிரர் குலத்துடன் ஒன்று கலந்திருக்கலாம். ஆனால், நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் வேளிர் குலத்திற்கும் வேளாளர்

குலத்திற்கும் எவ்வித நேரடித்தொடர்பும் இல்லை என்பதுதான். மேலே குறிப்பிட்ட அரச வருணத்தவருள் மலையமான், அதியமான் ஆகிய அரச வமிசத்தவர்கள் (பெரும்பாணாற்றுப்படை நாயகனான தொண்டைமான் வமிசத்தவர் கூட) களப்பிரர்களுடன் மணவுறவு கொண்டு அல்லது களப்பிரர் தலைமையை ஏற்று அணிதிரண்டிருக்க வாய்ப்புண்டு என்பதை மறுப்பதற்கில்லை. களப்பிரர் மூவேந்தரைச் சிறை செய்து தமிழ் பாடவைத்தனர் என்ற நம்பிக்கை தமிழ் இலக்கிய உலகில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை மாவட்டம் அரித்துவார மங்கலம் செப்பேடு (1980–இல் தொல்லியல் துறையின் தஞ்சை அலுவலர்கள் திரு கு. தாமோதரன், திரு ச. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கண்டறிந்து படித்தது) இதனை வேளாளரின் குலப்பெருமையாகவே கூறுகிறது. இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது, மூவேந்தர் குலத்தவர் வேளாளர்களால் முரியடிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர் என்பதுதான்.

ஆனால் நீண்ட நெடுங்காலம் அவர்கள் ஒடுங்கிப் போய் உட்கார்ந்து விடவில்லை. பிராமணர்களுடன் குலத் தொடர்புடைய பரத்வாஜ கோத்திரத்துப் பிரம்ம சத்திரிய வருணத்தவரான பல்லவர்கள் வட தமிழ் நாட்டில் களப்பிரர்களை ஒடுக்கினர். தென்தமிழ் நாட்டில் பாண்டியர்கள் மீண்டும் எழுச்சி பெற்றுச் சத்திரிய வருணத்தவரின் ஆட்சியை நிலைநாட்டினர். கி.பி.9ஆம் நூற்றாண்டில் சோழர் குலம் மீண்டும் எழுச்சி பெற்று ஆட்சிப் பீடம் ஏறியது. இக்காலக் கட்டங்களில் களப்பிர குலத்தவர்களும் தொண்டைமான் குலத்தவர்களும் சோழ அரசரின் படைப்பிரிவுகளில் தலைமைப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனாலும் கிபி11 ஆம் நூற்றாண்டுவரையிலும் சோழ பாண்டியர் அரசுகள் முற்றிலும் வேளாளர்களைச் சார்ந்தோ வேளாளர் குலத்தவருடன் மணவுறவு கொண்டோ ஆட்சியை நடத்தவில்லை. மாறாக, நாடாள்வார்கள், காவிதிகள் போன்ற பட்டங்களைப் பெற்றிருந்த சத்திரிய மற்றும் வைசிய குலத்தவரான அரசியல் தலைவர்களைச் சார்ந்தே ஆட்சி நடத்தினர்.

கி.பி.11 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கருணாகரத் தொண்டைமான், சேக்கிழார் போன்ற வேளாளர்குல அதிகாரிகளும் அமைச்சர்களும் சோழ அரசியல் அமைப்பில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பின்னரே சோழ அரசியல் என்பது வேளாளர்களை முற்றிலும் சார்ந்து இயங்கத் தொடங்கியது. இக்காலத்திற்குப் பின்னரும் தென்பாண்டி நாட்டில் சத்திரிய வருணத்தவரின் ஆதிக்கம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. கி.பி.15–16ஆம் நூற்றாண்டுகளில் வெள்ள நாடார், இடை நாடார் போன்ற தமிழகச் சத்திரிய வருணத்தவர் பெரும் எண்ணிக்கையில் தென்பாண்டி நாட்டின் பல பகுதிகளில் அதிகாரம் செலுத்தினர் எனத் தெரிந்துகொள்ள முடிகிறது. கி.பி.17ஆம் நூற்றாண்டில் தென்காசிப் பாண்டியர் ஆட்சியும் வீழ்ச்சி அடைந்த போது தமிழகப் பூர்விக அரசகுடியினரான நாடாள்வார்கள் தம் அதிகாரங்களை ஓரளவு காத்துக் கொண்டு தென்பாண்டிச் சீமையின் தென்கிழக்குப் பகுதியில் அதாவது இன்றைய திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் சாத்தான்குளம், இராதாபுரம் பகுதிகளிலும், கன்னியாகுமரியில் சில பகுதிகளிலும் குடியேறி வாழ்ந்தனர் என்பதைச் சில கல்வெட்டுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இந் நாடாள்வார்கள் ஆதித்த நாடாள்வாள், மார்த்தாண்ட நாடாள்வாள், திருப்பாப்பு நாடாள்வாள் போன்ற அரசகுலப் பட்டங்களுடன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர். கி.பி.19ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நாடாள்வார் என்ற தொடரின் வேறுவடிவமான "தக்ஷிணமாற நாடார்கள்" என்ற பெயரில் வணிகச் சங்கம் அமைத்து ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி உதவியுடன் தம் நிலையை மேம்படுத்திக் கொண்ட ஒரு குழுவினரையும் நாம் செப்புப்பட்டயங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இனிச்சான்றார் குலம் என்பது சங்ககாலம் தொடங்கி எவ்வாறெல்லாம் உருவாக்கம் பெற்று வந்துள்ளது என்பது பற்றியும் இக்குலத்தின் உருவாக்கத்திற்கு அடிப்படையாய்

அமைந்த கூறுகள் அல்லது காரண காரியத் தொடர்புகள் எவை என்பது பற்றியும் ஆராய்வோம். இந்தியச் சாதி அமைப்பு மிகவும் சிக்கலானது என்பது நாம் அறிந்ததே. எந்தவொரு சாதியையும் இன (Race) அடிப்படையில் வரையறுத்துக் கூறிவிட முடியாது. மொத்தத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றே சாதிமுறை என்ற அமைப்பு ஆகும். சாதி உயர்வு என்பதையும் சாதியின் தனித் தன்மையையும் நிர்ணயிக்கப்பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் முதன்மையானது பெண்ணின் கற்பொழுக்கம் ஆகும்.

மூவேந்தர்கள் தந்தைவழிச் சமூகத்தவர். ஒரு பெண்ணரசிகூட ஆட்சிக்கு வரவில்லை. குடிப்பிறப்பு என்பதே ஓர் ஆண் மகனின் தலைமையில் அமைந்த தந்தைவழிச் சமூக அமைப்பிலான குடும்பத்தைக் குறிக்கும். இக்குடும்ப அமைப்பில் ஓர் ஆடவனுக்குப் பல மனைவியர் இருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணுக்குப் பல கணவர்கள் இருப்பது ஏற்றுக்கொள்ளப் படவில்லை. சாதி என்பதற்குச் சமமான ஆங்கிலச் சொல்லான caste என்பது பெண்ணின் கற்பான chastity என்பதுடன் தொடர்புடையதாகவே இருக்கிறது. இத்தகைய குடிப்பிறப்பின் அடிப்படையில் அமைந்த சமூகத்தில் கணவன் இறந்தபின் மனைவியர் உடன்கட்டை ஏறுவதும், உடன்கட்டை ஏறாத பட்சத்தில் அணிகலன்களைத் துறப்பது, வெள்ளாடை உடுத்துவது போன்றவையும் பின்பற்றப்பட்டன. சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் *(பா.261 : 15–18)* "பேரில் அல்லது பெருங்குடியைச் சார்ந்த ஒருவன் போரில் இறந்து நடுகல் ஆனபோது அவன் மனைவி கூந்தல் களைந்த காட்சி சித்திரிக்கப்படுகிறது. பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின் பதிகத்தில் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் எதிரிநாட்டு மன்னனைக் கொன்று அவன் மனைவியரின் மழிக்கப்பட்ட கூந்தலைக் கொண்டு அம்மன்னனின் யானைகளைத் தேரில் பூட்டி இழுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. எனவே சத்திரிய வருணத்தவர் தம் சாதியின் பாரம்பரியப் பெருமையை உலகிற்கு உணர்த்துவதற்காக மட்டுமின்றித் தம் குலப்பெண்டிரின் கற்பு வழிப்பட்ட வம்சாவளித்

தூய்மையைக் காத்துக் கொள்ளுவதற்காகவும் தம் குலப்பெண்டிரிடையே கைம்மை நோன்பு, கூந்தல் களைதல் போன்றவற்றை வழக்கமாக்கினர். மாறாகத் தாய்வழிச் சமூக அமைப்பைப் பின்பற்றிய போர்க்குடிகள் எவையும் இத்தகைய வழக்கங்களைப் பின்பற்றவில்லை.

ஒருவகையில் பார்த்தால் தாய்வழிச் சமூக அமைப்பினரின் மரபுகள் தாம் இன்றைய ஜனநாயகக் கண்ணோட்டத்திற்குப் பொருத்தமாக அமைவனவாகும். சாத்திரங்கள் என்பவை சமூக அமைப்பினை ஒழுங்குபடுத்து வதற்காகவும் சொத்துரிமையை வரையறுப்பதற்காகவும் அதிகாரப் பங்கீட்டினைக் குழப்பமின்றிச் செயல்படுத்துவதற் காகவும் ஆளும் வர்க்கத்திற்குச் சாதகமாக வடிவமைக்கப் பட்டவை. ஆதலால் நாம் மேலே குறிப்பிட்ட பெண்டிரின் கைம்மை தொடர்பான விரதங்கள் உயர் வர்க்கத்தார்க்குக் கட்டாயக் கடமைகளாக ஆக்கப்பட்டன. இந்தச் சாத்திரங்கள் என்ற சமூகச் சட்டங்களை வடிவமைத்தவர்கள் அந்தணர்களும் அரச வருணத்தவரான சான்றார் குலத்தினரும் ஆவர்.

"சான்றோர்" என்ற சங்க இலக்கியச் சொல்லாட்சி ஒரு தனித்த சாதியினரைக் குறிப்பிடுவது அன்று எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். "சான்றோர்" என்ற சொல்லாட்சி இடம் பெறுகின்ற ஒவ்வோரிடத்திலும் அது ஒரு தனித்த சாதியினரைத்தான் குறித்தது என நாம் கொள்வதற்கில்லை. ஆனால் கலித்தொகையில் (110:20) "சான்றார் மகளிர்" என்ற சொல்லாட்சி இடம் பெறுகின்றது. வழக்கு தீர்க்கின்ற மன்றத்தின் தலைவர்களான சான்றார்களின் குலத்தைச் சேர்ந்த பெண்டிர்களையே இச் சொல்லாட்சி குறிப்பிடுகின்றது. "தமிழ்நெறி விளக்கம்" என்ற இடைக்கால இலக்கண நூலும், "குலம் மேம்பட்ட சான்றோர்" எனக் குறிப்பிடுகின்றது. கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் அல்லூர்க் கல்வெட்டு "தலைவாய்ச் சான்றார்" என்ற அதிகாரமிக்க நிருவாகக் குழுவினரைக் குறிப்பிடுகின்றது. இவர்கள் காவிரி ஆற்றின் தலை மதகுகளைப் பராமரித்து நீர்ப்பாசனத்தை நிருவாகம் செய்த குழுவினர் ஆவர். இவர்கள் சான்றார் சாதியினரே

என்று கல்வெட்டு ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்களைப் போன்றே விழிச் சான்றார் அல்லது மிழிச் சானார், ஈழச் சான்றார், இடைச் சான்றார், பார்ப்பாரச் சான்றார் போன்ற பல பிரிவினர்களும் சான்றார் சாதிப் பிரிவினர்களாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர். கோவை மாவட்டம் அவிநாசியிலுள்ள கி.பி.13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, "பார்ப்பாரச் சான்றார்" என்ற சாதிப் பிரிவினர் தம் படைக்கலங்களின் தொகுதிக்கு மாலைகள், பட்டுத் துணி போன்றவற்றை அணிவித்து "ஆயுத பூசை" எனப்பட்ட சத்திரியர் குல விழாவைக் கொண்டாடும் சலுகை பெற்றிருந்தனர் எனத் தெரிவிக்கின்றது. ஆயுத பூசை என்ற விழாவைப் பற்றிய ஒரு செய்தியை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

புரட்டாசி மாதம், வளர்பிறை நவமி திதியில் உத்தராட நட்சத்திரத்தன்று மகாநவமி என்ற பெயரில் கொண்டாடப் படுவதே ஆயுத பூசை விழாவாகும். மைசூர் அரண்மனையில் இன்றளவும் இவ்விழா படைவீரரின் அணிவகுப்புகளுடன் கொண்டாடப்பட்டு வருவது நாம் அறிந்ததே. இம் மகாநவமி நாள் என்பது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஈழச் சான்றார் ஆகிய ஏனாதிநாதர் சிவபதம் அடைந்த நாள் ஆகும். ஏனாதிநாதரின் குலத் தொழில் என்பது போர்க் கலை பயிற்றுவிக்கும் ஆசிரியத் தொழில் எனக் கி.பி.12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் தம் "பெரிய புராணத்தில்" குறிப்பிடுகின்றார். பல்வேறு மூலங்களிலிருந்து தோன்றி, "சான்றார்" என்ற தகுதியடைந்து பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக அங்கீகரிக்கப்பட்ட சத்திரிய வருணத்தவரே சான்றார் ஆவர் என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும். ஈழ குலச் சான்றோர் என்பது சான்றோர் குலத்தின் ஓர் உட்பிரிவு என்ற உண்மையைத் திருமுருக கிருபானந்த வாரியாரும் குறிப்பிட்டுள்ளார். (பக்.171–175, பெரியபுராணம், வாரியார் பதிப்பகம், சென்னை–2, 2003).

மகாபலி வாணாதிராயர்கள் போன்ற அசுரகுல அரசர்கள் தாய்வழிச் சமூகத்தவராக இருந்து தந்தைவழியில்

அரசகுலத் தொடர்பினை ஏற்று, "வர்மன்", "தேவன்" போன்ற சத்திரியப் பட்டங்களை எய்தியவர்கள் என முன்னரே கண்டோம். அவர்கள் "மகதை நாடாள்வான்" என்றும், "மாகத சோழன்" என்றும், "மகதை ஈசன்" (மகதேசன்) என்றும் பட்டம் புனைந்தனர். அரச குலத்தவர்க்கு எதிரான அணி சேர்க்கையின்போது அவர்கள் வேளாளர்களுடன் (நாட்டார்களுடன்) தம்மை அடையாளம் காட்டிக்கொண்டு "நாடாள்வார்" என்ற பட்டத்தைத் துறந்தனர். இக்காலக் கட்டத்தில், அதாவது கி.பி.13ஆம் நூற்றாண்டில் "நாடாள்வார்" என்ற பட்டத்தினைத் தக்கவைத்துக் கொண்ட தந்தை வழிச் சமூகத்தினராகிய சத்திரியர்களுடன் இணைந்து நின்ற குழுக்கள் சான்றார் சாதிக் குழுக்களே ஆகும். பனைத் தொழில் புரிகின்ற ஈழகுலத் தொடர்புடைய சான்றார்களும், சான்றார் பட்டம் எய்துவதற்குரிய தகுதிகளாகக் கருதப்பட்ட தந்தை வழிச் சமூக அமைப்பு, பெண் கற்பு வழிப்பட்ட குலத் தூய்மை, கணவன் இறந்தபின் மனைவி உடன்கட்டை ஏறுதல் அல்லது கைம்மை நோற்றல், குடிகாவல் மரபு போன்ற சமூகச் சட்டங்களை ஏற்று வாழ்ந்ததால் சான்றார் சாதியினரின் ஓர் அடுக்கில் முழுமையாக இணைந்தனர்.

சமூக அந்தஸ்திலும், சோழர் அரசியலில் அதிகார மட்டத்திலும் உயர் வர்க்கத்திலிருந்த வலங்கை உய்யக் கொண்டார்கள் எனப்பட்ட போர்ப் படையினர், நாடாள்வார்கள் எனப்பட்ட போர் மரபினரான நிர்வாகத் தலைவர்கள் போன்றோர் சான்றார் குலத்தவருள் உயர் வர்க்கத்தவராக அங்கீகரிக்கப்பட்டனர். சோழர்களின் ஆட்சி முடிந்துபோன பின்னரும், அரச குலத்தவரின் அகம்படியராகத் தொடர்ந்து செயல்பட்டு வந்த "அகம்படிய மரபினர்", "கள்ளச் சான்றார்" என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் சான்றார் குலத்துடன் முழுமையாகக் கலந்து விடாமல் விதவை மறுமணம், அறுத்துக் கட்டுதல் போன்ற கள்ளர் – மறவர்குல வழக்கங்களைப் பின்பற்றினர்.

கி.பி.14,15ஆம் நூற்றாண்டில் கல்லிடைக் குறிச்சி (திருநெல்வேலி மாவட்டம்) மற்றும் திருவிதாங்கோடு ஆகிய இடங்களில் பொறிக்கப்பட்ட வேளாளர்களின் கல்வெட்டுகளில்

"வெள்ளை நாடார்" எனப்பட்ட பூர்விக அரசவர்ணத்தவர்க்கு எதிராகச் சில நடவடிக்கைகள் திருவிதாங்கூர் அரசின் ஆதரவுடன் எடுக்கப்பட்டன என்ற செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள், வெள்ளை நாடார்களுடன் "மழவராயன்'' போன்ற பட்டம் பெற்றிருந்த சிலரும் இணைந்து நின்றனர் எனத் தெரிவிக்கின்றன.

மழவராயன் போன்ற பட்டம் பெற்றிருந்த இவர்கள் அரச குலத்தவருடன் தமது உறவைத் துண்டித்துக் கொள்ளாத அகம்படிய மரபினர் அல்லது கள்ளச் சான்றார் எனக் கொள்ளலாம். கி.பி.1358ஆம் ஆண்டைச் சேர்ந்த கண்டதேவி (சிவகங்கை மாவட்டம்) கல்வெட்டில் காரணவர் என்ற மறவர்குலப் பிரிவினரும் அவர்களுடைய இளந்தாரிகள் எனப்பட்ட அகம்படிய மரபினரும் மதுரை சுல்தானிய ஆட்சியின் ஆதரவுடன் சமூகத் தலைமையை ஏற்றுச் செயல்பட்டனர் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மறவர் – அகம்படியர் பிரிவினருக்கு எதிரிகளான (சத்துருக்களான) அறந்தாங்கியார் எனப்பட்ட பிரிவினரும் இக் கல்வெட்டில் அதிகாரம் மிக்க சமூகத் தலைவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அறப்போர் மரபினரான சான்றார்களும் அவர்களுடன் இணைந்து நின்ற அகம்படிய மரபினரான கள்ளச் சான்றார்களுமே இவ்வாறு அறந்தாங்கியார் எனக் குறிப்பிடப்பட்டனர் என நாம் புரிந்து கொள்ளலாம்.

கள்ளச் சான்றார் பிரிவினர் திருவிதாங்கூர்ப் பகுதியில் மேனாட்டார் என்று அழைக்கப்பட்டனர். 17ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் திருவிதாங்கூர் அரசன் இடத்தரை தேவனான தேவன் இளம்பயில் மார்த்தாண்ட வர்மா எனப்படும் வீரகேரளவர்மா இப் பிரிவினைச் சேர்ந்த, கண்ணன்கரைக் கிராமம் எம் பெரும் பெரியான் என்பவருக்கு "நாடான்'' என்ற சாதிப் பட்டத்தை வழங்கியதாக நாகர்கோவில் அருகில் உள்ள சரலூர் என்ற இடத்தில் அண்மையில் கண்டறியப்பட்ட கல்வெட்டின் மூலம் அறிந்து கொள்ளப்படுகிறது. இத் திருவிதாங்கூர் அரச வம்சத்தவர் பிராமணக் குலக் கலப்பினை ஏற்ற அகம்படிய மரபினர் ஆவர். எனவே இவர்கள் கள்ளச் சான்றார்

பிரிவினர்க்கு நாடான் என்ற பட்டம் கொடுத்தது அரசியல் காரணத்திற்காகவே எனத் தெளிவாகப் புலப்படுகிறது.

சான்றார் குலத்தின் உயர் அடுக்கில் இடம் பெற்று நாடாள்வார் பட்டம் பெற்றிருந்த வலங்கை உய்யக்கொண்ட இரவிகுல சத்திரியர் போன்றவர்களுக்கும் புதிதாக நாடான் பட்டம் பெற்ற கள்ளச் சான்றார்களுக்கும் இதனால் ஆழ்ந்த கருத்து வேறுபாடு தோன்றியிருக்க வேண்டும். தமக்குக் கீழ் சேர்வைக்காரர்களாகக் கைகட்டிச் சேவகம் புரிந்த பிரிவினர் தற்போது திருவிதாங்கூர் அரசர் ஆதரவுடன் தமக்குச் சமமாக நாடான் பட்டத்துடன் பெருமிதமாக உலாவந்தது இந்நாடாள்வார் பிரிவினர்க்கு மனக் கசப்பைத் தோற்றுவித்திருக்க வேண்டும். இந்த மனக் கசப்புகளே கி.பி.19ஆம் நூற்றாண்டில் வெடித்த தோள்சீலைக் கலவரத்தின்போது திருவிதாங்கூர் அரசர்கள் நடுநிலை வகிப்பதைப் போலக் காட்டிக் கொள்வதற்கும் வலங்கை உய்யக்கொண்டார் போன்றவர்கள் கீழ்மட்டச் சான்றார்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கும் காரணமாக அமைந்தன எனத் தெரிகிறது.

சான்றார் குலப் பிரிவுகள் : வரலாற்று ஆதாரங்கள்

அரசகுலம் என்பது போர்த் தொழிலையும் குடிகாவலையும் (பிரஜானாம் பரிபாலனம்) தன் பரம்பரை உரிமையாகக் கொண்ட குலம் என்று கண்டோம். தமிழகச் சான்றார் குலத்தில் பேரறமுடையார், அடக்கமுடையார் என்ற இரு பிரிவுகள் உள்ளன என்று கொங்கு நாட்டுத் திருமுருகன்பூண்டிச் சான்றார் மடத்துப் பட்டயம் குறிப்பிடுகிறது. பேரறமுடையார் என்ற பிரிவில் சேனாதிபதி என்ற வடசொல்லின் திரிபாகிய ஏனாதி, பணிக்கன், எழுநூற்றுவர், வலங்கை உய்யக் கொண்டார் போன்ற பிரிவுகள் இருந்தன எனக் கல்வெட்டுகளால் தெரியவருகின்றது. இவர்களுள் ஏனாதி பற்றி முன்பே கண்டோம். வலங்கை உய்யக்கொண்டார் என்ற பிரிவினர் “வலங்கை உய்யக்கொண்ட வாள்வீரர்” எனக் கி.பி.17ஆம் நூற்றாண்டு வில்லுப்பாட்டில் குறிப்பிடப்படுகின்றனர். சோழ அரச குலத் தொடர்புடைய போர் வீரர்களான

இவர்கள் காளியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள். கி.பி.11ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்த சிங்களாந்தகபுரம் (பெரம்பலூர் மாவட்டம், துறையூர் அருகிலுள்ள ஊர்) கல்வெட்டில் வலங்கை உய்யக்கொண்டார் என்ற இப்போர் வீரர்களின் புராணச் சிறப்பு "ஸ்ரீ அமராவதிக்குத் தலைவர்" என்ற பட்டத்தின் மூலம் குறிப்பிடப்படுகின்றது. இக் குறிப்பு சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகின்ற முசுகுந்தசோழன் கதையுடன் தொடர்புறுகின்றது. மகதை நாடாள்வான் எனப்பட்ட வாணாதிராயனை ஒடுக்கி வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளித்த வீரச் செயல் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

ஐம்பொழில் பரமேசுவரியைக் குலதெய்வமாகக் கொண்ட ஐந்நூற்றுவர் என்ற வணிகப் பிரிவினர் வலங்கை உய்யக்கொண்டார்களுக்குப் பலவிதமான சிறப்புகள் செய்தனர் என்றும் தங்கள் தோளில் அவர்களைத் தூக்கிச் சுமந்தனர் என்றும் அதனால் வலங்கை உய்யக்கொண்டார்கள், "செட்டி தோளேறும் பெருமாள்" என்ற சிறப்புப் பட்டம் பெற்றனர் என்றும் "வலங்கை மாலை"யால் அறிகிறோம். வணிகக் குழுக்களுக்குப் பாதுகாப்பு அளித்த மற்றுமொரு வாட்படைப் பிரிவினர் "கொங்கவாள் எழுநூற்றுவர்" எனப் பட்டனர். இவ் எழுநூற்றுவர் கொங்குச் சோழர்களின் குலத்தைச் சேர்ந்த அரசகுலப் படைப் பிரிவினர் ஆவர். பழனியில் உள்ள கொங்குச் சோழ அரசன் வீரநாராயண வீர கேரளன் கல்வெட்டு, "மூலபல கொற்றவாளர் எழுநூற்றுவர்" எனக் குறிப்பிடுகின்றது. "மௌலம்" என வடமொழியில் குறிப்பிடப்பட்ட மூலப்படை, அரசனின் குலத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்படும் தொல்படை ஆகும் என்பது திருக்குறள், படைமாட்சி அதிகாரம் "உலைவிடத்து" எனத் தொடங்கும் குறளுக்கான பரிமேலழகர் உரையால் தெரியவரும்.

எழுநூறு என்ற எண்ணிக்கை சிங்கள நாட்டிற்கு 700 வீரர்களுடன் சென்று ஆட்சியைக் கைப்பற்றிய கலிங்க அரசன் விசயனின் தொடர்பைக் குறிக்கின்ற எண்ணிக்கையாக இருக்கலாம். ஈரோடு மாவட்ம் அவல்பூந்துறை சான்றோர்

மடத்துச் செப்பேட்டில் "எழுநூற்றுவர் வங்கிஷம்" சான்றார் குலப் பிரிவே என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன.

பணிக்கன் என்ற சொல்லாட்சி வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தில் அங்கம் வெட்டிய திருவிளையாடலில் சான்றார் குலப் போர்ப் பயிற்சியாளனைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. சேரநாட்டில், சான்றார் பிரிவினர் சேர வம்சத்தவராக இருந்தனர். சேரமான் பெருமாள் அரசர்கள் பனம்பூமாலை அணிந்த அரச குலத்தவர் ஆவர். கி.பி.8ஆம் நூற்றாண்டில் இராசசேகரன் என்ற மன்னன் சேரமான் பெருமாளாக இருக்கையில் காலடியில் ஆதிசங்கரர் பிறந்தார். இந்த இராசசேகரன், "சௌகான்" (சோவன் என்ற ஈழச்சான்றார் பட்டத்தின் திரிபு) குலத்தவன் என்றும், ஆச்சார்யன் (களரி ஆசான்) என்றும், ஆதி சங்கராச்சாரியரின் நெருங்கிய நண்பனாகவும், பின்னர், சீடனாகவும் இருந்தவன் என்றும், கி.பி.13ஆம் நூற்றாண்டில் மாதவாச்சார்யார் என்பவரால் இயற்றப்பட்ட "சங்கர விஜயம்" என்ற சமஸ்கிருத நூல் தெரிவிக்கின்றது. இம்மன்னன் தொடக்கக் காலத்தில் ஆதிசங்கரர்க்குக் களரிப்பயிற்சியின் அல்லது அங்கக்கலையின் நுட்பங்களைக் கற்பித்தான் என்பது நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடிகிற ஓர் உண்மையாகும். சான்றார் குல மடத்துப் பட்டயமான கருமாபுரம் செப்பேடு "சான்றார் குலத்து முன்னோர் ஒருவரைக் குறிப்பிடும் போது "மன்னர்க்கு மன்னனாம் சங்கராச்சாரியாருக்குத் தயவுடன் உபதேசம் தானருளிச் செய்தவன்" என்று குறிப்பிடுகின்றது. இக் குறிப்பு இராசசேகரனையும் அம் மன்னன் கற்பித்த அங்கக்கலைப் பயிற்சியையுமே சுட்டுகிறது எனத் தெரிகிறது.

சேரநாட்டில் கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நேர்ந்த அகம்படியர் மற்றும் வேளாளர் (நாயர்) எழுச்சியில் வர்மக்கலைப் பயிற்சி, களரிப்பயிற்சி போன்ற பயிற்சிகளும் அப் பயிற்சிகளை வழங்குகின்ற ஆசானுக்குரிய பணிக்கன் என்ற பட்டமும் நாயர்களுக்கும் உரிமையாகிவிட்ட காரணத்தால் பூர்விகப் போர்க்கலை ஆசான்களான சான்றார்களும், ஈழவரில் ஒரு பிரிவினரும் தங்களைப் பழைய

பணிக்கன்மார் எனக் குறிப்பிட்டுக் கொள்ளத் தொடங்கினர். கேரள மாநிலத்தின் பழமையான நாட்டுப் பாடல்களான வடக்கன் பாட்டுகளில் இதற்கான ஆதாரங்கள் உள்ளன. வடக்கன் களரி என்பது ஈழவர்க்கும், தெற்கன் களரி என்பது சான்றார் குலத்தவர்க்கும் உரிமையானவை என்பதே கேரளதேச மரபுவழிச் செய்தியாகும். கி.பி.1752இல் திருவிதாங்கூர் அரசர் மார்த்தாண்டவர்மாவுக்கு அனந்தபத்மநாபன் என்ற சான்றார் குலத்தவன் ஆசானாகவும் படைத்தலைவனாகவும் இருந்ததாகக் குமரிமாவட்டம் தச்சன் விளைச் செப்பேட்டால் தெரியவருகிறது.

கொங்கு நாட்டில் கி.பி. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் சான்றார் குலத்தவரின் அரசியல், சமூக அந்தஸ்து அவ்வளவு உயர்வானதாக இல்லை. இருப்பினும் போர்க்கலைப் பயிற்சியில் தலைசிறந்தவர்களாகச் சான்றார் குலத்தவரே இருந்தனர். விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலைக் கவுண்டரின் ஆசான், கம்புக்காரர் எனப்பட்ட நாடார் குலத்தவர் ஆவர். தாராபுரம் பகுதியில் எண்டப்புளிரோடு என்ற பகுதியில் மக்களின் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த வழிப்பறிக் கொள்ளையர்களைச் சாணார் சனத்தவர் சிலம்பம் வீசிக் கதிகலங்க ஓடும்படிச் சிதற அடித்த வீரக்கதையினைக் "கள்ளன்பாட்டு" என்ற நாட்டுப்பாடல் தெரிவிக்கின்றது. இப்பாடல் ''மலையருவி'' என்ற நாட்டுப்புறப் பாடல் தொகுப்பில் (கி.வா. ஜகந்நாதன், தொகுப்பு ஆசிரியர்) இடம் பெற்றுள்ளது.

பேரறமுடையார் பிரிவினை அடுத்துச் சான்றார் குலத்தவருள் அடக்கமுடையார் என்ற பிரிவினர் செப்புப்பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றனர் எனக் கண்டோம். இப்பிரிவினரும் போர் மரபினராகிய சத்திரிய வருணத்தவரே ஆயினும் பிரஜானாம் பரிபாலனம் அல்லது குடிகாவல் எனப்பட்ட நிர்வாகத்துறையின் நிபுணர்களாக இருந்தவர்களாவர். தர்மசாஸ்திரம், நீதிசாஸ்திரம், நில வருவாய் நிர்வாகம், நீர்ப்பாசன நிர்வாகம் போன்றவற்றில் இவர்கள் தேர்ந்தவர்களாவர். சேரநாட்டில் முந்நூற்றுவர் என்றும் முழிக்களத்து ஒழுக்கவிச்சான்றார் என்றும்

அழைக்கப்பட்ட சான்றார் குலப்பிரிவினர் இத்தகைய நிர்வாகிகள் ஆவர்.

மிழிச்சானார் என இவர்கள் கி.பி.14ஆம் நூற்றாண்டில் குறிப்பிடப்பட்டனர் எனப் புதுக்கோட்டை மாவட்டம் ஓணாங்குடிக் கல்வெட்டால் அறிகின்றோம். முழிக்களம் என்பது சத்திரிய சபையாகும் என்று கேரளதேச வரலாறு (அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பதிப்பு) குறிப்பிடுகிறது. சேரமான் பெருமாள் மன்னர்கள் காலத்தில், அதாவது 11ஆம் நூற்றாண்டு வரை சேரநாட்டுக் கோயில்கள் அனைத்தும் முழிக்களக் கச்சம் எனப்பட்ட சத்திரியசபைச் சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிக்கப்பட்டன. தலைவாய்ச் சான்றார், இடைச்சான்றார் போன்ற பிரிவினர்களும் இத்தகைய பழமையான நிர்வாக, மற்றும் நீதி நிர்வாகத் தொடர்பினரே ஆவர்.

சான்றார் சமூக உட்பிரிவுகள்

கி.பி.1750 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் நாடார் சமூகத்தின் ஐந்து உட்பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் உதைய மார்த்தாண்ட விநாயகர் கோயிலின் முன்னர் நிறுத்தப்பட்டுள்ள கல்தூண் ஒன்றில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

மதுரை நாயக்க அரசு முற்றிலும் வீழ்ச்சியடைந்து மறைந்துவிட்ட நிலையில் தளவாய் தீத்தாரப்ப முதலியார் தென்பாண்டி நாட்டின் நிர்வாகியாக நீடித்த சூழலில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டது. தீத்தாரப்ப முதலியார் வெள்ளான்பற்று – சாணபற்று என்ற இருவகை நிலங்களை உரிமையாகப் பெற்றிருந்த வேளாளர் மற்றும் சான்றார் சாதியினர்க்கு வழங்கிய வரிச் சலுகைகள் இக் கல்வெட்டில் ஆணையாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவினருள்ளும் ஊரான் நிலமைக்கார நாடான் என்ற பட்டப்பெயருடைய நாடார் குலப்பிரிவினர் முழுமையான அதிகாரமிக்க குழுவினராக இருந்தனர். குட்டம் சந்திர மார்த்தாண்டப்பணிக்க நாடார் உள்ளிட்ட நிலமைக்கார நாடார்கள் அரசு இறைசெலுத்தும் தேவையற்றவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

அதாவது இவர்களே பூர்விக நிலவுடைமையாளர்கள் என்பதனைத் தீத்தாரப்ப முதலியார் அங்கீகரித்ததினாலேயே யாருக்கும் வழங்கப்படாத அதிகபட்ச உரிமையை வழங்கியுள்ளார் என்றோ நெடுங்காலமாக இவர்கள் அனுபவித்து வந்த உரிமையைத் தீத்தாரப்ப முதலியார் அங்கீகரித்துள்ளார் என்றோ கொள்ளலாம். ஊரான் என்ற பட்டம் மருத நிலத் தலைமகனுக்குரிய பட்டமாகும்.

ஊரன் அல்லது ஊரான் என்பவன் வேந்தன் எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மருத நிலத் தலைமகனே ஆவான். மகிழ்நன் என்ற பட்டமும் இவனுக்குரியது ஆகும். இடைக்கால வைணவ உரை நூல்கள் மகாபலியிடமிருந்து நிலத்தைக் கவர்ந்த திரிவிக்கிரமனை "வஞ்சித்து நிலம் கொண்ட ஊரான்" எனக் குறிப்பிடுகின்றன. திரிவிக்கிரமன் மகாபலிச் சக்கரவர்த்தியைத் தன் கால்களால் தாழ்த்தி அழுத்திப் பாதாள உலகத்திற்கு அனுப்பியவன் ஆதலால், திரிவிக்கிரமனைத் "தாழ் தாளன்" அல்லது "தாடாளன்" என்று திருமங்கை ஆழ்வார் குறிப்பிடுகின்றார். தாடாளன் குலத்தவர் எனச் சான்றார் குலத்தவரைக் கொங்கு நாட்டு அவல் பூந்துறைச் செப்பேடு குறிப்பிடுகின்றது. தாடாளன் என்ற இந்த வருணனைக்கு முற்றிலும் பொருத்தமானவர்கள் நிலமைக்கார நாடாள்வார்களே ஆவர். அதனாலேயே, நாடார் திருமண வாழ்த்துப் பாடல்களில் இவர்க்ள "தாடாளன் சோழன் தனிச்சோழன் தேசமதில், நாடாண்மை பெற்று நன்மை கிட்டிக் கொண்டவர்கள்" எனப் பாடப் பெற்றுள்ளனர்.

தாடாளன் என்ற இக்கருத்தோட்டமே மாபலியை வஞ்சித்து நிலம் கொண்ட ஊரான் என வைணவ உரைநூல்களில் குறிப்பிடப்படுகிறது. அதாவது அரசகுலத்தவர் என்பதையும். திருமாலுக்குச் சமமான ஆட்சியாளர்கள் என்பதையும் உணர்த்துவதாகவே ஊரான் என்ற இப்பட்டம் அமைந்துள்ளது. நிலமைக்காரர் என்ற சொல்லாட்சி மன்னுதல் = நிலைபெறுதல் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் மன்னர் அல்லது மன்னனார் (மன்னார்) என்ற பட்டத்திற்குச் சமமானதாகும்.

மன்னார் என்ற இச் சொல்லும் காக்கும் கடவுளாகிய திருமாலைக் குறிக்கும் சொல்லாகும்.

அரசியல் பூசல்களாலும் அதிகாரப் போட்டிகளாலும் அரண்மனைச் சதிகளாலும் அதிகாரங்களை இழந்துபோக நேர்ந்தாலும் அந்தஸ்தினை இழக்காதவர்கள் என்ற பொருளில் இவர்களை நிலைமைக்காரர் எனக் குறிப்பிட்டிருக்கலாம். அரசகுல அந்தஸ்து என்பது சட்டப்படி இவர்களிடமிருந்து பறிக்கப்பட முடியாத உரிமையாகும். கி.பி.12—13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் "நிலைமை அழகிய நாடாள்வான்'' என்ற பட்டப் பெயருடைய நாடாள்வான் ஒருவர் குறிப்பிடப்படுகிறார். அதே போன்று, கல்லிடைக்குறிச்சியில் (நெல்லைமாவட்டம்) நிலைமை அழகியபாண்டீசுவரம் என்ற பெயரில் பிற்காலப் பாண்டிய மன்னர்களால் எழுப்பப்பட்ட கோயில் ஒன்று உள்ளது. கல்லிடைக்குறிச்சி அரசகுல வெள்ளை நாடார்கள் வாழ்ந்த ஊர் என்பதை நாம் முன்னரே கண்டோம். கி.பி.18ஆம் நூற்றாண்டில் மாவீரர் மருது சகோதரர்களின் ஆட்சிப்பகுதியில் தேவமார், சேர்வைக்காரர் என அழைக்கப்பட்ட முக்குலத்தோர் தவிர நிலைமையாளிகள் எனப்பட்ட அந்தஸ்துமிக்க குடியினரும் இருந்தனர் எனச் சிவகங்கை மாவட்டத்துத் தஞ்சாக்கூரில் உள்ள ஓலைச் சுவடியொன்றால் அறிந்துகொள்ள முடிகிறது. திருவாடானைப் பகுதியில் "நிலைமை அழகிய மங்கலம்" என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் தான் திருவாடானைப் பாண்டிய வமிசத்தவர் விசய நகரத்தாரால் ஒடுக்கப்பட்டதாக வரலாற்று நூல்களால் அறிகிறோம். ஆயினும் இதன் பின்னரும் அரசியல் அதிகாரத்தை இழந்த நிலையில் ஆனால் அந்தஸ்தை இழக்கா நிலையில் இந் நிலைமையாளிகள் அப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது. இலங்கையிலும் கி.பி.19ஆம் நூற்றாண்டில் டச்சு (ஹாலந்து) வணிகக் கும்பினியருடனான ஓர் ஒப்பந்தத்தில் மலைநாட்டு நிலைமையாளிகள் என்ற பிரிவினர்க் கையொப்பமிட்டுள்ளனர் என்பது நாம் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். படைமாட்சி

அதிகாரத்தில் திருவள்ளுவரால் குறிப்பிடப்படும் நிலைமக்கள் இவ்வரச குலத்தவர் ஆவர் என நாம் அறியமுடிகின்றது.

நிலைமைக்காரர் என்ற பிரிவு தமிழக மூவேந்தர்களின் எஞ்சி நிற்கும் அடையாளம் என்றே கொள்ளலாம். வலங்கை உய்யக் கொண்டார்கள் என்று கி.பி.18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை அழைக்கப்பட்ட நாடார் குலப்பிரிவினரும் இரவிகுல சத்திரியர் என்ற அடைமொழியுடன் கேரள மாநிலத்திலும் குமரி மாவட்டத்திலும் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டனர். இவர்கள் சோழ அரச குலத்தின் வழித்தோன்றல்களே ஆவர்.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருநெல்வேலி மாவட்டம் மானூரில் சிற்றரசனாக வாழ்ந்த ஒரு பெருமகன் செண்பகராமன் என்பவர் ஆவார். இவரது மனைவி பொன்னுருவி என்பாளே தென்காசிப் பாண்டியன் சீவலமாறனின் சகோதரி ஆவாள். செண்பகராமனுக்கு பொன்னுருவிக்கும் பிறந்தவன் சிவனணைந்தான் என்பவன் ஆவான். சீவலமாறனின் வாரிசாகத் தென்காசிப் பாண்டிய அரச பதவிக்கு வந்திருக்க வேண்டிய சிவனணைந்தானின் மரபு மீறிய சில செயல்களால் தென்காசிப் பாண்டியர் ஆட்சியே அழிந்தொழிந்தது. இதனைச் சிவனணைந்த பெருமாள் கதை என்ற வில்லுப்பாட்டு மற்றும் சீவலமாறன் கதை என்ற இலக்கியம் ஆகியவற்றின் வாயிலாக அறியலாம் மானூர் என்ற ஊர் வலங்கை உய்யக்கொண்டார்களின் நிர்வாகத்தில் வந்தது எந்தக் காலக்கட்டத்திலிருந்து என ஆராய்ந்தால் நமக்கு ஆர்வத்தைத் தூண்டும் ஒரு கல்வெட்டு குறிப்பு கிடைக்கின்றது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் தமிழக முழுமையும் பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்குக் கீ வந்துவிட்ட காலகட்டத்தில் மானூர்ப் பகுதியில் "இவ்வூ நாடாளும் கங்கைகொண்ட சோழப் பெருமாக்கள்" என் கல்வெட்டுக் குறிப்பு காணப்படுகிறது. மானூரையடுத்துள் கங்கை கொண்டானில், கயத்தாற்றுப் பாண்டியருட உறவுடைய பெருமக்களின் அரண்மனை இருந்தது. கி.பி.19ஆ நூற்றாண்டின் தொடக்கத்தில், கலெக்டர் லூஷிங்டனா இடிக்காமல் விடப்பட்ட அரண்மனைகள், ஸ்ரீவைகுண்ட

கோட்டையும் இவ்வரண்மனையுமே என டாக்டர் கமலா கணேஷ் என்ற ஆய்வறிஞர் கண்டறிந்துள்ளார்.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் தீத்தாரப்ப முதலியாரிடம் தமக்கு உரிய அதிகாரங்களைப் புதுப்பித்துப் பெற்றுக் கொண்ட நிலமைக்காரர்கள் இத்தகைய பெருமக்களின் வம்சத்தவரே என்றும், கி.பி.19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயக் கும்பினி ஆட்சியாளர்களாலும் இவர்களின் அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டதென்றும் புலனாகும்.

நிலைமைக்கார நாடார்கள் பற்றிக் கி.பி.19ஆம் நூற்றாண்டில் சாராடக்கர் அம்மையார், பிஷப் இராபர்ட் கால்டுவெல் போன்றோர் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் தமக்குரிய தனிப்பட்ட அனுபோக நிலங்களைப் பிறரிடம் விற்றுவிட்ட பின்னரும் “ஜோடிவரி” எனப்படும் அரசிறையை வசூலித்தே வந்தனர் என்றும், இங்கிலாந்து நாட்டின் நிலப் பிரபுக்களுக்குச் சமமானவர்கள் இவர்கள் என்றும் மேற்குறித்த வெளிநாட்டவர் குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டிலேயே தம் சத்திரிய சமூக அந்தஸ்துகளைப் பற்றி அதிகம் பொருட்படுத்தாமல் வணிகத்திலும் புதிய உற்பத்தித் தொழில்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நாடார் பிரிவினர் இருந்தனர். விருதுநகர், சிவகாசி, திருத்தங்கல், திருமங்கலம், கமுதி, அருப்புக்கோட்டை போன்ற ஊர்களில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் கி.பி.1779 ஆம் ஆண்டில் திருச்செந்தூர் மேலக்கோபுரம் கட்டுவதற்குத் திருவாவடுதுறை ஆதீனத்தாரிடம் நிதி வழங்கியதைக் குறிப்பிடும் பட்டயம் ஒன்று திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளது. அப்பட்டயத்தில் இவர்கள் தங்களை நாடாக்கள் என்றும் பிறதொழிற் சாதியினரைப் பட்டடைக் குடிகள் என்றும் குறிப்பிடுவது கவனத்துக்குரியது.

இனி, குலசேகரப்பட்டினம் கல்வெட்டில் அடுத்ததாகக் குறிப்பிடப்படும் ஒரு பிரிவு மினைகெடன் முக்கந்தமார் என்பதாகும். முக்கந்தர் என்று அழைக்கப்படும் நாடார் குலப் பிரிவினர் பற்றி “மாவலிவாணன்

வையைக்கரையில் முகுந்து பட்டம் பெற்றவர்'' என்று அவல்பூந்துறைச் செப்பேடு குறிப்பிடுகின்றது. புதுக்கோட்டை மாவட்டத்தின் எல்லையையொட்டி இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஓரியூர்ப்பகுதியில் முக்கந்தர் பிரிவைச் சேர்ந்த நாடார் குலத்தவர் ஓரளவு அதிகாரத்துடன் நிலவுடைமையாளர்களாக வாழ்ந்திருந்தனர் எனக் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவணம் ஒன்று குறிப்பிடுகின்றது. திருப்புவனம் அருகிலுள்ள மடப்புரத்தில் முக்கந்தமார் அதிகம் வாழ்கின்றனர். இவர்களுக்குரிய பத்திரகாளியம்மன் கோவில் மாவீரர் மருது சகோதரர்களின் வரலாற்றிலும் இடம்பெற்றுள்ளது. முக்கந்தமார் என்ற இச்சொல் "முகதமாகிழார்'' என்ற வடிவில் கி.பி.1630 ஆம் ஆண்டைச் சேர்ந்த திருவாரூர் (திருவாரூர் மாவட்டம்) வன்மீக நாதர் கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது (A.R.E. 681/1919.). "முகதமா'' என்ற சமஸ்கிருத சொல்லுக்கு "குடியிருப்புத் தலைவன்" (தமா முக்ய) என்று பொருளாகும். இது வடமொழி வேதங்களில் வழங்கப்பட்டுள்ள சொல்லாட்சியாகும்.

குடியிருப்பின் வருவாய்க் கணக்கு முதலியவற்றை நிருவகிப்பதும் அவை தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பதும் முகதமாவின் பொறுப்பாகும். திருவாரூர்க் கோயில் கல்வெட்டிலும் கோயிலின் பண்டாரக் கணக்கை நிர்வகிப்பவராகவே முகதமாகிழார் குறிப்பிடப்படுகிறார். இப்பதவி வழக்குத் தீர்க்கின்ற அதிகாரம் உடைய பதவியாதலால் மராட்டி மொழியில் இச் சொல்லின் திரிபாகிய "முகதம்'' என்பது நடுவர் என்ற பொருளில் வழங்குகின்றது. குலசேகரப் பட்டினம் கல்வெட்டில் காணப்படும் "மினைகெடன் முக்கந்தமார்'' என்ற சொல்லாட்சி "வினைக்கு இடை முகதமா" என்ற தொடரின் கொச்சை வழக்கு என்று நாம் புரிந்து கொண்டால் இதில் புதிர் ஏதும் இல்லை என விளங்கும்.

சங்க காலத் தமிழகத்தில் போரில் ஈடுபட்டுள்ள இருவேறு வேந்தர்களின் படைகளுக்கிடையே சந்து செய்கின்ற பணியில் ஈடுபட்ட அதாவது நடுவர்களாக இருந்த சான்றோர்களை "வினை இடைநின்ற சான்றோர்'' என்று

குறிப்பிட்டனர். (குறிஞ்சிப்பாட்டு: 27 —28). எனவே, வினைக்கு இடைநின்ற சான்றோர்களே அல்லது முகதமா கிழார்களே "வினைக்கு இடை முகதமா" எனக் குறிப்பிடப்பட்டுக் காலப்போக்கில் பேச்சு வழக்கில் "மினைகெடன்முக்கந்தமார்" எனப்பட்டனர் எனத் தெரிகிறது. பொதுவாக இராச்சியத் தூதர் (Ambassador) போன்ற பதவிகள் பிராமணர் அல்லது சத்திரியர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பது அர்த்தசாஸ்திரக் கோட்பாடாகும். இந்த அடிப்படையில் முகதமா அல்லது முக்கந்தமார் என அழைக்கப்பட்ட சத்திரிய குலப் பிரிவினர் காலப்போக்கில் சான்றோர் குலத்துள் ஒரு உட்பிரிவினராக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். பாண்டிய குல அரச முன்னோன் ஒருவன் இராவணனின் பொருட்டுச் சந்து செய்தான் (தசானனன் சந்திபரச்சகார) என்று பாண்டிய மன்னனின் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு குறிப்பிடுவதை இங்குப் பொருத்திப் பார்க்கலாம்.

இனி அடுத்த பிரிவினராகச் செருகுடிச் சாணார் என்ற பிரிவினரைக் குலசேகரப் பட்டினம் கல்வெட்டில் காண்கிறோம். செருகுடி என்பது சிறுகுடி என்ற சொல்லின் பேச்சு வழக்குத் திரிபாக இருக்கக்கூடும். அவ்வாறெனில் இவர்கள் தற்போது நட்டாத்தி என வழங்கப்படும் பிரிவினராக இருக்கலாம் எனக் கருத முடிகிறது. நட்டாத்தியர் பிரிவினைச் சேர்ந்த மானாட்டுக் குமாரசாமி நாடான் என்பவர் மேல் பாடப் பெற்ற குமாரசாமி நாடான் வில்லுப்பாட்டில் அவர்கள் சிறுகுடி நாடார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இவர்கள் "வலங்கைச் சான்றோர்" என இவர்களின் கலியாண வாழ்த்துப் பாடல் குறிப்பிடுகின்றது.

இல்லம் என்பதற்குரிய தெலுங்குச் சொல்லான "இண்டி" என்பது இவர்களுடைய 63 உட்பிரிவுகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதால் இவர்கள் தெலுங்குச் சோழர்களைச் சார்ந்து குடியேறிய குடிபடை வீரர்களாக இருக்கக்கூடும் எனத் தெரிகிறது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில், சுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாணத் திருவிழாவின்போது மணமகள் வள்ளியின் சார்பாக நட்டாத்தியர் பங்கேற்கும் மரபு உள்ளது. கொங்கு

வேளாளர்களின் குலகுருவாகிய குளந்தை ஆனந்தன் என்பவர் நட்டாத்திப் பிரிவினைச் சேர்ந்தவர் என ஆவணங்களால் தெரியவருகிறது. குளந்தை என்ற சொல் தூத்துக்குடி மாவட்டம் நட்டாத்திப் பண்ணையையொட்டி அமைந்துள்ள பெருங்குளத்தைக் குறிப்பதாகும்.

நட்டாத்தியர்களின் தலைவராகவும் கிராம முனிசீப்பாகவும் இருந்த வைகுந்தநாடான் என்பவர் கி.பி.1860ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களிடம் "சன்னது" பெற்றுள்ளார். சன்னதின்படி, கொங்குநாட்டுக்கு வைகுந்த நாடார் தம் பாதுகாவலருடன் பல்லக்கில் செல்லவும், உரிய மரியாதைகளைப் பெற்றுத் திரும்பவும், உரிமை வழங்கப்பட்டுள்ளது. நட்டாத்தியர்க்குக் கொங்குநாட்டுடன் உள்ள தொடர்பு விரிவாக ஆராயத்தக்கதாகும். தெலுங்குச் சோழர்களுள் ஒரு பிரிவினர் கி.பி.16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொங்கு நாட்டுப் பகுதியில் குடியேறினர் என்று தெரியவருகிறது.

பனைமரச் சாணார் என்ற அடுத்த பிரிவினர் பட்டடைக் குடியினராக அறியப்படுகின்றனர். ஆயினும் இவர்களும் போர்க்குடியினரே ஆவர். இவர்களிடையே, சான்றார் குலத்தினர்க்குரிய உடன்கட்டை ஏறும் பழக்கம் நெடுங்காலம் நீடித்து வந்திருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முசிறி அருகிலுள்ள கரைபோட்டான் ஆறு என்ற ஊரைச் சார்ந்த பனையேறி ஒருவர் இறந்தபோது அவர் மனைவி உடன்கட்டை ஏறிய செய்தி பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்த இராஜாராம் மோகன்ராய் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் திரைப்பட இயக்குநர் முக்தா சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார் ("சமூக நீதிப் போராட்ட வரலாறு" – பக்.19–26). பனை மரச் சான்றார்கள் இராசபுத்திர குலப்பிரிவில் ஒன்றான "வசீர்" என்பவர்களோடு ஒப்பிடத்தக்கவர்கள்.

பூர்வீகப் போக்குடியினராகிய இவர்கள் கால மாற்றத்தாலும் அரசியல் அதிகார இழப்பினாலும் பனையேறும் தொழிலில் ஈடுபடநேர்ந்தது. கி.பி.17ஆம் நூற்றாண்டில் இவர்களில் பலர் கத்தோலிக்க கிறிஸ்தவ

மதத்திற்கும் பின்னர் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ மதத்திற்கும் மாறினர். தஞ்சாவூரைப் பூர்விகமாகக் கொண்ட புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய இப்பிரிவினரே தூத்துக்குடி மாவட்டம் வாழையடி வகுத்தான்குப்பம் என்ற பகுதியில் குடியேற்றப்பட்டு நாசரேத் என்ற ஓர் ஊர் உருவாகக் காரணமானவர்கள் ஆவர். இச்செய்தி ஆங்கிலேயர் காலத்தில் எழுதப்பட்ட தஞ்சாவூர்க் கையேட்டில் குறிப்பிடப்படுகிறது.

குலசேகரப்பட்டினம் கல்வெட்டில் குறிப்பிடப்படும் ஐந்தாவது பிரிவினராகிய மலையாளத்துச் சாணார் என்பவர்கள் மேனாட்டார் என்ற பிரிவில் கேரளத்தில் வாழ்ந்து திருவிதாங்கூர் சாமந்த அரசர்களின் ஆதரவையும் உறவையும் ஏற்றவர்கள் ஆவர். கள்ளச்சான்றார் என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர் என்றும் கண்டோம். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய யாத்திரிகர் பர்போஸா கேரளத்தில் வாழ்ந்த உயர்ந்த ஐந்து ஜாதியினரில் மைனாட்டோ, குயவம் என்ற இரண்டு பிரிவினரைக் குறிப்பிடுகின்றார். மைனாட்டோ என்பது மேனாட்டார் என்பதின் போர்ச்சுக்கீசிய உச்சரிப்புத் திரிபு என்றும், குயவம் என்பது "கிழவன்" என்ற, நிலமைக்கார நாடார்களைக் குறிக்கும் பெயரின் போர்ச்சுக்கீசிய உச்சரிப்பின் திரிபு என்றும் கொள்ளலாம்.

சான்றார்களோடு தொடர்புடைய சாதியினர் – ஈழவர்

கேளர மாநிலத்தில் "ஈழவர்" என்ற பெயரிலும் ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் "ஈடிகா" என்ற பெயரிலும் தமிழகத்தில் "இல்லத்துப் பிள்ளைமார்" என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்ற குறிப்பிடத்தக்க ஒரு சாதியினர் ஈழவர் ஆவர். சோழ மண்டலத்தில், குறிப்பாகத் தஞ்சை – நாகைப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்ற சோழிய வேளாளர்கள், ஈழவர் சமூகப் பிரிவினரே ஆவர். கொங்கு நாட்டுப் பேரூர்ச்சிறுகுடி வேளாளர் மடத்தில் உள்ள கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த செப்பேடு பஞ்ச நாட்டார், செஞ்ச நாட்டார், ஆரணத்தோர், மருமூட்டில்லம், சோழியர் என்ற ஐந்து பிரிவைச் சேர்ந்தோர்களைச் சிறுகுடிவேளாளர்கள் என்று

குறிப்பிடுகின்றது. இவற்றில் இறுதி இரண்டு பிரிவுகள் கேரள மாநிலத்து ஈழவர் சமூகத்தில் இதே பெயர்களில் உள்ளன. எனவே சோழிய வேளாளர் எனப்படுவோர் தஞ்சைச் சோழர்களுக்கும் கொங்குச் சோழர்களுக்கும் தொடர்புடைய வேளாளச் சமூகப் பிரிவினர் என்பதில் ஐயமில்லை. கொங்கு நாட்டுப் பேரூர் "மேலைச் சிதம்பரம்" என அழைக்கப்படும்.

சோழப் பேரரசர் முடிசூடும் தலமாகவும் குலதெய்வத் திருத்தலமாகவும் சிதம்பரம் இருந்ததைப் போன்று கொங்குச் சோழ அரசர்களுக்குக் கோநகராகவும் முடிசூடும் தலமாகவும் விளங்கியது பேரூர் ஆகும். இதிலிருந்தே, கொங்குச் சோழர்களின் அரசகுலப் படையாகிய எழுநூற்றுவர்க்கும், சோழியர் பிரிவைச் சேர்ந்த சிறுகுடி வேளாளர்க்கும் உள்ள தொடர்புகளை உய்த்துணரலாம். மேற்குறிப்பிட்ட பேரூர் சிறுகுடி வேளாளர் மடத்துச் செப்பேட்டில் சிறுகுடி வேளாளர்களின் குல வரலாற்றைக் குறிப்பிடுகையில் "ஈழம் திறைகொண்ட இலங்காபுரிக் காவலன்" என்றும், "தாசப் படை வெட்டி இரட்டைச் சாங்கு பிடித்தவன்" என்றும்,"செட்டி தோள்மீது ஏறும் கட்டாரிராயன்" என்றும், "மதுரையை ஆளும் பாண்டியன், சேர அரசன், சோழனுக்கு வாள்தொழில் பயிற்றுவோன்" என்றும் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இக்குறிப்புகளே மேற்படிச் சமூகத்தவர்க்கும் சான்றோர் குலத்தவர்க்கும் உள்ள தொடர்புகளை உணர்த்தப் போதுமானவையாகும். சான்றார் குலத்தில் தோன்றி, அந்தஸ்தை இழந்து "காவிதி" பட்டம் பெற்றவர்கள் இல்லத்தார் எனப் பத்திரகாளியம்மன் கதை (வரி.1884—85) கூறும்.

பிரபுக்கள் வர்க்கத்துக்குரிய அல்லது சத்திரிய வர்ணத்துக்குரிய "சான்றோர்" பட்டம் தமக்குக் கிட்டாததாலும், தாம் வைசிய வருணத்துக்குரிய அந்தஸ்தோடு மட்டுமே விடப்பட்டதாலும் ஈழவர் காலப்போக்கில் "இல்லத்துப் பிள்ளை" என்ற தமது குலப் பட்டத்தின் வழியாக வேளாளர் குல அடையாளத்தை ஏற்றிருக்கக் கூடும். கேரள மாநிலத்து ஈழவர்களும் தம்மைச் சத்திரிய குலத்தவர்களாகக் குறிப்பிட்டுக் கொள்வதில்லை என்பது இதனுடன் ஒப்பிடத் தக்கதாகும்.

கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகளில் தஞ்சை நகரத்தில் இருந்த ஈழச்சேரி குறிப்பிடப்படுகின்றது. இவ் ஈழச்சேரியில் குடியிருந்த ஈழவர்களைத் தற்காலச் சோழிய வேளாளர்களின் முன்னோர்களாகவே கருதவேண்டியிருக்கிறது. வலங்கை மாலை குறிப்பிடும் செய்தியின்படி பார்த்தாலும் சோழ மண்டலத்திலிருந்த ஈழவர்கள் வேறிடத்திற்குக் குடிபெயர்ந்ததாகவோ பாதிக்கப் பட்டதாகவோ தெரிய வரவில்லை. ஆனால் வலங்கைச் சான்றோர்கள் பெருமளவில் சோழ நாட்டிலிருந்து குடிப்பெயர்வுக்கு ஆளாகியிருப்பது பல்வேறு சான்றுகளால் நிரூபணமாகியிருக்கிறது.

எனவே, தஞ்சைப் பகுதியிலிருந்த ஈழவர்கள் தாம் சோழிய வேளாளர் என்ற பிரிவினராகத் தற்போது அழைக்கப்படுகின்றனர் என நாம் அறிந்து கொள்ளலாம். அதே வேளையில் நாம் மேலே கண்ட பேரூர் சிறுகுடிவேளாளர் மடத்துச் செப்பேட்டில் “கருணாகர கிளைஞர் அதிபன்” என்றும் “பரணிகொண்டோர்” என்றும் கூறப்படுவதை நோக்கும்போது கலிங்கத்துப் பரணியின் நாயகனாகிய கருணாகரத் தொண்டைமான் குலத்தவர்கள் ஈழகுலத்தொடர்புடையவர்கள் என்பது புலனாகும். ஆனால் இவர்கள், கி.பி.11ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே “சற்சூத்திரர்'' என்ற பிரிவில் சேர்க்கப்பட்டுவிட்டனர். அதாவது சூத்திரரில் உயர்வர்க்கம் என ஆந்திர மாநிலம் “திராட்சாராமம்'' கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. “ஒளிநாகர்” என்றும், “ஹேஹய நாகர்” என்றும் வழங்கப்பட்ட பழங்குடியினர், “தால ஜங்கமர்'' எனப் புராணங்களில் குறிப்பிடப்படுகின்றனர். அதாவது பனைமரத்தைக் குலச் சின்னமாகக் கொண்ட ஐந்து பிரிவினர் என்பவர் இவர்களே. ஹேஹயர் என்பது தமிழில் “ஏயர்'' என வழங்கும். கி.பி.8ஆம் நூற்றாண்டில், “ஏயர்கோன் கலிக்காம நாயனார்'' என்ற தொண்டை மண்டல வேளாளர் சோழ மன்னர்களின் சேனாதிபதியாக இருந்தார். இவரது குலத்தை, “வளவர் சேனாதிபதிக்குடி” என்றே பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். ஹைஹயர் குலத் தொடர்புள்ள கார்த்தவீரியார்ச்சுனனை வட இந்தியப் புராணங்கள்

சத்திரியனாகவே.குறிப்பிடுகின்றன. தொண்டை மண்டல வேளாளர்களை ஒத்த ஒரு பிரிவின்ர் சான்றார் குலத்திலும் உள்ளனர். இவர்களைக் காங்கேயன் வம்சத்தவர் என்றும் கூறலாம். புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கிப் பகுதியில் கி.பி.15ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அறந்தாங்கித் தொண்டைமான்கள் என்ற பிரிவினரும், தேவகோட்டைக்கு அருகிலுள்ள செம்பொன்மாரி என்ற ஊரை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த காங்கேயன் வம்சத்தவரும் இடத்தால் மட்டுமன்றிச் சாதி அந்தஸ்திலும் எட்டினால் தொட்டுவிடும் இடத்தில்தான் இருந்தனர் எனத் தெரிகிறது.

கிராமணி

கிராமத் தலைவன் அல்லது கிராம மணியம் என்று பொருள்படும் "கிராமணி" என்ற சொல் பிராகிருத மொழியில் "காமணி" என வழங்கப்பட்டது. பௌத்த சமய நூல்களில் "அசாரோக காமணி" (குதிரையில் சவாரி செய்யும் கிராமணி), "ஹத்தாரோக காமணி" (யானைமேல் சவாரி செய்யும் கிராமணி), "யோதஜீவகாமணி" (போரிடுவதன் மூலம் பிழைக்கும் கிராமணி), "வைசிய காமணி" (வணிக மற்றும் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட கிராமணி) என்ற பல பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. இலங்கை வரலாற்றில் "வட்டகாமணி", "துட்டகாமணி" என்ற அரசர்கள் கிறிஸ்துசகாப்தம் தொடங்கு முன்னரே ஆட்சி செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இன்றைக்கும் இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களிடையே உள்ள சாதி அமைப்பில் சத்திரியர்களே உயர்வானவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்களுள்ளும் "காமினி" என்ற குலப் பட்டப் பெயர் கொண்டவர்கள் உயர் அடுக்கில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச் சமூக அமைப்பில், கிராமணி என்ற பட்டம் பெற்றிருந்த சான்றார் குலத்தவரும் உயர் அடுக்கில் இடம் பெற்றிருந்தனர் என்பதில் ஐயமில்லை. இவர்களின் வீழ்ச்சியும் பிற சான்றார் குலத்தவரின் வீழ்ச்சியோடு ஒட்டி அமைந்ததே ஆகும். கி.பி.14—15ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த வைணவ உரை நூல்களுள் கிராமணிகள் பற்றிய குறிப்பு

நிரம்பக் காணப்படுகின்றது. “ஊரான்” என்பது ஊராட்சித் தன்மையுடையவன் என்று பொருள்படும் என்றும், ஊராண்மையாவது “கிராமண்யம்” என்றும் வைணவ உரைநூல்கள் குறிப்பிடுகின்றன. எனவே கிராமணி என்ற பட்டமும், ஊரான் நிலைமைக்காரன் என்பதற்கு இணையான ஒரு சாதி அந்தஸ்தைக் குறிக்கும் சொல்லேயாகும். ஆயினும், தமிழகத்தைப் பொறுத்தவரை, கிராமணி என்ற பட்டத்தைக் குலப் பட்டமாகப் பயன்படுத்தும் சான்றார் குலத்தவர்கள் தமிழகத்தின் வடபகுதியில் மட்டுமே உள்ளனர். தொண்டைநாடு, நடுநாடு போன்ற பகுதிகளில் சில ஊர்களில் இவர்கள் பரவலாக வாழ்கின்றனர். “தொண்டை நாடு சான்றோர் உடைத்து” என்பது பழமொழி. “ஜெயங்கொண்ட சோழ மண்டலமாகிய தொண்டைநாடு” என்பது சோழர்காலக் கல்வெட்டு வழக்காகும். “ஜெயங்கொண்ட தொண்டைச் சான்றோர் நாடு” எனக் குறிப்பிட வந்த சென்னை கலெக்டர் பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (கி.பி.1819) என்பவர், ஜெயங்கொண்ட தொண்டிய “சாணாறு நாடு” எனக் குறிப்பிடுகின்றார். இதில் “சாணாறு நாடு” என்ற வழக்கு “சாணார் நாடு” என்ற பேச்சு வழக்கின் பிழையான வடிவமே எனக் கொள்ளலாம். எனவே தொண்டை நாடு என்பது சாணார் நாடு என மக்கள் கருதியுள்ளனர். இச் சாணார்கள் “கிராமணிகள்” என்பதில் ஐயமில்லை. “தொண்டைநாடன்” என்ற பட்டம் சான்றோர்களுக்கு உரியது எனில், “தொண்டையர் மகன்” அல்லது “தொண்டை மான்” என்ற பட்டம் “சிறுகுடி வேளாளர்களுக்கு” உரிய பட்டமாகவே இருக்க வேண்டும். மேலே கண்ட வைணவ உரை நூல்கள் கி.பி.14–15 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்ச் சமூக நிலைமையைக் குறிப்பாகச் சோழநாட்டு நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இக் காலக்கட்டத்தில், சோழ நாட்டில் விசயநகர அரசின் ஆதரவுடன் தெலுங்குச் சோழர் குலத்தவர்கள் சிலர் குறுகிய காலம் ஆட்சி புரிந்துள்ளனர். இக்காலத்தில், கிராமணிகள் சோழ நாட்டுப் பகுதியில் சில இடங்களில் இருந்திருக்க வேண்டும். ஆயினும் சோழநாட்டுச் சமூக அமைப்பில் வேளாளர்கள் ஆதிக்கமே நிலைபெற்றிருந்தது. அதனால்தான்

வைணவ உரைநூல்களில் வேளாளரில் உயர்ந்தோர் "தொண்டைமான்" எனப் பட்டம் போட்டுக் கொள்வது இயல்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலக்கட்டத்தில், சமூக அடுக்கில் பிராமணர்களை அடுத்துத் "தொண்டைமான்" என்ற பட்டம் சூடிக் கொள்கிற வேளாளர் குலத்தவர்கள் உயர் சமூக அந்தஸ்தை வகித்தனர். "தோட்டி முதல் தொண்டைமான் வரை" என்ற வழக்கு இக்காலக் கட்டத்தில்தான் எற்பட்டிருக்க வேண்டும். இந்த இடத்தில் முக்கியமாக நாம் அறிய வேண்டிய ஒரு செய்தி, தஞ்சைக்கு அருகிலுள்ள கோவிலூர் என்ற ஊரில் காணப்படும் கி.பி.14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டின் மூலம், "தொண்டை நாடர்", "மழநாடர்" எனப்படும் நாடார் குலப் பிரிவினர் இருந்ததாகத் தெரிகிறது. (புலவர் செ. இராசு அவர்களால் கண்டறிந்து வாசிக்கப்பட்ட கல்வெட்டு) இத்தகைய நாடார் குலப் பிரிவினர் இப்போது "கிராமணி" என்ற சாதிப் பட்டத்தை இட்டுக் கொள்கின்றனர். அதே வேளையில், தொண்டை மண்டல வேளாளரிடையே காமணி முதலியார் என்ற பட்டமும் செங்குந்தரிடையே செங்கிளி கிராமணி என்ற பட்டமும் இருந்ததாகத் தெரிகின்றன. பெரியகாமண முதலியார், சின்ன காமண முதலியார் என்ற பட்டங்கள் சாசனங்களில் குறிப்பிடப்படுகின்றன. சாதி, சாதி அந்தஸ்து முதலியன நெகிழ்ச்சியாகவே இருந்துள்ளன என்ற வரலாற்று உண்மையை இவை உணர்த்துகின்றன.

பின்னிணைப்பு -2

ஆயுத பூசை

ஆயுத பூசை என்பது தற்போது எவ்வகைத் தொழில்புரிவோராயினும் தத்தமது தொழிற் கருவிகளை அலங்கரித்து வழிபடும் விழாவாகவே கொண்டாடப் படுகிறது. உண்மையில் இதுவே தொழிலாளர் திருநாள் என்றும் பலர் கருதுகின்றனர். பத்திரிகைகள் கூடத் தமது அச்சு இயந்திரங்களுக்கு ஓய்வு கொடுத்து அச்சகத் தொழிலாளர்களைக் கொண்டு பூசை நடத்தி விடுமுறை நாளாக அறிவிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. இத்தகைய வழக்கத்திற்கு இலக்கியத்தில் இடமளித்து அறிவு ஜீவிகள் மட்டத்திலும் அதற்கு அங்கீகாரம் கிடைக்கச் செய்தவர் தேசியகவி பாரதியார் எனலாம். "கை வருந்தி உழைப்பவர் தெய்வம்" என்று ஆயுதங்களின் தெய்வத்தையும், "பிரம்மதேவன் கலையிங்கு நீரே" என்று அத் தெய்வங்களின் தொண்டர்களாகிய தொழிலாளர் தோழர்களையும் பாரதியார் விளித்து விழிப்பூட்டுகிறார். இந்திய சமூக அமைப்பில் முதலாளி–தொழிலாளி என்று பிரித்துப் பார்க்கும் பார்வை உருவானதற்குக் காரணமே கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் வருகையைத் தொடர்ந்து இந்திய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் தாம் என்று தோன்றுகிறது. கி.பி.18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சியின் விளைவாக இப்பார்வை கூர்மையடைந்தது. குற்றாலம் கோயிலிலுள்ள கி.பி.1754–ஆம் ஆண்டைச் சேர்ந்த தென்காசிப் பாண்டியர் ஆட்சியின் இறுதியாண்டுக் காலச் செப்புப் பட்டயங்களில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் "தொழில்செய்து வருகிறபேர்" என்றும், பொதுமக்கள் "குடிபடை செய் தொழிலாளிகள்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.(1)

கி.பி. 17–ஆம் நூற்றாண்டு வரையிலும் பழைய வருணாசிரம அடிப்படையில் தோன்றிக் காலக்

கட்டாயங்களுக்கு ஈடு கொடுத்துத் தன்னைச் சற்றே உருமாற்றம் செய்து கொண்ட —சமயாசாரத்தலைவர், போர்மரபினரான குடிகாவலர், வணிகர், உழவர், கைவினைஞர் முதலானோர் என்ற ஒரு நெகிழ்ச்சியான அமைப்பே இந்திய சமூக அமைப்பாக அங்கீகரிக்கப் பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது கல்வியின் தெய்வமான சரஸ்வதி பூசையுடன் இணைந்து கொண்டாடப்படும் ஆயுத பூசை விழா, தொழிலாளர்களுக்கான விழாவாகத் தொடக்கக் காலத்தில் கருதப்படவில்லை என்பது தெளிவாகிறது. இவ்விழா, புரட்டாசிமாத அஷ்டமி நவமி திதிகளிலும் பூராடம், உத்தராடம் நட்சத்திரங்களிலும் கொண்டாடப்படும் காரணம் என்ன என்றும், ஆயுத பூசைக்குரிய சமய, சமூக அடிப்படை என்ன என்றும் ஆராய்வது தேவையாகிறது.

ஆறாம் மாதத்தில், எட்டாம் ஒன்பதாம் திதிகள்

நாள் நட்சத்திரம் பார்த்தல், ராகுகாலம் எமகண்டம் பார்த்தல் ஆகிய நம்பிக்கைகள் மிகப் பழமையானவை. பழந்தமிழிலக்கண நூலான தொல்காப்பியத்தில் ஓரை என்ற சொல் வழங்கியுள்ளது. காலத்தை வழிநடத்தும் கடவுளாகக் கிரேக்கர்களால் சூரிய தேவன் கருதப்பட்டான். ஹோரஸ் என்பது சூரியனுக்குரிய கிரேக்கப் பெயராகும். ஹோரா என்பது காலக்கணக்கீடு தொடர்பான கிரேக்கச் சொல்லாகும். (ஆங்கிலத்தில் Hour) இந்த கிரேக்கச் சொல்லிலிருந்தே ஓரை என்ற சொல் பிறந்தது எனப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை விளக்கியுள்ளார்.[2]

இன்றும் பஞ்சாங்கம் பார்ப்பவர்கள் நல்ல ஓரை, கெட்ட ஓரை எனப் பேசுவதை நாம் கேட்க இயலும். இத்தகைய நம்பிக்கைகளில் ஒன்றுதான் அஷ்டமி நவமி திதிகள் பற்றியதும். ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் உரியன என்றும் இவற்றுள் எட்டு என்பது சனிக்கிரகத்துக்கும் ஒன்பது என்பது செவ்வாய்க் கிரகத்திற்கும் உரியது என்றும், சோதிட இயல் வல்லுநர்கள் கருதுகின்றனர். (கி.பி. 7—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தரின் "கோளறு பதிகம்" எனப்படும்

தேவாரப்பதிகத்தில் ஒன்பது கோள்களுக்கும் ஒன்பது பாடல்களும், பொதுப்பாடலாக "வேயுறு தோளிபங்கன்" என்ற பாடலும் ஆகப் பத்து பாடல்கள் உள்ளன) சனிக்கிரகம் உடலுக்கு ஏற்படும் உட்காயங்கள், இரத்தக்கட்டு, மூச்சுத்திணறல் ஆகியவற்றுக்குக் காரகன் (காரணமானவன்) என்பதும், செய்வாய்க் கிரகம் வெட்டு—குத்துக் காயங்கள், தீக்காயம், இரத்தக் கொதிப்பு ஆகியவற்றுக்குக் காரகன் என்பதும் சோதிட இயல் தொடர்பான நம்பிக்கைகளாகும். அஷ்டமி (எட்டாம் திதி) நவமி (ஒன்பதாம் திதி) ஆகியன முறையே சனி, செய்வாய் ஆகிய கிரகங்களுக்குரிய திதிகளாதலால் இந்நாள்களில் ஒரு செயலைச் செய்யும் போது இக்கிரகங்களின் காரகத்துவத்தால் நோய்களோ ஊறுபாடுகளோ ஏற்பட்டு விடக்கூடும் என்ற அச்சத்தில் அஷ்டமி, நவமி திதிகள் நல்ல செயல் செய்யத்தக்க திதிகள் இல்லை எனச் சொல்வது சோதிட மரபாக இருந்து வருகிறது.

புரட்டாசி மாதம் என்பது ஓர் ஆண்டின் ஆறாவது மாதமாகும். அதாவது முதல் (மேஷ) ராசியில் சூரியன் நிற்பதாகக் கருதப்படும் சித்திரை மாதம் தொடங்கி, ஆறாவது வீடாகிய கன்னி ராசியில் சூரியன் நிற்பதாகக் கருதப்படும் மாதமே புரட்டாசி மாதமாகும். ஒருவர் ஜாதகத்தில் உள்ள பன்னிரு வீடுகளில் ஆறாம் வீடு என்பது போர், காயங்கள், நோய்கள் ஆகியவற்றைக் குறிக்கும் ஆதிபத்தியம் உடையது. விஸ்வபுருஷன் எனப்படும் உலகத்திற்குரிய ஜாதகத்தில் போர், காயங்கள் நோய்கள் ஆகியவற்றுக்குரிய ஆறாவது வீடாக அமைவது கன்னி (புரட்டாசி) மாதமாகும். இம்மாதத்தின் வளர்பிறைப் பட்சத்தில் வரும் அஷ்டமி, நவமி திதிகளில், போர்க் கருவிகளைப் போருக்கோ பயிற்சிகளுக்கோ பயன்படுத்தாமல், அவற்றால் தீங்கு நேராமல் காத்துக் கொள்வதற்காக அவற்றை நீராட்டி அலங்கரித்து வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. போர்க்கலைப் பயிற்சி என்பது பண்டைக் காலக்கல்வி முறையில் கட்டாயமான ஓர் அம்சம் என்பதால் புரட்டாசி மாத நவராத்திரிக் காலத்தை அனத்யயன காலம், அதாவது கல்வி கற்பதைத் தவிர்க்க வேண்டிய காலம் என்று தர்மசாஸ்திர நூல்கள் குறிப்பிடுகின்றன.[3]

நவராத்திரிக் காலம் முடிந்த பின்னர் வரும் தசமி திதியை விஜய தசமி என்ற பெயரில், விரதம் முடித்துப் புதிதாகப் போக்கலைப் பயிற்சி தொடங்கும் நாளாக வெற்றித் திருநாளாகக் கருதினர். (ஆயுதங்கள் முதலான அனைத்துக் கருவிகளையும் உருவாக்கும் விஸ்வ பிராமணர் (கண்மாளர்) குலத்தவர், புரட்டாசி மாதத்தின் இறுதி நாளன்று தமது தெய்வமான விஸ்வகர்மாவுக்கு ஓய்வுநாள் எனக் கருதி, தமது தொழிற்கருவிகளுக்கும் அன்று ஓய்வளிப்பர்)[4] விஜயதசமிக்கு முதல் நாளான ஆயுத பூசை நாளினை "மகா நவமி" என வழங்குவர். கி.பி.12—ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பெரியபுராணத்தில், புகழ்ச் சோழ நாயனார், கருவூரில் "மகா நவமி" கொண்டாடினார் என்றும், அது தொடர்பாகப் பட்டவர்த்தனம் எனப் பெயர் பெற்ற அவரது பட்டத்து யானைக்கு அபிஷேகம் நடைபெற்றது என்றும் கூறப்பட்டுள்ளன.[5]

கி.பி.15—16—ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியப் பேரரசாகத் திகழ்ந்த விஜயநகர அரசின் தலைநகரான ஹம்பியில் மகாநவமியன்று அரசர்க்குரிய குதிரைகளின் அபிஷேகம் நடைபெற்றது என்றும், மகாநவமி திப்பா என்ற அரங்கில் அரசர் ஆயுதங்களுக்கு வழிபாடு செய்தார் என்றும் அறிகிறோம்.[6] விஜய நகர அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், மைசூர் உடையார் அரச மரபினர் மகாநவமி விழாவினை விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவில், அரசர் தமது படைக்கலக் கொட்டிலில் உள்ள ஆயுதங்களை அலங்கரித்துப் பட்டாடை மலர் மாலைகள் சூட்டி வழிபடுவதும், விஜயதசமியன்று படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதும் வழக்கமாக இருந்து வந்தன.[7] மைசூர் தசரா (பத்து இரவுகள்) என்ற பெயரில் அணிவகுப்பு ஊர்வலமும் அம்பு போடுவதும் தற்போதும் வழக்கிலுள்ளன.

மாணார்ச்சுட்டிய வாள்மங்கலம்

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் (நூற்பா.36) "மாணார்ச்சுட்டிய வாள்மங்கலம்" என்ற ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது. வல்லார் என்பது வல்லவர் எனவும், நல்லார் என்பது நல்லவர் எனவும் பொருள்படுவது போல மாணார்

என்பது மாணவர் என்றே பொருள்படும். கல்வியின் ஓர் அங்கமான போர்க்கலைப் பயிற்சியினைப் பெறுகின்ற மாணவர்கள், தமக்குரிய படைக்கலங்களை நீராட்டி, அலங்கரித்து அவற்றை வழிபடும் மரபினையே இக்குறிப்பு தெரிவிக்கிறது. இந்நூற்பாவுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் இருவகையான வாள்மங்கலங்கள் இருந்தன என்று மட்டுமே தெரிவிக்கிறார்.[8]

அவ்விருவகையான ஆயுதபூஜை முறைகள் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. ஆயினும் கி.பி.12–13ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சோழர், பாண்டியர், கல்வெட்டுகளில் இடம்பெறும் மெய்க்கீர்த்திகளில் வீர அபிஷேகம், விஜய அபிஷேகம் என்ற இருவகையான அபிஷேகங்கள் குறிப்பிடப்படுகின்றன.[9] விஜய அபிஷேகம் என்பது போரில் கிடைத்த வெற்றிக்காக ஆயுதங்களுக்கு நடத்தப்படும் வெற்றிவிழா அபிஷேகம் என்றும், வீர அபிஷேகம் என்பது மகாநவமி (ஆயுதபூசை) தினத்தன்று ஆயுதங்களுக்கு நடத்தப்படும் அபிஷேகம் என்றும் பொருள் கொள்ளலாம். இவற்றுள் வீர அபிஷேகமே, மாணவர்களால் நடத்தப்பட்ட வாள்மங்கலம் எனத் தொல்காப்பியம் கூறும் வழிபாடு எனலாம். மாணவர்களுள் ஆடவர்கள் களரிப் பயிற்சி பெற்றமை போன்றே, மகளிர் ஆடற் கலைப் பயிற்சி பெற்றனர். ஆடற்கலைக்கும் போருக்கும் நேரடித் தொடர்பு இல்லாவிடினும், அடைவுகளும் சுவடுகளும் லயத்தோடு அமைவது இவ் இருவகைப் பயிற்சிகளுக்கும் அவசியமாகும். எனவே தான் மாணி (மாணவப் பருவத்தினர் அல்லது பிரம்மசர்ய ஆசிரமத்தவர்) என்ற சொல்லுடன் தொடர்புடைய மாணிக்கம் என்ற சொல் ஆடல் அரசியர்க்குப் பட்டமாகச் சூட்டப்பட்டுள்ளது.[10] மகாநவமியன்று மாணிக்கர் (தேவரடியார்) ஊர்வலமாகச் சென்று, ஆயுதங்களின் தெய்வத்துக்கும் அரசனுக்கும் மரியாதை செலுத்தும் மரபு இருந்தது என்றும், விஜயநகர வரலாற்றால் அறிகிறோம்.[11]

ஆயுதங்களில் குடிகொண்டு வெற்றியைத் தருகிற தெய்வத்தை அணங்கு எனப்பட்ட அஞ்சத்தக்க பெண்

தெய்வமாக முன்னோர் கருதினர். சிறுபாணாற்றுப்படை வரிகள் 94, 102 ஆகியவற்றுக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையினை[12] நாம் ஆதாரமாகக் கொண்டால், இத்தெய்வம் "கொற்றவை" எனக்கொள்ளலாம். கிபி. 12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விக்ரம சோழன் உலாவில் (கண்ணி: 49) "வருங்கொற்றம் ஆர்க்கும் அணங்கினுடனே மருங்கில் திருவுடைவாள் வாய்ப்ப" என்ற வரி இடம் பெற்றுள்ளது. வாளில் கொற்றத்துக்கு (வெற்றி, ஆட்சி)த் தெய்வமான கொற்றவை குடியிருப்பதாக இப்பாடல் தெளிவுபடுத்துகின்றது. கொற்றவை என்ற இத்தெய்வம் சில இடங்களில் எருமையைக் கொன்ற (மகிஷாசுரமர்த்தினி) துர்க்கையாகவும், சில இடங்களில் தாரகாசுரனை வதைத்த காளியாகவும் கொள்ளப்படுகிறது. சோழர்கள் துர்க்கையைக் காட்டிலும் காளிக்கே முதன்மையளித்தனர்.[13]

வங்காள மாநிலத்தில் மகாநவமி என்பது துர்க்கா பூஜா என்றும் குறிப்பிடப்பட்டாலும் காளிக்கே முதன்மையளிக்கப்படுகிறது. மாறாக, மகிஷபுரி (எருமை நாடு) ஆகிய மைசூரில் மகா நவமி விழாவில் சாமுண்டீஸ்வரி எனப்படும் சங்கு சக்கரம் ஏந்திய துர்க்கையே முதன்மை பெறுகிறாள். கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கீதைக்கு மராட்டியில் உரை எழுதிய ஞானேஸ்வரர், நவராத்ரி என்பது சண்டியின் பண்டிகை என்று குறிப்பிட்டுள்ளார்.[14] சண்டி என இங்குக் குறிப்பிடப்படுபவள் சண்ட (சண்டை) தெய்வமாகிய யமனின் பெண் வடிவமாகிய பைரவி அல்லது காளியே ஆவாள். சண்டிகேஸ்வரி என்ற இத்தெய்வம், பேயக் கணங்களின் தெய்வமாகும். துர்க்கை, சண்டி ஆகிய இரு தெய்வங்களுக்குமே நவராத்திரி உரியது எனத் தேவி புராணமும்[15] பவிஷ்ய புராணமும்[16] கூறுகின்றன.

இந்த இடத்தில் கொற்றவை அல்லது துர்க்கை எனப்படும் போர்த்தெய்வத்துக்கும் காளிக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வது தேவை. காளையை வென்ற, எருமையைக் கொன்ற, கூற்று என்ற சங்ககாலத் தெய்வத்தின் பெண் வடிவமே கொற்றவையாகும்.[17] இத்தெய்வம் ஆனிரை கவர்தலில் ஈடுபடும் தொறுப்பூசல்

மரபினராகிய வெட்சிப் போர்க் குலக் குழுவினரின் தெய்வமாகும். அதாவது இவளே பாலைக்கிழத்தி. அசுரர் குலத்தலைவனான மகாபலியின் தெய்வம் கொட்டாரா எனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. கொட்டாரா என்பது கொற்றவை என்ற சொல்லின் திரிபே. சிலப்பதிகாரம் வேட்டுவ வரி, வெட்சிப் போர்த் தெய்வமாகிய கொற்றவையைத் தமிழரின் முதன்மையான தெய்வமாகச் சித்திரிப்பதோடு, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்ட தெய்வமாகவும், திருமாலுக்கு இளங்கிளையாகவும் சிவனின் உடலில் பாதியை அடைந்தவளாகவும் சித்திரிக்கிறது. துர்க்கா பரமேஸ்வரி என்ற கருத்தோட்டம் சிலப்பதிகாரக் காலத்தில் உருவாகிவிட்டது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. கி.பி. 5 –ஆம் நூற்றாண்டளவில் தென்னாட்டில் பாசுபத சைவ மரபுகள், கூற்று அல்லது கொற்றவை என்ற பழந்தமிழ்த் தெய்வத்தின் வழிபாட்டுக் கூறுகளை முற்றிலுமாகச் சுவீகரித்துக் கொண்டன என்ற வரலாற்று உண்மையை இது உணர்த்தக்கூடும். மாறாகக் காளாமுக சைவம், காளி வழிபாட்டுக் கூறுகளை உள்ளடக்கி உருவாகி இருக்கக்கூடும். காளி என்பது மந்திர தந்திரங்களுடனும், ஆடல் பாடலுடனும் தொடர்பு படுத்தப்படும் போர்த் தெய்வமாகும். அதர்வண பத்ரகாளி என்று இத்தெய்வத்தைக் குறிப்பிடும் மரபு உண்டு. அவந்தி நாட்டிலுள்ள உஜ்ஜைனி காளி கோட்டம், இந்திய தரிசன மரபாகிய சாங்கியத்துடன் இணைத்துப் பேசப்படும், மிகப்பழமையான கோயிலாகும். காளாமுக சைவத்துக்குக் காளிவழிபாடே அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். பெருங்கற்படைக்காலம் எனத் தொல்லியலாளர்களால் குறிப்பிடப்படும் இரும்பு யுகத்தின் முதன்மையான தெய்வங்களுள் ஒன்றாகக் காளி இருந்திருக்க வாய்ப்புள்ளது. சிலப்பதிகாரம் வழக்குரை காதையில் (வரிகள்: 34–40) கொற்றவையும் காளியும் வெவ்வேறு தெய்வங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். "அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப்பீடம் ஏறிய மடக்கொடி வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை" என்றும், "அறுவர்க்கிளைய நங்கை இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்

கானகம் உகந்த காளி தாருகன் பேருரம் கிழித்த பெண்" என்றும் வேறுபடுத்திச் சித்திரிக்கப்படுகின்றனர். கொற்றவைக்குச் சித்திரை, ஐப்பசி மாதங்களில் வரும் பரணி நட்சத்திரமும் காளிக்கு மகாநவமியும் (புரட்டாசி உத்தராடமும்) உரியவையாகும்.[18] சோழராட்சிக் காலத்தில், குறிப்பாக முதற் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தை யொட்டிப் பரணி என்ற சிற்றிலக்கிய வகை செல்வாக்கு பெறத் தொடங்கியது. கலிங்கத்துப் பரணி பிரமன், திருமால், கணபதி, முருகன் ஆகியோரைப் பெற்றவளாகவும் சிவ வடிவினளாகவும் கொற்றவையையே புகழ்ந்துரைக்கிறது. ஆயினும், எயினர்கள் கொற்றவைக்குத் தமது தலையைப் பலியிடுவதுடன் பகடு (எருமை) பலி கொடுத்ததாகவும் கலிங்கத்துப் பரணி (தாழிசை 109–114) குறிப்பிடுகிற அதே வேளையில், காளி பக்தர்களாகிய சாதகர்களும் யோகினிப் பெண்டிரும் சூல–கபாலம் ஏந்தி, ஜதியிட்டு வருவதாகவும் வருணிக்கிறது. (தாழிசை: 115–116) சப்த மாதருள் காளிக்கு அலகையை வாகனமாகக் குறிப்பிடும் கலிங்கத்துப் பரணி மேதி (எருமை)யை வாராகி எனப்படும் பூவராக மூர்த்தியின் பெண் வடிவத்திற்கே வாகனமாகக் குறிப்பிடுகிறது.(கடவுள் வாழ்த்து: 17) இதன் பின்னணி விரிவாக ஆராயத் தக்கது. [19] பிற்காலச் சோழர் காலத்தில் இயற்றப்பட்ட காவியமாகிய கம்பராமாயணம், அயோத்தி நகர், அரண்(துர்க்கம்) சூழ்ந்திருப்பதால் துர்க்கையையும், சூலவடிவில் அமைந்த இடிதாங்கிகள் நிறைந்திருப்பதால் காளியையும் ஒத்துக் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகிறது.[20] மறவர்களின் ஆயுதமான வளைதடியின் பூர்வ வடிவமாகிய வட்டு என்ற கற்கால ஆயுதமே, துர்க்கையின் ஆயுதமாகச் சிற்பங்களில் சித்திரிக்கப்படும் சக்கரம் ஆகும். அடிப்படையில் இது வேட்டை ஆயுதமாகும்.ஆனால், சூலம் இரும்பு யுகத்தின் போர்க் கருவியாகும். சூலம்–கபாலத்துடன் சிற்பங்களில் சித்திரிக்கப்படும் சண்டி, அலகை எனப்படும் பேயை வாகனமாகக் கொண்டவள். இவளை "இருங்கலை நியமத்துத் தேவி" (கலைக் கோயில் தெய்வம்) என்றும், இவளது கையில் இருக்கும் கபாலம் உயிர்களுக்கு உணவளிக்கும் அட்சய பாத்திரம் என்றும் பௌத்த சமய இலக்கியமான

மணிமேகலை (பாத்திர மரபு கூறிய காதை, வரிகள் 10–23) குறிப்பிடுகிறது. பேய்க் கணங்களின் பசியைத் தணிப்பதற்காகக் கையில் திருவோடு (மண்டை) ஏந்தி நிற்பதாகச் சித்திரிப்பது[21] வைதிக மரபாகும். இவளே மகாகாளியாகிய அன்னபூரணியாவாள் என்பது இதன் கருத்தாகும். சிந்தா தேவி என்றும் இத்தெய்வத்தை மணிமேகலை குறிப்பிடுகிறது. ஆடல்–பாடல் முதலான கலைகளுக்கும் போர்க் கலைப் பயிற்சியாகிய கல்விக்கும் இவளே தெய்வம் என்ற பொருளில்தான் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.(சிந்தா=சிந்தனை,அறிவு) இத்தகைய கல்விப் பயிற்சியைத் தொடங்கும் விழாவே விஜயதசமியாகும்.

கல்வியின் தெய்வமாகிய சரஸ்வதியுடன் இவ்விழாவினைத் தொடர்புபடுத்துவது பிற்பட்ட மரபாகும். சரஸ்வதி பூசை அல்லது சாரதா பூசை என்பது, மழைக்காலத்துக்குப் பின்னர் வரும் சரத்காலத்துக்குரிய வழிபாடு ஆகும். சரஸ், சரத் என்பன குளத்தைக் குறிக்கும், "சரத்கால மேகவிநாசம்" என்பது சமஸ்கிருதப் பழமொழியாகும். மேகங்கள் இல்லாத தெளிந்த வானம், அலைகளற்ற அமைதியான குளம் போன்று தோற்றமளிக்கும். இத்தெளிந்த வானத்தில் தோன்றும் முழு நிலவினை "சரத் சந்திரன்" எனக் குறிப்பிடுவர். சரத் சந்திரனை, தெளிந்த குளத்து நீரில் நீந்தும் அரச அன்னத்தின் தூய்மையான, புலனுணர்ச்சிக்கு அப்பாற்பட்ட அழகோடு ஒப்பிட்டுக் கவி காளிதாசன் எழுதியுள்ளான்.[22] சங்க இலக்கியமான பரிபாடல்[23] தை நீராடல் தொடர்பான விரதங்கள் தொடங்கும் நாளான மார்கழி (ஆதிரை)ப் பௌர்ணமி நாளினை "நளிமாரிப்பின் குளத்துமாயிருந் திங்கள்" என்று குறிப்பிடுகிறது. மாரிக்காலத்துக்குப் பிறகு தோன்றுவது குளத்துத் திங்கள் (சரத் சந்திரன்) என்பது இதன் பொருளாகும். முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப் பெண்டிர் தவத் தை நீராடியதாகப் பரிபாடல் குறிப்பிடுவதை நோக்கும்போது, தவம் புரிகின்ற சரஸ்வதி தேவியின் தோற்றமே நம் மனக் கண்ணில் எழுகிறது.

வடகிழக்குப் பருவக்காற்றால் நேரும் மழை, கார்த்திகை மாதம்வரை நீடிப்பதால் மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களடங்கிய பருவமே சரத்காலம் என்பது உறுதியாகிறது. வங்காளத்தில் சரஸ்வதி அல்லது சாரதா பூஜை, மாசி மாத சுக்லபட்சப் பஞ்சமி தொடங்கி, ஒன்பது நாள்கள் நடந்து மாசி மகத்துடன் முடிவடைவதாகவே கருதப்படுகிறது. அதாவது வங்காள மரபுப்படி இதுவே சாரதா நவராத்திரியாகும்.[24]

ஆசிரிய மரபினரும் களரிப்பயிற்றும்

மாணார்ச்சுட்டிய வாள் மங்கலம் குறித்த ஆய்வினைத் தொடர்வோம். மாணாக்கர்களுக்குப் போர்க்கலைப் பயிற்சியளித்த ஆசிரிய மரபினர் யார் என ஆராய்ந்தால், சேக்கிழாரின் பெரியபுராணத்தில் நமக்கு விவரங்கள் கிட்டுகின்றன. ஈழச் சான்றார் எனத் தமிழ்க் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் குறிப்பிடப்பெறும் நாடார் குலத்தின் ஒரு பிரிவினர், அரசர்களுக்குப் போர்க்கலைப் பயிற்சி கற்பித்தனர் என்றும், இது இவர்களது பரம்பரை உரிமையாக வருகிற ஆசிரியத்தன்மை என்றும், சேனாதிபதி (படைத்தலைவர்) என்ற பொருள்படும் பெயருடைய ஏனாதிநாதன் என்பவர் இக்குலத்தைச் சேர்ந்த சிவனடியார் என்றும் பெரியபுராணம் கூறுகிறது.[25] இன்றும் குமரி மாவட்டத்தில் களரிப் பயிற்சி கற்பித்தலைப் பாரம்பரியத் தொழிலாகக் கொண்ட சான்றார் குலத்தவர் உள்ளனர். இவர்களுக்கு ஆசான் (ஆசிரியர்) என்ற பட்டம் உள்ளது. அண்மைக்காலம் வரை சென்னைத் தமிழில் வாத்தியார் என்பது இத்தகைய களரி ஆசான்களையே குறித்தது என்பது நாமறிந்ததே.[26] இந்த இடத்தில், சான்றார் என்ற சாதிப்பெயர் குறித்து அறிந்து கொள்வது அவசியமாகும்.

சங்க காலத் தமிழகத்தில், சான்றோர் என்ற சொல், Knight எனத் தக்க, பிரபுக்கள் வர்க்கத்தினராக அரசனால் அங்கீகரிக்கப்பட்ட வீரர்களைக் குறித்தது. வாகைத்திணை, மூதின் முல்லைத் துறையில் அமைந்த, "ஈன்று புறந்தருதல்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் (பா. 312) "சான்றோனாக்குதல் தந்தைக்குக்கடனே" என்ற வரி இடம்

பெறுகிறது. இதற்கு, "தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, அதற்குரிய செய்கைகள், ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமை" என்று பழைய உரை குறிப்பிடுகிறது. இவ்வாறு சான்றோனாக உருவான ஒருவனுக்கு, விளை நிலங்களை வழங்குவது வேந்தனது கடமை எனப் பொருள்படும் வகையில் "தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்ற வரியும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது.[27] ஈழவர் குலத்தில் தோன்றிச் சான்றோராக உருவானோரே ஈழச் சான்றார் எனலாம்.

நெல்லைமாவட்டம் பெரும் பழஞ்சியிலுள்ள கி.பி. 9—ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று[28] பார்ப்பார சான்றார் என்ற ஒரு பிரிவினரைக் குறிப்பிடுகிறது. கி.பி. 13—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோவை மாவட்டம் அவிநாசிக் கல்வெட்டு, பார்ப்பார சான்றார் என்ற இப்பிரிவினர், தமது படைக்கலன்களுக்குப் பட்டுத்துணியும் மாலையும் அணிவித்து வழிபடும் சலுகையை அரசரிடமிருந்து பெற்றனர் எனத் தெரிவிக்கிறது.[29] இது இவர்களுடைய மரபு வழிப்பட்ட உரிமையை அங்கீகரிக்கும் செயல்பாடாகும்.

மேலும் இக்கல்வெட்டில், இவர்கள், ஓலக்கம் காணும் அதிகாரம் பெற்றனர் என்ற செய்தியும் தெரிவிக்கப்படுகிறது. ஓலக்கம் என்பது அரசவை எனப்பொருள்படினும், அச்சொல்லுக்கு இன்னும் ஆழமான பொருளுண்டு. "ஓலக" என்ற கன்னடச் சொல்லிலிருந்து தோன்றிய "ஔலகன" என்ற சொல்லுக்குப் போர்க் காலங்களில் நிலமானியத் தலைவர்கள் தமது மேலாளனாகிய அரசனிடம் அணிவகுத்து நிறுத்த வேண்டிய பயிற்சி பெற்ற படை என்று பொருளாகும். இது அரசனுக்குச் செலுத்த வேண்டிய ஒருவகைக் கடமை (வரி)யாகும்.[30] இம்மரபே, விஜய நகர அரசர்களால் மகாநவமியன்று· தமக்குக் கீழுள்ள சிற்றரசர்களின் அணிவகுப்பு மரியாதையைப் பெற்று, அவர்களது பதவி அதிகாரத்தைப் புதுப்பித்து வழங்கும் சடங்காக மாற்றம் பெற்றது.[31]

பார்ப்பார சான்றார் எனக் கி.பி. 13—ஆம் நூற்றாண்டு வரையிலும் அழைக்கப்பட்ட இச்சான்றார் மரபினர்,

அரசர்களின் குலகுரு போன்ற தமது (பிரம்மக்ஷத்ரிய) தன்மையால் தான் பிராமணர்க்குச் சமமாகக் கருதப்பட்டனர் போலும். ஆயுதபூசையைப் பரம்பரை உரிமையாகப் பெற்ற இப்பார்ப்பார சான்றார் பிராமண குலத்தவரல்லர்; க்ஷத்ரியர்களேயாவர்.

ஆசான் மரபினரான ஏனாதிநாதர் சிவபதம் அடைந்த திருநட்சத்திரம் புரட்டாசி உத்தராடம் என்பது சைவ சமய நம்பிக்கையாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஏனாதிநாதருக்கு மட்டுமே மகாநவமி எனப்படும் ஆயுதபூசை நாள் திருநட்சத்திரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கை எப்போது தொடங்கிற்றென்று தெரியவில்லை. ஆயினும் சான்றார் குலத்தவர்கள் தம்மைப் பத்ரகாளியின் மக்கள் எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் மரபு மிகப் பழமையானது ஆதலாலும்,[32] மகாநவமி என்பது காளி வழிபாட்டு விழா, ஆதலாலும் காளி வழிபாடு சிவ வழிபாட்டில் இணைந்த பழங்காலந்தொட்டே ஏனாதிநாதர் பற்றிய இந்நம்பிக்கை சைவ சமயத்தில் இடம் பெற்று வந்துள்ளது எனக் கொள்ளலாம்.

காளியும் சரஸ்வதியும் (ஆடல் தெய்வமும் அறிவொளித் தெய்வமும்)

குப்த அரசர்கள் காலத்தில் வாழ்ந்த கவி காளிதாசன், தனது சியாமளா தண்டகத்தில் காளியை, "சானுமத் புத்ரிகே" எனக் குறிப்பிடுகிறான். "சான்றோர் மகள்" என்பது இதன் பொருளாகலாம். சானு என்ற சொல்லுக்கு விவேகி எனப் பொருள் என்றும், இது மலையத்வஜ பாண்டியனைக் குறிக்கும் என்றும் கருதப்படுகின்றன. காளியே வீணை (இசை)யின் தெய்வமென்றும் வாக்கின் தெய்வமென்றும் "சியாமளா தண்டகம்" புகழ்கிறது. காளியைப் பரத நாட்டியத்தின் தெய்வமாக "பாரதி" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.[33] நாட்டியமாடும் காளி உருவச்சிலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஆனால் காளி வழிபாடு கி.பி.6–7–ஆம் நூற்றாண்டளவில் அதிரவீசியாடிய சிவ வழிபாட்டின்

எழுச்சியில் தன்மயமாக்கப்பட்டது. காளியைக் குல தெய்வமாகக் கொண்ட சோழர்களே சைவ சமயத்தின் முதன்மைக் காவலர்களாக மாறிவிட்ட பின்னர், உக்ரகாளி முற்றிலும் சைவக் காளியாக மாறிவிட்டாள் எனலாம். காளியின் இடத்தைப் பாலைக் கிழத்தியாகிய கொற்றவை கைப்பற்றும் நிலை நேர்ந்தது. கி.பி. 12—ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு விரிவடைவதற்காக மேற்கொண்ட போர்களில், பகைவர் நாட்டை உடன்று எரி கொளுவும் மறப்போர் முறைகளே பின்பற்றப்பட்டன. இக்காலக் கட்டத்தில் தோன்றிய பரணி நூல்களும் இதனை உணர்த்துகின்றன. போர்த் தெய்வமாக துர்க்கா பரமேஸ்வரியே —மறவர்களின் எருமைப் பலியை ஏற்கும் கொற்றவையே— முதன்மைப் படுத்தப்பட்டாள் என்பது கலிங்கத்துப் பரணி (கோயில் பாடியது, 111, 114)யால் புலனாகிறது. கி.பி.13—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமயபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கன்னட ஹொய்சளர் ஆட்சிக் காலத்திலும், கி.பி.14—ஆம் நூற்றாண்டில் விஜய நகர அரசு நிறுவப்பட்டபோதும், டில்லி சுல்தான்களின் ஆட்சியிலிருந்தும், இஸ்லாமிய ஆதிக்கத்திலிருந்தும் இந்து சமயத்தையும் தென்னிந்தியாவையும் மீட்பதற்காக வைதிகசமயக் கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் பெரும் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பழைய கோட்பாடுகளுக்குப் புதிய விளக்கங்கள் கூறப்பட்டன. வேதங்களுக்கு பாஷ்யம் எழுதிய சாயனாசாரியார் இக்கால கட்டத்தைச் சேர்ந்தவர். விஜயநகர சங்கம குலத்தவரின் எழுச்சியை உறுதி செய்வதற்காக க்ஷத்ரியச் சான்றோர் தெய்வமாகிய காளிக்கும் அறப்போர் மரபினராகிய சான்றார் குலத்தவர்க்கும் சமூகத்தில் அளிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச உயர்வும் குறுக்கப்பட்டது. நரசிம்மர், அனுமன் போன்ற தெய்வங்களும், நவீனப் போர்க்கருவிகளும் ஆதிக்கம் பெற்றன. பாரதி வழிபாடு சரஸ்வதி வழிபாடாக மாற்றமடைந்ததும் ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் தெய்வமாக மறையோதும் பிரம்மாவின் மனைவியான சரஸ்வதி (நாமகள்) உருவெடுத்ததும் இந்தப் பின்னணியில்தான். "சரஸ்வதி அந்தாதி" இக்காலக்கட்டத்தில் எழுதப்பட்ட நூலாகவே இருக்க வேண்டும்.[34]

இஸ்லாமிய ஆட்சியாளர்களால் பாதிக்கப்பட்ட வைதிகக் கல்விக்கும், வைதிக ஆசிரியத் தன்மைக்கும் முதன்மை அளிப்பதற்காக, ஏடேந்திய சரஸ்வதி வழிபாட்டுக்கும் பிராமணிய மடாலயங்களுக்கும் முதன்மையளிக்கப்பட்டது. கர்நாடக வீரசைவ நெறிமுறைகளைப் பின்பற்றி ஊரகத் தெய்வங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. தெய்வங்களுக்கு மிருகபலி கொடாமை போன்ற பண்புகள் வலியுறுத்தப் பட்டன. விஜய நகர அரசின் ஆதரவு பெற்ற சமயக் குருமார்களுள் ஒரு பிரிவினர் "சரஸ்வதி" எனப் பட்டம் சூடினர்.[35]

விஜயதசமி நாள் என்பது வைதிகச் சமயக் கல்வி தொடங்கும் நாள் என்ற கருத்தோட்டம் உருவாயிற்று. மகா நவமி நாள் என்பது சங்கம குல அரசர்களின் கோட்பாட்டுக் கேற்ப, இராஜராஜேஸ்வரியை நடுநாயகமாகக் கொண்ட லட்சுமி, சரஸ்வதி வழிபாடாக உருப்பெற்றது. இதன் பின்னர் மைசூர் உடையார் அரசர்களின் காலத்தில், அரச குலப்பெண்டிர், தத்தமது கணவர்களின் நலனுக்காக விரதமிருந்து சாமுண்டீஸ்வரியை வழிபடும் விழாவாக வடிவெடுத்தது. மைசூர்ப் போரில் (கி.பி. 1656) ஈடுபட்டு, வெற்றிதேடித் தந்து தம் மானத்தைக் காத்த சேதுபதி அரசர் திருமலை சேதுபதிக்கு மதுரைத் திருமலை நாயக்க மன்னர், "தாலிக்கு வேலி" என்ற பட்டமளித்ததோடு, மகா நவமி கொண்டாடும் உரிமையும் வழங்கினார். மல்லைச் சிற்றம்பலக் கவிராயர் என்ற புலவரால் "மகாநவமி விருத்தம்" பாடப்பட்டது.[36]

அரசகுலப் பெண்டிர், மாணிக்கர் மட்டுமின்றி, சமூகத்தின் மேல்தட்டு வர்க்கங்களைப் சேர்ந்த அனைத்துப் பெண்டிரும் தத்தமது இல்லத்தில் கொலுமண்டபம், அணிவகுப்பு ஆகியவற்றின் அடையாளமாகக் கொலுப் பொம்மைகள் வைத்தும், ஏடுகள், நூல்கள் ஆகியவற்றை வைத்தும் வழிபடும் வழக்கம் உருவாயிற்று. நாளடைவில் தத்தமது தொழிற்கருவிகளையும் கொலுவுடன் வைத்து வழிபடும் "குடிபடை செய் தொழிலாளி" யரின் வழிபாடாகப் பரிணாம வளர்ச்சியடைந்தது. கொலுவில் சதுரங்க சேனையின் அடையாளமாக மரப்பாய்ச்சிகை (சதுரங்கப்

பொம்மைகள்) வைத்து அலங்கரிக்கும் வழக்கமும் ஏற்பட்டது. ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியத் தொழிலாளி வர்க்கத்தை ஒன்றுபடுத்தவும், "சந்திரமண்டலத்தியல் முதல் சந்தித்தெருப்பெருக்கும் சாத்திரம்" வரை அனைத்துவிதமான தொழில்நுட்ப அறிவினையும் பெறுமாறு இந்தியர்களுக்கு அறைகூவல் விடுக்கவும் எழுச்சியூட்டவும் இவ்விழா ஓர் அடையாளச் சின்னமாயிற்று. காளியின் தாசனான "பாரதி" யின் பார்வையில், கிருதயுகத்தின் எழுச்சித் தெய்வமாகவும், நவயுக பாரதத்தின் நாயகியாகவும் காளியே தரிசனம் தரலானாள். ஆயுதமும் காகிதமும், ஆலைகளும் கல்விச் சாலைகளும் உருவாவதற்கும், தொழிலாளர் யுகப்புரட்சி தோன்றுவதற்கும், மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வையை வேண்டும் பாரதி மரபு பரவலாயிற்று.

அடிக்குறிப்புகள்

1. Travancore Archaeological Series Vol. VI. pp. 150-152, Editor: T.A.Gopinatha Rao, 1911. *(தொழில் என்ற சொல்லாட்சி பழமையானதே. "அறுதொழிலோர்" என அந்தணர்களைக் குறள் குறிப்பிடுகிறது. ஆனால்* Labour Force *என்ற கருத்தோட்டம், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கும்பினியின் வரவுக்குப் பின்னர் தோன்றியதேயாகும்.)*

2. *எஸ். வையாபுரிப்பிள்ளை. ப.5. "தமிழின் மறுமலர்ச்சி" வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், தொகுதி 2, சென்னை – 28. 1989.*

3. History of Dharmasastra - P.V. Kane -Vol. 2, Part I, p. 395.

4. *உத்தராட நட்சத்திரத்தை நிகண்டுகள் விசுவநாள் எனக் குறிப்பிடும். (திவாகரம் 100, பிங்கலம் 259, சூடாமணி 1;76) விஜய நகர அரசின் மகாநவமி (புரட்டாசி உத்தராடம்) விழாவில் பிராமணர்க்கு இடமில்லை; விஸ்வ பிராமணர்க்கே சிறப்பளிக்கப்பட்டது என்ற வரலாற்றுச் செய்தியின் பொருத்தம் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கது. அடிக்குறிப்பு 6 பார்க்க.*

5. பெரியபுராணம், எறிபத்த நாயனார் புராணம், பாக்கள் 11, 12

6. Forgotten Empire - Robert Sewell, pp. 253, 358. சரித்திரகாலத்து மகா நவமியுடன், வேத, இதிகாச, புராணகால அஸ்வமேதயாகத்தை ஒப்பிட்டு, அரிய ஓர் ஆய்வுக் கட்டுரையைத் திரு. பர்ட்டன் ஸ்டெய்ன் எழுதியுள்ளார். பார்க்க: "Mahanavami, A medieval and modern kingly ritual in south India," in, All the kings mana, - Papers on medieval South Indian History". யாக மரபில் பிராமணர்களுக்கு முதன்மையளிக்கப்படும். மகாநவமி விழாவில் பிராமணர்க்கு இடமளிக்கப்படவில்லை.

7. கி.பி.1565—இல் தலைக்கோட்டைப் போரில் விஜயநகர அரசு பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. அதன் விளைவாகச் சிற்றரசுகள் சுயேச்சையடைய முயன்றன. கி.பி.1578 முதல் 1617 வரை ஸ்ரீரங்கப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மைசூர் அரசர் முதலாம் இராஜ உடையார் என்பவரே 1611—ஆம் ஆண்டிலிருந்து விஜயநகர அரசின் பாணியில் மகாநவமியைக் கொண்டாடத் தொடங்கினார். பின்னர், மதுரையில் திருமலைநாயக்கர் மகாநவமி கொண்டாடத் தொடங்கினார். கி.பி.1658—59—ஆம் ஆண்டில் திருமலை நாயக்கரின் சார்பில் மைசூர் அரசின் மீது படையெடுத்துச் சென்று வெற்றியுடன் திரும்பிய சேதுபதி மன்னர்க்கு, மகாநவமி கொண்டாடும் உரிமையைத் திருமலை மன்னர் வழங்கினார். விஜயநகர அரசின் தலைநகரான ஹம்பியையடுத்த பெல்லாரிப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வந்த கம்பளத்து நாயக்கர்களும் மகாநவமி கொண்டாடத் தொடங்கினர். ஹம்பியிலிருந்த மகாநவமிப் பீடத்தைக் கி.பி.1600—இல் வேலூர் லிங்கம நாயக்கர் தமது தலைநகருக்குக் கொணர்ந்தார் எனக் கருதப்படுகிறது. இந்த மகாநவமிப் பீடத்தைச் சேதுபதி மன்னரின் பிரதானி தெய்வ கன்னியா பிள்ளை என்பவர் வேலூரிலிருந்து இராமநாதபுரத்துக்குக்

கொண்டு சென்றார் என "விஜயரகுநாத சேதுபதி பேரில் பணவிடுதூது" மற்றும் "பெருந்தொகை'' பா.1300 குறிப்பிடுகின்றன. (அந்தப்பீடம் தற்போதும் இராமநாதபுரம் அரண்மனையிலிருப்பதாக நம்பப்படுகிறது.) கி.பி. 19—ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிருங்ககிரி சங்கராச்சார்யாரின் வழிகாட்டுதலின் படி, இராமநாதபுரம் அரண்மனையில் நடைபெறும் மகாநவமி விழாவில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தில்தான், க்ஷத்ரிய வர்ண அந்தஸ்து குறித்துச் சான்றார் சமூகத்தவர் சேதுபதி மன்னர் மீது வழக்குத் தொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

8. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா. 69 — "வென்ற வாளின் மண்". என்பதற்கான உரை பார்க்க. தொண்டைமான் படைக்கலக் கொட்டிலிலுள்ள ஆயுதங்கள் எண்ணெய் பூசப்பட்டு, மயிற்பீலி சூட்டப்பட்டுக் காட்சியளித்ததாக ஔவையார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் (95) கூறுகிறது. இதுவும் ஒருவகை வாள் மங்கலமே. பனங்குருத்தோலையுடன் வாகைப் பூக்களை விரவித்தொடுத்து, போர்படு மள்ளர், வாளுடை விழவு நடத்தினர் எனப் பதிற்றுப்பத்து (பா. 66) குறிப்பிடுகிறது. இதுவும் ஆயுத பூசையின் முன்னோடியான விழாவே.

9. "வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய திரிபுவனவீர தேவற்கு " மூன்றாம் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்தி. ப. 656 பிற்காலச் சோழர் வரலாறு —தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

10. ஆடற்கலைக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த தேவதாசியர், "எண்ணெண் கலையோர்" எனப்பட்டனர். கலைகள் அறுபத்து நான்கு எனக் குறிப்பிடும் மரபு சிலப்பதிகாரத்திலேயே காணப்படுகிறது. இருப்பினும், "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான்கு என்ப" என்ற தொல்காப்பிய நூற்பாக் கருத்தின்படியும், சுவைகள் (ரஸங்கள்) எட்டே

எனும் (பெருங்கதை 35:45 மற்றும் த்வன்யாலோகம்) கருத்தின்படியும், எண்ணெண் கலையோர் என்பதற்குப் பதினாறு கலைகளும் நிரம்பியவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். மாணிப் பருவம் என்பது பதினாறு வயதுடன் பூர்த்தியடைவதாதலால் பதினாறு கலைகள் நிறைந்த பூரண சந்திரனோடு ஒப்பிட்டு " சோடச கலாபூர்ண" எனக் குறிப்பிடுவதுண்டு. என்றும் மாணிகளாக இருக்கின்ற ஆடலரசியர், சோடச கலாபூர்ணர் என்ற கருத்தில் எண்ணெண் கலையோர் எனக் கூறப்பட்டிருக்கலாம்.

11. pp. 404-05, Studies in the third dynasty of Vijayanagar -N. Venkataramanayya, University of Madras. 1935.

12. பக். 158—9, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே.சா. பதிப்பு. 1974.

13. பிற்காலச் சோழர் ஆட்சியைத் தஞ்சையில் நிறுவிய விஜயாலய சோழன் (கி.பி. 846 — 881) நிசும்பசூதனி என்ற பெயருடைய பத்ரகாளிக்குத் தஞ்சையில் கோயிலமைத்தான். அக்கோயில் தஞ்சைக் கீழவாசலில் உள்ள பூமாலைராவுத்தன் கோயிலே எனக் கருதப்படுகிறது.

14. Gnaneswar. 13. 812 - 822; qutoed in Myth and Reality - D.D. Kosambi, Popular Prakashan, Bombay, 1983.

15. தேவிபுராணம் I:122:13,27.

16. பவிஷ்யபுராணம் IV:134:67.

17. The transformation of Tamil society - a random study through reinterpretation of some inscriptional terms and names -S. Ramachandran in "Journal of Tamil Studies", Vols. 57 and 58, International Institute of Tamil Studies, Chennai.

18. புரட்டாசிப் பூராட நாள் என்பது மகாநவமிக்கு முன்னர் வரும் அட்டமி நாளாகும். ஐப்பசி மாதம் என்பது சூரியன் நீசகதியடையும் மாதமாதலால் பாலைக் கிழத்திக்குரிய மாதமாகக் கொள்ளலாம். ஆஸ்வின

மாதத்துச் சுக்ல பட்ச அஷ்டமி தேவி பூசைக்கு உகந்ததெனப் பவிஷ்ய புராணம் (II: 2.8.26) குறிப்பிடுகிறது. இது, இருவேறு வகைக் காலக் கணக்கீடுகளின்படி ஐப்பசி மாதத் திருவோண நாளையும் புரட்டாசி மாதப் பூராட நாளையும் குறிக்கும். ஐப்பசி ஓண நாள் விழா, சம்பந்தரின் பூம்பாவைப் பதிகத்தில் குறிப்பிடப்படுகிறது. கொற்றவைக்குப் பரணிக் கூழ் அட்டுதல் மரபு. சித்திரைப் பரணியிலும், ஐப்பசிப்பரணியிலும் திருவாரூர் மாவட்டம் கருவிலிக் கொட்டிட்டை (கருவேலி) யில் உள்ள பசிதாங்கீஸ்வரத்தில் அமுது செய்விப்பதற்குக் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் நிலம் வழங்கப்பட்டுள்ளது. (நன்னிலம் கல்வெட்டுகள் தொடர் எண் 448/1978– தொகுப்பாசிரியை: ஆ. பத்மாவதி, தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை) சைவசமய மரபில் சித்திரைப்பரணி சிறுத்தொண்டர்க்கும் ஐப்பசிப் பரணி நின்றசீர் நெடுமாறனுக்கும் உரிய திருநட்சத்திரங்களாகக் குறிப்பிடப்படும். திருச்செங்காட்டங்குடிக் கல்வெட்டில் "உத்திராபதி நாயகர் சித்திரைப் பரணியில் முத்தி குடுத்து அருளி அமுது செய்தருள" என்ற குறிப்பு உள்ளது. (தொடர் எண். 64/1977 நன்னிலம் கல்வெட்டுகள்) பசு இறைச்சியுண்ணும் (வெட்சிமரபு) தெய்வமான பைரவரே உத்திராபதி நாயகராவார். (பார்க்க: பெரியபுராணம், சிறுத்தொண்டர் புராணம்.48) சித்திரை மாதம் சூரியன் உச்சகதியடையும் மாதமாதலால், இம்மாதமும் பாலைக் கிழத்தியான துர்க்கைக்கு உரியதாகக் கருதப்பட்டிருக்கலாம்.

19. "மேதிபுள் அலகை தோகை ஏறு உவணம் வேழம் என்று கொடி ஏழுடைச் சோதிமென் கொடிகள்" என சப்தமாதரின் கொடிகளைக் கலிங்கத்துப் பரணி வரிசைப்படுத்துகிறது. புள் (அன்னம்), தோகை (மயில்), ஏறு (காளை) உவணம் (கருடன்), வேழம் (ஐராவதம்) ஆகியன நான்முகன், முருகன், சிவன், திருமால், இந்திரன் ஆகிய முழுமுதற் கடவுளின் பெண் வடிவங்களாகிய பிராமி, கௌமாரி, மாகேஸ்வரி, வைஷ்ணவி, இந்திராணி ஆகிய தெய்வங்களுக்குரிய

கொடிகளாகும். சப்த மாதருள் எஞ்சிய இருவர், திருமாலின் அவதார அம்சமாகிய பூவராக மூர்த்தியின் பெண் வடிவாகிய வாராகியும், யமனின் பெண் வடிவாகிய சண்டியுமே ஆவர். இவ்விருவருள் சண்டியின் கொடி அலகை(பேய்) ஆகும். எனவே, எஞ்சிய ஒரே தெய்வம் வாராகியே ஆதலால் மேதியை வாராகியின் கொடியாகவே கொள்ளவேண்டும். வாராகியை நரகாசுரனின் தாயாகக் குறிப்பிடுவதுண்டு. வாராகிக்கு எருமையைக் கொடியாகவோ வாகனமாகவோ குறிப்பிடுவது சிற்ப மரபில் காணப்படுவதுண்டு. புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோளக்குடி குடைவரையிற் செதுக்கப்பட்டுள்ள, கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டைய சப்த மாதர் தொகுதியில் வாராகி, சண்டி இருவர்க்கும் பொதுவாகப் பீடத்திற்கு முன்னர் எருமைத் தலை சித்திரிக்கப்பட்டுள்ளது. பக்.152–3 வரலாறு, இதழ் 6 பிப்ருவரி—ஆகஸ்ட் 1996) இது சங்கத் தமிழ்த் தெய்வமாகிய கொற்றவையின் எருமைப் பலிகோள் மரபினை சப்த மாதருள் வாராகிக்கும் சண்டிக்கும் பகிர்ந்தளிக்கும் முயற்சியோ எனத் தோன்றுகிறது. "கொற்றவை தனக்குக் கொற்றவர் எறியும் கடாநிலை" எனப் பன்னிரு பாட்டியலும், (நூற்பா–120) "அருமைத் தலைத்தரும் ஆனிரையுள் ஐயை எருமைப்பலி கோள் இயைந்தாள்" எனத் தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா.4—க்கான நச்சினார்க்கினியர் உரை மேற்கோளும் கூறுவதற்கேற்ப, மகாநவமி விழாவில் துர்க்கைக்கு எருமை வெட்டிப் பலியிடும் வழக்கமும் அறிமுகமாயிற்று. கி.பி. 16–17 —ஆம் நூற்றாண்டைய செப்பேடுகள் சிலவற்றில் "மகர் நோன்புக் கிடாய் வரி" என்ற வரியினம் குறிப்பிடப்படுகிறது. இது, இவ்வாறு எருமை (அல்லது ஆடு) பலியிடுவதற்காக அரசுக்குச் செலுத்தும் வரியினமாகும்.

20. கம்பராமாயணம், பால காண்டம், நகரப்படலம், பா.9.

21. மணிமேகலை, உதயகுமாரன் அம்பலம்புக்க காதை 115—116.

22. ருதுசம்ஹாரம், 3:21—22.

23. பரிபாடல் (பா. 11—வரிகள் 74—77).

24. வைதிக சம்பிரதாயத்தோர், புரட்டாசி மாத நவராத்ரியையே சாரதா நவராத்ரி யெனக் குறிப்பிடுகின்றனர்.சரத் சந்திரனை சரஸ்வதியுடன் சேர்த்துப் பார்க்கும் மரபின் எச்சங்கள், கி.பி. 17—18 ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியங்களிலும் காணப்படுகின்றன. "விண்தலம் நின்ற சரத் கால சந்திர சுவேத முக மண்டலமும் அங்கை மலரொடும் தோளின் வழிந்த ரத்ன குண்டலமும் பொலி பாலப் பிராய குமாரத்தியாய்ச் செண்டலர் செங்கை உலகாள் என் நாவிற் சிறந்தனளே" என விக்கிரமசிங்கபுரம் நமச்சிவாயரின் கலித்துறை அந்தாதி போற்றுகிறது. (பார்க்க: ப. 130, விக்ரமசிங்கபுர உலா, ச. கிருஷ்ணமூர்த்தி, சிதம்பரம், 1997).

25. பெரியபுராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், பா,2,3,7, ஏனாதிநாதர் ஆத்திப்பூ மாலையணியும் மரபினர் எனும் பொருள்பட, "தோட்டார் பூந்தாரார்" எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.(பா.31) ஆத்திப்பூ மாலை சோழ அரச குலத்தவர்க்குரியது. குலகுருவின் குடும்பத்துடன் அரசகுலத்தவர் மணவுறவு கொள்வது அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒரு மரபே. அவ்வகையில் பார்த்தால், விஜயாலய சோழனின் காலத்திற்கு (கி.பி.846—881) முன்னரே, சான்றார் மரபினர் சோழ அரசகுலத்தவராக ஏற்கப்பட்டிருக்கக்கூடும்.

26. நாயக்கமன்னர்கள் ஆட்சிக்காலத்திற்கு முன்னர், கிராமணி பட்டத்துடன் கூடிய தொண்டைமண்டலச் சான்றார் மரபினர் ஆட்சிக்குடிகளாக இருந்துள்ளனர். தொண்டைச்சான்றார் நாடு என்பதனைத் தொண்டிய சாணுறு (சாணாறு?) நாடு என பிரான்சிஸ் வைட் எல்லிஸ், சென்னை இராயப்பேட்டைப் பகுதியில் பொறித்துள்ள கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார். ("எல்லிஸ் வெட்டிய கல்வெட்டில் திருக்குறள்"-- தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு)

27. ப. 486, புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சா. பதிப்பு, 1971, "நன்னடை நல்கல் வேந்தற்குக்கடனே" என்ற பாடமே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனை விட இப்பாடபேதம் பொருள் பொருத்த முடையதாக அமைந்துள்ளது.

28. South Indian Inscriptions, Vol XIV, No.40.

29. தொல்லியல் அறிஞர் திரு. இரா. பூங்குன்றன் அவர்களின் பார்வைப்படி. "படைகளுக்கு ஆரம் பூணப் பெறுவாராகவும் தங்கப் பச்சைப்படாம் போர்த்தப் பெறுவாராகவும்" என்ற வாசகம் காணப்படுகிறது. மரபு வழிப்பட்ட வழிபாட்டு முறைகளை அங்கீகரித்துச் சலுகைகளைப்போல அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்ன, என்பது சோழராட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் நேர்ந்த சமூக மாற்றங்களுடன் இணைத்து ஆராயப்படவேண்டும்.

30. p. 40, Indian Feudalism - R.S. Sharma, University of Calcutta, 1965.

31. Forgotten Empire - Robert Sewell. p. 253.

32. "வலங்கை மாலை அல்லது பத்திரகாளியம்மன் கதை" —பதிப்பாசிரியர்கள்: தி. நடராசன், இரா.சோதிமணி, சண்முகா வெளியீடு, மதுரை—19. கி.பி. 1827—ஆம் ஆண்டைச் சேர்ந்த திருநெல்வேலி தட்சணமாற நாடார் சங்கச் செப்பேட்டிலும் இக்குறிப்பு உள்ளது. கத்தி, கத்திரிக்கோல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும் நாவிதர், மங்கலவாடு எனத் தெலுங்கில் அழைக்கப் படுகின்றனர். செவ்வாய்க்கிழமை (மங்கலவாரம்) தமது தொழிலுக்கு விடுமுறை அளிப்பது இவர்கள் வழக்கம். போர்த் தெய்வமாகிய முருகன் செவ்வாய் கிரக வழிபாட்டுத் தொடர்புடையவனாவான்.

33. சிலப்பதிகாரம், கடலாடு காதை, வரி. 39, அடியார்க்கு நல்லார் உரையும் பார்க்க (ப. 190, சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் —உ.வே.சா. நூலகப் பதிப்பு. 1978)

34. சரஸ்வதி கலைமகளாக உருவெடுத்தது, கருநாடகப் பகுதியின் அல்லது ஹொய்சளர் ஆட்சியின் தொடர்பால் எனத் தோன்றுகிறது. "நாமாதும் கலைமாதும் என்னச் சென்னி நாவகத்துள் இருப்பாள்" எனக் கலிங்கத்துப்பரணி (கடவுள் வாழ்த்து.13) குறிப்பிடுகிறது. முதற் குலோத்துங்கனுக்கு ஹொய்சள இளவரசி (ஏழிசைவல்லபி) யிடம் பிறந்த விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியில், "கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு நாவகத்திருப்ப" என்ற வரி உள்ளது. எனவே இப்பண்பாட்டுச் சங்கமம், கி.பி.12—ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கி இருக்கலாம். "கருநாடக இசை" என்ற வழக்கு இக்காலகட்டத்திலேயே தோன்றியிருக்க வேண்டும்.

35. விஜயநகர அரசின் குலகுருவான வித்யாரண்யர் மரபினைச் சேர்ந்த சிருங்ககிரி சங்கராச்சார்ய பீடாதிபதிகள் "பாரதி" என்று பட்டம் சூடுவர். காஞ்சி சங்கராசார்ய பீடாபதிகள், "சரஸ்வதி" எனப்பட்டம் சூடுவது மரபாக இருந்து வருகிறது. மடாதிபதிகளுக்கு உரிய மழைக்கால சாதுர்மாஸ்ய (நான்கு மாத)ச் சடங்குகள் முடிவடைந்த பின்னர் நடத்தப்பட வேண்டிய சாரதா பூசை புரட்டாசி மாதத்தில் நடத்தப் பெறுவதன் காரணம், ஆவணி மாதத்துடன் கார் காலம் முடிவடைந்து விடுவதாகக் கருதப்படுவதுதான். வைகாசி மாத இடைப்பகுதி (ரிஷபப் பாதி) தொடங்கி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாத இடைப்பகுதி (கன்னிப்பாதி) வரையிலும் மழை பெய்வது தென்மேற்குப் பருவக்காற்று வீசும் பகுதிகளில் அமைந்த கேரளம், கர்நாடக மாநிலங்களிலாகும். இம்மரபினை யொட்டியே சாதுர்மாஸ்ய விரதம் சங்கர மடங்களில் அனுசரிக்கப்படுகிறது. (அடிக்குறிப்பு 16 காண்க)

36. அடிக்குறிப்பு 7 காண்க.

பின்னிணைப்பு - 3

வெட்டிப் பேறும் அச்சுப் பேறும்

வெட்டிப் பேறு

"வெட்டிப் பேறு" அல்லது "வெட்டப் பேறு" என்ற தொடர், கி.பி. 10–11 ஆம் நூற்றாண்டுச் சோழர் கல்வெட்டுகளில் இடம் பெறுகிறது.[1] தலைவாய் எனப்படும் தலைமதகு நீர்ப்பாசனத்தைக் கண்காணித்த அல்லது வரையறுத்து நிர்வகித்த சான்றார் குலத்தவர்க்குரிய பரம்பரை உரிமை, அவ்வுரிமை காரணமாக அவர்கள் பெற்றிருந்த காணி நிலம் என்ற பொருளில் அல்லூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) கல்வெட்டுகளில் தலைவாய்ச் சான்றார் வெட்டிப் பேறு குறிப்பிடப்படுகிறது. இந்நிலத்தினை அவர்கள் குழுவாகச் சேர்ந்து விற்கும் உரிமை பெற்றிருந்தனர். ஆயினும் வெட்டி என்ற சொல், விஷ்டி எனப்பட்ட கட்டாய உடலுழைப்பைக் குறிக்கும் வடமொழிச் சொல்லின் திரிபாதலால், வெட்டிப் பேறு பெற்றிருந்த சான்றார்கள், வாய்க்கால் வெட்டுதல், அணை கட்டுதல் போன்ற கட்டாய உடலுழைப்பை அரசுக்கு வரியாகச் செலுத்தும் கடமையுடைய வெட்டிக் குடிகள் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[2] இக்கருத்து தவறானது என்பதற்கு, முதல் இராஜராஜனின் பெரிய லெய்டன் செப்பேடு (சூளாமணி வர்ம விகாரச் செப்பேடு) மற்றும் முதல் இராஜேந்திரனின் திரிபுவன மாதேவிச்சதுர்வேதி மங்கலச் செப்பேடு (கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடு) ஆகியவை தரும் செய்தியே தெளிவான ஆதாரமாகும்.

நாகப்பட்டினத்தில் சூளாமணி வர்ம விகாரம் என்ற பௌத்தப் பள்ளிக்கு வழங்கப்பட்ட இறையிலி நிலங்களில் உட்படாத பிற இறையிலி நிலங்களைக் குறிப்பிடும்போது தேவதானம், பள்ளிச் சந்தம், கணி முற்றூட்டு, வெட்டப் பேறு ஆகிய நிலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றுள் வெட்டப்பேறு என்பது "நாட்டுப் போக்கு தலைவாயர் வெட்டப்பேறு" என்ற விளக்கமும் இச் செப்பேட்டில்

குறிப்பிடப்படுகிறது.[3] எனவே "வெட்டிப் பேறு" பெற்றிருந்த தலைவாயர் அல்லது தலைவாய்ச் சான்றார் எனப்படுவோர் மிகப் பழமையான மரபில் வந்த, அதிகாரம் மிக்க நிர்வாகப் பிரிவினர் எனத் தெரிய வருகிறது. வெட்டப்பேறு என்பது, வைதிகக் கோயில்களுக்கும், பௌத்த சமணப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்ட இறையிலி நிலங்கள் மற்றும் கணி எனப்பட்ட சோதிடர்களுக்கு வழங்கப்பட்ட முற்றூட்டுப் பண்ணை நிலங்கள் ஆகியவற்றுக்கு இணையானதாகும். திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலச் செப்பேட்டில், வெட்டப்பேறு நிலம் குறிப்பிடப்படும்போது, "நாட்டுப்பொது திரிபுவனமாதேவிப் பேரேரியும் இவ்வேரி அரையர்கள் கமுகு கொள்ளி வெட்டப்பேறும்" என்றும், "இவ்வூர் அரையர்கள் வெட்டப்பேறு கமுகு கொள்ளி நிலத்தில் நீர்நிலை ஓடைநிலன்" என்றும் தெளிவாகக் குறிப்பிடப்படுவதால்[4] வெட்டப்பேறு நிலங்களைப் பெற்றிருந்தோர், அரையர் (அரசர்) என்று அழைக்கப்பட்ட மரியாதைக்குரிய சமூகப் பிரிவினர் என அறிந்து கொள்ளலாம்.[3]

அசோகன் கல்வெட்டுக் குறிப்பும் சங்க இலக்கியச் செய்தியும்

அரசு என்ற நிறுவனம் விரிவடையும் போது காடழித்து நாடாக்கும் பணியும், புதிய நீர் ஆதாரங்கள் உருவாக்கப்படுவதும், அணைக்கட்டுகள் கட்டப்படுவதும் பாசனக் கால்கள் வெட்டப்படுவதும் பெருமளவில் நடைபெறுவது இயல்பு. போர்களில் சிறைப் பிடிக்கப்பட்ட அடிமைகளை இத்தகைய பணிகளுக்கு — விஷ்டி அல்லது வெட்டி வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வர். அந்நிலையில் இப்பணிகளை மேற்பார்வையிடுவதும், மதகுகள், கலிங்குகள் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் பாசனத்துக்குத் திறந்து விடப்படும் நீரின் அளவு முதலிய கணக்குகளை நிர்வகிப்பதும் அரசியல் அதிகார அடுக்கில் உயர் மட்டத்தில் இருந்த "ரஜ்ஜுகர்" என்ற அதிகாரிகளின் பணிகளாகும் என்றும், இவர்கள் தனிச் சாதியினராகக் கருதப்பட்டனர் என்றும், அசோகன் கல்வெட்டுகளாலும் அர்த்தசாஸ்திரத்தினாலும், மெகஸ்தனிஸ் எழுதிய "இந்திகா" என்ற நூலினாலும் அறியமுடிகிறது. "ரஜ்ஜு" என்பது நீட்டல்

அளவைக் கயிற்றைக் குறிக்கும். ரஜ்ஜுகர் எனப்படுவோர் நில அளவைத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளின் தலைமைப் பதவியை வகிக்கும் பொறியாளர்களுக்குச் சமமானவர்களாவர்.[6] சங்க காலத் தமிழகத்தில் இவர்கள் சான்றோர் என அழைக்கப்பட்டனர். கலித்தொகை பாடல் 146–இல், பெரிய ஊரின் நெடுஞ்சாலையில் உள்ள சான்றோர்களைப் பார்த்து, "நீரைத் தடுத்து நிறைந்து நிற்கும்படி பாதுகாப்பீர்களாக" (பேரூர் மறுகின் பெருந்துயிற் சான்றீரே நீரைச் செறுத்து நிறைவுற ஓம்புமின்) எனக் கூறுகிறாள் தலைவி. தன் காதல் நோய்க்குத் தீர்வு காண்பதில் உதவாமல் துயில் கொண்டிருக்கும் மன்றத்துச் சான்றோர்களிடத்தில், அவர்களது மற்றொரு கடமையை நினைவூட்டும் விதத்தில் இவ்வாறு கூறுகிறாள். மழைக் காலத்தில் கண்மாய்களில் நீர் நிரம்புமாறு செய்வது, உடைப்புகளை அடைப்பது முதலிய பணிகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றனர். நீர்ப் பங்கீடு குறித்த நீதிமன்ற அதிகாரம் அல்லது ஆணையத்தின் அதிகாரம் இவர்களுக்கு இருந்ததால்தான், சான்று இதழ் வழங்குவோர் அல்லது சான்றாக நிற்பவர் என்ற பொருளில் சான்றோர் எனக் குறிப்பிடப்பட்டனர் போலும்.

திருப்பராய்த்துறை (திருச்சி மாவட்டம்) கல்வெட்டின் மூலம் தலைவாய்ப்பாடி எனும் இடத்தில் வாழ்ந்த தலைவாய்ச் சான்றோர்கள், மாறன்குடியைச் சேர்ந்தவர்கள், அதாவது பாண்டிய மன்னன் குலத்தவர் என்றும், வெட்டிக் குடிகளைப் பணிமக்களாக அதாவது அடிமைகளாகப் பெற்றிருந்தனர் என்றும் தெரியவருகின்றன.[7] வட இந்தியாவில் "கணராஜன்யர்" என அழைக்கப்பட்ட அரச குலத்தவரான க்ஷத்ரியப் பிரிவினரை இவர்களோடு ஒப்பிடலாம். கணராஜன்யர்கள், தமக்கு உரிய நிலங்களின்பால் கூட்டுப் பொறுப்பு உடையோராக இருந்தனர் என்று தர்மசாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. குப்தர்கள் காலத்தில் பதினொருவர் அடங்கிய குழுவினர் "வீதி" யளவில் நிலபுலன், பாசனம், தொடர்பான வழக்குகளைத் தீர்த்தனர்.[8] அல்லூர்த்தலைவாய்ச் சான்றார்கள் பதினொருவர் என்பதும் இவர்கள் தமது நிலங்களைக் கூட்டாகவே விற்றுள்ளனர்

என்பதும் கருதத்தக்கன. அசோகன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் ரஜ்ஜுகர்கள் ஜனபதத் தலைவர்களாக இருந்தனர் என்பது அறிஞர்கள் கருத்தாகும்.[9]

ரஜ்ஜுகர் என்ற பதவிப் பெயர், அசோகர் காலத்தில் வழக்கிலிருந்தது எனக் கண்டோம். இச் சொல் பிராகிருத மொழியின் தனித்தன்மையால் ராஜுகர் என்றும் வழங்கும். தமிழில் இச் சொல் இராசக்கர் என வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. நெல்லை பெரும்பழஞ்சியிலுள்ள கி.பி. 9—ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று[10] "கோட்டாற்று இராசக்கர்" எனப்பட்டோர் குழுவாணை என்ற பெயரில் இயங்கியுள்ளதாகத் தெரிவிக்கிறது. குழுவாக இயங்குவது என்பது ஜைன சமய மரபாகலாம்.(சீவக சிந்தாமணி.3) பெரும் பழஞ்சிக் கல்வெட்டு, பார்ப்பாரச் சான்றார் என்ற ஜைன சமயம் சார்ந்த சான்றார்களைக் குறிப்பிடுகிறது. பெரும்பழஞ்சிப் பகுதியில் இராசக்க மங்கலம், இராசக்கப்பட்டி, குழுவாணை ஏரி (கூவானேரி) ஆகிய ஊர்கள் இன்றும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பழஞ்சிக் கல்வெட்டு விரிவாக ஆராயத்தக்கது. கோட்டாற்று இராசக்கர் இராசக்கத் தண்ணீர்ப் பெரும் பந்தல் என்ற பெயரில் தண்ணீர்ப் பந்தல் ஒன்று நிறுவினர் என்றும், அத்தண்ணீர்ப் பந்தலுக்காகக் குழுவாணை என்ற பெயரில் கிணறு ஒன்று வெட்டுவிக்கப்பட்டதாகவும் இக்கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து வருபவர்களுக்கு மூன்று மா நிலம் வழங்கப்பட்டதாகவும், இந்நிலத்துக்குரிய இறை கடன், வழி இறை, வெட்டி முதலிய வரியினங்களைப் பெரும்பழஞ்சிப் பார்ப்பாரச் சான்றாரே செலுத்த வேண்டு மென்றும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதே கல்வெட்டில் "கோயிற் பிள்ளைகள் முந்நூற்றுவர்" என்ற பிரிவினர் பெயரால் "முந்நூற்றுவப் பெரும்பந்தல்" என்ற பெயரில் ஒரு தண்ணீர்ப் பந்தலும் எடுப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கோயிற் பிள்ளைகள் என்ற தொடர் அரண்மனை வாசிகள் அல்லது அரச குலத்தவர் எனப் பொருள் படக்கூடும். பெரும் பழஞ்சிக் கல்வெட்டு ஜைன (சமண) சமயச் சார்புடையதாகும். ஜைன சமயம் சார்ந்த கோயிற்

பிள்ளை முந்நூற்றுவர், கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் மைசூர்ப் பகுதியிலுள்ள கல்வெட்டொன்றிலும் குறிப்பிடப்படுகின்றனர். பொன்புச்ச (ஹூம்ச்ச) என்ற ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு, சாந்த ராஜாக்கள் (சான்றார் அரசர்கள்) மைசூர்ப் பகுதியை ஆட்சி செய்துள்ளனர். ஜைன சமய மரபில் ஐவகை அரச குலங்களுள் ஒன்றாகக் கூறப்படும் உக்ர குலத்தைச் சார்ந்த பாண்டிய வம்சத்தவர் என்று தம்மை இச் சாந்த ராஜாக்கள் குறிப்பிட்டுக் கொண்டனர்.[11] சற்றொப்ப இதே காலக்கட்டத்தில் திருநெல்வேலியை அடுத்துள்ள கரவந்தபுரம் (உக்கிரன் கோட்டை) பாண்டிய மன்னர் குலத்தின் ஒரு பிரிவினர்க்குக் கோ நகராக இருந்தது என்பதும், சமண சமயத் தலமாகவும் இருந்தது என்பதும் நினைக்கத் தக்கவை. அரச குலத்தவரான சான்றார்கள், குடிநீர்க் கிணறுகளும் பாசனக் குளங்களும் வெட்டுவித்து, அவற்றைப் பராமரித்து வந்த நிகழ்வுகள், அவர்களது பழங்கால – வரலாற்றுத் தொடக்க கால– அதிகார அனுபவத்தின் தொடர்ச்சியைக் காட்டுவனவே எனக் கொள்ளலாம்.

அரசின் தோற்றமும் வெட்டிப் பேறும்

குடிநீர்க் குளங்களும் பாசனக் குளங்களும் வெட்டுவிப்பதும், விவசாய விரிவாக்கமும் அரசு என்ற நிறுவனத்தின் தோற்றத்தோடு இணைந்த செயல்பாடுகளாகும். தொல்லியல் பரிபாஷையைப் பயன்படுத்தி இதனை விளக்குவதெனில், பெருங்கற்படைக் காலம் எனப்படும் இரும்பு யுகத்தைத் தமிழகத்தில் அறிமுகப் படுத்திய வேந்தர் குலத்தவர்கள், தமிழகத்தின் பூர்வ குடிகளான (புதிய கற்காலக் குடிகளான) மள்ளர் முதலிய குடியினரை வென்றடக்கி, அவர்களையே இத்தகைய நீர்ப் பாசனப் பணிகளில் ஈடுபடுத்தினர் எனப் பொருள் கொள்ளலாம் இந்நிகழ்வே, "மழை பிணித்தாண்ட மன்னன்" பற்றிய சிலப்பதிகார(11:29)க் குறிப்பின் உட்பொருள் எனலாம். எலும்பு ஆயுதமான வஜ்ராயுதத்தை ஏந்திய, மழையைப் பயன்படுத்தி வேளாண்மை செய்த பழங்குடிச் சமுதாய அமைப்பின் தெய்வமான, இந்திரனுடன் பாண்டிய மன்னர் போர் செய்து மேகத்தைச் சிறை செய்ததாகத் திருவிளையாடற்

புராணம் குறிப்பிடுவதும், வாள், வேல் போன்ற இரும்பு ஆயுதங்களை ஏந்திய வேந்தர் குலத்தவர்கள், இந்திர குலத்தவருடன் போரிட்டு அவர்களைச் சிறைப்பிடித்து அவர்களைக் கொண்டே தண்ணீரைச் சிறை செய்தமையைத் தெளிவாக உணர்த்தும். நெல்லை மாவட்டம் ஆலங்குளம் வட்டத்திலுள்ள மகிழ்வண்ண நாதபுரம் என்ற ஊரில், சான்றார் குலத்தவரால் வழிபடப்படும் "மேகம் சிறை கொண்ட ஐயனார்" என்ற தெய்வத்திற்குக் கோயில் உள்ளது. இந்த ஐயனார் பாண்டிய குல மூதாதையே என்பதில் ஐயமில்லை. இந்த ஐயனார் மீது, "மேகம் சிறை கொண்ட ஐயனார் வில்லுப்பாட்டு" என்ற நிகழ்த்து கலைப் பாடலும் உள்ளது. இவ்வில்லுப்பாட்டு இக்கோயிலில் மட்டுமின்றி தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கொற்கை (உமரிக்காடு) கோட்டை வாழ் ஐயனார் கோயில், குதிரை மொழித்தேரி கருக்குவாள் ஐயனார் கோயில் முதலிய பல ஐயனார் கோயில்களிலும் முற்காலத்தில் பாடப்பட்டு வந்துள்ளது. இவற்றுள் கொற்கை, பாண்டியர்களின் கோ நகராக முற்காலத்தில் இருந்த ஊராகும். "கருக்குவாள்" என்ற சொல்லாட்சியைத் திருஞானசம்மந்தர் தமது தேவாரத்தில் பயன்படுத்தியுள்ளார். (மண்ணில் நல்ல வண்ணம் பதிகம், பா.8) இலங்கை வேந்தனாகிய இராவணனுக்குச் சிவபெருமானால் வழங்கப்பட்ட (சந்திரஹாஸம் எனப்படும்) வாளினைக் குறிப்பதற்கு இச் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும், இப் பதிகம் சீர்காழிக்குரிய பதிகமாயினும் பாடப்பட்ட இடம் பாண்டியர் தலைநகரான மதுரை என்ற நம்பிக்கையும் குறிப்பிடத்தக்கன. இவ்வாள், அகத்தியரால் மீட்கப்பட்டு பாண்டிய மன்னனுக்குப் பின்னர் வழங்கப்பட்டதெனப் புராணங்கள் குறிப்பிடும். எனவே, கருக்குவாள் ஐயனார் என்பதும் பாண்டிய குல மூதாதையரையே குறிக்கும். இவை மட்டுமின்றித் தமிழகத்தின் பல பகுதிகளில் நீர் நிலைகளின் காவல் தெய்வமாக ஐயனாரை அமைக்கும் வழக்கம் இன்றுவரை நிலவி வருவது, மேற்குறித்த வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றாகும். நீரைத் தளைசெய்து வேளாண்மை விரிவாக்கம் செய்த பாண்டிய அரச குலத்தோரைப் புறநானூறு (பா.18) புகழ்ந்துரைப்பது

இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். பூர்வகுடி மள்ளர்கள், நீர்ப்பாசனப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் அடிப்படை உழைப்பாளி வர்க்கத்தவராக மாறிவிட்ட நிலைமை, கி.பி. 7 – ஆம் நூற்றாண்டு இலக்கியமான பெருங்கதையில் ("மடைவாய் திருத்தும் மள்ளர்" –1:48:167) சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு சிறைப்படுத்தப்பட்டோர், புதியனவாக உருவாக்கப்படும் விளைபுலங்களில் உழவுப் பணிக்கும் பயன்படுத்தப்பட்டனர். "பல்விதையுழவிற் சில்லேராளர்" என்ற பதிற்றுப்பத்து (76:11) வரிக்கு "பல விதையுழவாற் பெரியராயிருப்பினும் தம் குலத்தானும் ஒழுக்கத்தானும் சிறிய ஏராளர்" எனப் பழைய உரை குறிப்பிடுவதையும் இத் தொடர்பில் எண்ணிப்பார்க்கலாம். [12]

அச்சுப் பேறு

விஷ்டி, அஜு என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களாக சமஸ்கிருத நிகண்டான அமர கோசத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.[13] இதனை அடிப்படையாகக் கொண்டு நாம் தேடுதலை மேற்கொண்டால், "வெட்டிப் பேறு" என்பதற்கிணையாக, "அச்சுப் பேறு" என்ற உரிமையும் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது.[14] மறவமதுரை "ஊர்" எனும் ஊரவையைச் சேர்ந்த மறவர்கள், அச்சுப் பெற்ற பேராளர் தங்களைப் பல வேதினை செய்த விடத்துத் தங்களுக்கு வேறொரு செய்தியில்லாமையால் மதுராந்தக புரத்திலிருந்த தங்கள் காணியை இடையாற்றூர்க் கோயிலுக்கு 8000 காசுக்கு விற்றுத் தங்கள் நிலத்துக்குரிய இறையைச் செலுத்தினர். இது. கி.பி. 1237 ஆம் ஆண்டில் பாண்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது.[15] இம் மறவர்கள், சோழ–பாண்டியப் போர்களின் போது, பாண்டிய அரச குலப் பேராளர்கள் (அல்லது "பெருமக்கள்" எனப்பட்ட தலைவர்கள்) கீழ் அஜு குடிகளாக இருந்தனர் போலும். பதிற்றுப் பத்தில் குறிப்பிடப்படும் "கொண்டி மள்ளர்"[16]களை இங்கு எண்ணிப் பார்க்கலாம். சங்க காலத்தில் நிகழ்ந்த தண்டகாரண்யப் போரில் சேர மன்னனால் சிறைப் பிடிக்கப் பெற்று, சேர அரசின் மறப்படைப்பிரிவில் சேர்க்கப்பட்ட இத்தகைய மள்ளர்கள் அஜு அல்லது விஷ்டிக் குடிகள் எனக்

கொள்வதில் தவறில்லை. சோழ – பாண்டியப் போரில் பாண்டிய அரசர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட சோழநாட்டு மறவர்களே, புதுக்கோட்டை மாவட்ட மறவ மதுரை மறவர்கள் என நாம் ஊகிக்கலாம். அதாவது, வெட்டிப்பேற்றையொத்த அச்சுப்பேற்றை அரச குலத்தவர்கள் பெற்றிருந்தனர். அச்சுப்பேறு என்பது போர்த் தொழில் தொடர்பான உரிமையாகலாம்.[17] வெட்டிக் குடிகள் என்பது நீர்ப்பாசனத் தொழில் புரிந்த அடிமைகளையும் அச்சுக் குடிகள் என்பது போர்த் தொழில் புரிந்த அடிமைகளையும் குறிக்கக்கூடும்.

கி.பி.12–13 –ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சோழ பாண்டியப் போர்களின் போது இருதிறத்தாரும் ஒருவரை மற்றொருவர் அவமதிப்பதற்காக மறக்குல அகம்படியராகிய வாணர் குலத்தவர்க்குச் சிறப்பளித்தனர். இதன் விளைவாக மாவலி வாணாதிராயர்கள் அதிகார அடுக்கில் உயர்ந்த இடத்தைப் பெறத் தொடங்கினர். முதன்மையான போர்க் குடியினராக இருந்தும் அரச குலத்தவராகக் கருதப்படாமல் அசுர குலத்தவராகவும் சூத்திர (வேளாண்) வர்ணத்தவராகவுமே கருதப்பட்டு வந்த வாணாதிராயர் களுக்குக் கட்டுப்பட்ட சாமந்தமுதலிகள், கி.பி. 13 –ஆம் நூற்றாண்டில் "நிலவாளை வெட்டுவார் நாயன்" என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டதாகத் தெரிய வருகிறது.[18] இப்பட்டத்தின் பொருள், "வெட்டிக் குடிகள் – அச்சுக் குடிகளின் நாயகன்" என்பதாக இருக்கலாம். பெரம்பலூர் வட்டம் வாலிகண்டபுரம் கல்வெட்டில் (கி.பி. 1207) "இவ்வூர் வாணவதரையர்க்குச் செய்யும் அமஞ்சியால்" என்ற வரி காணப்படுகிறது.[19] அமஞ்சி என்பதும் கட்டாய உழைப்பு சார்ந்த ஒரு வரியினமே யாதலால், வாணாதிராயர்கள் சோழர் ஆட்சியின் இறுதியில் ஆட்சியதிகாரத்தின் உயர் அடுக்கில் இடம் பிடித்து விட்டனர் எனத் தெரிகிறது. மறக்குல அகம்படியரின் தலைமையில் மறவர்–கள்ளர் சமூகத்தவர் அணிவகுக்கத் தொடங்கி நாடாளும் தேவர் சமூகத்தவராக உயர்ந்தது இதனை யடுத்த காலக்கட்ட நிகழ்வு எனத் தெரிகிறது.

கி.பி. 15–16 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் வாணாதிராயர்கள் மற்றும் நாயக்கர்கள் ஆதிக்கம் உறுதிபட

வேரூன்றியது. இக்காலக் கட்டத்தில் வாணாதிராயர்களின் ஆட்சிப் பகுதியில் தங்கிவிட்ட தலைவாய்ச் சான்றார்கள் உட்பட்ட சான்றார் குலத்தவரின் சமூக அந்தஸ்து உயர்வாகக் கருதப்படவில்லை. தமது சுதந்திரமான அதிகாரத்தைப் பெருமளவு இழந்து விட்ட நிலையில் தான் இவர்கள் உயிர் வாழ்ந்திருக்க வேண்டும். பெருவேந்தர்கள் ஆட்சிக் காலத்தில் சான்றோர் குலத்தவரின் கீழ் விஷடி – அஜ¬ மக்களாக இருந்தவர்களுள் கள்ளர்–மறவர் குலத்தவரைத் தவிரப் பிற, கட்டாய உடலுழைப்புச் சாதியினர் நிலை உயர்வடைய வில்லை. குறிப்பாக, அணைவேலை செய்தல், வெள்ளக் காலங்களில் உடைப்பு அடைத்தல், பஞ்ச காலங்களில் வாய்க்கால் வெட்டுதல் போன்ற பணிகளைக் கட்டாயமாகச் செய்தாக வேண்டிய கடமை மள்ளர் குலத்தவர்க்கு இருந்தது என்று குடுமியான் மலைக் கல்வெட்டால் தெரிகிறது.[20] இக்காலக் கட்டத்தையொட்டி (16–17 ஆம் நூற்றாண்டுகள்) தோன்றிய பள்ளு நூல்களில் நிலவுடைமை நிறுவனங்களில் பண்ணையடிமையாக வாழ்ந்த மள்ளர்கள் பற்றிய சித்திரம் தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் சான்றார் குலத்தவர் முழுமையாக ஒடுக்கப்படவில்லை. விட்ட குறை தொட்ட குறை என்பதுபோலத் தமது பூர்விக உரிமைகளின் எஞ்சி நிற்கும் சிதறல்களை மட்டும் விட்டுவிடாமல் காத்து வந்தனர்.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டில், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டத்திலுள்ள அப்பலை கிராமத்தில் மூக்கறைக் காளி, ஐயனார் கோயில்களில் பஞ்சாயத்தார்கூடிக் கோயில் மரியாதை வரிசையை நிர்ணயித்தனர்.[21] 1. அரண்மனை (சிவகங்கை கௌரி வல்லபத் தேவராக இருக்கலாம்). 2. கணக்கப் பிள்ளை 3. தில்லியப்பன் சேர்வை வகையறா 4. சின்னான் கோன் வகையறா. 5 ஊரார் – இந்த வரிசைப்படி கோயில் மரியாதை பெற்றனர். இனி, கண்மாயில் நீர் குறைந்த வேளையில், கண்மாய் மீன் குத்தகைக்கு விடப்படும். அப்போது குத்தகைக்கு விடப்பட்டது என்பதைக் குறிக்கும் வகையில் ஜண்டா (கொடி) நடுவதுபோல ஓலை ஊன்றும் பொறுப்பு, சான்றார் குலத்தவர்க்குரியதாக இருந்தது. பிடிக்கப்படும் மீன்கள் கீழ்க்காணும் வரிசைப்படி பங்கு போட்டு வழங்கப்படும்.

1. அரண்மனை 2. கணக்குப்பிள்ளை 3. தில்லியப்பன் சேர்வை வகையறா 4. சி ன்னான் கோன் வகையறா 5. அலை ஓலை ஊன்றுகிற நாடாவி — இதன் பின்னர் எஞ்சிய மீன்கள் பள்ளர், பறையர்க்குப் பிரித்து வழங்கப்படும் — அப்பலை கிராமத்தைச் சேர்ந்த சானார் (சான்றார்) கருங்கன், முல்லியாவயல் உறுமா றாவுத்தர் — இருவரும் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர்.

இச் செய்தியின் மூலம், சான்றார் குலத்தவர், "ஊரார்" எனப்பட்ட பூர்வ குடிகளின் பிரதிநிதியாகவும் தலைவர்களாகவும் கருதப்பட்டனர் எனத் தெரிகிறது. (மரியாதை வரிசை 5—இல் இடம் பெறுகின்றனர்) பண்ணை வேலையும் அணை வேலையும் பாசனக் கால்கள் வெட்டுதல் போன்ற பணிகளும் புரிந்து வந்த அடிப்படை உழைப்பாளி வர்க்கத்தினரின் மேற்பார்வையாளர்களாகச் சான்றார் குலத்தவர் இருந்தனர்; நாடாழ்வி என்ற பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. இவற்றையெல்லாம் விட முதன்மையான செய்தி, தலைவாய்ச் சான்றார் பதவியின் எஞ்சி நின்ற அதிகாரமே இவ்வாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது என்பதாகும்.

அடிக்குறிப்பு

1. உத்தமசோழனின் திருமால்புரம் (வட ஆர்க்காடு மாவட்டம்) கி.பி.983—கல்வெட்டு : "மணையிற் கோட்டத்து மணையில் நாட்டார்க்கும் பிரம்மதேயக் கிழவர்க்கும் தேவதானம் பள்ளிச் சந்தக் கணி முற்றூட்டு வெட்டப்பேற்று ஊர்களிலார்க்கும் நகரங்களிலார்க்கும்" —ப.14 சாசனமாலை —பதிப்பு: எஸ். ராஜம், சென்னை —1, 1960
2. Man and Society - S. Kadhirvel felicitation Volume - Edited by Manikumar - article by Y. Subbarayalu. அல்லூர்க் கல்வெட்டு: S.I.I. Vol.VIII, No.689
3. Epigraphia Indica. Vol.XXII p.243-247 *(செப்பேட்டின் தமிழ்ப் பகுதி வரிகள் 2,106—7)*
4. Memoirs of the Archaeological Survey of India-No.79, edited by K.G.Krishnan, A.S.I. *(செப்பேட்டுத் தமிழ்ப் பகுதி, வரிகள்*

7,31,39–40,337,915–16) புதியனவாக உருவாக்கப்படும் பிரமதேயங்களுக்குரிய நிலங்களின் நீர்ப்பாசனப் பராமரிப்பு அதிகாரிகளுக்கு அப் பிரமதேய மகாசபையே வெட்டப்பேறு நிலங்களை வழங்கியுள்ளது என லால்குடிக் கல்வெட்டால் தெரிய வருகிறது. (Epigraphia Indica. Vol.XX, No.3-C)

5 வெட்டப்பேறு என்பது பாசனக் குளங்களையும் வாய்க்கால்களையும் வெட்டுவிக்கும் அதிகாரத்தையும், அந்த அதிகாரத்துக்குரிய மானியத்தையும் குறிக்கக்கூடும். கரூர் மாவட்டம் வெள்ளியணையில், கி.பி. 6–ஆம் நூற்றாண்டுக்குரிய "ஸ்ரீசோழிக அரையன் அகணிதன் குளம்" என்ற கல்வெட்டு கண்டறியப் பட்டுள்ளது. (க.இராசவேலு, ப. 1, "ஆவணம்" இதழ் 12, சூலை 2001 –தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சை) இந்த இடத்தில் வேறொரு மரபுவழிச் செய்தியையும் தொடர்பு படுத்திப் பார்க்கலாம். சோழ அரசர்களுள், இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களைச் சூட்டிக்கொண்ட அரசர்களுக்கு முற்பட்ட ஒருவனாகச் சுராதிராசன் என்பவனைக் கலிங்கத்துப் பரணி (தாழிசை 191) குறிப்பிடுகிறது. இவன் கொடும்பாளூர் ஏரிக்கரையில் இருந்தவன் என ஆ.சிங்காரவேல் முதலியார், தாம் தொகுத்த அபிதான சிந்தாமணியில் குறிப்பிடுகிறார். ஏரி அரையன் என்ற பொருளிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் போலும்.

6. p.106-7. Asoka and the decline of Mauryas -Romila Thapar - Oxford University Press 1963.

7. ப. 107, "வரலாறு," இதழ் 8,1996 – இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை.

8. ப. 335, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள், நிலையங்கள், சில தோற்றங்கள் –ஆர். எஸ். சர்மா, I.C.H.R. 1989 – (மொழிபெயர்ப்பு: சோமலெ.)

9. Epigraphia Indica, Vol II p.466.

10. South Indian Inscriptions Vol.XIV no.40.

11. p.34 Archaeology in Mysore -Annual Reports 1906-1911. Vol I-Edited by R. Narasimhachar, Mythic Society, Bangalore.

12, பதிற்றுப் பத்து மூலமும் உரையும் —உ.வே. சா பதிப்பு, 1980 பக்.203.

13. "அமரகோசமும் உழைக்கும் வர்க்கமும்," D.D. கோசாம்பி — (மொழிபெயர்ப்பு : வெ.கி) — ஆய்வு வட்டக் கட்டுரைகள் முதல் தொகுதி. பதிப்பாசிரியர்: வெ.கிருஷ்ணமூர்த்தி, சென்னை 27.

14. "வெட்டி முட்டாவாள் அச்சுவரி" —கி.பி.1223, Pudukkottai State Inscriptions-267.

52. Pudukkottai State Inscriptions No. 309.

16. பதிற்றுப் பத்து 43—தண்டகாரண்யப் போர், பதிற்றுப்பத்து ஆறாம் பதிகத்தில் குறிப்பிடப்படுகிறது.

17. "அஜ்" என்ற இந்தோ—ஐரோப்பிய மொழி வேர்ச்சொல்லுக்குப் போர்ப்படை அணிவகுப்பு என்பது பொருளாகும். ரிக் வேதத்தில் "அஜ்ம" என்ற சொல் போர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (p.10, Sanskrit English Dictionary -Sir. Monier Williams, Orient Publishers, Delhi-6) "அஜ்ஜுக" என்கிற சமஸ்கிருதச் சொல்லுக்கு நாடகக் கணிகை என்று பொருளுண்டு. மதுரைக் காஞ்சியிலும் (வரி 582), பட்டினப்பாலையிலும் (வரி 246) குறிப்பிடப்படும் கொண்டி மகளிர், போர்களின்போது கைப்பற்றிக் கொண்டுவரப்பட்ட அஜ்ஜுகர் ஆகலாம்.

18. S.I.I. Vol.IV no.394 — முசிறிக் கல்வெட்டு — கி.பி.1220

19. A.R.E. 264/1943-44 -இக் கல்வெட்டின் வாசகங்கள், "Ancient and Medieval Commercial activities in the Indian Ocean, Testimony of Inscriptions and ceramic-sherds -Edited by

Noboru Karashima- Taisho University -2002" நூலில் பக்கம் 268 இல் வெளியிடப்பட்டுள்ளன.

20. குடுமியான் மலை—பின்னிணைப்பு --சொ. சாந்தலிங்கம், தொல்லியல் துறை, சென்னை—1980.

21. நந்தன வருடச் சுவடி (கி.பி. 1833) – புதுக்கோட்டை மாவட்ட ஓலைச் சுவடிப் பட்டயம் —இரா. திருமலை நம்பி, ப. 50, பழங்காசு, நாணயவியல் வரலாற்றியல் காலாண்டிதழ், அக்டோபர் 2001—திருச்சி. சான்றார் சமூகத்தவரை "நாடாவி" என அழைக்கும் வழக்கம் இன்றுவரை இப்பகுதியில் நிலவுகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

இலக்கிய இதழ்கள்	110.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
தட்சிணாமூர்த்தி குருமுகம் -100	50.00
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
நாடகவியல்	70.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No. 513

**வலங்கை மாலையும்
சான்றோர் சமூகச் செப்பேடுகளும்** 70.00